
# அருள் அமுதம்

## (ஆன்மீகச் சொற்பொழிவுகள்)





கவிமணி

**ச.விஜயரத்தினம்**


தமிழீழம் பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் அமுதம்

## (ஆன்மீகச் சொற்பொழிவுகள்)



கவிமணி விஜயரத்தினம் அவர்களின்
தந்தையார் அமரர் சிவகுரு சதாசிவம் அவர்கள்.

**கவிமணி**

**ச.விஜயரத்தினம்**

தமிழீழம் பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. விஜயரத்தினம்



| இல | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | என்னுரை | 02 |
| 2. | விநாயகர் தத்துவம் | 08 |
| 3. | சைவ சமயம் | 12 |
| 4. | ஆன்மீகம் | 18 |
| 5. | ஆலய தரிசனம் 1 | 26 |
| 6. | ஆலய தரிசனம் 2 | 33 |
| 7. | கூட்டு வழிபாடு | 37 |
| 8. | கூட்டு வழிபாட்டின் யதார்த்தம் | 44 |
| 9. | விரதங்களின் தத்துவம் | 46 |
| 10. | பக்தியின் மகிமை | 51 |
| 11. | தீப ஒளி | 59 |
| 12. | மஹா கும்பாபிஷேகம் | 64 |
| 13. | துர்க்கை அம்பிகை | 70 |
| 14. | விஜய தசமி | 73 |
| 15. | முன்னறி தெய்வங்கள் | 75 |
| 16. | நல் ஒழுக்கம் | 78 |
| 17. | அன்பே சிவம் பாகம் 1 | 85 |
| 18. | அன்பே சிவம் பாகம் 2 | 90 |
| 19. | தர்மம், அறம் செய்ய விரும்பு | 94 |
| 20. | மாதங்களில் மார்கழி | 100 |
| 21. | கீதையும் கிருஷ்ணரும் | 101 |
| 22. | எண்ணங்களின் பிரதிபலிப்பு | 104 |
| 23. | இறைவன், விஞ்ஞானம், நாகரீகம் | 108 |
| 24. | பெண்ணின் பெருமை | 117 |
| 25. | அகலிகையும், இந்திரனும் | 124 |
| 26. | ஆலயத்தில் நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகள் | 129 |
| 27. | மனிதர்களைக் கும்பிடலாமா? | 134 |
| 28. | அருளுரை 1 | 136 |
| 29. | அருளுரை 2 | 146 |
| 30. | அருளுரை 3 | 156 |
| 31. | சமயச் சொற்பொழிவு (கூட்டு வழிபாடு) | 159 |
| 32. | இறைவனின் நீதி | 162 |
| 33 | சிந்தனைத் துளிகள் | 164 |
| 34. | சிந்தனைக்குரிய அருள்த் தேன் துளிகள் | 167 |
| 35. | நன்றி நவிலல் | 177 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# என் உரை

எண்ணரிய பிறவிகளில் மானிடப் பிறவியே சிறந்தது. அத்தகைய மானிடப் பிறவி கிடைத்த அடியேன், அழிந்து போகும் இவ்வுடலால் என்றும் நிலைக்கக் கூடியதும் தர்மத்தோடு சார்ந்ததுமான நற்பணிகள் செய்ய வேண்டுமென்பதே எனது பெரு விருப்பமாக இருந்தது.

எந்த மனிதன் உன்னத நோக்கத்தைக் கொண்டிருக்கிறானோ, உயர்ந்த நற்சிந்தனைகளைக் கொண்டிருக்கிறானோ, அவன் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்குகின்றவனாகிறான். என்பது சரித்திர வரலாறாகும்.

இதற்கிணங்க நல்ல பணிகளைச் செய்ய வேண்டுமென்ற பெருவிருப்பு எனது இளமைக் காலம் இருந்தே உதயமாகிய காரணத்தினால் எமது தாயகமான தமிழீழத்திலேயே ஆன்மீக சமயப் பணிகளில் ஈடுபாடுடையவனாக இருந்தேன்.

பல ஆலயங்களின் நிர்வாகத் தலைவனாகவும், செயலாளர், பொருளாளர் ஆகவும், பொறுப்பு வாய்ந்த பதவிகளிலிருந்து நற்தொண்டுகள் புரிந்து, மக்களினதும் பெரியோர்களினதும் நல் மதிப்பையும், பாராட்டுக்களையும் பெற்று மகிழ்ந்தேன்.

பல பொது நிறுவனங்களிலும் பொறுப்பு வாய்ந்த பதவிகள் புரிந்து மக்கள் பயனடைய பல நற்சேவைகள் செய்தேன்.

ஆன்மீகப் பணிகளில் பெரு விருப்போடு ஆலயங்களின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் என்னாலான சேவைகள் செய்தேன். குறிப்பாகச் சமய சொற்பொழிவு, கூட்டுவழிபாடு (பஜனை) இவைகளை முன்னின்று நடாத்தி மக்கள் உள்ளத்தில் தெய்வபக்தி, சமயப்பற்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்க நெறி, அறப்பணிகள் மலர ஊக்குவித்து செயல்ப்பாட்டின் சிறப்பைக் கண்டு அகம் மகிழ்ந்தேன்.

கோயில்களில் புராண படலங்கள், திருமுறைகள் ஓத ஆவனசெய்து, இறைவன் புகழையும், அற்புத நிகழ்வுகளையும் அறியச்செய்து, சமயப் பற்றையும் வளர்ச்சியடையச் செய்வதே எனது பணியாக மேற்கொண்டு வந்தேன்.

எனது சுய சிந்தனையின் மூலம் விநாயகர், முருகன், அம்பாள், சிவன், ஏனைய தெய்வங்கள் மீது பஜனைப் பாடல்கள், திருஊஞ்சல்ப் பாடல்கள், அருட்பாடல்கள் ஆக்கம் செய்து அச்சுப் பதித்துப் புத்தகங்கள் இலவசமாக வினியோகம் செய்தேன்.

எனது குருவாகிய பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா பிறந்த தின வைபவங்களின் போது வருடா வருடம் திருமுறைகள் அச்சுப் பதித்து புத்தகங்கள் இலவசமாக வழங்கி வந்தேன்.

பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா கூட்டு வழிபாட்டுக் கழகம் என்ற பெயரில் (பஜனைக்குழு) வைத்து, வன்னிப் பெருநிலப்பரப்பு எங்கும் ஆலயங்களில் நடைபெறும் அலங்கார உற்சவங்கள், விசேஷ வைபவங்களுக் கெல்லாம் அழைப்பின் பேரில் சென்று பஜனை, பிரசங்கம், சொற்பொழிவுகள் செய்துஆலய நிர்வாகிகளாலும், பொது மக்களாலும் பாராட்டப்பட்டுக் கவுரவிக்கப்பட்டதையும் நினைவு கூர்ந்து இந்நூல் மூலம் தெரியப் படுத்துவதையிட்டு பெருமையடைகிறேன்.

தற்பொழுது இடம் பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வசித்தாலும், எனது ஆன்மீகப் பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறேன். எல்லா ஆலயங்களின் நிர்வாகத்தினராலும் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டேன். அதையிட்டு என்றும் குறிக்கப்பட்டவர்களுக்கு நன்றியுடையவனாக இருக்கிறேன்.

ஐரோப்பா நாடுகள் ஜெர்மனி, சுவிஸ், டென்மார்க், லண்டன் ஆகிய நாடுகளுக்கும் சென்று கோயில்களில் பஜனை, சொற்பொழிவுகள் செய்து ஆலய நிர்வாகிகளாலும், பொது மக்களாலும், பாராட்டப் பட்டதுடன், இன்றும் குறிப்பிட்ட நாட்டு ஆலயங்களுக்கு அழைப்பின் பேரில்ச் சென்று எனது பணிகளைச் செய்து வருகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக பிரான்ஸ் லாக்கூர்நேவ் ஸ்ரீசொர்ணாம்பிகாதேவி சமேத ஸ்ரீ சொர்ணலிங்கேஸ்வரப் பெருமான் தேவஸ்தானம் ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை எட்டு வருடங்கள் ஆலய ஓதுவாராகப் பணிபுரிந்து எல்லோரினதும் நன்மதிப்பும், பாராட்டும் பெற்று மகிழ்ச்சியடைகிறேன். பஜனை, சொற்பொழிவு, வில்லிசை இவையெல்லாம் சிறப்புடன் நடைபெறுவதற்கு இறையருள் என்றும் எமக்குத் துணை நிற்கிறது. சிவன் பெயரில் பஜனை பாடல்ப் புத்தகம், திருப் பொன்னூஞசல்ப் புத்தகம் எனது ஆக்கங்களாக ஆலயப் பொறுப்பில் அச்சிட்டு மக்களுக்கு வினியோகம் செய்து வருகிறார்கள். ஆலய ஸ்தாபகரும், தர்மகர்த்தாவுமாகிய திருவாளர் ஜெயேந்திரன் வெற்றிவேலு(ஜெயா) அவர்களும், ஆலய நிர்வாகிகளும் மிகவும் கௌரவித்து வருடாவருடம் தங்கப் பதக்கம் அணிவித்து பாராட்டி வருவதையிட்டு அவர்களுக்கு என்றும் நன்றியுடையவனாக இருக்கிறேன்.

லாச்சப்பல் ஸ்ரீ மு ந்துமாரி அம்பாள் கோவிலில் ஒவ்வொரு செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் சொற்பொழிவு, பஜனை செய்து வருகிறேன். உற்சவ காலங்களில் பாராட்டி நிர்வாகிகளால் கௌரவிக்கப்பட்டிருக்கின்றேன்.

இதே போல் லாக்கூர்நேவ் சித்திவிநாயகர் ஆலயத்திலும் சொற்பொழிவுகள், கூட்டுவழிபாடுகள் செய்து வருவதோடு, பிள்ளையார் பேரில் பொன்னூஞ்சல் பாமாலையும் பாடி புத்தகம் இலவசமாக வெளியீடு செய்துள்ளேன். ஆலய தர்மகர்த்தா திரு. ஜேயராசசிங்கம் அவர்களும் ஆலய நிர்வாகிகளும் பாராட்டுகள் செய்து கௌரவித்தார்கள். மிக்க மகிழ்வுற்றேன்.

லாக்கூர்நேவ் ஸ்ரீசபரீசன் மஞ்சமாதா ஆலய ஸதாபகரும், தர்மகர்த்தாவுமாகிய உயர்திரு நா.தனராசா குருசாமி அவர்களும், ஆலய நிர்வாகிகளும் அங்கு நான் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும், விசேஷ உற்சவ காலங்களிலும் பஜனை, பிரசங்கம், வில்லிசை ஏனைய தொண்டுகள் செய்து வருவதோடு சபரீசன் பெயரில் பஜனைப் பாடல்கள், திருப்பொன்னூஞ்சல்ப் பாடல்கள் பாடி இரு தடவை புத்தக வெளியீடும் நடைபெற ஐயன் திருவருள் கிடைத்தது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு எம்மைப் பாராட்டி தங்கப்பதக்கம் சங்கிலி அணிந்து, விருதும் வழங்கி கௌரவித்து மகிழ்வித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது வில்லிசை நிகழ்வும் ஐயப்பன் ஆலயத்தில்த்தான் ஆரம்பமாகியது. இதன் காரணமாக ஐயப்பன் பேரிலேயே (ஸ்ரீ சபரீசன் மஞ்சமாதா வில்லிசைக் குழுவினர்) என்ற பெயர் வைத்துள்ளேன்.

இன்று பிரான்ஸ் நாட்டிலுள்ள ஏனைய ஆலயங்களுக்கும் விசேஷ வைபவங்களுக்குச் சென்று எனது தொண்டுகளைச் செய்து வருகிறேன்.

நான் இதுவரை காலமும் பக்திப்பாடல்கள் மட்டும் ஆக்கம் செய்து புத்தகங்கள் வெளிவந்துள்ளது. ஆனால் ஆன்மீக நெறிகள் பற்றியும் இறைவனின் வரலாறுகள், அருளுரைகள், நான் செய்த சொற்பொழிவுகள் எழுதிப் புஸ்தகமாக வெளியீடு செய்ய வேண்டுமென்ற ஆசை உதயமாகியதன் காரணமாக பல நூல்களின் உதவியுடன் இதை எழுத திருவருள் கூடியது. எனது ஆசையை நிறவேற்ற இறைவன் சித்தங்கொண்டதனால் அவன் அருளாலே அவன்தாள் வணங்கி ஆரம்பித்து விட்டேன்.

தேன் என்றால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்புவது இயல்பு. அத்தகைய தேனைச் சேர்க்கும் தேன் வண்டானது ஓரிடத்திலுள்ள மலரிலிருந்து தேனைச் சேர்ப்பதில்லை. பல தூரங்களுக்கப்பாலுள்ள இடங்களில் காணப்படும் பற்பலவிதமான மலர்களிலிருந்து தேனை எடுத்துத் தருவதை எல்லோரும் அறிவார்கள். அதே போல் அடியேனும் அருள்அமுதம் என்னும் இந்நூலை உருவாக்கம் செய்வதற்குப் பல நூல்களை நாட வேண்டிய நிலை ஏற்பட்டது. திருமுறைகள், இதிகாசங்கள், திருக்குறள், பல இலக்கிய நூல்கள், இன்னும் பல பேரறிஞர்களின் புத்தகங்களையும் படித்து அவைகளிலிருந்து (தேன் துளிகளை) அருள் உரைகளைத் தொகுத்து அடியேன் இந்நூலை எழுதி உருவாக்கியுள்ளேன்.

இந்நூலில் கூறப்பட்டுள்ள விடயங்கள் பல தரப்பட்டவையாக, ஆன்மீகக் கருத்துக்களை உள்ளடக்கிய தாகவும், மக்கள் படித்துப் பயன் பெறக்கூடியதாகவும், உலகப் பற்றுக்கள், வாழ்க்கை நிலையாமை, அச்சமின்மை, அரிய தொண்டுகள், சமூகப் பணிகள், அடியார்கள் பெருமை என்பவை எனது சுய சிந்தனையோடு எழுதியுள்ளேன்.

மக்கள் மனதில் நல்ல கொள்கைகள், நல்ல சிந்தனைகள், தோன்ற வேண்டும். அவர்களின் தவறான வழிகள் மாற்றப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும், என்பது எனது கருத்தாகும். ஆகவே மக்களின் உள்ளங்களைக் கவரக் கூடிய முறையில் பொருத்தமான உதாரணங்கள் காட்டி விளக்கி எழுதியுள்ளேன்.

உதாரணமாக திருவாசகக் குருவாகிய மணிவாசகர் தானும் நெஞ்சுக்குள் உருகி சிவபெருமானையும் உருக்கியவர். இல்லையேல் தன்கையால் திருவாசகத்தை எழுத ஆதி முதல்வன் ஆசைப் பட்டிருப்பாரா?

இதே போல் உயர்ந்த நல்ல சிந்தனை, பண்பான, இனிமையான பேச்சுக்கு வழி வகுக்கும், என்பது திண்ணம். இவை சிறந்த செயல்களாக நிறைவு பெறும் ஆதலால்த்தான் இந்நூல் மூலமாக நல்ல சிந்தனைகளை மக்கள் மனதில் ஏற்படுத்த வேண்டுமென்பதே எனது நோக்கமாகும்.

அறம், தொண்டு, தியானம், தியாகம், நற்சிந்தனை, தீங்கிழையாமை, அன்பு, மதிப்பு என்னும் அம்சங்கள் கொண்ட வாழ்வில் தான் சமயவாழ்வின் பயனைக் காணலாம், இக்கருத்தாக்கங்களை அழுத்தி உரைத்துள்ளேன்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே."

என்னைப் பாராட்டிக் கௌரவித்தவர்களையும், ஆலயப் பெயர்களையும் நான் குறிப்பிட்டதற்குக் காரணம் என்னைப் புகழ வேண்டுமென்பதற்காகவல்ல, எனது இந்நூல் மூலம் அவர்களுக்கு நன்றி கூற வேண்டுமென்பதற்காகவும், அவர்களின் ஊக்குவிப்பான செயல்ப்பாடுகளை யாவரும் அறிய வேண்டுமென்பதற்காகவும் அவர்களின் உள்ளம் மகிழ்ச்சியடைய வேண்டுமென்பதற்காகவுமே வெளியிட்டுள்ளேன். இப்புத்தகம் மூலம் அறிய வரும் பொழுது இப்பாராட்டுகளைச் செய்த ஆலயங்கள், நிர்வாகிகள், தர்மகர்த்தாக்கள் எல்லோரும் மக்கள் உள்ளங்களில் நிலை நிறுத்தப்படுகிறார்கள். இவைகளை மக்கள் முன்வெளிக் கொணருவது எனது கடமையாகும்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புத்தகம் எழுதுவதற்கு எனக்கு முக்கியமாக ஊக்குவிப்பைத் தந்தவர்கள் ஆலய நிர்வாகிகள், குருமார்கள் பக்தப் பெருமக்கள் குறிப்பாக T.T.N தமிழ் ஒளி செய்தி வாசிப்பாளர் திரு. ராஜ்குமார் அவர்களுமாவர். நான் செய்த சொற் பொழிவுகளை நூல் வடிவில் வெளியீடு செய்யும் படி கேட்டுக் கொண்டதற்கிணங்க நூல் வடிவாக்கியுள்ளேன். எதற்கும் எனது கண்கண்ட தெய்வங்களான, அமரத்துவமடைந்த தந்தை, தாயைப் போற்றிப் பணிகின்றேன்.

அடியவன்
ச. விஜயரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் தத்துவம்

கணபதி என்பவர் ஆன்மீக அறிவிற்கும் புத்திக்கும் அதிபதி. ஞானத்தின் திருவடிவம். அதனால்த் தான் அனைத்துக் கடவுளாலும் வழிபடப்படுகிறார். கணபதி என்பவர் கணங்களுக்குத் தலைவர். பிரபஞ்சம் முழுவதும் கணங்களால் போஷிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொருவருக்கும் யாராவது ஒரு தலைவர் இருப்பார். ஆனால் கணபதிக்கோ யாரும் தலைவர் இல்லை. அவரே அவருக்குத் தலைவர். இந்த உலகத்தில் எத்தனையோ மகான்கள் விநாயகரை வழிபடுவதைக் காண்கின்றோம். ஆனால் விநாயகர் யாரைத் தொழுததும் கண்டதில்லை.

ஈஸ்வரனே தனது மகன் விநாயகனைப் பூசித்ததைப் பற்றிக் கேட்டிருக்கிறோம். விநாயகர் யாரையும் பூசித்ததாக வரலாறு இல்லை. எனவே விநாயகரே அனைவருக்கும் தலைவர்.

விநாயகருக்கு சதுர்த்தி தினத்தில் எண்ணெயில் செய்த பொருட்கள் படைப்பதில்லை.

தெய்வ அவதாரங்களில் விநாயகர் அவதாரம் மிக மிக முக்கியமானதாகும். கணபதி ஒரு எளிமை நிறைந்த கடவுளாவார். இவர் எங்கும், எந்த இடத்திலும் கோயில் கொண்டு அருள்பாலிப்பார். எல்லா மதத்தவர்களாலும் வணக்கத்துக்குரிய தெய்வமாகவும் விளங்கி நிற்கிறார். பிள்ளையார் ஒரு கருணை மிகுந்த கருணைக் கடல். யார் எதைக் கேட்கிறார்களோ அதை உடன் கொடுத்தருளும் வள்ளலாக விளங்குகின்றார். ஒரு சூடம் ஒளி காட்டி, ஒரு தேங்காய் உடைத்தால் போதும் சித்தம் மகிழ்ந்து முன்னே வரும் கருணைத் தெய்வம்.

எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் அவரை நினைந்து சாணத்திலோ, மஞ்சளிலோ, வெல்லத்திலோ வைத்து வேண்டுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தால் உடன் இருந்து அருள் புரிவார். பிள்ளையார் பல நாமங்கள் கொண்டு அழைக்கப்படுகின்றார். விநாயகன், விக்கினேஸ்வரன், யானை முகன், கணபதி, பிள்ளையார், என நாமங்கள் பல உண்டு. ஒவ்வொரு பெயருக்கும் ஒவ்வொரு தத்துவமும் உண்டு. விநாயகன் என்றால் எல்லாவற்றிற்கும் மேலானவன் தனக்கு மேல்த் தலைவன் இல்லாதவன். ஒப்பற்ற தலைவன். இந்தத் தத்துவத்தை தந்தை, தாயாரான சிவன் உமை இருவராலும் கொடுக்கப்பட்டதாகும். இதன் காரணமாக எங்கும், எதிலும் பிள்ளையாருக்கே முதல்ப் பூசை செய்யும் மரபாய் உள்ளது. விக்கினேஸ்வரன் என்றால் விக்கினங்கள் தீர்ப்பவன். ஆனைமுகன் என்றால் ஓங்கார மூர்த்தி, கணபதி என்றால் மோட்சத்தை அருள்பவன். பிள்ளையார் என்றால் குழந்தைக் கடவுள்.

குழந்தைகளுக்கு இனிப்பு பண்டங்களில் விருப்பம் போல், குழந்தைக் கடவுளான பிள்ளையாருக்கும் இனிப்புப் பண்டங்களில் மிகு விருப்புண்டு. எனவே தான் கையில் மோதகத்துடன் இருப்பதால் மோதகப் பிரியர் என்று பெயர் ஆயிற்று.

"கைத்தல நிறைகனி அப்பமொடவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி"

(அருணகிரி)

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் – கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா

(ஔவை)

பிள்ளையாருக்கு ஔவையார் இனிப்புகள் கொடுத்தே உலகம் உய்யும் பொருட்டு முத்தமிழைப் பெற்றார். அகவல் பாடிக் கயிலை சென்றார். சுந்தர்க்கும், நம்பியாண்டாருக்கும் முன் கயிலை சென்று தரிசித்தவர் ஔவை. தரிசிக்க வைத்தவர் பிள்ளையார்.

"மதுரை நல்லுமையாள் புதல்வன் மலர்ப் பதத்தை
முதிர நினைய வல்லார்க் கரிதோ முகில் போல் முழங்கி
அதிர நடந்திடும் யானையும் தேரும் அதன் பின் வரும்
குதிரையுங் காதங் கிழவியும் காதங்குல மன்னனே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறுகின்றார். ஔவைப் பிராட்டியாரால் எமக்களித்து வைத்தது தான் பூசை செய்து கயிலை சென்ற மந்திரமான அகவல். (''சீதக்களபச் செந்தாமரை...'')ப் பாடிப் பிள்ளையாரை உறுதியான பக்தியோடு அவரின் பாதாரவிந்தம் பணிந்தால்...

''வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.''

என்று பாடல் மூலம் பிள்ளையாரின் அருட்சிறப்பையும், மகத்துவத்தையும் விளக்கி இருக்கின்றார்.

தேவர்களை பெரும் கொடுமைப் படுத்தி வந்த கஜமுகாசூரனின் கொடுமைகளைத் தாங்கமுடியாத தேவர்கள் இறைவனை வேண்டி தங்களை அசுரனின் கொடுமையிலிருந்து காத்தருள வேண்டுமென்று வேண்டி நின்றார்கள். அதற்கிணங்க பரனும், உமையும் திருக் கயிலாயத்திலுள்ள எழுநூறு கோடி மந்திரங்கள் அடங்கிய சிற்பசாலைக்குச் சென்று அங்குள்ள சிற்ப ஓவியங்களை உற்று நோக்குகின்றார்கள். இவர்களின் பார்வையின் சங்கமத்தில் களிறும், பிடியுமாக யானை முகத்துடன் பிள்ளையார் தோன்றி ஜெனனமானார். உடனே சிவனும் உமையும் பிள்ளையாரை எடுத்து முத்தமிட்டு பணிப்புரைகள் செய்தார்கள்.

விநாயகர் அவதாரம் செய்தது ஆவணி மாதம் பூர்வபட்ச சதுர்த்தி திதி நன்னாளில். தேவர்களுக்குத் துன்பங்களைக் கொடுத்த கஜமுகாசூரனைச் சங்காரம் செய்தது மார்கழி மாதம் பூர்வபட்ச சஷ்டி திதியாகும். விநாயகர் விரதத்துக்கு சிறந்த இரு நாட்களாகப் பிள்ளையார் புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஒன்று ஆவணி மாதம் பூர்வபட்ச சதுர்த்தி திதியாகும், அடுத்தது மார்கழி மாதம் பூர்வபட்ச சஷ்டி திதியாகும். இந்த இரண்டு காலங்களிலும் விரதம் நோற்பது மிகவும் சிறந்ததாகும். விநாயகர் வழிபாடு எல்லாத் தெய்வங்களையும் வழிபாடு செய்ததற்குச் சமமாகும்.

விநாயகர் சதுர்த்தி என்பது நான்முகனின்(பிரம்மா) கொட்டாவியிலிருந்து தோன்றிய சிந்தூரனைச் சங்காரம் செய்வதற்கு கஜானன மூர்த்தியாகத் தோன்றிய (அவதாரம் செய்த) நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணி மாதச் சதுர்த்தி திதியில் (பூர்வபட்ஷம்) சிவனும் பார்வதியும், விநாயகரைப் பூசித்ததினால் இவ்வுலகில் யாவரும் ஆண்டு தோறும் ஆவணி பூர்வபட்ஷ சதுர்த்தி திதியில் விநாயகர் விரதம் அனுஷ்டித்து பெறுதற்கரிய பெறுபேறுகளைப் பெறுதற்கு உகந்த நாளாக வகுக்கப்பட்டிருக்கிறது.

விநாயகர் முகூர்த்தம் ஞான சொரூபம். அது பரஞானம், அபரஞானம் ஆகிய இரண்டையும் அறிவிக்கும் குறிகளைக் கொண்ட அழகிய முகூர்த்தம், அதனுடைய ஒடிந்த கொம்பு அபரஞானத்தைக் குறிக்கும், ஒடியாத முழுமையான கொம்பு பரம ஞானத்தைக் குறிக்கும்.

விநாயகர் சமய பேதங்களைக் கடந்தவர். சைவர்க்கும், வைணவர்க்கும் வழிபாடு கடவுளாக விளங்குபவர் விநாயகர், விநாயக முகூர்த்தம் ஒன்றை வழிபட்டால்ப் போதும் சிவன், சக்தி, விஷ்ணு ஆகிய பெரும் கடவுள்களை வழிபாடு செய்ததற்குச் சமமாகும். உலகில் நிகழும் எல்லாச் செயல்களும் படைத்தல், காத்தல், மறைத்தல், அழித்தல், அருளல் என்ற ஐந்து பெரும் தொழில்களும் விநாயகரின் ஐந்து கரங்களிலும் அடங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமயம்

மனித வாழ்க்கையில் சமயம் தவிர்க்க முடியாத தொன்றாகும். சமயமற்ற மனிதசமுதாயம் விலங்குகளின் சமுதாயமாகும். சைவசமயம் உலகில் முதன்மை வாய்ந்த சமயம். உலகில் எத்தனையோ சமயங்கள் உண்டு அவற்றில் பழமை மிக்கதும், புனிதமானதும் சைவசமயமாகும்.

சைவ சமயத்தைத் தவிர்ந்த ஏனைய மதங்கள் குறிப்பிட்ட ஒருவரால், குறிப்பிட்ட காலத்தில் ஏற்பட்டவையாகும். ஒவ்வொரு சமயமும் தோன்றியதற்குரிய ஆண்டு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சைவசமயம் தோன்றிய ஆண்டோ, யாரால் தோற்றிவிக்கப்பட்டது என்றோ யாராலும் கூற முடியாது. எல்லாச் சமயங்களுக்கும் முந்திய சமயம் சைவ சமயமே.

ஏகப் பரம்பொருளாம் இறைவனும் ஆதி அந்தமில்லாதவர். சைவ சமயமும் அது போன்றதே. எனவே இறைவனும், சைவ சமயமும் ஒன்றென ஆகமங்கள் கூறி நிற்கின்றன. உலகிலுள்ள சமயங்களில் ஒரு மகத்துவம் மிக்க சமயமாக சைவ சமயம் விளங்குகின்றது. சைவ சமயத்தவர் சைவசமயத்தை வளர்க்க வேண்டி பிரசாரம் மேற்கொள்வது, பிற சமயங்களைக் கண்டிப்பது, நிந்திப்பது, எள்ளி நகையாடுவது, பணம், பொருள், பதவி என்பன கொடுத்து மக்களைத் தம் வசப்படுத்துவது போன்ற இழி செயல்களை மேற்கொள்வதில்லை. அன்றும், இன்றும், என்றும் சைவ சமயம் புகழொடு விளங்கிக் கொண்டே இருக்கின்றது. சைவர்களாகப் பிறந்தவர்கள் புண்ணியம் செய்தவர்களாவர், பெருமைப்பட வேண்டியவர்களுமாவர்.

இறைவனாலே சைவ சமயம் வளர்க்கப்பட்டதென்பதற்கு பின்வரும் நிகழ்வுகள் உறுதி கூறுகின்றன. பாண்டி நாட்டிலே சமண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம் மேலோங்கி, பாண்டிய மன்னன் சமணத்தைத் தழுவி அதனுடைய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினான். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி, சமணத்தைத் தழுவிய கூன் பாண்டியன் வெப்பு நோயால்த் துன்புற்றான். சமண குருமார்கள் எவ்வளவோ முயன்றும் நோய் சுகமாகவில்லை. அப்பொழுது அருட்குழந்தை தவசீலர் ஞான சம்பந்தர் மதுரைக்கு வந்திருக்கிறார் என்பதை அறிந்த மன்னன் அவரை அழைத்து வரும் படி உத்தரவிட்டான். ஞான சம்பந்தப் பெருமான் அங்கு வந்து திருநீற்றுப் பதிகம்பாடி அரசனின் மேனியில் திரு நீறு அணிந்ததும் வெப்பு நோய் உடன் அகன்றது. அன்று முதல் அரசன் சைவ சமயத்தைத் தழுவி சைவம் தழைக்கப் பெரும் தொண்டாற்றினான். தமிழ் நாட்டில் சைவம் நிலை பெற உதித்தவர்கள் அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்க வாசகர், ஏனைய நாயன் மார்கள் இவர்களுடைய காலத்தில் பக்தி பெருகியது. சைவ சமயம் புகழோடு விளங்கியது. இவர்கள் ஊர் ஊராய் நடந்து பாத யாத்திரை செய்து, சிவாலயங்களைத் தரிசித்துத் திருமுறைகள் (பதிகங்கள்) பாடினார்கள். பக்தியினால் ஈர்க்கப்பட்ட மக்கள் அவர்களுக்கு மதிப்பளித்து வரவேற்றனர். சைவ சமய வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கிப் பெரும் தொண்டாற்றினார்கள். சைவம் சமணர்களிடமிருந்து பிழைத்தது. அகிலமெங்கும் இன்று சைவம் தழைத்தோங்குகின்றது. மேன்மை கொள் சைவ நீதி உலகெல்லாம் விளங்கிப் பிரகாஷிக்கின்றது.

நாயன் மார்களும் அருளாளர்களும் தங்கள் பேச்சிலும், செயலிலும், பாடல்களிலும் சைவத்தின் பெருமையும் அருமையும் எடுத்தியம்பி உள்ளனர்.

“வேதம் ஓதி வெண்நூல் பூண்டு வெள்ளை எருதேறி
பூதம் சூழப் பொலிய வருவார் புலியின் உரிதோலார்
நாதாவெனவும் நக்கா எனவும் நண்பா என நின்று

பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழனநகராரே”

பாவம் தீர்க்க வந்தவர் சிவபெருமான். அவரின் பாதம் தொழுவது நம் கடன். எங்கள் பாவம் தீர்ப்பது அவர் கடன். சேர, சோழ, பாண்டியர்கள் சைவம் தழைக்க மகோன்னத அரும் பணிகள் செய்துள்ளனர். காஞ்சியிலிருந்து கடாரம் வரைக்கும் சைவ சமயத்தை நிலை நிறுத்தினர். சிற்பங்கள் நிறைந்த கோபுரங்களுடன் அவர்கள் கட்டிய கலைக் கோயில்கள் இன்றும் எழிலுடன் அருள் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையை ஆண்ட இராவணன் சிறந்த சிவபக்தனாக விளங்கினான். திருஞான சம்பந்தர் தமது திருநீற்றுப் பதிகத்தில் "இராவணன் மேலது நீறு" என்று போற்றிப் பாடியுள்ளார். நால்வர் திருமுறைகள் எமக்குக் கிடைத்த என்றும் அழியாத அருநிதியங்களாக இன்றும் விளங்கி நின்று உலகமுய்ய அவை வளிகாட்டி நிற்கின்றன.

எம்மதத்தவர்கள் சிலர் பிற மதத்தவர்களின் பகட்டான வார்த்தைகளில் மயங்கி அற்ப சலுகைகளுக்காக ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாக ஆன்றோர்களால் ஆருயிர் எனப் போற்றப்பட்டு ஆராதிக்கப்பட்ட அருள் நெறியை மறந்து மதம் மாறுவது வேதனை தருகின்றது. அடுத்தவனின் மனைவி ஆடம்பரமாக இருக்கிறாள் என்பதற்காகத் தமது உத்தம பத்தினியை எவன் விட்டுச் சென்று அடுத்தவளை நாடுவான். தரமான பொருளெனில் இருந்த இடத்திலேயே விலைப்படும், தேடி வந்து வாங்குவார்கள், எதற்காகக் கூறி விற்க வேண்டும்? தரமில்லாத பொருட்கள் தான் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுகின்றன. தன்மானமுள்ளவர்கள் இக்காரியத்தைச் செய்ய மாட்டார்கள்.

சைவ சமயத்தில் இல்லாதது வேறெங்குமில்லை. அப்படிப் புனிதம், மகத்துவம் நிறைந்தது. சைவ சமயம் அன்பும், சிவமும் இரண்டென்பர் அறிவிலார் ஒன்றே குலம், ஒருவனே தேவன்.

சைவ சமயத்தில் பெரும் கட்டுப்பாடுகள் உண்டு. ஆசாரம், ஆசூசம், கொல்லாமை, பஞ்சமாபாதகச் செயல்கள் அத்தனையும் நீக்கி, நீதி, ஞாயத்துக்குட்பட்டு உறுதியாய் இருக்க வேண்டுமென வலியுறுத்தும் சமயம் சைவ சமயம். ஆசூசம் என்றால் துடக்கு என்பார்கள். இதில் மிகவும் உறுதிப்பாட்டுடன் இருக்கிறது. உணவில் ஆசாரம், உடையில் ஆசாரம், செயலில் ஆசாரம் இப்படி உறுதியான கட்டுப்பாடுகளைக் கொண்டது.

எல்லோரும் பொருள் சம்பாதித்து புலன் இன்பத்துக்குச் செலவிடுவதிலேயே இருக்கின்றனர். போதுமான பொருளாதார வளங்கள் உலகில் எங்கணும் இருந்தும், மனித சமுதாயத்தின் செயல்களனைத்தும் மிருகத் தனமாகவே இருக்கின்றன. எல்லாம் ஒட்டு மொத்தமாக மிருகத் தன்மை பெறும்பொழுது அழிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கொள்கின்றது. இதற்குக் காரணம் சமய அறிவின்மையாகும். இந்தச் சமய அறிவோ, பகுத்தறிவோ மனித இனத்துக்கு மட்டும் தான் உண்டு. பகுத்தறிவின்றி வாழ்ந்தவர்கள் பேராசைக்காரர்கள். அவர்களை உலகம் மதிக்கவில்லை. சமய அறிவுடைய ஞானிகளைத்தான் இன்று உலகம் போற்றி நிற்கிறது, துதித்து நிற்கிறது.

இந்து சமயம் காலத்திற்குக் காலம் அவதார புருஷர்களை உருவாக்கி மக்களுக்கு வழிகாட்டி வந்துள்ளது. இவர்களால் நிறுவப்பட்ட ஆதீனங்கள், மடாலயங்கள், நிறுவனங்கள் யாவுமே சமுதாய வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

சைவ சமயம், சைவ நெறியாக, அன்பு நெறியாக, பக்தி நெறியாக மலர்ந்து வாழ்வளித்து வருகிறது.

பிறரின் துன்பத்தைப் போக்குவதே மதம். பூசைகள் செய்வது, ஞான நூல்கள் படிப்பது இவைகளே தெய்வச் செயல்கள். சமயத்தின் உண்மை பொருட்செல்வத்தை ஒருநாள் விட்டுச் செல்லத்தான் வேண்டும். அருட்செல்வம் நம்முடனே கூட வரும். உயிரைப் பற்றி நிற்கும்.

இந்து சமயத்தில் வழிபாடு மூன்று வகைப் படும். உருவ வழிபாடு, அருவ வழிபாடு, அருஉருவ வழிபாடு. உரு வழிபாட்டுக்கு ஆலயங்கள் உள்ளன. ஞானவான்களுக்கு அருவழிபாடு, ஆன்மீகத்தில் உயர் நிலை அடைந்தவற்கு மட்டும் அருவுருப வழிபாடு என்பது சமயநெறியாகும்.

சமய உபதேசத்தில் முதன்மையாக விளங்குவது திருவைந்தெழுத்து பஞ்சாட்சரமாகும். வேதங்களின் கருப் பொருளாகவும், உறுதிப் பொருளாகவும் விளங்குவது திருவைந் தெழுத்து மனிதனின் இதயமாகும். மூளையில்லாத மனிதன் பயித்தியக் காரன் போல வாழ முடியும். ஆனால் இருதயம் இல்லாத மனிதன் கண நேரமும் உயிர் வாழ முடியாது. எனவே தான் மணிவாசகப் பெருமான் "நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க, இமைப் பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்றும், "கடையவனேனைக் கருணையினாற் கலந் தாண்டுகொண்ட விடையவனே விட்டிடு" என்று பாடியுள்ளார். "வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" (சம்பந்தர்) "கற்றுணைப் பூட்டியோர் கடலுட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே'' (அப்பரடிகள்) ''நற்றவாவுனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே'' (சுந்தரர்) இவ்வாறு இறைவனின் கருணையால் ஆளப்பட்ட நாயன் மார்கள் எம்பெருமானின் திருவைந்தெழுத்தின் பெருமைகளையுணர்ந்து, தியானித்து சமைய அனுபூதிகளாகக் கூறியுள்ளார்கள்.

சமய உணர்வு ஏற்பட்ட நாள் முதல் மக்கள் நாகரீகம் அடைந்தவர்களாகவும், உயர் பண்பாட்டையும், சமய கலாச்சாரத்தைப் பேணி வாழ்பவர்களாகவும் விளங்கினார்கள். மக்கள் உயர்ந்த சிந்தனை உடையவர்களாக வாழ்வதற்கு வீட்டுச் சூழ்நிலை, பாடசாலைச் சமூகம் என்பன துணை புரிகின்றன. மேலும் பெரியவர்கள் தொடர்பு சமய நிறுவனங்களுடைய செயற்பாடுகள் என்பன மக்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிவகுத்து நிற்கின்றன. கற்றவர்களுக்கு உற்ற நண்பர்களாக விளங்குபவை நூல்களே.

''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'', என்ற வள்ளுவர் வாக்கு எல்லோராலும் கடைப் பிடிக்கப்பட வேண்டும். பேக்கன் என்ற மேலை நாட்டறிஞன், வாசிப்பு மனிதனைப் பூரணத்துவம் அடையச் செய்கிறது என்று கூறியுள்ளார். சமய சம்பந்தமான நூல்கள் மனதை நல்வழிப் படுத்திச் சிறந்த கோட்பாடுகளை வாழ்க்கையில்க் கடைப்பிடித்து வாழ வழி வகுக்கின்றன. சமய நூல்கள் மொழி பெயர்ப்பு நூல்களாகவும், தொகுப்பு நூல்களாகவும் வெளி வந்து உதவி புரிந்து மக்களை நல்முறைப் படுத்துகின்றது.

சைவ சமயத்தின் பெருமையையும், சிறப்பையும் திருஞான சமபந்தருடைய வரலாற்றில் சிவபெருமானே வெகு சிறப்பாக அமைத்துக் காட்டுகின்றார். திருஞான சம்பந்தராகிய குழந்தையை சீர்காழிக் குளக்கரையில் சிவபெருமானே அழ வைக்கிறார். அக்குழந்தையின் பசிக்குப் பார்வதியே வந்து பால் ஊட்டச் செய்கின்றாள் என்றால், ஒரு குழந்தைக்குப் பசிவந்தால்க் கூட அந்தப் பசியைப் போக்குவதே சைவம் என்பதை நிலை நாட்டுவதற்காகத்தான் இந்நிகழ்ச்சியைப் பாடவந்த சேக்கிழாரும் ''வேதநெறி தழைத்தோங்கமிகு சைவத்துறை விளங்க'' அக்குழந்தை அழுதது என்கிறார். இவ்வாறாகச் சைவ சமயம் பற்பல சோதனைகளைத் தாண்டி வளர்ந்து கொண்டே இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயம் மனிதனைச் சிறப்பாக வாழ இரண்டு விதமான போதனைகளைக் கூறுகின்றது. ஒன்று தெய்வ வழிபாடு, மற்றது சமுதாய நலம் காக்கும் தொண்டு. அறம், தொண்டு, தியானம், தியாகம், நற்சிந்தனை, தீங்கிழையாமை, அன்பு, பக்தி என்னும் அம்சங்கள் கொண்ட வாழ்விலே தான் சமய வாழ்வின் பயனைக் காணலாம். என உரைக்கின்றது கீதை.

''வேதம் நான்கிலும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமசிவாயவே''

''சிவ தொண்டு செய்வார்க்குச் செல்வமுண்டு கல்வியுண்டு
சிவ தொண்டு செய்வார்கக்குச் சீருண்டு பேருண்டு
சிவ தொண்டு செய்வார்க்குச் சிந்தனைத் தெழிவுண்டு
சிவ தொண்டு செய்வார்கள் சேருவரோ தீநெறியில்''

''வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்தவம் வேள்வி மல்க
மேன்மைகொன் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆன்மீகம்

ஆன்மீகமென்பது மனிதனை நெறிப்படுத்தி மனிதனாக வாழவைப்பது, மனிதனுடைய முதல்க் கடமை அறத்தையும், ஆன்மீகத்தையும் பின்பற்றி வாழ்வதாகும். அப்படி வாழ்வதால் அவனை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும் சாதனமாகும். இப்படியாக நெறியான வாழ்க்கை வாழ்பவர்களைத் தான், இன்று உலகம் தெய்வமாக வணங்குகின்றது. அறிவியல் விஞ்ஞானிகளையோ, எஞ்சினியர்களையோ யாரும் வணங்குவதில்லை.

ஆன்மீகத்தின் ஆரம்பம், கருணை, பொறுமை, நேர்மை, ஈவு, இரக்கம், தயவு, தாட்சண்யம், கடமை, கட்டுப்பாடு, கண்ணியம், பெரியோரைக் கனம் பண்ணுதல், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, சத்தியம், தர்மம், தார்மீகம் என்பவையாகும். ஆன்மீக வாதிகளோ, தவம் செய்து, தவம் செய்து மக்களின் கண்ணீரைத் துடைக்கின்றார்கள். மக்களைச் சிரித்து வாழவைக்கிறார்கள்.

அறிவியலின் ஆரம்பம் பட்டம், பதவி, புகழ், பேராசை, பொறாமை, கோபம், வஞ்சகம், சூது, கள்ளம், கபடம் என்பவையாகும். அறிவியல் மேதைகள் அணுகுண்டு செய்து இந்தப் பூமியையே அழிக்கிறார்கள். மக்களைப் பயமுறுத்துகின்றார்கள், அழவைக்கின்றார்கள்.

அறிவியல் முன்னேறி இருக்கின்றது. ஆனால் மனிதத் தன்மை பின் தள்ளப்பட்டிருக்கின்றது. காரணம், ஆன்மீக அறிவின்மையேயாகும். அறிவியல் எவ்வளவுக் கெவ்வளவு படிப்பும், நாகரீகமும் அதிகமோ, அவ்வளவுக்கவ்வளவு பொய், களவு, வஞ்சனை, பொறாமை, வேஷம் எல்லாவற்றிலும் நிபுணர்களாக விளங்குகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் அசுர வேகத்தில் வளர்ந்து திணறவைக்கும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்றோம். அறிவின் திறனைக் குறைத்து, மன வலிமையைத் தகர்த்து, நிம்மதியைக் குலைத்து, வலிமையைப் பாழாக்கி, ஆரோக்கியத்தைக் கெடுத்து, குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி, தொழிலில் நஷ்டம், உத்தியோகத்தில்ப் பிரச்சனை, கல்வியில் வீழ்ச்சி, ஏன்? காதலில்க் கூடத் தோல்வி, இவைகளெல்லாம் அறிவியல், விஞ்ஞானம் வளர்ந்த போதும் இவைகளுக்கு விடையில்லை. இதற்கு இறை அருள் ஒன்றே தீர்வு. அது தான் ஆன்மீகம்.

கல்வியறிவு, மேலான பதவி, செல்வம், அதிகாரம் இவைகள் மட்டும் ஒருவரை நாகரீகமுடையவராக, பண்புடையவராக மாற்றி விடாது. இவையனைத்தும் இருந்தும் ஒருவர் மனத்தளவில் விலங்காக விளங்கலாம். ஒருவருடைய அறிவு வளர்ச்சிக்குத் துணை புரிவது அவர்கற்கும் ஆன்மீக நூல்களாகும்.

நம்மால் ஆகக்கூடியது எது? இறைவனால் ஆகாததெது? சிலர் தங்களுடைய புத்தக அறிவைப் பெரிதாக நினைத்துக் கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை உண்மையிலேயே நன்கு படித்தவர்களென்று ஏற்றுக் கொள்ள முடியாது.

"கற்றதனா லாயபய னென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின்"

பெரிய பட்டதாரிகளாகப் படித்திருந்தாலும் அவர்களிடம் ஆன்மீக அறிவிருந்தால்த் தான் பண்புடையவர்களாக, ஒழுக்க முடையவர்களாக வாழ முடியும்.

"பற்பல நூல் கற்றுணர்ந்த பண்டிதனே ஆனாலும்
நற்குணங்கள் எள்ளளவும் நண்ணாத – துர்க்குணனை
முற்ற வெறுக்க முடிமேல் மணி இருந்தென்
புற்றரவைக் கிட்டார் புகுந்து"

விஞ்ஞானத்தை வளர்த்துக் கொண்ட மனிதன் மெய்ஞ்ஞானத்தை வளர்த்துக் கொள்வதில் கவனம் செலுத்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறிவிட்டான். விண்ணில் பறக்கக் கற்றுக் கொண்ட மனிதன் மண்ணில் சரியாக வாழ முடியாமல்த் திண்டாடுகின்றான்.

அறிவியலின் பிழையான சிந்தனையில்த் தோன்றியது தான் இன்று உலகெங்கும் நடைபெறும் குற்றச் செயல்கள், வன்செயல்கள், அரசியல்ப் பகைகள், நாடுகளுக்கிடையில் நடைபெறும் யுத்தங்கள் முதலியன.

அறிவியலில் ஆன்மீகம் சேராத காரணத்தினால் கொள்கைகளுக்கும், சாசனங்களுக்கும், மதங்களுக்கும் நடைபெறும் யுத்தத்தினால் அரிதிலும் அரிதான மானிடப்பிறப்பு பெரும் பாடுபட்டுப் படைத்த செல்வக் கலைக் கூடங்களான நகரங்கள் அழிக்கப் பட்டிருக்கின்றன. நீதிக்குமாறான போர் என்னும் ஆட்கொல்லியை சாகடித்து சவக்குழியில்த் தள்ள வேண்டுமானால் ஆன்மீகம் ஒன்றினால்த் தான் முடியும்.

போர்க்குணம் கொண்ட மனிதனை மெல்ல, மெல்ல மனம் மாற வைக்கும் ஆயுதம் தான் ஆன்மீகம். அணு ஆயுதத்தை விட அதிகம் பலம் கொண்டது ஆன்மீக அறிவு. ஆன்மீகம் என்னும் பெட்டகத்துள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அரும் பெரும் பொக்கிஷமான ஆயுதங்கள் தான் பிரார்த்தனை, செபம், தியானம், யோகம், யாகம், (பஜனை) கூட்டு வழிபாடு என்பவையாகும்.

ஒரு மனிதனை உயர்த்துவது பணமோ, பலமோ, குலமோ, புகழோ, பதவியோ, அதிகாரமோ அல்ல. ஞானம் என்னும் ஆன்மீக அறிவுதான்.

பல நூற்றாண்டுகளாக உழைப்பால் உருவாகியிருக்கும் விஞ்ஞான உலகை ஒரு விநாடியில் அழித்திட நினைக்கும் போர்க்குணம் தான் அறிவியல் மேதைகளில் செயல்பாடாகும்.

உண்மையான அறிவியல் என்பது என்ன? நான் யார்? எல்லாம் இறைவன் செயல், நம்மாலாவது ஒன்றுமில்லை. இப்படி நினைப்பது தான் அறிவு. எல்லாம் இறைவன் கையில் உள்ளது, இறைவன் நம்மை ஆட்டுகின்றான் நாம் ஆடுபவர்கள், இது தான் உண்மையான ஞானம்.

மண் பெரிதல்ல, மனிதன் தான் பெரிது, மங்கையர் சுகம் பெரிதல்ல, மாண்புகள் தான் பெரிது, ஆசை பெரிதல்ல அன்பு தான் பெரிது என்கிறது ஆன்மீகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகம் என்பது குழப்பமான விஷயமல்ல, மனித வாழ்க்கையை தெளிவு படுத்தும் மகத்தான சக்தியாகும். ஆன்மீக வாழ்க்கையென்பது இறைவனின் பாதக்கமலங்களில் மனதை நிலை நிறுத்தி எப்போதும் அவருடைய நினைவிலேயே மூழ்கி இருப்பதாகும். இறைவழிபாடு, செபம், தியானம், பிரார்த்தனை, இறை தொண்டு, கூட்டு வழிபாடு (பஜனை), அருள் நூல்கள் படித்தல் இப்படி எமது முழு வாழ்க்கையையும் இறைவனுடன் தொடர்பு படுத்தி வாழ்வது தான் ஆன்மீக வாழ்வு.

மனிதன் நேர்மையுடன் தர்மத்தைக் கடைப்பிடித்து வாழ்க்கையை நடத்த வேண்டும். மக்களின் வெறுப்பையும், கேடு விளைவிக்கும் தீய எண்ணங்களையும் மனதை விட்டு வெளியேற்றி அன்பை வளர்த்து அனைவருடனும் ஒற்றுமை உணர்வை உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஒற்றுமை இருக்குமிடத்தில் தூய்மை இருக்கும், தூய்மை இருக்குமிடத்தில் தெய்வீகம் இருக்கும், தெய்வீக மிருக்குமிடத்தில் ஆனந்தமிருக்கும், நல்ல இனிய வார்த்தைகளைப் பேச வேண்டும், ஆன்மீக செற்பொழிவுகளைக் கேட்க வேண்டும், உயர்ந்த மேன்னையான எண்ணங்களை மட்டும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இதுவே ஆன்மீக சாதனை.

தர்ம மழை, அன்பு மழை, ஆண்டவனின் அருள் மழை, இந்த மூன்று மழையும் ஆன்மீக மழையாகும். ஆசாரமென்பது உணவு மட்டுமல்ல, சகல ஒழுக்கங்களும் இதில் அடங்குகின்றது. தண்ணீரை விட்டு முகம் கழுவுவது போல் கண்ணீரை விட்டு அகம் கழுவிக் கொள்ள வேண்டும்.

விஞ்ஞானம் என்பது வெளியே தேடுவது, வெளியே தேடுவதை ஒருவர் கண்டு பிடித்து விட்டால் உலகம் முழுமைக்கும் பயன் உண்டு. மெய்ஞ்ஞானம் என்பது உள்ளே தேடுவது. இது ஒவ்வொருவரும் தேட வேண்டிய பொக்கிஷமாகும். மனிதனிடம் புத்தி, ஞானம், அறிவு நிறைந்திருக்கிறது. ஆனால் மனிதனோ தன்னுள் இருக்கும் அஞ்ஞானத்தைத் தான் கடைப்பிடிக்கிறான். ஞானத்தைக்கடைப் பிடிப்பதில்லை. பண்டைக் கால மனிதன் தனது ஆன்மீக சக்தியால் வளத்துடனும், ஆனந்தத்துடனும் வாழ்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் சுயநலம் நிறைந்த அன்பினால் மிருகத்தைப் போல நடந்து கொள்கிறான். அப்படிப்பட்ட மனிதன் ஒரு போதும் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. அவன் எப்போதும் துன்பத்திலேயே மூழ்கி இருப்பான். நீ மற்றவர்களை எப்படி நேசிக்கிறாயோ அதற்கு மேல்ப்பட்ட மகிழ்ச்சியை உன்னால் அனுபவிக்க முடியும்.

ஆன்மீகப் பண்புகள் அன்பு, சகோதரத்துவம், நல்லெண்ணம், ஈவு, இரக்கம், மன்னிக்கும் தன்மை, பொறுமை, கருணை, நம்பிக்கை, அமைதி காத்தல், இவைகளுடன் அன்பும் தர்ம நெறிகளும், சுய மதிப்பும், தவறை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் இவைகள் எம்மிடம் நிறையும் போது நமது உணர்வுகள் மலர்ந்து மணம் வீசும் மன அமைதி தான் வாழ்க்கையின் ஜீவநாடி. சங்கல்பம் என்பது தெய்வத்திடம் சரணாகதி அடைதல்.

ஆன்மீகம் எண்ணிறைந்த மக்களுக்கு அறிவின் ஒளி ஊட்டி அமைதியான வாழ்விற்கு வழிகாட்டி நிற்கின்றது.

சிறப்பான வாழ்வென்றால் ஏதோ நாகரீகமாக ஆசாபாசங்கள் நிறைந்த வாழ்வு என்று எண்ணுதல் அல்ல. அப்படி வாழ்தல் மிகவும் தவறாகும். இறையோடு இசைந்து வாழும் வாழ்வே சிறப்பான வாழ்வு. இவ்வாழ்வு எல்லோர்க்கும் கிடைப்பது அரிதாகும். தோன்றும் பொருட்கள் யாவும் மறைவது முடிவாகும். நீர்க்குமிழி போன்ற உலக வாழ்வில் நித்தியப் பொருளாக இருப்பது இறை பொருளாகும். இறையை இறைஞ்சி வாழும் வாழ்வு தான் நித்தியமான வாழ்வாகும்.

"ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம் பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத நன்மணி வந்தென் பிறவித்
தாழைப் பதித்தவா தோணோக்க மாடாமோ"

எனத் தன் பொன்னான காலம் வீணாகி விட்டமைக்காக மணிவாசகப் பெருமான் வருந்திக் கூறுகின்றார். எனவே எங்களுக்கு என்றும் உற்ற துணையாய் இருப்பவர் இறைவன். இதனைச் சிந்தையிற் கொண்டு வாழ்க்கை நடத்தினால் என்றும் துன்பம் இல்லை.

மனக்கவலை இறைவனை அடைய ஒரு வழி என்பது திருக்குறள் நெறி. துன்பங்களைக் கண்டு துவளக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டங்கள் வெற்றியின் படிக்கட்டுகள். துன்பங்கள் தான் ஞான வீட்டின் திறவு கோல்.

பேற்றோர்கள் பிள்ளைகளுக்கு செல்வம் சேர்த்து வைப்பதாக நினைத்து அழியும் பொருட்களைச் சேர்த்துக் கொடுத்து பிள்ளைகளைச் சோம்பேறிகளாக்கி விடுகிறார்கள். என்றும் அழியாத செல்வமான ஆன்மீகக் கல்வியைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து விட்டால் பிற்காலத்தில் அசைக்க முடியாத மாமனிதர்களாகத் திகழ்வார்கள்.

நான் என்னும் அகங்காரம் நெருப்புக்கு ஒப்பிடப் படுகிறது. அது சிறிதளவிருப்பினும், அன்பு, அருள், அடக்கம், அறிவு, கல்வி, அமைதி, ஆக்கம் இவை எல்லாம் அழிந்து விடும்.

மனிதனின் வாழ்க்கைத் தரம் உயர்ந்த அளவிற்கு அவனது அறிவு நிலை உயரவில்லை. அதனால்த்தான் இன்று கஷ்டப் படுகின்றான். மனிதன் தன் இன்பம் நாடிப் பிறர்க்குத் துன்பம் செய்கின்றான்.

இறையருளின் திருவிளையாடல்களை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, போற்றியும், புகழ்ந்தும் அறிவிலே விரிவு கொண்டு மகிழ வேண்டும். இறை அருள் அணுமுதல் அண்டங்கள் வரை நிறைந்திருக்கிறது.

மனிதன் மெல்ல மெல்ல உயர்ந்து இறுதியில் சென்றடையும் இடம் ஆன்மீகம். அதற்குத் தர்மம் என்ற ஒரு வழிப்பாதை மட்டும் உண்டு. அறவழி செல்வது கொஞ்சம் கடினமானது தான், ஆனால் எப்படியும் முடிவில் அறமே வெல்லும் பாவம் தோற்கும்.

ஆன்மீகமென்பது குழப்பமான விடயம் அல்ல. மனித வாழ்க்கையைத் தெளிவு படுத்தும் மகத்தான உபாயம். அறியாமை என்பது கடும் இருட்டு. அறிவு என்பது ஒளி விளக்கு. வறுமை கொடிய இருட்டு. வயதினால்ப் பெரியவன் பெரியவன் என்றில்லை. ஞானம் அதிகம் உள்ளவன் பெரியவன். ஒருவரின் உண்மையான பக்தியின் முன் இறைவன் அடிபணிவான், உனக்கு வெளியே நிம்மதியில்லை. அது உனக்குள்ளேயே இருக்கிறது. நீ தேடினால் கிடைக்கு மென்கிறது ஆன்மீகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய பலன்கள் எல்லாவற்றிலும் மேலான பலன் ஒன்று உண்டானால் அது தான் பெரியோர்களின் ஆசி. இதன் பலன் என்பது இறைவனது அருளுக்கு நிகரானதாகும். பெரியோர்கள் என்பது யார்? வயதில்ப் பெரியவர்களாக இருந்து குணத்தில்ச் சிறியவர்களாக இருப்பவர்கள் பெரியவர்களல்ல. பெரியோர்கள் என்பவர்கள் குணக்குன்றாக இருப்பார்கள். ஆற்றல் மிக்கவர்களாக இருப்பார்கள் அருளுடையவர்களான ஆன்மீக ஞானிகள்.

ஆன்மீக உணர்வு என்றால் என்ன? ஒரு பசுக்கன்றினுடைய உயிரையும், தன் மகன் வீதிவிடங்கனுடைய உயிரையும் ஒன்றாகப் பார்த்தானே மனுநீதிச் சோழன். அது தான் ஆன்மீகம். எந்த உயிரையும் தன்னுடைய உயிரைப் போல மதித்து எல்லா உயிர்களையும் இன்புறச் செய்வதோடு அவ்வுயிர்களுக்கு நேரும் துன்பத்தைத் துடைப்பதே ஆன்மீகம். வாடிய பயிரைக் கண்டு மனம் துடித்தழுதார் வள்ளலார். (இராமலிங்கடிகள்) மனிதராய்ப் பிறந்து புனிதராய் உயர்ந்து, தெய்வமாக வணங்கப் படுபவர்கள் ஆன்மீக அருளாளர்கள்.

சடங்குகள், விரதங்களைக் கடைப்பிடிப்பதோ அல்ல இவையெல்லாம் காலத்தை வீணாக்காது புனிதப்படுத்தும் நற்செயல்களாகும். ஆன்மீகம் என்பது தனித்து வாழும் வாழ்க்கையல்ல. மனித சமுதாயம் முழுவதும் ஒன்றெனவும் அது தெய்வீகத்தின் வெளிப்பாடெனவும் கொள்ளுதலாகும். உடல் சம்பந்தப்பட்ட ஒப்பரவு மட்டும் ஆன்மீகம் அல்ல. மனிதன் தன்னிடமுள்ள விலங்குணர்வை நீக்காமல் எவ்வளவு தான் தான, தருமங்கள், யாகங்கள், பூசைகள், தியாகங்கள் செய்தாலும் பயனில்லை. இந்த நற் செயல்களைப் புரிவதுடன் நம்மிடமுள்ள மிருகத் தன்மையை விலக்கிக் கொள்ள வேண்டும் அதுதான் ஆன்மீகம்.

விரதங்கள் நோற்பதால் நற்சிறப்பு மட்டுமின்றி ஆன்மீக ஈடேற்றத்திற்கும் உகந்தவையாக உள்ளன. ஆன்மீக உணர்வு ஆன்மீக சிந்தனையை வளர்க்கின்றது. எனவே ஆன்மீக வாழ்வுடன் இணையும் போது மனித வாழ்வு பூரணமடைகின்றது.

சமயாசாரமும், ஒழுக்கமும், கலை ஞானமும், ஆசாரசீலமும், தவச்சுவையுணர்வும், ஞான தாகமும், உலகியற் கல்வியும், சிறப்பான ஞான நூல்ப் பயிற்சியும், ஞான சாதனங்களுமே சிறந்த ஆன்மீகம். எனவே எல்லோற்கும் இறைவன் அருள் கிட்டட்டும். மனித சமூகத்துக்கு சந்தோஷம் உண்டாகட்டும். மக்கள் சுகத்துடனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலத்துடனும் வாழட்டும். அமைதி, சமாதானம் எங்கும் நிலவட்டும், அனைத்துயிர்களும் அல்லல் நீங்கி ஆனந்தம் அடையட்டும். எல்லோரும் ஒன்று கூடி கூட்டு வழிபாடு (பஜனை) செய்து பேரானந்தவாழ்வு வாழ்வோமாக.

இந்த விஞ்ஞான யுகத்தில் மனித இனத்துக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சோதனைகள் மிகப் பல. இந்தச் சோதனைகளிலிருந்து மீள வேண்டுமானால் மனிதன் ஆன்மீக உணர்வை வளர்த்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. இதற்கு மதம் அடிப்படையாக அமைவதால் மதத்தின் எதிர்காலம் பிரகாசமாகவே இருக்கும். ஆனால் ஒரு வித்தியாசம் மத வேற்றுமைகளை மறந்து மதத்தின் அடிப்படை உணர்வான ஆன்மீகம் மிகுந்த செல்வாக்கை அடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய தரிசனம் (பாகம் 1)

ஆலயம் தொழுவது சாலவும் நன்று... – ஔவை
சரண கமலாலயத்தை அரைநிமிட... – அருணகிரி
திருக்கோவிலில்லாத திருவிலூரும்... – திருநாவுக்கரசர்
நிலைபெறு மாறெண்ணுதியேல் நெஞ்சே... – திருநாவுக்கரசர்
உன்திருவடி நினைக்கின்ற உத்தமர்... – வள்ளலார்
கற்றதனால் ஆயபயன் என்கொல்... – வள்ளுவர்

சமயகுரவர்கள், நாயன்மார்கள், பேரறிஞர்கள், தெய்வமகான்கள் எல்லோரும் ஆலய தரிசனம் மனிதப் பிறவிக்கு மிகமிக முக்கியம் ஆன்ம ஈடேற்றத்திற்கென உறுதியாய்க் கூறி வைத்திருக்கிறார்கள்.

உலகில் எண்ணற்ற கோடி உயிரினங்கள் வாழ்கின்றன. மிருகங்கள், பறவைகள், நீர் வாழ்வன, நிலத்தில் வாழ்வன என எண்ணற்ற உயிரினங்கள் உண்டு. எல்லா உயிர்களிலும் மேலான உயர்ந்த இடத்தில் இருப்பது மனித இனம். ஆறாவது அறிவென்னும் பகுத்தறிவைக் கொண்டு நிற்கும் காரணத்தினால் கடவுளை அறியும் ஆற்றல் மனிதனுக்கு மட்டும் உண்டு. அப்படி மனிதன் இருந்தும் கூட ஆலயம் செல்லாமலும், இறைவனை வழிபடாமலும் இருப்பவர்களும் உண்டு. இவர்கள் மனித வடிவு மிருகங்களாவர். இதனை எத்தனையோ மகான்கள், அறிஞர்கள் ஆதார பூர்வமாக நிரூபித்திருக்கின்றார்கள். ஒரு மகான் வீதியில் போகும் ஒவ்வொருவரையும் லாம்பு கொண்டு வெளிச்சத்தில் முகங்களைப் பார்த்து மாடு போகிறது, ஆடு போகிறது, நாய் போகிறது என்றாராம். அவ்வழியால் இராமலிங்க அடிகளார் போகும் பொழுது லாம்பைப் பிடித்து பார்த்து விட்டு இவர்தான் ஒரு மனிதன் போகிறார் என்றாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் செல்பவர்களை எந்தத் தீய சக்திகளும் நெருங்குவதில்லை. நாம் முன் செய்த வினையால் வந்த வினைகளெல்லாம் வேர் அறுக்குமிடம் ஆலயம். மனம் நிம்மதி பெறும் இடம் ஆலயம், பக்தியை வளரச் செய்யுமிடம் ஆலயம், பாவங்கள் பொடிப் பொடியாகுமிடம் ஆலயம், நல்லவர்களை, மகான்களைச் சந்திக்க வைக்குமிடம் ஆலயம். தன் குறைகளைக் குறைத்து இறையருளை நிறைத்துக் கொள்ளுமிடம் ஆலயம்.

இறைவனின் பார்வை படுவதும், அவரின் பாதார விந்தங்கள் பணிவதும், மனத்தால் நினைப்பதும், வாயாரப் போற்றுவதும், புகழ்ந்து பாடுவதும், மனித ஜென்மமெடுத்த மகா பாக்கியமாகும்.

மேலான நிலையில் உள்ள மனித இனம் ஆறாவது அறிவென்னும் பகுத்தறிவைக் கொண்டு நிற்கும் காரணத்தால் கடவுளை அறியும் ஆற்றல் மனிதனுக்கு மட்டும் உண்டு. எனவே ஆலயம் சென்று வழிபடும் மனித வர்க்கம் மட்டும் மேலோங்கி நிற்கிறது. அப்படி நியதி இருந்தும் ஆலயம் செல்லாமலும், இறைவனை வழிபடாமலும் இருப்பவர்களுக்கு என்றும் துன்பங்கள், துயரங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும். இவர்களிடம் ஒழுக்கம், பண்பு, சீவகாருண்யம், ஈவு, இரக்கம், தயவு, தாட்சண்யம் இருக்கமாட்டாது. எந்தப் பாவச் செயல்களையும் செய்யத் தயங்கமாட்டார்கள்.

ஆலயம் சென்று வழிபாடு செய்பவர்கள் தீய, கெட்ட, ஒழுக்கமற்ற, செயல்கள் செய்யமாட்டார்கள் இறைவனுக்குப் பயந்து நடப்பவர்களாக இருப்பார்கள். ஆலயம் சென்று முறைப்படியும், ஆலய தரிசன ஒழுங்கு விதிகளின் படியும், ஆலய தரிசனம் செய்தல் வேண்டும். இது சான்றோர் வாக்கு. குளிக்கச் சென்று சேறு பூசுவது போல் ஆகி விடக்கூடாது.

இறைவனை கோயிலுக்குச் சென்றுதான் தரிசனம் செய்ய வேண்டுமா? மற்றும் இடங்களில் கடவுள் இல்லையா? வீட்டில் இருந்து இறைவனை வழிபட்டால் என்ன? என்று பலவாறான கேள்விகளும் எழுவதுண்டு. (1) உதாரணமாகப் பூமியின் அடியில் தண்ணீர் எங்கும் வியாபித்து இருக்கிறது. நில அடியில் இருந்து நாம் தண்ணீரைப் பெற வேண்டுமானால், கிணற்றின் மூலம், அல்லது குழாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணற்றின் மூலம் தான் பெறமுடியும். இதே போல் எங்கும் நிறைந்து வியாபித்து இருக்கின்ற இறைவனை ஆலயங்களில் சென்று தரிசனம் செய்வது ஆகும். (2) வெய்யில் எங்கும் பரந்திருக்கிறது. நாம் ஒரு துணியைக் காய வைத்தால் அது எரியமாட்டாது. ஆனால் ஒரு சூரிய காந்தக் கண்ணாடியின் கீழ் வைத்தால் அது எரிந்து சாம்பலாய்ப் போகும். காரணம் எங்கும் பரந்து இருக்கும் நேர்வெய்யிலுக்கு துணியை எரிக்கிற ஆற்றல் இல்லை. சூரிய காந்தக் கண்ணாடியின் கீழ் எரிவதற்குக் காரணம் சூரிய வெப்பக் கதிர்களை அந்தக் காந்தக் கண்ணாடி ஈர்த்துத் திரட்டி அனுப்பும் பொழுது துணி எரிந்து சாம்பலாகிறது.

இதே போல் இறைவன் எங்கும் நிறைந்து வியாபித்திருந்தாலும் மேல்க் காட்டிய உதாரணங்கள் போல் ஆலயங்களுக்குச் சென்று விக்ரக வழிபாடு செய்யும் பொழுது, விக்ரகங்களின் இறையருள் ஈர்ப்புச் சக்தி எங்களின் பிரார்த்தனை வழிபாட்டுக்கு மிகமிக முக்கியமாகின்றது. ஆலயவழிபாடு பூதக் கண்ணாடி போன்றதாகும். நம் வினைகள் எல்லாம் எரிந்து சாம்பலாகிப் போகின்றது.

சிலர் இறைவன் இல்லை என்று நாத்திகம் பேசுவதும் உண்டு. கடவுள் அகக்காட்சியைக் காணக் கூடியவர். ஆனால் அவர் உன் அகக்(கண்ணில்) காட்சியில் தோன்ற வில்லையாயின் கடவுள் இல்லை எனக்கூற முடியாது. உதாரணம் கலங்கிய நீரில் சந்திரனுடைய தோற்றம் தெரிய மாட்டாது. ஆதலால் சந்திரன் இல்லை எனக் கூற முடியுமா?

எங்கள் உள்ளம் கோபம், சூது, பொறாமை முதலிய கெட்ட எண்ணங்களால் கலங்கி இருப்பதால் பரம் பொருளின் காட்சியைக் காண முடியவில்லை. எனவே கடவுள் இல்லை என்று சொல்ல முடியுமா?

உள்ளம் தெளிந்தால் இறைவனைக் காண முடியும். தெளிந்த உள்ளமுடையவர்கள் இறைவனை நேரில்க் கண்டார்கள். திருமுறைகள் பாடி எண்ணற்ற அற்புத நிகழ்வுகளை நிகழ்த்தி உலகம் உய்ய வைத்தார்கள். அவர்கள் எமக்குப் பாடிக்குவித்த முத்தான சொத்துக்கள் தான் இன்றும் எங்களுக்கு அழியாச் சொத்தாக மிளிர்ந்து கொண்டிருக்கிறது, உலகத்தை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. பாடிப் பாடி அருமருந்தாக மக்கள் உயர்ந்து வாழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறார்கள். இறைவன் எங்களிடம் எதையும் எதிர்பார்க்கவில்லை. எங்களுடைய ஒழுக்க நெறிகளையும், தூய உள்ளத்தையும் தான் எதிர்பார்க்கின்றார்.

"வெள்ளை நிறமல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் இணையடிக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"

திருமால் பால் கடலில் பாம்பணையில்ப் பள்ளி கொள்கிறார். அதே போல் எம் உள்ளம் பால் போல் வெள்ளையாகவும், கடல்போல்ப் பரந்ததாகவும் இருந்தால் இறைவன் பள்ளி கொள்ளும் இடமாகும்.

தரமில்லாத நிலத்தில் நல்ல விதைகளும் பயனற்றுப் போகிறது. இதே போல் தூய்மையில்லாத உள்ளத்தில் மந்திரங்களும் செயலற்றுப் பயனற்றதாகிவிடும். "பக்தனின் உள்ளம் ஆண்டவனின் இருப்பிடம்."

பக்தனுடைய மனம் பகவானுடைய வரவேற்பறையாகும். ஆலயத்தில் இறைவனை வணங்கும் பொழுது மணிவாசகர் போல் நினைந்து நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, நிறைந்து நிறைந்து, மயிர்க் கூச்செறிய ஊற்றெடுக்கும் கண்ணீரால் நனைந்து நனைந்து தொழ வேண்டும்.

மன ஒருமைப்பாட்டுடன் இரண்டு நிமிட நேரம் கடவுளை நினைந்து பிரார்த்தனை செய்வதும், தியானம் செய்வதும், இறவனால் ஏற்றுக் கொள்ளப்படும். மன ஒருமைப்பாடில்லாமல் மனத்தை அலையவிட்டுப் பல மணிநேரங்கள் தொழுகை செய்தாலும் அதனால்ப் பயனெதுவும் ஏற்படமாட்டாது.

"நல்லன எல்லாம் தரும் ஒரு சிந்தாமணி உண்டு
கேட்டதை எல்லாதரும் ஒரு கற்கபமரம் உண்டு
விரும்பியதெல்லாம் தரும் ஒரு காமதேனு உண்டு
அதுதான் ஆலயதரிசனம், இறைவனின் நாம செபம்."

ஆலயத்தில் இறைவன் இருக்கிறார். ஆலயம் இறைவனின் இல்லம். ஆதி, அந்தம், அருவம், உருவம் இல்லாத இறைவனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரு அமைத்துப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. அவரைக் கண்டு பார்த்து வேண்டுதல் செய்ய அவரது இல்லமாகிய கோயிலுக்குப் போகின்றோம். ஆலய வாயிலில்ச் சென்றவுடன் எங்கள் பாதங்களைக் கழுவி, உடையைச் சரிசெய்து மிகவும் பயபக்தியுடன் கோபுர வாசலில் பலி பீடத்துக்கப்பால் நின்று கும்பிட்டு விட்டு உள் நுழைகிறோம். ஏன் அப்படிச் செய்கிறோம்? உள்ளே கடவுள் இருக்கிறாரா? அங்கே இருப்பது கற்சிலையும், செம்பு, ஐம்பொன்களாலாகிய சிலைகள் தானே இருக்கின்றன. ஏன் இப்படி நாங்கள் மதிப்பு, மரியாதை, பயபக்தி, செய்ய வேண்டும். எல்லாம் எங்களின் நம்பிக்கையே. ஆலய வாசலில்ச் சென்றவுடன் எல்லாம் மறந்து உள்ளே இறைவன் இருக்கிறார் என்ற உறுதியான நம்பிக்கையுடன் இறைவனை வணங்குகின்றோம் எங்களுக்கு இறைவனாகத் தெரிகின்றது கேட்பது கிடைக்கின்றது.

"நம்பிக்கை வைத்துக் கல்லைப் பார்த்தால்
தெய்வத்தின் காட்சி கிட்டும்."

பெரியோரைப், பெற்றோரை, குருவை, திருவடி வணக்கம் செய்கின்றோம். கொடுப்பதுவும், வருவதுவும், ஒன்றுமில்லை. ஆனால் அகங்காரம் விலகி சந்தோஷ உணர்வு ஏற்படுகின்றது. இதுவே இறை உணர்வும், ஆத்ம உணர்வுமாகும்.

கடவுளை விக்ரக வடிவில் வழிபடுவதும் அப்படித்தான். பக்தியுடன் வழிபாடு செய்பவர்கள் யாரும் விக்ரகத்தை அங்கே பார்ப்பதில்லை, கடவுளைத்தான் அங்கே பார்க்கிறார்கள். உள்ளம் உருகிக்கண்ணீர் மல்கி அந்தத் தெய்வீக உணர்வுடன் ஒன்றிப் போகின்றார்கள்.

உதாரணம், உங்களுடைய வீட்டில் காலம் சென்ற தந்தையாரின் படத்தை மாட்டியிருக்கிறீர்கள். அதற்கு மாலை போட்டு சந்தன, குங்குமத் திலகமிட்டு பக்தியோடு வணங்குகின்றீர்கள். வெறும் நிழல்ப் படத்துக்கு இந்த மரியாதை எல்லாம் எதற்கு? உங்களைப் பொறுத்தவரை அது படமல்ல அங்கே நீங்கள் உங்களுடைய தந்தையாரைப் பார்க்கிறீர்கள்.

உயிருடன் இருக்கும் பெற்றோரை மதித்து அவர்களின் மனம் மகிழும்படி நடந்து கொள்ளுதல் ஒருவகை வேள்வியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த பண்புகள், சிறந்த எண்ணங்கள் ஒரு மனிதனைத் தெய்வாக்கும். ஒழுக்கம், கல்வி, ஞானம் போன்ற ஆயதங்களால் தன்னில் தோன்றிய தவறுகளை, விலங்கு உணர்வுகளை வெட்டி வீழ்த்தினால்த்தான் ஒருவன் தெய்வமாக முடியும்.

உலகில் மனிதகுல வாழ்வில் இருக்கும் சிக்கல்களையும், குழப்பங்களையும் படிப்படியாகப் போக்கி அமைதி அளிப்பது ஆன்மீக அறிவுதான். ஆன்மீகம் என்னும் விதையில்த்தான் ஒழுக்க நெறிகள் விளைந்திருக்கின்றன. அவை ஈவு, இரக்கம், தயவு, தாட்சண்யம், பணிவு, கருணை, பொறுமை, பெரியோரைக் கனம் பண்ணுதல், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இவைகளாகும்.

இப்பொழுது பக்தி நெறியிலும் மக்களுக்கு நம்பிக்கை இல்லை. ஞான நெறியும் மறைபொருளாக இருக்கின்றது. புலன் மயக்கில் மக்கள் உணர்ச்சி வசப்பட்டு வாழும் துன்ப வாழ்வே மேலோங்கி நிற்கிறது.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் நிறைந்திருந்தாலும் மனித வாழ்க்கையில் துன்பம் துயரங்கள் தான் மேலோங்கி நிற்கின்றது.

இறைவன் எங்களிடம் எதையும் எதிர்பார்க்கவில்லை. அவருக்கு எதுவும் தேவையுமில்லை. நாம் செய்யும் தொண்டெல்லாம் எமது நலனுக்காகவே. உதாரணம் கண்ணாடி முன் நின்று நாங்கள் எங்களை அலங்கரித்து அழகு பார்க்கின்றோம். எங்களுக்குப் பிரகாசமாய் இருக்குமேயன்றி, கண்ணாடிக்கு எதுவித பிரயோசனமுமில்லை.

மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் அநித்யமான உடம்பால் நித்தியப் பொருளைத் தேட வேண்டும் என்ற கருத்தினை மணிவாசகப் பெருமான் மிகவும் அழகாகக் கூறுகின்றார்.

"பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே"

எனவே நாம் வெறுமையான வாழ்வெது, நிறைவான வாழ்வெது என்று உணர்ந்து அவ்வழி நடந்து நித்திய வஸ்துவாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெருமானின் கருணையைப் பெற வேண்டும். இதுவே மனித வாழ்வின் பயனாகும்.

நாம் செய்யும் பூசைகள், செபங்கள், தியானங்கள், கூட்டு வழிபாடுகள் எல்லாம் நாம் சேர வேண்டிய இடத்திற்கு பயணம் செய்யும் வாகனமாகப் பயன்படும்.

ஆலய சூழ்நிலைக்கும், வேறுஇடங்களின் (மதுக்கடை) சூழ்நிலைக்கும் எவ்வளவோ வேறுபாடு இருக்கிறது, இரண்டு இடங்களிலும் தோன்றும் சிந்தனைகளிலும் வித்தியாசங்கள் அதிகம். ஆலயச் சூழ்நிலையிலுள்ள நல்ல சிந்தனைகளின் அலைகள் அங்கு செல்பவர்களிடம் அருட்பெருக்கை ஏற்படுத்தி பக்தியை சந்தோஷத்தைக் கொடுக்கும். ஆலயம் என்பது மனிதனின் இருதயம், மனிதனின் உயிர், மார்க்கண்டேயர் காலனை வென்ற இடம் திருக்கடவூர் அபிராமி அம்பாள் ஆலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய தரிசனம் (பாகம் 2)

வானளாவிய கோயில்கள், மனம் அளாவிய சிலைகள், இந்தப் பூமி முழுதும் அமைத்து, கடவுளின் கண்காணும் சாம்ராஜ்யம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இறைவனிடம் பக்தி பூண்டு அவரிடமிருந்து தூய்மை, சுகம், சாந்தி, ஆனந்தம் ஆகியவற்றைப் பெறுவதே ராஜயோகம். அருளென்பது தெய்வத்தின் அருளாகும். இறைவனிடம் பக்தி பூண்டு வெண்ணீறு பூசி, திருமுறைகள் ஓதி, திருப்புகழ் பாடி, வளமான வாழ்வு பெற வேண்டும்.

பிரார்த்தனை என்பது அறியாமையில்ப் பிறந்தது அல்ல, அறிவில்த் தெளிந்தது. கடவுளே! என்னைக் காப்பாற்று என்று வேண்டுவது கூட இயலாமை அல்ல நம்மை விட ஒரு சக்தி வாய்ந்த ஒரு பொருளின் துணையை நாடுவது தான் இது மூட நம்பிக்கையா? அல்லது அறிவின் தெளிவா? மதமென்பது மனம் இதமாக இருக்க அமைந்தது.

சரணாகதி அடைவது. சங்கல்ப்பம். தெய்வத்திடம் நாம் நமது எண்ணத்தை (வேண்டுதலை) தெரிவிப்பது.

நாம் கடவுளை நினைக்கையில் அவரையும் அவருடைய சக்தியையும் நம் பக்கமாக ஈர்த்துக் கொள்ளுகிறோம். நம் மனம் உருகி அவரை வேண்டும் பொழுது நமது பேரார்வமும், ஏக்கமும் அவரை நம் பக்கம் இழுக்கிறது. கடவுளுக்காக ஒரு ஏக்கம் இருப்பது அவசியம். உலக வாழக்கையில் நாம் காட்டும் விருப்பத்தையும் ஆர்வத்தையும் போல் உண்மையாக நம்மைக் கடவுளுக்கே அர்ப்பணித்துக் கொண்டு அவரை நம்மிடம் வந்து வசிக்குமாறு ஆர்வத்துடன் பிரார்த்திக்க வேண்டும். இல்லையேல் கடவுள் நம்மிடம் வந்து இருப்பதை எதிர்பார்க்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் ஆரவாரத்துக்கு அவன் மயங்குவானா? மனத் தூய்மையில்லாத வெற்றுப் பூசைகளாலும், வழிபாடுகளாலும் என்ன பயன்? நம் செல்வச் செழிப்பை நம்மைப் படைத்த அம்மை அப்பனிடம் காட்டிப் பெருமைப் பட்டுக் கொள்வது எமது அறியாமையும், மதியீனமும் அல்லவா? அறமில்லாது ஈட்டிய பொருள் காணிக்கையாக ஏற்றுக் கொள்ளப்படுமா?

நம் மனம் குழப்பமில்லாமல் தெளிவான நிலையில் உருகி உருகிப் பிரார்த்தித்தால் நாம் கூப்பிய கரங்களுக்குள் அவனே வந்து விடுவான். ஆடம்பரமில்லாத எளிமையான பக்தியே அவருக்குப் போதும். சொர்ணாபிஷேகத்தை விட சொக்கத் தங்கமான நம் மனமே அவருக்குப் பிடிக்கும்.

எனவே அர்ச்சனைகளுக்கும், அபிஷேகங்களுக்கும், வைரக் கிரீடங்களுக்கும், வாண வேடிக்கைகளும், முத்துப் பல்லக்குகளும், தங்கத் தேர்களும் அந்தப் பரம் பொருளைக் கவர முடியாது. அவை நாம் அவருக்கு மகிழ்ந்து செய்யும் அலங்காரங்களே. ஆத்மார்த்தமான பக்தி, அவன் மீது முழு நம்பிக்கை, முழுச்சரணாகதி, அர்ப்பணிப்பு இவையே நம்மை நம் அருட் செல்வரிடம் சேர்ப்பிக்கும்.

இறைவன் எங்கும் நிறைந்த பரம் பொருள், அனைத்தும் அறிந்த பரம் பொருள், அனைத்தையும் அருளும் பரம் பொருள், அவன் கருணை உள்ளம் கொண்டவன். அருள் வடிவானவன், அனைத்துயிர்களையும் ரட்சித்துக் காத்தருளும் கருணைக் கடல், தீனதயாளன், அண்ட சராசரங்களுக்கும் கண்கண்ட தெய்வமான அந்த ஆண்டவன் பக்தர்களின் மான சீகமான பூசையில் மனம் மகிழ்ந்து அருளை வர்ஷிப்பவன்.

மனிதன் செய்யும் நற்செயல்களில் தலையாயது கடவுளை வணங்குவது தான். கடவுளை வணங்குவது மிகவும் நல்லது. புனிதமானது புண்ணியம் தருவது. துன்பம் என்பது வினை வழி வருவது முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் தீய ஆசையே அல்லல்களுக்கும், அவதிகளுக்கும் முக்கிய காரணமாகின்றது.

ஐம் பொறிகளின் கடமை எம்பெருமானைப் பணிதல், பாடுதல், வலம் வருதல், கும்பிடுதல், தியானித்தல், என அப்பரடிகள் கூறுகிறார்.

''ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்க''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூசையின் மகத்துவம்

கல்லையோ, செம்பையோ கடவுளைப் பாவனை செய்து வழிபட்டால் வழிபாடு முழுமையடைகிறது. வழிபாட்டின் மந்திரம் முக்கியம் தான். ஆனால் மனோலயம் இல்லாத மந்திரப் பூசை வெறும் எந்திர வேலை. சிலர் பூசை செய்தால் மணிக்கணக்காகவே பார்த்துக் கொண்டிருக்கலாம். மனோலயம் அப்படி. அவர் அபிஷேகம் செய்யும் பொழுது குழந்தையைக் குளிப்பாட்டும் தாய்மைத் தவம் இருக்கும். அலங்காரம் செய்யும் பொழுது காதலியின் தாபம் தலையெடுக்கும், நைவேத்தியம் செய்யும் பொழுது அனைத்திலும் அன்பைக் குழைத்துப் படைப்பார்கள். உணவை ஊட்டிப் பட்டுத் துணியால் சுவாமியின் வாயைத் துடைப்பார்கள். அப்போது கல்லாய் நிற்கும் நாத்திகன் கூட கையை உயர்த்திக் கும்பிடுவான். பாவனை இல்லா வழிபாடு ருசியே இல்லாத சாப்பாட்டுக்குச் சமமாகும்.

## கங்கை நீராடல்

புனித நதிகள் சங்கமம் ஆகுமிடத்தில் குளித்தால் ஒவ்வொரு நதியிலும் தனித்தனியாக குளிப்பதை விட பல மடங்கு புண்ணியம் உண்டாகின்றது. நதிகளின் சங்கமத்தை விட பக்தர்கள், அடியார்கள் ஒன்று சேருமிடம்(ஆலயம்) மிகவும் புனிதமாகும். அந்த இடத்தை பக்தர்களின் சங்கமம் என்று செல்லலாம். அவர்கள் கூடியிருக்கும் இடம் அவர்கள் ஒன்று கூடுவதற்கு முன் இருளால் மூழ்கிக் கிடந்தாலும் அவர்கள் ஒன்று சேர்ந்தவுடன் பக்தியினால் அருள் ஒளி வீசும். அந்த ஒளியால் இருள் அகல்வதுடன் இறைவனின் காட்சியை காணலாம்.

ஆலய வழிபாட்டில் நான்கு வகை உண்டு. ஆனால் மக்கள் தேங்காய் உடைத்தல், வெற்றிலை, பாக்கு, பழம், பால் முதலியன கொண்டு அர்ச்சனை செய்து வழிபட்டால் போதும். மற்றது பட்டினி கிடந்து விரதம் இருந்தால் போதும் என்ற திருப்தியுடன் இருக்கிறார்கள். உண்மையான வழிபாடு அதுவல்ல இவ்வாறு வழிபடுவது எங்கள் ஆத்ம திருப்தியாகும்.

ஆலய வழிபாட்டுக்குச் சிறப்பான நான்கு விதிகளை சைவ சித்தாந்தங்களும் திருமுறைகளும் வகுத்துள்ளன. எல்லாப் பிறவிகளிலும் சிறந்தது பிறவி மானிடப் பிறவி. இதன் பயன் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற நால்வகை வழிபாடாகும். இந்த நான்கு முறைகளாலும் ஆலய வழிபாடு செய்ய வேண்டும். விஞ்ஞான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரீகத்தில் மூழ்கி பெரும்பாலான மக்கள் இந்த நான்கு சித்தாந்த வழிபாடுகளில் ஈடுபடுவதில்லை. உதாரணமாக மணிவாசகப் பெருமான் அவர்கள் சிவபுராணத்தில் ஊர்வன, நடப்பன, கிடப்பன போன்ற ஏழுவகைப் பிறவிகளைக் கடந்தே இந்த மனிதப் பிறவி கிடைத்தது என்கிறார். இந்த மனிதப்பிறவியில் ஆலய வழிபாட்டையும், சீரிய தொண்டுகளையும் கடைப் பிடித்து வாழ்தலே மனிதப் பிறவியின் பெரும் நன்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டு வழிபாடு (பஜனை)

பஜனை என்பது அலை பாயும் சித்தத்தை நிலையாக வைத்திருக்க உதவுகின்றது. இதன் காரணமாகவே ஆலயங்களில் பக்தர்கள் ஒன்று கூடி கூட்டு வழிபாடு செய்து மனதை ஒருமுகப் படுத்தி பக்தியைப் பெருக்கி மன நிம்மதி அடைகின்றனர். பூசைகளின் போது திருமுறைகள் (பஞ்சபுராணம்) பாடி பக்தியினால் உயர்ச்சி பெற்று நிலை தடுமாறாது இறைவழிபாடு செய்கின்றனர்.

பஜனை பக்தியை ஊட்டி பரவசிக்க வைத்து இன்ப நிலையை அடையச் செய்கின்றது. இறைவனை நினைந்து உள்ளம் உருகிக் கண்ணீர் சொரிய வைக்கின்றது. பஜனை பாடும் பொழுது உள்ளம் புத்துணர்வு பெறுகின்றது. அகில உலகில் எல்லாம் இசையில் லயித்து நிற்கின்றது. இன்னிசைகளால் தெய்வங்கள் மீது பெரிய மகான்களெல்லாம் பாடல்கள் இயற்றியும் பாடியும் பரவசத்தில் ஆழ்த்தியதை வரலாறுகள் கூறுகின்றது. இறைவனை நினைந்து உருகி வழிபாடு செய்வதற்கு பஜனை, நடனம், கரகம், காவடியாட்டம், திருஊஞ்சல் இவைகளெல்லாம் ஈஸ்வரன் சம்பந்தப்பட்டபடியால் இறை வணக்கத்துக்கு ஒரு இறை உணர்வை ஏற்படுத்தி பக்தியை எழுச்சி பெறச் செய்கின்றது. அப்போது அருட் பொலிவு உண்டாகின்றது.

பக்தியை ஊட்டும் ஆற்றல் இசைக்கு இருப்பது போலவே சாந்தி, பக்தி உணர்வு உண்டாகும் ஆற்றலும் இதற்கு இருக்கிறது. தாலாட்டுக் கீதம் பாடினால் எத்தனை துஷ்டதனம் பண்ணுகிற குழந்தையும் அப்படியே இசையில் மயங்கித் தூங்கி விடும். விஷப்பாம்புகள் கூட இசையில் கட்டுப்பட்டு லயித்து நின்று விடுகிறது. ஆரம்பத்தில் தாலாட்டிலிருந்து அந்திமக்கிரிகைகள் வரையில் பலவிதமான பாட்டுக்கள் இறைவன் சொத்தாகவே இருக்கிறது. இறைவன் பெரும் இசைப்பிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மற்று நீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கு அன்பின் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மை
சொற்றமிழ் பாடு." என்றார் தாமறை பாடும் வாயார்.

(பெரியபுராணம்)

தன் மீது பாட்டுப் பாடும்படி தமக்கு அர்ச்சனை பாட்டுத்தான் என்று விருப்புடன் கேட்டதாகப் பெரிய புராணம் கூறுகின்றது. எனவே தான் நாயன்மார்கள் இறை அடியார்களான அருளாளர்கள் ஞானிகள் எல்லாரும் பாடிப் பரவி இறைவனை மகிழ்வித்து முக்தி அடைந்தார்கள்.

திருக்கோயில் வழிபாடுகளுக்கு உரிய பாடல்கள் நிறைய உண்டு. அவையாவன பஞ்சபுராணங்கள், திருப்பொற் சுண்ணம், திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை, புராண படனங்கள் இன்னும் எத்தனை எத்தனையோ பாடல்கள் உண்டு. இத்திரு அருட்பாடல்களை எல்லாம் கூட்டுச் சேர்ந்து பக்தியோடு, பண்ணோடு பாடி இறைவனை மகிழவைத்து இறை அருள் பெறுவார்கள். வேண்டுவோர் வேண்டுவதை ஈந்தருளும் எம்பெருமான் வேண்டி நிற்கும் அடியார்களுக்கெல்லாம் அருள் அளித்து வைக்கிறார். கேட்டவைகளைக் கொடுத்து நிற்கிறார். பஜனை பாடி இறைவனை மகிழ்வடையச் செய்து வரம் கேட்டுப் பெறுவது இலகுவாகும். இந்தக் கூட்டு வழிபாட்டின் மகிமை போற்றுதற்கரியது.

திருக்கயிலை மலையை இராவணன் பெயர்த்துப் பத்துத் தோள்கள் கொடுத்துத் தூக்கும் பொழுது இறைவன் பெருவிரலால் சிறிது அமர்த்திய பொழுது வெளியேற முடியாது திக்குமுக்காடிய நிலையில் இராவணன் தனது பத்துத் தலைகளில் ஒன்றை முறித்து கையில் எடுத்து யாழ் போல் இசை மீட்டினான். அந்த இசையில் லயித்த இறைவன் தன்னை மறந்த நிலையில் பெருவிரலைச் சிறிது நெகிழ விட்டார். அவ்வமயம் இராவணன் மீட்சி பெற்றான். என்றால் இறைவன் இசையில் லயித்து மெய்மறந்த நிலையானார். என்று வரலாறுகள் கூறுகின்றன.

சிதம்பரத்தில் இசையில் லயித்த இறைவன் திரு நடனம் ஆடியுள்ளார். இதனால் இறைவன் இசைப் பிரியராகவும், நடனப் பிரியராகவும் புகழப்படுகின்றார். உலகம் உய்ய மணிவாசகர் பாடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகத்தில் பூரிப்படைந்த இறைவன் தானே தனது திருக்கரத்தால் மணிவாசகர் பாடப்பாட எழுதி வைத்து மறைந்தார் என்று சாஸ்திரம் கூறுகின்றது. எனவே இசையின் மகிமையையும் சிறப்பையும் வையகம் போற்றக் காட்டி வைத்துள்ளார் இறைவன்.

பஜனை என்பது ஒரு சாதனை நாம பஜனை, சங்கீர்த்தன பஜனை, திருமுறைகள் பஜனை என்பவையாகும். பஜனைப் பாடல்கள் இருவகைப்படும். அருட்பாடல்கள், புகழ்ப்பாடல்கள் அருளாளர்களால் பாடப்பட்ட திருமுறைகள், அருட்பாடல்கள். ஏனையவர்களால்ப் பாடப்பட்டவை புகழ்ப் பாடல்கள். அருட்பாடல்கள் பண்ணிசையோடு பாடினால் இறைவன் முன்னே வந்து நிற்பார். கேட்டதெல்லாம் தருவார். ஞானியர்கள் கண்ட உண்மை. திருமுறைகள் பாடி அற்புதங்கள் நிகழ்த்தி உலகம் உய்ய வைத்தார்கள்.

எனவே கூடிப் பஜனை பாடி கூட்டு வழிபாடு மூலம் இறைவனை ஆராதிப்பதே இந்தக் கலியுகத்துக்கு உகந்த சாதனையெனச் சாஸ்திரங்கள் அழுத்தம் திருத்தமாக கூறுகின்றன.

பஜனையில் இறைவன் புகழையும், அவரின் அற்புதமான செயல்பாடுகளையும் புகழ்ந்து பாடி நம் உடல் முழுவதும் அவரது கருணை பெருக வேண்டுவதே பஜனை எனப்படும்.

ஒரு மரத்தின் கீழ் நின்று கையைத் தட்டினால் மரத்திலிருக்கும் பறவைகள் எல்லாம் பறந்து போய் விடும். அதே போல் ஆலயங்களிலோ, அல்லது எந்தப் புனித இடங்களிலோ நாங்கள் கூடியிருந்து கை தட்டி தாளம் போட்டு ஆனந்தமாக இறைவன் அருள் வேண்டி பஜனை பாடினால் எங்கள் கஷ்டங்கள், துன்பங்கள், பிணி, பீடைகள் எல்லாம் அந்தக் கணமே பறந்து போய் விடுகின்றன.

நம் கையில் உள்ள தீபம் இருளகற்றி இருட்டில் நாம் வழி நடப்பதற்கு எவ்வளவு துணை புரிகிறதோ, அதே போல் நம் நாவில் இறைவன் நாமங்களை உச்சரித்து பஜனை பக்தியோடு பாடும்போது அறியாமை என்னும் அகத்திருள் விலகி இறைவனின் அருள் ஒளி விளக்காக வழி காட்டி நிற்கும், உதவி புரியும்.

பஜனை பாடும் பொழுது இறைவனை எங்கள் இதயக் கமலத்தில் இருத்தி பக்தியுடன் பஜனை பாடும்பொழுது ஏற்படும் ஆனந்தத்தை மற்றவர்களிடமும் நாம் ஏற்படுத்துகிறவர்கள் ஆகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பஜனை', பக்தியோடு இனிமையாகப் பாடும் பொழுது ஒரு வகையான புத்துணர்வு ஏற்படும், உள்ளம் எழுச்சி பெறும், கவலைகள் மறைந்து விடும், மனம் அமைதி பெற்றுப் பக்திப் பெருக்கேற்படும். உள்ளம் சிலிர்த்து கண்ணீர் மல்கும். சிலர் தங்களை மறந்த நிலையில் ஆனந்தக் கூத்தும் ஆடுவார்கள். பஜனை பாடுபவர்கள் இறைபக்தர்களாக இருப்பதுடன் ஒழுக்கம் உடையவர்களாகவும், பண்புடையவர்களாகவும் இருப்பார்கள்.

நாம் சந்தோஷமாக வாழ வேண்டுமானால் இறை சிந்தனையுடன் வாழ வேண்டும். சிவ நாமம் அகத்தில் ஒலிக்க வேண்டும். அப்பொழுது தான் எங்கள் அகம் குளிரும், முகம் மலரும், இசைக்கு மயங்காதவர் எவரும் இல்லை. கஷ்டங்களை மறப்பதற்கு இறைவனை நினைக்க வேண்டும் பாட வேண்டும்.

பஜனையின் சிறப்பையும், அதன் ஆற்றலையும் 'பகவானே', உமது பக்தர்களின் வாயிலிருந்து வரும் உமது பெருமைகளை கேட்பதற்குப் பத்துலட்சம் காது வேண்டு மென்று பிதுரு மன்னன் கூறியதாகப் பாகவதம் கூறுகிறது.

பஜனை ஒலியில் விலங்குகள், மரங்கள், புழுக்கள், பூச்சிகள் கூட நன்மை அடைகின்றன பஜனை உரக்கப் பாடும் பொழுது அந்த ஒலியில் இறைவன் அனைத்துயிர்க்கும் தனது கருணையை காண்பிக்கின்றான்.

உலகில் ஏராளமான ஜீவராசிகள் இருக்கின்றன. ஆகாயத்தில் பறக்கும் பறவைகள், கடலில் வாழும் உயிரினங்கள், நிலத்தில் வாழும் பிராணிகள், இவற்றை விடப் பூமியில் நாம் மனிதர்களாக வாழ்கின்றோம். எல்லா ஜீவராசிகளுக்கும் புலன்களான கண், வாய், மூக்கு, செவி, உண்டு. இவை மூலம் இவை கண்களால்ப் பார்க்கின்றன, காதுகளால் கேட்கின்றன, வாயினால் ஒலி உண்டாக்குகின்றன. மனிதனுக்கும், மிருகங்களுக்கும் வேறுபாடு நுட்பமாக இதில் தான் அடங்கியுள்ளது.

மற்ற ஜீவராசிகள் இறைவனைத் தரிசிக்க முடியாது. இறைவன் புகழ்பாடவோ, அவன்புகழைக் கேட்கவோ அவைகளால் முடியாது. ஈசனின் திருநாமங்களை கூறும் திறனோ மற்ற ஜீவராசிகளுக்கு இல்லை. ஈசன் புகழ் பாடுதல், துதித்தல் ஆகிய இரு காரியங்களை மனிதப் பிறவியினால் மட்டுமே செய்ய முடியும். மிருகங்களால் ஒலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுப்ப மட்டுமே முடியும். எனவே தான் அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது அரிதிலும் அரிது.

நாம் இறைவனைப் புகழ்ந்து பாடும் பொழுது எங்களுடைய அகங்காரம் மிகவும் ஒடுங்கி விடுகிறது. இறைவனைப் புகழ்ந்து பாடப்பாட நாம் மிகவும் பணிவும் அடக்கமும் பெற்று ஒடுங்கி விடுகிறோம்.

இறைவன் புகழ் பாடுவதால் நம் பாவங்கள் நலிவடைகின்றன. பஜனை என்பது சம்சார சாகரத்தைக் கடக்க உதவும் படகு. இறைவன் நாம பஜனை நினைவெல்லாம் எப்போதும் இனிமையைச் சுமக்க இறைவன் பெருமையை எண்ணுவதும் அவர் புகழைப் பாடுவதும் தான் எளிய வழி.

இறைவனின் பஜனைப் பாடல்கள், மனதைப் பக்குவப்படுத்துவதுடன் ஒப்பற்ற ஆற்றலையும் தரும்.

விதையில் இருந்து வெளிவரும் முளை மிக மிருதுவாக இருக்கும். ஆனால் பெரும் பாறையையும் பிளக்கும் ஆற்றலுடையது என்பதை யாவரும் அறிவர். இதைப் போல் இறைவனது நாம வழிபாடு பிறவியையே இல்லாமல்ச் செய்து விடும்.

'நாராயணா', என்று நாமம் சொல்லும் போது அவன் அப்படியே உருகிப் போகிறானாம். ஒரு நாமத்துக்கு இவ்வளவு பலன் உண்டென்றால், ஆயிரம் நாமங்களைப் பஜனை பாடினால் வரும் பலனைச் சொல்ல வேண்டுமா?

பிரார்த்தனை என்பது கடவுளோடு பேசும் நேரம், பஜனை மூலம் வெளிப்படும் ஒலி அதிர்வுகள் காற்று மண்டலத்தில் நிரம்பும், நம்மைச் சுற்றியுள்ள சுற்றுப்புறங்கள் இதன் மூலம் தூய்மை அடைகின்றது.

பெருகி வரும் நீருள் இருந்து கொண்டு நீரைப் பருகாமல் நாவுலர்ந்து தண்ணீர்த் தாகத்தால் தவிப்பது போல் அவன் திருவருள் வெள்ளத்துள்ளே நின்று கொண்டு அதன் பெருமையை அறியாது துன்பத்தை அனுபவிக்கின்றோம்.

சிவனடியார் கூட்டத்தில் என்றும் இறைவன் கூடியிருப்பார். அத்தகைய திருக்கூட்டத்தில் என்னையும் சேர்த்து அருள் புரிய வேண்டும். அடியாற்க்கெளியன் சிவபெருமான் என்பதை மணிவாசகப் பெருமான் சிறக்க வைக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற்போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று"

(சிவபுராணம்)

"பண்ணிடைச் சுவைகள் பாடி ஆடிடும் பக்தர்களெல்லாம்
கண்ணிடை மணியர் போலும் கடவூர் நட்டனாரே"

(அப்பர்)

பஜனையின் சிறப்பை மணிவாசகரும், அப்பரும் இப்படி கூறியிருக்கிறார்கள்.

"நல்லதெல்லாம் தரும் ஒரு சிந்தாமணி உண்டு
கேட்டதெல்லாம் தரும் ஒரு கற்பக மரமுண்டு
விரும்பியதெல்லாம் தரும் ஒரு காமதேனு உண்டு
அதுதான் இறைவனின் நாம பஜனை"

பண்புகளாம் நல்ல குணமலர்களால் இறைவனைப் பூசித்து இசையால் உருகிப்பாடி துதித்தால் பாட்டின் எழுத்துக்கள் எல்லாம் உயிர் பெற்று எழுந்து பாட்டின் தலைவனாம் இறைவனடி சேர்த்து விடும்.

இறைவனின் நாமத்தை மகிழ்ச்சியுடன் உணர்ச்சி பூர்வமாகச் சொல்லிச் சொல்லி ஒரு புத்துணர்வைப் பெறலாம். நம் வாயிலிருந்து வெளியேறும் சொற்களின் அதிர்வுகள் காற்று மண்டலத்திலுள்ள ஈதரில் நிலைத்து நிற்கும். பஜனையில் கலந்து கொள்வது மகிழ்ச்சி பூர்வமாக, உணர்வு பூர்வமாக, அனுபவ பூர்வமாக அமைதல் நலம். வெறும் எந்திர கதியில் நாம் பாடுவதால் எந்தப் பலனையும் நாம் பெற முடியாது.

இறைவன் நாமம் சொல்லச் சொல்ல அதுவே எமக்குத் தெய்வீக மூச்சுக் காற்றாக விளங்கி நம் வாழ்வை அது புனிதப்படுத்தும். சமுதாய ஒருங்கிணைப்புக்கும், தெய்வீக சக்தியைப் பெறுதற்கும் பஜனை பெரும் பங்காற்றுகிறது.

பகவானின் நாமமே உனக்குத் துணை என்பதை எப்போதும் நம்பு. அப்படி நம்பி நடந்தால் என்றும் தோல்வி என்பது கிடையாது நாளுக்கு நாள் புது மெருகோடும், வலிவோடும் வாழ்வமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கலியுகத்தில் எப்படி மோட்சத்தைப் பெறலாம் என்பதற்கு சாஸ்திரத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது. பகவான் பெயரை உச்சரிப்பதன் மூலம், பாடுவதன் மூலம் சம்சார சாகரத்திலிருந்து எளிதில் விடுபடலாம். கிருதா யுகத்தில் தியானமே சிறந்த முறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. திரேதா யுகத்தில் யாகங்களும், துவாபர யுகத்தில் அர்ச்சனை அல்லது வழிபாடு சிறந்த முறையாக இருந்தது. இந்தக் கலியுகத்தில் தியானம், வேள்வி, யாகம், அர்ச்சனை, பஜனை என்பவை மிகவும் சிறந்ததாக விளங்கி நிற்கின்றது.

1. "உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்" என்று பாடினார் அப்பர்.
2. "வாழ்த்தவாயும், நினைக்க மடநெஞ்சும்" என்பது ஞானிகள் கூற்று.
3. "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா
   நமச்சிவாயவே" – சுந்தரர்
4. "பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்றார் அருணகிரி
5. "அர்ச்சனை பாட்டேயாகும் மண்மேல் சொற்றமிழ் பாடு" என்றார் இறைவன்.

இப்படியாக இறைவனுக்கு விரும்பியது இசையே என்பதை அருளாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். இசைக்கு மயங்காதவர் எவருமில்லை. தில்லைக் கூத்தனை, தென்பாண்டி நாட்டானை, அல்லல்ப் பிறவி அறுப்பானை, சொல்லற்கரியானை, வேத வித்தகனை, ஏகனை, அனேகனை, தாயும் தந்தையுமாய் நிற்பவனை, முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பரம் பொருளை, தில்லைச் சிற்றம்பலத்தானை, பெரும் பற்றைப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

எனவே புகழ்ந்து பாடி திருவருள் பெறுவோமாக "இசையால் உலகும் அசையும்."

நினைவெல்லாம் எப்போதும் இனிமையைச் சுமக்க இறைவன் பெருமையை எண்ணுவதும், அவன் புகழ் பாடுவதும் தான் இறைவன் அருள் பெற ஒரே வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு வழிபாட்டின் யதார்த்த மகத்துவம் 2

கதை

ஒரு பணக்காரர் சமயச் சொற்பொழிவு கேட்கப் போனார். சோற்பொழிவாளர் "எல்லோரும் கடவுள் நாமத்தை எப்போதும் சொல்வது நல்லது. எப்போதும் சொல்ல முடியாவிட்டால் சாகிற போதாவது சொல்லுங்கள்" என்று கேட்டுக் கொண்டார். பணக்காரர் வீடு வந்ததும் மனைவியை அழைத்து "நான் சாகிற போது முருகா என்று சொல்ல வேண்டும். ஒரு வேளை நான் மறந்து விட்டாலும் நீ ஞாபகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மனைவி மிகவும் அமைதியாக எப்ப சாகப்போறீங்க? என்று கேட்டாள். "யாருக்குத் தெரியும்?" என்றார் பணக்காரர். எதற்கும் பிள்ளைகளிடமும், கணக்கப் பிள்ளையிடமும் சொல்லி வையுங்கள் என்று யோசனை சொன்னாள் அந்த அம்மணி.

சாகிற சந்தர்ப்பம் வந்தது. முருகா என்று சொல்ல வேண்டும் என்று பணக்காரருக்கு நினைவு வந்தது. ஆனால் அந்தோ நாக்கு இழுத்துக் கொண்டது. ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை. மனைவியைப் பரிதாபமாகப் பார்த்து முருகா! என்று நீயாவது சொல்லு கேட்போம் என்று சாடை காட்டினார். அந்த அம்மாள் உறுதியாக மறுத்து விட்டார். கணக்குப் பிள்ளைக்குக் கை காட்டினார் அவரோ நான் பிள்ளை குட்டிக் காரன் நான் மாட்டேன் என்று மறுத்து விட்டு பணக்காரரின் பிள்ளைகளை கை காட்டினார். அவர்களோ முடியவே முடியாது என்று மறுத்தார்கள். என்ன காரணம்? எல்லோருக்கும் ஒரு விசித்திர பயம் முருகா! என்று நாமம் சொல்லி அடையாளம் தெரியாமல் எமன் நம்மைக் கொண்டு போய் விட்டால் என்ன ஆவது என்ற பயம் தான். கடைசியில் பணக்காரரும் சொல்லவில்லை. பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவர்களும் சொல்லவில்லை. வாயிருந்த போதே கூட்டு வழிபாட்டின் போது முருகா என்று சொல்லாதவர்கள். வாய்ப்பிருந்த போதே முருகா முருகா என்று சொல்லி முன்பதிவுத் திட்டத்தில் இணைந்திருக்கலாம்... அதை விட்டு விட்டு கடைசி நேரத்தில் கடைசி நிமிட கலாட்டா எதற்கு ?

இறைவன் புகழை எப்போதும் பாட வேண்டும். இறை நாமத்தை எப்போதும் சொல்ல வேண்டும். என்பதற்காகத்தான் நம்முடைய நா நம்மோடு எப்போதும் இருக்கிறதாம். கையெழுத்துப் போடுங்கள் என்றால் ஆ:ா பேனாவை எங்கோ வைத்து விட்டேன் என்று தப்பிக்கலாம். இறை நாமம் சொல்லுங்கள் என்றால் (பஜனை) ஆ:ா நாவை எங்கோ கழற்றி வைத்து விட்டேன் என்று சொல்ல முடியுமா? புத்தகம் படியுங்கள் என்று பிடிக்காத புத்தகம் கொடுத்தால் கண்ணாடியைக் காணோம் என்று சொல்லலாம். ஆனால் நாமஸ்மரணத்தில் என் நாவு எங்கே என்று ஏய்க்க முடியாது.

நாவுண்டு நமோ நாராயணாய என்று சொல்ல என்கிறார் ஆழ்வார். எப்போதும் ராம், ராம் என்றதால்த்தான் இறுதி நேரத்திலும் ே:ராம் என்றார் மகாத்மா காந்தி. தண்ணீர் நிரம்பிய பாத்திரத்தில் துளையிட்டால் தண்ணீர் தானே வெளிவரும். அப்படியே ராம், ராம் என்று ராம நாமத்தில் நிரம்பி வழிந்தவர் காந்தி. அதனால்த்தான் கோட்ஸேயின் குண்டு துளைத்தும் ே: ராம் என்ற சொல் வெளியே வந்தன. முக்திக்கான முன்பதிவு நாம ஜபம். முயற்சி செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதங்கள் அனுஷ்டிக்கும் முறைகள்

விரதங்கள் இரண்டு வகைப்படும் ஒன்று நித்திய விரதம், மற்றது அநித்திய விரதம். நித்திய விரதமென்பது நீதிக்குட்பட்ட நல் ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து நெறியான வாழ்க்கை வாழ்வது. இவ்வாழ்வு வாழ்ந்துயர்ந்தவர்கள், வணக்கத்துக்குரியவர்களாகத் திகழ்பவர்கள் தான் அருளாளர்கள்.

வஞ்சகம், சூது, பொறாமை, பொய், களவு, காமம், கொலை, கொள்ளை இப்படியான கெட்ட குணங்களை நீக்கி, நல்ல சிந்தனைகளை மனதில் நிறைத்து நல்ல செயற்பாடுகளைச் செய்து, பிறர் மனம் நோகாமல் இனியவை பேசி எல்லோராலும் போற்ற வாழ்வது தான் நித்திய விரதம்.

நாங்கள் பிடிக்கும் அநித்திய விரதமென்பது நாங்கள் என்ன விரதத்தைப் பிடிக்கின்றோமோ அந்த குறிப்பிட்ட விரத நாட்களுக்கு மட்டும் எம்மிடமுள்ள துர்ப்பழக்கங்களைத் தற்காலிகமாக நிறுத்தி விரத காலம் முடிந்ததும் மீண்டும் தொடர்ந்து கெட்ட பழக்கங்களை கடைப்பிடித்து வருகிறோம். உதாரணமாக கந்தர்சஷ்டி விரதம் ஆறு நாட்கள் விரதம் பிடிக்கிறோம். இந்த ஆறு நாட்களும் எமது பழக்கத்திலுள்ள புகைப் பிடித்தல், மது அருந்துதல், மாமிசம் சாப்பிடுதல், பொய், களவு, காமம், இப்படியான கூடாத பழக்கங்களை இந்த ஆறு நாள் விரத நாட்களில் விலக்கித் தூயவர்களாக ஆசாரசீலர்களாக, புனிதர்களாக இருப்போம். இந்த ஆறு நாட்கள் விரத காலம் முடிவடைந்ததும் மீண்டும் விரத காரணமாகத் தற்காலிகமாக நிறுத்திய எமது வழமையான பழக்கங்களை ஆரம்பித்து விடுவோம். எனவே இதை அநித்திய விரதமாகக் கூறப்படுகிறது.

விரத காலங்களில் தற்காலிகமாக நிறுத்துகின்ற கெட்ட பழக்கங்களை நிரந்தரமாக நீக்கி நித்திய விரதமாகக் கடைப்பிடித்தால் அதுவே உண்மையான விரதமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயன் மார்கள், ஆழ்வார்கள், குரவர்கள், மகான்கள். இவர்களெல்லாம் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து நித்திய விரதமாக வாழ்ந்து யாவரும் போற்றக்கூடிய கண்ணிய வான்களாக, அருளாளர்களாக வாழ்ந்து இப்படித்தான் வாழ வேண்டுமென்றதையும், எங்களுக்கு உணர வைத்தார்கள்.

"வையத்து வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்." (குறள்)

எனவே நாம் வாழ்க்கையில் நெறி தவறாமல் பிழையான வழிகளில் செல்லாமல் சரியான முறையில் நல்லொழுக்க வழி நின்று தர்மத்தைக் கடைப்பிடித்து நடந்து கொண்டால் புண்ணியமும், இறைவனுக்கு ஏற்புடையதுமான விரதமுமாகும். நடைமுறையை நாம் சரியாக கடைப்பிடிக்க வேண்டும். இதுவே நித்திய விரதமாகும்.

இந்த நித்திய விரதத்தையே தன்னகத்தில் கொண்ட அருளாளர்கள் இந்த நித்திய விரதத்தின் பயனாக முக்தி அடைந்தார்கள். எனவே தான் அவர்களின் அருள் மிக்க தெய்வத்தன்மை நிலைத்து ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாக வணக்கத்தக்குரிய தெய்வங்களாக மிளிர்ந்து நிற்கிறார்கள்.

எனவே இறைவன் எங்களிடம் எதிர்பார்ப்பது புனித ஒழுக்க சீலத்தை மட்டும்.

ஒழுக்க நெறியுடன் வாழ்ந்து ஆசார சீலர்களாகத் திகழ்ந்து தாம் நினைத்த நல்லன எல்லாம் செய்து முடித்தார்கள். உலகம் உய்ய மனித குலம் வாழ வழி காட்டி நின்றார்கள்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் அது
உயிரிலும் ஓம்பப் பெறும்."

## அநித்ய விரதம்

பல விரதங்களைப் பிடிப்பார்கள் செய்யக் கூடாத பாதகமான செயல்களை எல்லாம் செய்து விட்டு விரதம் பிடித்தேன் இறைவன் அனுக்கிரகம் செய்யவில்லையென இறைவன் மீது குறை சொல்லிக் கோபமடைவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செய்யும் தொழிலே தெய்வம்" என்ற அருள் மொழியைப் படிப்பார்கள், அதற்கு எதிர்மாறாக நடந்து கொள்வார்கள். செய்யும் தொழிலிலேயே துரோகம் செய்வார்கள். கலப்படம் செய்வார்கள், வருந்தி உழைத்த தொழிலாளிக்கு சம்பளம் கொடுக்க மாட்டார்கள். தம்மில் மெலிந்தவர்களுடன் பழிவாங்கல், செல்வாக்கை வைத்து துன்புறுத்துதல், ஏன் கொலை செய்யக் கூடத் துணிவார்கள். செய்வினை, சூனியம் செய்து வாழ்வு பூராவும் துன்பமடையச் செய்வார்கள். பிறர் சொத்தை நீதிக்கு மாறாக அபகரிப்பார்கள். பிறர் தாரம் விரும்புதல், கொலை செய்தல், மது போதையில் தம்மை மறந்த நிலையில் எத்தனையோ கெட்ட செயல்கள் எல்லாம் செய்து விட்டு, கோவிலிலே இறைவனுக்கு சங்காபிஷேகம் செய்வார்கள். பல் ஆயிரம் பணம் செலவு செய்து திருவிழாக்கள் செய்வார்கள். அன்னதானம் செய்வார்கள். எல்லாம் இறைவனைச் சாட்டிப் பேருக்கும், புகழுக்கும் செய்வார்கள். இவைகளை இறைவன் ஏற்பாரா?

ஒழுக்க நெறிகளைத் தவறி, செய்யக் கூடாதவைகளைச் செய்து விட்டு, விரதங்கள் பிடித்து முருகா, குமரா, இறைவா, அம்மா தாயே என்று கூப்பிட்டால் எங்கள் குரலுக்கு இறைவன் செவி சாய்ப்பாரா? உதவி புரிவாரா? வீணே பெருந்தொகையான பணம் செலவு செய்து பெரும் திருவிழாக்களென்று செய்யாமல் விடுவதே பெரும் தர்மமாகும். பிறர் கெடுதலுக்காக இறை அருள் வேண்டி விரதமிருப்பவர்களும் உண்டு. இவைகளுக்கு இறை அருள் கிடைக்குமா? மேன்மேலும் துன்பங்களும், துயரங்களும் கூடிக் கொண்டே வரும்.

நாம் இறைவனை வேண்டி விரதமிருந்தோம், செடில் குத்திக் காவடி எடுத்தோம், அங்கப் பிரதட்டை செய்தோம், முள்ளு மிதியடியில் நடந்தோம் பறவைக் காவடி சுமந்தோம். தீ மிதித்தோம் இவைகளுக் கெல்லாம் இறைவன் அருள் புரியவில்லையே, தீராத கஷ்டங்களும் பிணிகளையுமே தந்து துன்புறுத்துகின்றாரே என்று இறைவனைத் திட்டி ஏசுபவர்களும் இல்லாமல் இல்லை. இறை நம்பிக்கையிழந்து பிறமதங்களுக்குத் தாவுபவர்களுமுண்டு.

இதற்கெல்லாம் காரணம் என்ன? நம் உள்ளச் சீர் கேடும், ஒழுக்க நெறிகளைப் பின் பற்றி நடந்து கொள்ளாததுமேயாகும். மனம் அது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் தான் இன்று கடவுள் எங்கே இருக்கிறார் என்று கேட்கும் நாத்திகள்களாக இருக்கிறார்கள். பெற்ற தாய், தந்தையை மதித்து அன்பாய் இருக்கத் தெரியாதவர்கள் எப்படி கடவுளில் பக்தி செலுத்துவார்கள்?

அநித்ய விரதங்கள் நோற்கும் காலங்களிலாவது உள்ளத் தூய்மையுடன் கெட்ட வஞ்சனை மிக்க எண்ணங்களை எண்ணாமலும், துர்ச் செயல்களில் ஈடுபடாமலும், பிறர்க்குத் துன்பம் விளைவிக்காமலும், நல்லதை நினைந்து, இனியவை பேசி, நல்லதைச் செய்து, இறைசிந்தனையுடன் இறைவனின் புகழ்பேசி, இறைவன் புகழ்பாடி, இறைவனிடம் சரணாகதி அடைந்தால் இறை அருள் கிடைத்து நிச்சயம் விரதப் பலனைப் பெற முடியும்.

ஒழுக்க நெறி நின்று நித்திய விரதம் காப்பவர்களுடன் இறைவன் அவர்களுடனேயே இருக்கிறார்.

அநித்ய விரதம் நோற்கும் காலங்களில் மட்டும் அவர்கள் இறைவனை சீலமுடையவர்களாக வேண்டுகிறார்கள். இறைவன் அவர்களுக்கும் அருள் வழங்குகின்றார்.

எங்களின் எண்ணங்கள், செல்ப்பாடுகளை எல்லாம் இறைவன் உன்னிப்பாகக் கவனித்து புள்ளிகள் போட்டுக் கொண்டிருக்கிறார். புள்ளி விபரப்படி வகுப்பேற்றம் அளிக்கிறார்.

உதாரணமாக,

தாய், தந்தையரை பேணிக்காப்பது ஒரு நற்செயல், பெரியோரைக் கனம் பண்ணுதல், ஏழைகளுக்கு உதவுதல், இப்படி பல தா்ம காரியங்களை எவ்வளவு செய்கிறோமோ அதற்கேற்ற படி நல்வாழ்வு, சந்தோஷமான வாழ்வு வழங்கி உயர் நிலை அளிக்கிறார்.

பிதா, மாதாவுக்கு கடமை செய்யத் தவறுதல், பிறரைத் துன்புறுத்துதல், தா்மத்துக்கு மாறான செயல்களைச் செய்தல் இவைகளுக்கு நரக வாசம் வழங்கி என்றும் எமது வாழ்க்கையில் நிம்மதியற்ற துன்பவாழ்வு வாழ வேண்டிவரும். எல்லாம் நமது எண்ணங்களின் பிரதி பலிப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேவ எண்ணங்கள் | அசுர எண்ணங்கள் |
|---|---|
| அன்பு | பழி வாங்கல் |
| கருணை | துன்புறுத்துதல் |
| விட்டுக் கொடுத்தல் | பகை பாராட்டுதல் |
| மன்னித்தல் | அகங்காரம் |
| மறத்தல் | பிறரை அவமதித்தல் |

மேற்காட்டிய இருவகை எண்ணங்களின் பிரகாரம் எங்களுக்கு வாழ்வு அமைகின்றது. இறைவன் அன்பே வடிவானவர். கருணைக்கடல், தாயுமானவர் அவர் எல்லோருக்கும் அருளை வாரி வழங்கிய வண்ணம் இருக்கிறார். அவ்வருளைப் பெறுவது எமது மனோ நிலையைப் பொறுத்தது. இறைவன் எவருக்கும் துன்பங்களைக் கொடுப்பதுமில்லை, உயர்ந்த வாழ்வு, தாழ்ந்த வாழ்வு என்று கொடுப்பதுமில்லை. நாங்களே எங்களின் உள்ளக்கிடைக்கையின் படி, நெறியான வாழ்வு, நெறியற்ற வாழ்வு வாழ்ந்து நாமே எமக்கு வாழ்வு அமைத்துக் கொள்கிறோமே தவிர இறைவன் அளிப்பதில்லை.

பேச்சில், சத்தியம், தர்மம் இருக்கும் ஆனால் செயல்ப்பாட்டில் அது இருக்காது. ஊருக்குத்தான் உபதேசம், எனக்கு அல்ல என்று நடந்து கொள்வார்கள்.

நெஞ்சில் வஞ்சமில்லாமல், கபடமில்லாமல், கள்ளமில்லாமல், அகந்தை இல்லாமல், போலியான அன்பு இல்லாமல் எந்த ஒரு மனிதன் நடந்து கொள்கிறானோ அவன் தான் உண்மையான மனிதன்.

எனவே நித்திய விரதமான ஒழுக்க நெறிகளை கடைப்பிடித்து, பக்தி என்னும் முதலீட்டை எந்த அளவுக்கு ஆண்டவன் என்னும் வங்கியில் வைப்பிடுகிறோமோ அதற்கு நிறைவான வட்டியுடன் ஆனந்தத்தை, நிம்மதியை, மகிழ்ச்சியை, இனிமையை ஒட்டு மொத்தமாகப் பெற்றவர்களாகிறோம்.

பொதுவாக நல்லனவற்றை செய்வதை விரதமாகக் கொண்டு, தீயனவற்றைச் செய்யாதிருத்தலே பெரும் விரதமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி

பக்தர்கள் இறைவன் அருள் கிடைக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

இறைவனின் இதயத்தை நெகிழச் செய்து, நெக்குருகச் செய்யும் சக்தி பக்தி ஒன்றே தான். இறைவன் உன் செல்வத்தையோ, கல்வித் திறனையோ, அதிகார பலத்தையோ மதிப்பதில்லை. ஒருவருடைய பக்தி மட்டுமே இறைவனை ஈர்க்க வல்லது. இராமாயணத்தில் குகன், சபரி, வானர மூர்த்தியான அனுமன், பறவையாகிய சடாயு இவைகளெல்லாம் ஸ்ரீஇராம பிரானுக்கு நெருக்கமானவர்களாகி, அவருடைய அருளுக்குப் பாத்திரமாகி எல்லோரும் வழிபடக் கூடியவரானார்கள். எதிரியின் பாசறையைச் சேர்ந்த அரக்கனான விபீஷணன் எவ்விதம் ஸ்ரீ ராமருக்கு நெருக்கமானவர் ஆனார்? அவர்களுடைய பக்தி ஸ்ரீ இராமருடைய அருளுக்குக் காரணமாக அமைந்தது.

மகாபாரதத்தில் திரௌபதி பாண்டவர்கள் ஸ்ரீகிருஷ்ணரிடம் கொண்ட அளவற்ற பக்தியினால்த்தான் எல்லா யுகங்களிலும் போற்றப்படும் சரித்திர புருஷர்களாக ஆனார்கள். ஸ்ரீமத் பாகவதத்தில் கோபியர்கள் கொண்ட அந்த இனிமையான பக்தி, மகோன்னதமான பக்தி ஆகும்.

தியாகராச சுவாமிகளின் புகழிற்கு பக்தியே காரணமாகும். ராமதாஸ், சூர்தாஸ், துளசிதாஸ், மீரா எல்லோரும் தங்களின் தூய பக்தி மூலமே இறைவனைத் தன் வசப்படுத்தி நெகிழச்செய்து, நெக்குருகச் செய்து இறையருள் பெற்று முக்தியடைநத பக்தர்களாவர். பக்தியால் இறையருள் கிடைப்பது மட்டுமன்றி அந்த இறைவன் மேல் உரிமையும் கிடைக்கிறது.

பக்தி ஏற்பட மூன்று தத்துவங்கள் உண்டு. முதலாவது தெய்வத்தின் மேல் அன்பு, இரண்டாவது பாவச் செயல்களைக் கண்டு பயம் கொள்ளல், மூன்றாவது சமூகத்தில் நீதியைக கடைப்பிடித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வத்தின் மீது அன்பு இருந்தால் பாவத்தைக் கண்டு பயம் உண்டாகும். இந்தப் பயத்தினால்த் தான் சமூக நீதி ஏற்படும். எல்லாவற்றிற்கும் மூலம் தெய்வபக்தி.

இறைவன் மேல் அன்பும், பாவத்தைக் கண்டு பயமும் இருக்குமிடத்தில் சமூகத்தில் எப்போதும் நீதி நிலைத்திருக்கும்.

புலன்களின் ஈர்ப்புச் சக்திக்கு ஆளாகாது இறை வாழ்வை மேற்கொண்டு தவவாழ்வு வாழ வேண்டும். இதுவே பக்தியாகும்.

மிகவும் பழைய காலத்தில் மக்கள் கடவுள் நம்பிக்கையில் பக்தி மிகுந்து காணப்பட்டார்கள். அதனால் அவர்கள் இயற்கைத் தெய்வங்களை வணங்கினார்கள். இயற்கைக்குப் பயந்து, பணிந்து மிகவும் அவதானமாக நடந்தார்கள்.

"மண்ணும் நீ விண்ணும் நீ மதி கடல் நீ
கண்ணும் நீ கண்ணுளோடும் பாவை நீ
நண்ணு நீர்மை பாதம் நின்ற பாதம்
நண்ணுமா றருளிடவே"

(சிவபாக்கிய சித்தர்)

"வானாகி, மண்ணாகி, வளியாகி யொழியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யானென தென்றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவேனே"

(திருவாசகம்)

மண்ணைப் பூமா தேவியென்று வணங்கினார்கள். பூமா தேவிக்கு பாரமாக நடக்கக் கூடாதென்று நினைத்தமையால் பாவமான செயல் எதையும் செய்யத் தயங்கினார்கள். பொதுவாகப் பெண்கள் பூமியில் நடக்கும் போதும் ஒலி எழுப்பாமல் நடந்தனர்.

காலப் போக்கில் இயற்கைத் தெய்வங்கட்கும் மேலான பொருள் இருப்பதைத் தமது அனுபவத்தில் கண்டு அதற்குக் கட்டுப்பட்டு நடந்தனர். இதனால் தீய சக்திகள் நாட்டையும் வீட்டையும் அணுக விடாது தெய்வ சக்தி காப்பாற்றி வந்தது. இதற்குத் தூய பக்தி தான் முக்கியமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று விஞ்ஞானப் பொறியிற் காணுகின்ற அரிய சக்திகளை அன்றைய மக்கள் இறை வழிபாட்டின் மூலம் பெற்றனர். இறைவனை முழு மனதுடன் போற்றிய முனிவர்கள் காண்பதெல்லாம் சிவமாகவும், சக்தியாகவும் கண்டனர். கல்லை கற்கண்டாக்கினார்கள், தண்ணீரின் மேல் நடந்தார்கள், ஆகாயத்தில் பறந்தார்கள், விண்ணுலகம் எங்கும் திரிந்தார்கள்.

எனவே எம்பெருமானின் திருவருள் மக்களைத் தெய்வமாக்கி வந்தது. பூரணபக்தியின் நம்பிக்கையினால் தாம் பெற்ற பேரின்ப நிலைகளை மக்கள் பெற நூல்களை ஏணிப்படிகளாகவும் அன்றைய முனிவர்கள் வைத்தனர்.

பக்தி வலையில் அகப்படும் எம்பெருமான் பழங்குடில்களையே தனது கோயிலாகக் கொண்டவன். அன்பர்களின் நலனையே எப்போதும் நாடுபவன், சிவனடியார்களின் சிந்தையில் தேனாக இனிப்பவன். இதனாலேயே சிவனடியார்கள் பூசையை மனமுருகிப் பக்தியொடு நிகழ்த்தி வருகிறார்கள்.

பக்தி என்பது மனித உணர்ச்சிகளை நேர்மையான வழியில் உருவாக்கவும், எழுச்சியைக் கொடுக்கவும், வெறி கொண்ட உள்ளத்திற்கு அமைதியைக் கொடுக்கவும், வாழ்க்கை நிலையில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை அகற்றி சமத்துவ போதனை செய்யவும் உதவுகின்றது.

நாம் பயன் படுத்தும் விளக்குகள் நம் உள்ளத்திற்கு வெளியில்தான் புற இருளைப் போக்க முடியும். எங்கள் உள்ளம் என்ற வீட்டில் மாயை என்னும் இருள் சூழ்ந்து கொண்டிருக்கிறது. இது அக இருள் எனப்படும். அதனால் நாம் வாழ்க்கையில் நல்ல வழி எது? தீய வழி எது? என்று தெரியாமல் தவறான வழியைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. இதைப் போக்குவதற்கு நம் உள்ளத்தில் உள்ள மாயை என்னும் இருளைப் போக்க வேண்டும்.

புற இருளை ஒரு நொடியில் போக்கி விடலாம். அக இருளை அவ்வளவு சுலபத்தில் போக்க முடியாது. சான்றோர்களின் அறிவுரைகளையும் பக்தர்களின் தெய்வத் தன்மை வாய்ந்த பஜனைப் பாடல்களையும் மனமுருகப் பாடி இறைவன் மேல்ப் பக்தி செலுத்தினால் அறியாமை என்னும் அக இருளை நீக்கி அக ஒளி தோன்றச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யலாம். என்ற உண்மையைப் பக்திமூலம் நாயன் மார்கள், ஆழ்வார்கள் சொல்லி வைத்துள்ளார்கள்.

இறைவனில் நம்பிக்கை வையுங்கள், ஏழேழு பிறப்பிற்கும் முன்னின்று உதவி செய்வார். இதற்குப் பல உதாரணங்கள் உண்டு. சுந்தரர்க்குத் தோழனாய் வந்தார். இரணியனிடம் இருந்து பிரகலாதனை நரசிங்கமாக வந்து காத்து ரட்சித்தார். பாஞ்சாலியின் மானத்தைக் காத்தார். நாயன் மார்களுக்கு ஏற்பட்ட ஆபத்துக்களிலிருந்து ஆயிரம், ஆயிரம் தடவை காத்து ரடசித்தாரென்றால் அவர்களின் உயர்ந்த உறுதியான பக்தியேயாகும்.

உலகத்தின் இருளை கதிரவன் நீக்குவது போல் அறியாமை என்னும் அகத்திருளை நீக்குவதற்கு ஒரு ஜோதி வேண்டும். அது தான் இறைபக்தி.

பக்தி பல வகைப்படும்

1. பக்திப் பாடல்கள், தோத்திரப் பாராயணம் போன்றவை சொல்லால் செலுத்தும் பக்தி.
2. அடியார் தொண்டு, பூசை என்பவை தொண்டால்ச் செய்யும் பக்தி.
3. ஜெபம், தியானம், பிரார்த்தனை என்பவை மனத்தால்ச் செய்யும் பக்தி

இவைகளால் இறைவனை நிரந்தரமாக எமது உள்ளத்தில் இருத்தி வைக்க முடியும்.

இன்று நாம் மதிக்கும், வணங்கும், கல், மிதிக்கும் கல்லாக ஒரு காலத்தில் இருந்தது. இன்று எமது பக்தியின் காரணமாக வணங்கும் தெய்வமாக மிளிர்கிறது.

அர்ச்சுனன் தவம் செய்து சிவனைக் கண்டான் என்கிறது பாரதம், பிரகலாதன் தவம் செய்து மகாவிஷ்ணுவைக் கண்டார் என்கிறது பாகவதம், ஏன் அம்பிகையே தவம் செய்து சிவனை மணந்து கொண்டார் என்கிறது கந்தபுராணம். இதற்கு அவர்களின் பக்தியே காரணமாகிறது.

உண்மையான பக்தியின் முன் இறைவனே அடிபணிந்து விடுகிறான். நற் சிந்தனை என்னும் நறு மலர்களால் பக்தியுடன் இறைவனைப் பூசிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயாசாரமும், ஒழுக்கமும், கலை ஞானமும், ஆசார சீலமும், தவச் சுவையுணர்வும், ஞானதாகமும், உலகியற் கல்வியும், சிறப்பான ஞான நூல்ப் பயிற்சியும், பக்தியின் ஞான சாதனமாகும்.

திருஞான சம்பந்தர் அமுதார் ஞானப் பால் அருந்தினார். திருநாவுக்கரசு சுவாமி அமுதார் சூலை நோயைத் தீர்க்கும் மருந்தை எம்பெருமானிடம் பெற்றார். தேவர்கள் அமுதார்கள் குறைகளைப் போக்கிக் கொண்டார்கள்.

பக்தியாகிய அருளும், கல்வியாகிய அறிவும் மிக அவசியமாகும். கல்வி இம்மை வாழ்வுக்கான வசதிகளைத் தரவல்லது. ஆனால் அருள் என்னும் பக்தி நெறியோ இம்மை எனப்படும். இப்பூவுலக வாழ்விற்குத் தேவையான நலன்களைத் தருவதுடன் அழியாப் பேரின்பத்தையும், நிலைப் பேற்றையும் தரவல்லது. அறிவு, அருள் இவை இரண்டையும் தருவது (பக்தி) இறைவன்.

"யாமோதிய கல்வியும், எம்மறிவும் தாமேபெற
வேலவர் தந்ததனால்"

(என்பது திருப்புகழ்)

இறைவன் கருணை பரந்து விரிந்தது. ஆகாயத்துக்கு எல்லை உண்டு. ஆனால் இறைவனின் கருணைக்கு ஓர் எல்லை என்பதே இல்லை. எனவே கருணைக் கடலாகவும், கற்பக விருட்சமாகவும் விளங்கும் இறைவனிடம் உண்மையான பக்தி வைக்க வேண்டும்.

கஷ்டங்கள் தான் எமக்கு கடவுளை ஞாபகப் படுத்துகின்றன. தவமும், சிவமும் இருகண்கள். பண்புகளாம் நல்ல குணமலர்களால் இறைவனைப் பூஜித்து, இசையால் உருகிப் பாடி துதித்தால் பாட்டின் எழுத்துக்கள் எல்லாம் உயிர்பெற்று எழுந்து பாட்டின் தலைவனாம் இறைவன் இறையடி சேர்ந்திடும்.

மன இருளைப் போக்கும் ஓர் ஞான விளக்கு பக்தி. அந்த ஞான விளக்குக்கு ஒளியாகத் திகழ்வதுதான் பக்தி. பண்டிகைகளும், விரதங்களும் தேவர்களாலும் முனிவர்களாலும், பரம ஞானிகளாலும் ஏற்படுத்தப்பட்டவையாகும். குப்பைத் தொட்டியான மனசை சுத்தம் பண்ண அந்த மனசாலேயே தியானம் செய்ய வேண்டும். கண்டதை எல்லாம் பேசுகின்ற நாக்கை சுத்தப்படுத்திக் கொள்ள அந்த நாக்காலேயே சிவ மந்திரம் சொல்ல வேண்டும். இவைகளைச் செய்ய வைப்பது தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி. மக்களுக்குச் செய்கின்ற தான தர்மங்கள் இறைவனுக்கு செய்கின்ற பூசையாகும். சோற்றைத் தின்று மட்டும் மனிதன் உயிர் வாழவில்லை. பக்தி ஞானம், உயர்ந்த குணங்கள், உத்தம பண்புகள் ஆகியவற்றால்த் தான் மனுஷன் வாழ்கின்றான்.

உண்மையான பக்தியின் மூலம், உறுதியான நம்பிக்கையின் மூலம், இடைவிடாத முயற்சிகள் மூலம் தான் கடவுளை உணர முடியும். நம்பிக்கை என்ற தண்டவாளத்தைத் தகர்த்தால், கடவுள் என்ற ரயில் வண்டியில்ப் பயணம் செய்ய முடியாது.

அருளாளரான சுவாமிகளை சிலர் அவதூறு செய்யலாம். இகழலாம். ஆனால் இறைவனின் தொண்டரான அவருள்ளத்தில் உறுதியான பக்தி இருக்கும் போது யாராலும் எதுவும் செய்ய முடியாது அப்படியானது பக்தியின் வலிவு.

இராம கிருஷ்ணரைப் பார்த்து ஒருவர் கேட்கிறார், சுவாமி! நீங்கள் இறைவனைக் கண்டீர்களா? ஆம், கண்டேன் அன்னை வடிவில். நான் உன்னுடன் கதைப்பதைப் போல் அவளுடன் நேரில்க் கதைக்கிறேன், சிரிக்கிறேன், பழகுகின்றேன் எனக் கூறினார். அப்படியாயின் நாங்கள் ஏன் சுவாமி காணமுடியவில்லை. உங்களிடம் இறைவனிடத்தில் உறுதியான பக்தி இல்லை. இறைவனைக் காண வேண்டுமென்று உருகி அழுதீர்களா? மயிர்க் கூச்செறிந்தீர்களா? இல்லை நீங்கள் உங்கள் சுகதேவைகளை மட்டும் கேட்கிறீர்கள் பெறுகிறீர்கள்.

தூய பக்தியின் மேலீட்டினால் காரைக்கால் அம்மையார் தவம் புரிந்து தலையால் நடந்து என்புருகி இறைவனைக் கண்டார். பரமசிவன் தன் வாயால் அம்மா! என்று யாரையாவது அழைத்தான் என்றால் அது காரைக்கால் அம்மையார் ஒருவரைத்தான் அத்தகைய பக்தியால் உயர்ந்த காரைக்கால் அம்மையாரை அம்மா! உனக்கு என்ன வேண்டும் எனக் கேட்டார்.

"இறவாத அன்பு வேண்டும்
பிறவாமை வேண்டும்
மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை மறவாமை வேண்டும்"

என்று அம்மையார் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவுக்கரசர், ''புழுவாய் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவா திருக்க வரம் தர வேண்டும்'' என்று கேட்கிறார். எனவே இறைவன் மீது தூய பக்தி வைத்துக் கதறுங்கள், கசிந்துருகி கண்ணீர் விடுங்கள். அவனிடம் அடைக்கலம் கொள்ளுங்கள் மற்றவை எல்லாம் அவன் பார்த்துக் கொள்ளுவான்.

ஆணவம் என்ற துருப்பிடித்த இரும்பான ஒருவரின் மனதை இறைவன் அருள் என்ற பக்தி புகுந்தால் புனிதனாக்கி விடும்.

கருடன், அனுமான் இருவரும் சிறந்த இறை அடியார்கள், இறைவனுடன் பிரியாதிருப்பவன் கருடன். இராமனை மனக்கோயிலில் வைத்து வாழ்பவன் அனுமன். கடல் தாவிச் சென்று சஞ்சீவி மலையைக் கொண்டு வந்தவன் அனுமன். கருடன் தேவலோகம் சென்று அமுதமே கொண்டு வந்தான். அனுமன் சீதையைத் தாயாகவும், இராமரைத் தந்தையாகவும் ஏற்றுக் கொண்டான். ஆனால் கருடன் அமுதம் கொண்டு வந்தது அவனைப் பெற்ற தாயான விந்தைக்காக தாயிற்ச் சிறந்ததொரு கோவிலுமில்லை. நாராயணனைச் சுமக்கும் வாகனமாக அவர் அருகே காலமெல்லாம் இருப்பவன் கருடன். இந்த உயர்வினை நாராயணன் கருடனுக்களித்த காரணம் கருடனது தூய பக்திதான்.

அனுமன் ராம நாமத்தைச் சொல்லிக் கொண்டு சென்றபடியால் தான் பெரிய சமுத்திரத்தையே தாண்ட முடிந்தது. எனவே உண்மையான பக்தியோடு இறை நாமம் சொன்னால், பாடினால் செய்ய முடியாததென்று எதுவும் இல்லை.

இந்தக் காலத்தில் மக்களிடையே உறுதியான தெய்வ பக்தி, குருபக்தி, பெற்றோர் பக்தி, குடும்ப பக்தி சிறிதளவுமில்லை. இந்தப் பக்தி இவர்கள் மேல் சிறப்பாக இருக்குமானால் இறைவனின் திருவருட் கடாட்சம் நிறைந்து மங்களமான வாழ்க்கை அமையும்.

இறைவனின் இதயம் நெகிழச் செய்து பூரிப்படையச் செய்யும் சக்தி பக்தி ஒன்று தான். இறைவன் எங்களின் செல்வத்தையோ, கல்வித் திறனையோ அதிகார பலத்தையோ மதிப்பதில்லை. பக்தி ஒன்று மட்டுமே இறைவனை ஈர்க்க வல்லது.

யாரையும் வஞ்சிக்காத ஒருவன், கடவுள் நம்பிக்கை தூய பக்தி உள்ள ஒருவன், மனதாரச் சொல்லும் எந்த வார்த்தைக்கும் உயிர் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் என்பது நாங்கள் செய்யும் தீமைகள், புண்ணியம் என்பது நாங்கள் செய்யும் நன்மைகள்.

இறைவனை எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களிடத்திலும் உணர்வதும், அதற்கேற்ற விரிந்த நிலையில் தொண்டாற்றுவதும் இறைவனுக்கு நாம் செய்யும் பக்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப ஒளி

| | |
|---|---|
| ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே | திருவிசைப்பா |
| ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்ஜோதி | மணிவாசகர் |
| ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே | அப்பர் |
| மறையா நின்றுள்ளான் மாமணிச் சோதியான் | அப்பர் |
| பரஞ்சோதியே சுகவாரியே | தாயுமானவர் |
| தூண்டு சுடரனைய ஜோதி கண்டாய் | வள்ளலார் |
| அருள் விளக்கே அருட்சுடரே | நாவுக்கரசர் |
| ஜோதியுள் ஒரு ஜோதியாயினும் மாமணிச் சோதியான் | சம்பந்தர் |

நாயன்மார்கள், ஆழ்வார்கள் எல்லோரும் இறைவனை ஜோதிவடிவாகவே கண்டதாகப் பாடியுள்ளார்கள். எமது சமய கலாச்சாரத்தில் ஒளி ஒரு முக்கியமானதாக விளங்குகின்றது. சுடர் ஒளி தரும் தீபம் எமது மரபில் ஒரு மங்களகரமான பொருளாகக் கணிக்கப் பெறுகின்றது. வாழ்வில் தீப ஒளியை ஏற்றித் துன்ப இருளைப் போக்கும் பொருட்டே எமது வழிபாட்டில் ஒழியை அம்மை, அப்பனாக வழிபடுகின்றோம்.

இதன் காரணமாகவே அருளாளர்கள் ஒளி வடிவமான இறைவனை ஆதியும், அந்தமும் இல்லா அரும் பெரும் ஜோதி என்றும், ஒளிவளர் விளக்கென்றும், தூண்டு சுடரனைய ஜோதி கண்டாய் என்றும், திருவையாறகலாத செம்பொற் ஜோதி என்றும், திருமூலர், வள்ளலார், சேக்கிழார், நாயன்மார்கள் எல்லோரும் இறைவனை ஜோதி வடிவினன் என்றே கண்டும், உணர்ந்தும் போற்றிப் பாடியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் வழிபாட்டில் இறைவனையும், இறை முகூர்த்தங்களையும் திருவிளக்கில் ஆவாகனம் செய்து வழிபாடுகள் செய்கின்றோம்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் ஜோதியாம் சிவப் பிரகாசத்திலிருந்து எல்லா ஒளிகளும் ஒளியைப் பெற்று ஒளிர்கின்றன சிவஜோதியே பேரொளி.

பிரம்மா, விஷ்ணு இவர்களுக்கும் சிவபெருமான் பெரும் ஜோதியாகவே காட்சியளித்தார். அந்த ஜோதி சிவஜோதி என்பதை உணர்த்த லிங்கோற்பவத்தையும் மஹா சிவராத்திரி நடுநிசியில் நிகழ்த்திக் காட்டினார்.

எல்லாச் சுடர் விளக்கும் சூட்டையும், ஒளியையும் சேர்ந்தே தரும். ஆனால் சிவஜோதி அருட் சுடராக விளங்குவதால் அது நம்மைச் சுடுமோ என்று அஞ்சவேண்டியதில்லை.

மின் குமிழின் உள்ளேயும் புறத்தேயும் அழுக்குப் படிந்திருந்தால் மின் ஒளி வெளியில்ப் பிரகாசிக்காது. அவ்வாறே சிமினி புகை பிடித்திருந்தால் அதன் ஒளியும் வெளிவராது. அவ்வாறே எங்கள் உள்ளங்களிலும் வஞ்சம், பொறாமை, சூது, ஆசை, தற்பெருமை, கள்ளம், கபடம், பகைமை, காமம் போன்ற அழுக்குள் நிறைந்திருந்தால் இறை ஒளி அங்கு தோன்றாது. சிவப் பிரகாசம் இருக்காது உள்ளத்தில் உண்மை ஒளி தோன்றிப் பிரகாசிப்பதற்கு இந்த அழுக்குள், அசுத்தங்கள் என்பன அகற்றப்படுதல் வேண்டும்.

உள்ளத்திலும், பேச்சிலும் உண்மை ஒளியாம் சிவஒளி பிரகாசிக்கையில் எமது செசயல்களும் ஒளிமயமாக இருக்கும். இந்த மண்ணையும், வானையும் அதற்கு மேல் விண்ணையும் தாங்கி நிற்பது சிவம். பரம் பொருளென அழைக்கின்றோம். தீயாக, சூரியனாக, சந்திரனாக ஒளிதரும் குருவாகத், தந்தையாய்த், தாயாக விளங்குவதும் அந்தச் சிவம் என்னும் பரம் பொருளே. தாமாகவே விரும்பி எம்மீது கருணை மழை பொழிகின்ற தையலாக, பெண்மையாகச் சக்தியாக விளங்குவதும் சிவமே.

ஒளி விளக்குக்குச் சாதி, மத, பேதம் இல்லை. எல்லா இடத்து இருளையும் நீக்கும். ஒரு தீபம் ஏற்றினால் ஆயிரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கேற்றியதற்குச் சமமாகும். ஏழு பிறவிகளுக்கு வேண்டிய முக்தியையும், புண்ணியத்தையும் பெறலாம். இறைவனுக்கு ஒரு தீபமேற்றினால்ப் போதும். இதன் மகிமையை உணர்த்த ஒரு சிறுகதை.

கற்பகக் கிரகத்தில் ஒரு நெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அங்கே ஒரு சுண்டெலி நெய்யைச் சுவைக்க விளக்கின் மேல் விழுந்து ஓடியது. அதனால் தீபச் சுடர் மேலும் சுடர் விட்டுப் பிரகாசித்தது அணையும் நிலையில் இருந்த தீபம் சுடர் விட்டுப் பிரகாசித்ததினால் அந்தச் சுண்டெலிக்கு இறைவன் மோட்சத்தைக் கொடுத்தார். இப்படி அறியாமல் ஏற்றிய தீபத்துக்கே இப்படி பலன் என்றால், அறிந்து பக்தியோடு முறைப்படி ஏற்றும் தீபங்களின் பலன் எத்தனை அருள் வலிமை மிக்கதாக இருக்கும்.

தீபங்களில் சுடர் ஏற்றி அந்தப் பட்டொளிச் சுடரின் சுவாலையே பரம் பொருளின் பிம்பம் என்று கருதுகின்ற அசைக்க முடியாத எண்ணமும், நம்பிக்கையும் இந்துக்கள் எல்லோரிடத்தும் வேரூன்றிக் கொண்டன.

எல்லா மதத்தவர்களும் தீபங்களேற்றி வழிபாடு செய்கின்றனர். மெழுகுதிரி ஏற்றுகின்றார்கள், புத்த சமயம் சுட்டி விளக்குகள், குத்து விளக்குகள் ஏற்றுகின்றார்கள். வைஷ்ணவம், ஏனைய எல்லா மதத்தவர்களும் தீப ஒளி மூலமே இறைவணக்கம் செய்கின்றார்கள். எல்லா மதங்களும் காலமெல்லாம் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நெறிமுறையாகும். ஆனால் இந்த மெய்ஞான நெறி முறையை மாற்றியது விஞ்ஞானம். அதுதான் மிஞ்சாரம். மின்சாரம் பெரும் சக்தி வாய்ந்ததொன்று. இது ஆக்கும் சக்தியும், அழிக்கும் சக்தியும் கொண்டது. இந்த மின்சாரத்தினால்த் தான் இன்றைய அனைத்துத் துறைகளிலும் அபரீதமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பது தெளிவான உண்மை.

ஆனால் பூசையறைக்குள் புனிதமாக அலங்கரிக்கப்பட்டுள்ள தெய்வத் திரு உருவங்களின் கருவறைக்குள் மின் விளக்குகள் என்ற பெயரில் சிறிது, பெரிதுமான மின்குமிழ் அமைத்து ஒளி பரப்புவது இறைத் தன்மையை எந்த அளவிற்கு சிதைத்து விடுகின்றது. பூசை அறைக்குள் குறிப்பிட்ட தெய்வ வடிவங்கள் மட்டுமே ஒளிர வேண்டும். பக்தி செய்வோர் பார்வையில் பரம் பொருளைப் பிரதிபலிக்கும் அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்திகள் மட்டுமே காட்சி தர வேண்டும். சுற்றுப் புறத்தை ஈர்க்காத வண்ணம் தெய்வத் திருவுருவமே நம் முழுக்கவனத்தையும் ஈர்க்க வேண்டும். அப்போது தான் தெய்வம் பேசும். உள்ளத்தில் பரவசம் ஏற்படும். இதற்கு நம்முடைய பாரம்பரிய பெருமைக்குரிய தீபங்களே சிறந்தவை.

"புற இருளைப் போக்க ஒளி விளக்கு
அக இருளைப் போக்க ஞான விளக்கு"

இதன் காரணமாகத் தான் ஆலயங்களில் பூசையின் போது பல விதமான தீபங்கள் காட்டிப் பூசை நடைபெறுகின்றது. அங்கே காட்டப்படும் தீபச் சுடர் ஜோதியில் இறைவனைக் காண்கின்றோம். இறைவனை ஜோதி வடிவில் தரிசனம் செய்கின்றோம்.

நெய்தீபம் நெய்தீப ஒளி சகலவித சுகத்தையும் வீட்டில்
நன்மையையும் தருகிறது.
நல்எண்ணெய் சகல பீடைகளும் விலக்கி விடும்
விளக்கெண்ணெய் பந்துசுகம், தாம்பத்திய சுகம்
கடலை எண்ணெய் இதில் தீபம் ஏற்றுவது மிகவும் தவறு.
தேங்காயெண்ணெய் தீபஒளி மங்கள காரியங்கள் ஆலயங்களுக்கு
ஏற்றி நன்மையடையலாம்.

நெய்விளக்கு ஞான இருளைப் போக்கி ஞான ஒளியை ஏற்படுத்துகின்றது. நெய்தீபம் ஜோதி எரிந்து முடிந்தும் கரியோ, சாம்பலோ இல்லாது மறைவதைப் போல் ஆன்மா இறை ஜோதியில் கலந்து ஒன்று படுகிறது. ஆணவத்தை நீக்குகின்றது. அறியாமையைப் போக்குகின்றது. மன இருளைப் போக்கும் ஒரு ஞான விளக்கு, முக்தி ஆனந்தத்தை அளித்து பிரம்ம ஞானத்துக்கு அழைத்துச் செல்கிறது.

இறைவனை ஜோதியாகத் தரிசனம் செய்தவர்கள் மாணிக்க வாசகர், சம்பந்தர், வள்ளலார்.

கதிரவனின் ஒளி இல்லை என்றால் கடுகு கூட இந்த உலகத்தில் சித்திக்காது. கண் ஒளி இல்லை என்றால் பூலோகமே கருநிறமாகி விடும். அக ஒளி இல்லை என்றால் வாழ்வு இருள் மயமாகிவிடும். அறிவொளி வீசினால்த்தான் ஆக்கபூர்வமான செயல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும். வீட்டுக்கோ, கோயிலுக்கோ விளக்கேற்றி ஒன்றும் ஆகிவிடப்போவதில்லை. உள்ளத்தில் ஞான ஒளி பிரகாசிக்க வேண்டும் அப்படியாயின் உலகமே ஜோதியாகத் தோன்றும். இச் சோதிப் பேரொளி அனைவரின் நெஞ்சங்களிலும் நிறைய வேண்டும்.

"அருள் விளக்கே அருட்சுடரே
அருட் சோதி ஓம் சிவமே"

என்று ஈசனைப் போற்றிப் பாடியுள்ளார் சம்பந்தர்.

"விறகில் தீயினன் பாலில்படு நெய்போல்
மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்"

– தாயுமானவர்

வெளிச்சம் என்னும் ஒளியில் தான் நாம் வாழ முடியும். ஒளி இன்றி இருட்டில் வாழ முடியாது. இருட்டைப் போக்க வேண்டுமானால் ஒளி தேவை ஒளி வடிவினன் இறைவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் என்பது ஆதி, அந்தம் இல்லாத அருவம், உருவம் இல்லாத, இறப்புப் பிறப்பில்லாத, எங்கும் நிறைந்து வியாபித்திருக்கும் அழியாப் பரம் பொருளான இறைவனுக்கு உருவம் அமைத்து நல்ல முகூர்த்த நாளில் விக்ரகப் பிரதிஷ்டை செய்யும் போது நடைபெறும் கிரிகைகளே மஹா கும்பாபிஷேகமென இந்துக்களால் புகழ்ந்துரைக்கப்படும் மகத்துவம் நிறைந்த ஆன்மீக நிகழ்வாகும்.

இந்த கும்பாபிஷேக நிகழ்வை அதிமேன்மை தங்கிய வணக்கத்துக்குரிய சிவாச்சாரியார்களால் (குருமார்கள்) உருவமைக்கப்பட்ட விக்கிரகத்தை மந்திரமும், யந்திரமும், மருந்தும் சாத்தி விதிமுறைப் படி வேத விற்பன்னர்களின் வேத ஒலி முழங்க மங்கள வாத்தியங்கள் ஒலிக்க, வெண் சங்கநாதம் ஒலிக்க உருவேற்றப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படும். எட்டு விதமான மருந்துகள் சாத்தப்படுவதால் அஷ்ட பந்தன கும்பாபிஷேகம் என்றும் சொல்லப்படும்.

இயந்திரத் தகட்டுடன், பொன், வெள்ளி, வைரம் என்கிற நவரத்தினங்களும்(ஒன்பது) விக்கிரகத்தின் கீழ்ப் போட்டு மூடி அஷ்ட பந்தன மருந்து சாத்தி(ஒட்டி) விக்கிரகத்துக்கு பக்த அடியார்கள் மூலம் எண்ணெய்க் காப்புச் சார்த்தி மந்திர ஒலியுடன் பிரதிஷ்டைக் கிரிகைகள் நடைபெறும்.

உலோக சக்தி, மனோ சக்தி, மந்திர சக்தி, யந்திர சக்தி, ஈர்ப்புச் சக்தி, ஆன்மீக சக்தி ஆகிய பலவகைச் சக்திகளால் கல் தெய்வமாகிறது. இதன் காரணமாக விக்ரகம் ஈர்ப்புச் சக்தி, உயிர்ப்புச் சக்தி, கவர்ச்சிச் சக்தி பெற்று விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம குண்டத்திலிலுந்து நெய் மூலம் அக்கினி வளர்த்து யாகாதிக் கிருத்தியங்களாலேயே அக்கினி வளர்த்து அந்தச் ஜோதியைக் கும்பத்துக்குக் கொண்டு போய் கும்பத்திலிருந்து பிம்பத்துக்குக் கொண்டு போவது தான் கும்பாபிஷேகம். கும்பாபிஷேகத்துக்கு முன் கல், கும்பாபிஷேகத்திற்கு பின் அது கடவுள். காகிதம் காசு நோட்டாவது போல் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகத்துக்கு அபிஷேகத் திரவியங்களால் அபிஷேகிக்கப்பட்டு அலரங்கார பூசைகள், தீபாராதனைகள், தோத்திர இசைகள் பாடப் பெற்றுத் துதிக்கப் படுவதே கும்பாபிஷேகத்தின் சுருக்கமான விளக்கம்.

கும்பாபிஷேகம் நடைபெற்ற நாள் முதலாய் நாற்பத்திரண்டு நாட்கள் ஒரு முழுமண்டலமாகக் கணித்து இந்த நாட்களில் இறைவனுக்கு அபிஷேக ஆராதனை, பூசைகள், திருவிழாக்கள் நடைபெற்று, இறைவனை எழுந்தருளச் செய்து வீதி சுற்றுலா வரும் காட்சி ஒரு கண்கொள்ளா அருட்காட்சியாகும். கடைசி மண்டல நாள் நிகழ்வான அன்று சங்காபிஷேகம் நடைபெற்று திருவிழா நடைபெறும். இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான். அவனது மாபெரும் சக்தியை வேத ஆகம விதிகளின் படி திருக்கோயில்களில் எழுந்தருள செய்விக்கப் படுகின்ற சிலை வடிவிலான திரு மேனிகளில் நிலை பெறச் செய்தல். திருக் கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளில் செய்வீக ஆற்றல் தேங்கி நிற்கிறது. அந்த மூர்த்திகளை நாம் வழிபட்டுப் பயன் அடைகின்றோம்.

உதாரணம் ஓடுகின்ற நீரை ஒரு அணை கட்டி அதில் தேக்கி வைத்து விவசாய காரியங்களுக்கும் இதர பணிகளுக்கும் பயன்படுத்துவதைப் போல எல்லாம் வல்ல எங்கும் நிறைந்துள்ள கடவுளின் மாபெரும் சக்தியை, திருக் கோயில்களில்த் தேக்கி வைத்து உயிர்கள் மேன்மை அடைவதற்காகப் பயன்படுத்திக் கொள்கிறோம்.

இது தான் ஆலயங்களின் அடிப்படைத் தத்துவம். மனதில் மாசு, அழுக்கு உள்ள மனிதன் தினசரி சென்று தீண்டுவதால் விக்கிரகங்களில்த் தேங்கியுள்ள இறை சக்தி நானா வட்டத்தில் நிலை பெறாமல் அகன்று விடும். அவ்வாறு நிகழாமல்த் தடுப்பவையே கும்பாபிஷேகங்களாகும். உதாரணம் பழுதடைந்த மின்சாரங்களைப் புதுப்பிக்கா விட்டால் மின் விசிறிகள் ஓடாது, மின் விளக்குகள் எரியாது, மின் அடுப்புகளில் சமைக்க முடியாது. அது போல அஷ்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தனம் இல்லாத ஆலயங்களில் மூர்த்திகளில் தெய்வீக சக்தி தேங்கி நிற்கமாட்டாது.

எனவே சிறிய கோயில்களாயினும் சரி, பெரிய கோயில்களாயினும் சரி, பன்னிரண்டு வருடங்களுக்கொரு முறை கும்பாபிஷேகம் செய்ய வேண்டும். இது முக்கியமாகும் இப்படி நடைபெற்றால் தான் ஆலயம் வழிபாட்டுக்குரிய அருள் நிறைந்த ஆலயமாகும்.

ஒவ்வொரு வருடமும் கும்பாபிஷேகம் நடைபெற்ற திதி, நட்சத்திரத்தை வைத்து திருவிழாக்கள் நடைபெறும். திருவிழாக்கள் இரண்டு வகைப்படும், கொடியேற்றிச் செய்வது மஹா உற்சவமென்றும், கொடியேற்றாமல்ச் செய்வது அலங்கார உற்சவமென்றும் அழைக்கப்படும்.

கொடிமரம் துஷ்டதெய்வங்களை அகற்றவும், தேவகணங்களை அழைக்கவும், ஆலயத்தைக் காக்கவும், பக்தர்களைக் காக்கவும் கொடிமரம் நிறுவப்படுகிறது.

எங்களுடைய ஒருவருடம் தேவர்களுக்கு ஒரு நாளாகும். எனவே நாங்கள் செய்யும் அபிஷேகங்கள், திருவிழாக்கள், பூசைகள் எல்லாம் தேவர்களுக்கு ஒவ்வொரு நாளும் பெரும் உற்சவங்கள் செய்வதாக தேவர்களால் மகிழ்வுடன் ஏற்கப்படுகின்றது. இதனால் தேவர்கள் மனம் பூரித்து நல்ல மழை, மங்களங்ளை எல்லாம் அருளுகின்றார்கள். நாங்கள் செய்யும் பூசைகள் யாவும் தேவர்கள் மூலம் இறைவனைச் சென்றடைகின்றது.

கும்பாபிஷேகத்துக்குப் பெரும் சாந்தி என்று பெயர்.

மந்திர ஒலிகளாலும், வழிபடும் பக்தர்களின் தூய உள்ளத்தினாலும், தினப் பூசைகள், மாதப் பூசைகள், ஆண்டுத் திருவிழாக்கள் கும்பாபிஷேகம் ஆகிய பெரும் சாந்திகளாலும், தெய்வத் திருமேனிகளில் அருட்சக்தி மிளிர்ந்திருக்கும்.

அந்தத் தெய்வ சாய்கைகளை விஞ்ஞானிகளின் ஒலிகளின் அதிர்வு அலைகளாகவும் எண்ணங்களின் பிரதிபலிப்பு அதிர்வுகளாகவும் அளிக்கிறார்கள். இப்படியுள்ள தெய்வ அதிர்வு அலைகளுடன் நாம் தொடர்பு கொள்ளும் போது நமக்கு மனதில் அமைதி உண்டாகின்றது. அருள் சுரந்து பக்தி பெருகுகின்றது. இந்த அதிர்வுகளைச் சேமிப்பதற்காகவே அஷ்டபந்தனம் என்ற எட்டு வித மருந்துகள் சாத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலையின் கீழ் ஒட்டப்படுகின்றது. ஆலயம் என்பது தெய்வீக சக்திகளைச் சேமித்து வைக்கும் வங்கியாகும். கருவறை என்பது கஜானனப் பெட்டி அதில் விக்கிரகமென்பது விலைமதிக்க முடியாத நவரத்தினங்கள். இந்த நவரத்தினங்களை அடைய வேண்டுமென்றால் சக்திகளைச் சேகரித்து வைத்துள்ள ஆலயங்களுக்குச் செல்ல வேண்டும்.

மந்திரமும், யந்திரமும் அணுசக்தியை விடப் பலம் வாய்ந்தவை.

வீட்டில் நாம் செய்யும் பூசைகள், ஜெபங்கள், தியானங்களெல்லாம் நாம் சேர வேண்டிய இடத்திற்குப் பயணம் செய்யும் வாகனமாகப் பயன்படும்.

கருவறையில் இருக்கும் பொக்கிஷமான சிலையைக் கண்டு மனம் லயித்துப் பார்த்து பரவசப்பட்டுக் கண்களில் இருந்து வரும் நீரால் உள்ளத்தைக் கழுவி தூய்மை ஆக்கி ஒளி வீசும் உள்ளத்தினராக விளங்க வேண்டும். எனவே தான் ஔவையார் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எனக் கூறினார்.

மனம் லயித்த மனிதர்கள் தான் இன்று நாம் போற்றி வணங்கும் அவதார புருஷர்களாக விளங்குகின்றார்கள்.

திரேதாயுத யுகத்தில் இராமர்
துவாகர யுகத்தில் கிருஷ்ணர்
கலியுகத்தில் இராம கிருஷ்ணர்

இவர்களுக்கு அகிலம் எங்கும் கோயில்கள் உண்டு. விக்கிரகங்களை வெறும் சிலைகள் தானே என்று கருதக் கூடாது. இந்த விக்கிரகங்கள் மூலம் நாங்கள் செய்யும் பிரார்த்தனைகள் இறைவனைச் சென்றடைகின்றன.

இறைவன் எப்போதும் மக்களை ஆட்கொண்டு அருள்புரிய ஆயத்தமாகவே இருக்கிறான். மக்கள் பிறவிக்கடலைத் தாண்டித் தன்னை அடைய வேண்டுமென்ற கருணையினால் இவ்வுடலை எமக்கு அருளினான். ஆனால் நாம் அதையுணராது ஐம்புலன்கள் வழி சென்று மீண்டும் மீண்டும் பிறவிக்கு ஆளாவதை மணிவாசகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான் நெடுந்தகை நீ என்னை ஐம்புலன்கள் கொண்டு விடுந்தகையேனை விடுதி என்று குறிப்பிடுகின்றார்.

நெடுந்தகை நீ யென்னை யாட்கொள்ள
யானைம்புலன்கள் கொண்டு
விடுந்தகை யேனை விடுதி கண்டாய்
விரவார் வெருவ
அடுந்தகை வேல் வல்ல வுத்தர
கோசை மங்கைக் கரசே
கடுந்தகை யேனுண்ணுந் தெண்ணீர்
அமுதப் பெருங் கடலே

– திருவாசகம்

இறையடியை நாடி அவன் பணி செய்து கிடப்பது இப்பிறவியின் நோக்கமாகும். எனவே ஐம்புலன்களையும் அவற்றின் இச்சைப்படி விடாது தடுத்து இறைவழிப்படுத்த வேண்டும்.

ஐம்பலன்களின் கடமை எம்பெருமானைப் பணிதல் பாடுதல். வலம்வருதல், கும்பிடுதல், தியானித்தல், என அப்பரடிகள் திருவங்கமாலையில் மிகவும் அழகாகக் கூறி அங்கங்களை விநயமாக எம்பெருமானிடம் ஆற்றுப்படுத்துகின்றார்.

ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள
அளப் பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குண மொரு மூன்றும்
திருந்து சாத்வீகமேயாக
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப் பெருங் கூத்தின்
வந்த பேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறில்லா மகிழ்ச்சியின் மகிழ்ந்தார்.

– சேக்கிழார்

அல்லும் பகலும் இடையறாது நினைந்துருகும் சிவனடியாரின் உள்ளத்தில் கோயில் கொள்பவன், பூக்களில் சுரக்கின்ற தேனைப் போன்றவன் எம்பெருமான் ஜோதி வடிவானவன், தேன் கடலைப் போன்றவன்.

சிவனடியார் கூட்டத்தில் என்றும் இறைவன் கூடியிருப்பான். அத்தகைய திருக் கூட்டத்தில் என்னையும் சேர்த்து அருள் புரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அடியார்க் கெளியவன் சிவபெருமான் என்பதை மணிவாசகப் பெருமான் சிந்திக்க வைக்கிறார்.

"கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று"

– சிவபுராணம்

"பண்ணிடைச் சுவைகள் பாடி
ஆடிடும் பக்தர்க் கெல்லாம்
கண்ணிடை மணியர் போலும்
கடவூர் வீரட்டனாரே"

இறைவன் கோவில் ஆனந்தத்தின் இருப்பிடம், சாந்தியின் உறைவிடம், சச்சிதானந்தத்தின் வாழ்விடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்கை அம்பிகை (1)

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியாம் அன்னை ஆதிபரா சக்தி தனது ஆற்றலை வெளிப்படுத்த எடுத்துக் கொண்ட திருக்கோலமே துர்க்கை என்கின்ற தெய்வ வடிவம்.

துர்க்கை எதிரிகளின் தீய சக்தியை ஒடுக்கி நல்லவர்களை வாழ வைக்கும் அன்னையாக விளங்குகின்றாள். வஞ்சக எண்ணமில்லாமல் தூய்மையான மனத்துடன் பக்தி செய்பவர்களுக்கு அவள் ஏவலும் செய்வாள்.

அகில அண்டங்களையும் படைத்துக் காக்கும் அம்பிகை அருவமாக எங்கும் நிறைந்திருக்கின்றாள், அவள் நிர்மலமானவள், பரிபூரணியானவள், ஆங்காங்கு கோயில் கொண்டு விளங்கும் திருவுருவங்களில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றாள். ஆகமங்களில் கூறப்பட்டிருப்பது போல் மந்திர பூர்வமாக பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூர்த்திகளில் உருக்கொண்டு ஜீவராசிகளுக்கு அருள்புரியும் ஸ்தானமே ஆலயமாகும்.

தெய்வ சக்திகளை இயக்கும் பேரருட்சக்தியான துர்க்கை நெருப்பின் நிறமுடையவள். காயத்திரி மந்திரத்தின் தாயாகவும் விளங்குகின்றாள்.

துர்க்கா அசுரர்களை துவம்சம் செய்து அவனியிலே தர்மம் செழிக்கச் செய்தவள், மகிஷாசுரன், சும்பன், நிசும்பன், துர்க்கமன், போன்ற தீயவர்களை அழித்துத் தூயவர்களைக் காத்தவள்.

துர்மகன் என்கிற அசுரனை சங்கரித்ததால் துர்க்கை என்றும் பெயர் பெற்ற தேவியின் ஆற்றல் அளவிலடங்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மையின் திருவுருவமாகவும், சர்வமந்திர சொரூபிணியாகவும் விளங்கும் அம்பிகையின் திருவடிகளைப் பணிந்து வணங்கினால் நம்மைப் பீடித்திருக்கும் பலவிதமான தீமைகள் மாய்ந்து, நாளும், பொழுதும் நலம் மிக்க நன்மைகள் நம்மை நாடி வந்தடையும். நம்பி நிற்கும் பக்தர்களின் பல்வேறு வினைப் பயன்களையும், விரட்டியடித்து நல்வரங்களைத் தந்தருளும் கருணைக் கடல்தான் அன்னை பராசக்தி.

ஆனந்த தரிசனம் தரும் அம்பிகையைக் காண ஆயிரங்கண்கள் போதாது. காணக் கண்கள் கோடி வேண்டும். தாயினும் சாலப்பரிந்து அம்மா என்று அழைத்ததும் ஓடோடி வந்து தன்னை நம்பிச் சரணடைந்த பக்தர்களின் துயரங்களைத் தீர்த்து வைக்கின்றாள். ஆபத் பாந்தவளாய் அனாத ரட்சகியாய், அனேகரூபியாய் அகிலமெங்கும் அரசாட்சி செய்யும் அன்னையின் கருணை உண்டேல்,

"தனம் தரும், கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன வெல்லாந்தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே"

– அபிராமிப்பட்டர்

உலகில் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் வேண்டிக் கொள்வது என்ன? மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டுமென்பது எல்லோரினதும் பிரார்த்தனையாகும். இதற்கு நல்லவழி என்னவென்றால் பிரம்ம சொருபிணியான துர்க்கையை நினைந்து உடல்த் தூய்மையுடனும், உள்ளத்தூய்மையுடனும் துர்க்காதேவியை வழிபடுதலாகும்.

உலகில் எந்த ஒரு வேலையை யார் செய்தாலும் அவர்களுடைய எசமான் அந்த வேலைக்குரிய கூலியைத் தட்டாமல்த் தருவது எப்படி வாடிக்கையோ அதைப் போல நாம் எந்த ஒரு நற்செயலைச் செய்தாலும் அதற்குரிய பலன்களை தாமதமில்லாது உடன் தருவதில் முன்னிற்பவள் அன்னை பராசக்தியான துர்க்கையாவாள்.

அம்பிகையின் பார்வை படுவதும், அம்பிகையின் திருப்பாதங்களைப் பணிவதும், மனத்தால் நினைப்பதும், வாயாரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றுவதும் புகழ்ந்து பாடுவதும், புகழ்ந்து பேசுவதும் மனிதசென்மம் செய்த மகாபாக்கியமாகும்.

அம்பிகையின் கடைக்கண் பார்வை பட்ட மாத்திரத்தில் நம் பாவங்கள் எல்லாம் அற்றுப் போகும். புண்ணிய நதிகளில் நீராடியதற்குச் சமமாகும்.

"விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டினியே"

– அபிராமிப்பட்டர்

இறைவனின் இதயத்தை நெகிழச் செய்து பூரிப்படையச் செய்யும் சக்தி பக்தி ஒன்று தான். கடவுளைத் தியானிக்கும் பொழுது எங்கள் உணர்வும் இறைவனின் உணர்வும் சந்திக்கின்றன, ஈர்க்கப்படுகின்றன.

தர்மமும், சாந்தியும் நிலவுமிடத்தில் சிறந்த வளர்ச்சியும், மகிழ்ச்சியும் பொங்கி மங்களங்கள் நிறையும்.

மாபெரும் பிரபஞ்ச சக்தியே துர்க்கை வடிவில் விளங்கி நிற்கிறது.

துர்க்கை அவதாரமென்பது இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி (உமை, இலட்சுமி, சரஸ்வதி) மூவரும் சேர்ந்த அவதாரம் தான் துர்க்கை அவதாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயதசமி – துர்க்கை (2)

உடல் வாழ்வு மட்டும் வாழ்வா? உள்ளத்தில் தீய எண்ணங்கள் ஆக்கிரமிக்கின்றன. அதை எதிர்த்து ஒரு போர் நடக்கிறது. அதில் வெற்றி பெற வேண்டாமா? அதிலும் வெற்றி தருபவள் பராசக்தி. மனதின் வெற்றிக்கு அவள் காரணமாகின்ற போது அவள் பெயர் மனோசக்தி. அதாவது மனோன்மணி, துர்க்கை.

அந்த எருமைத் தலையின் மீது ஏறி அடக்கி நடக்கும் எழிற்கொடியே துர்க்கை என்றால் அசைக்க முடியாதது என்று பொருள். மன உறுதியே துர்க்கா மகிஷாசுரன் என்ற எருமையோ சோம்பல். அந்த மகிஷனை வென்ற துர்க்கையின் வெற்றியே விஜயதசமி.

நீர்வளம், நிலவளம், வனவளம், ஜனவளம், மலைவளம், மனவளம் முதலிய பல்வேறு வளங்களைக் குறிக்கும் அஷ்டலட்சுமிகளும், மகாலட்சுமியுமாக விளங்கி உலகெங்கும் வறுமை ஒழிக்கும் திருநாளே உண்மையான விஜயதசமி. அதனால்த்தான் நவராத்திரி முதல் மூன்று நாட்களும் துர்க்கைக்குப் பூசை வகுக்கப்பட்டிருக்கிறது. அடுத்த மூன்று நாள் இலட்சுமி பூசை. உடல் வெற்றி, உள்ளத்தின் வெற்றி. ஞானமும் வேண்டும் அந்தக் கல்வி அறிவு ஞானத்தின் வெற்றி சரஸ்வதி பூசை. அறியாமையே நமது தோல்விகளுக்கான முக்கிய காரணம். அதை எதிர்த்து ஒவ்வொரு கணமும் போராட வேண்டியிருக்கிறது. அறிவின் வெற்றியே சரஸ்வதி பூசை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மரணத்தை எதிர்த்து உயிர் நடத்துகின்ற போர் அனைத்திலும் சக்தி இருந்தால்த் தான் ஜெயிக்க முடியும். எல்லைக்குட்பட்ட நமது ஜீவசக்தி எல்லையற்ற பராசக்தி துணை கொண்டு வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி, எங்கும் வெற்றி, எதனிலும் வெற்றி என்று பராசக்திப் பக்தன் பாரதி வாக்கில் வெற்றி முழங்க வேண்டும். இந்த வெற்றித் திருவிழாவாக விஜயதசமி விளங்க வேண்டும். உடலின் வெற்றி, உள்ளத்தின் வெற்றி, உயிரின் வெற்றி இதுவே விஜயதசமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னறி தெய்வங்கள் மூவர்

கண் கண்ட தெய்வங்கள் தாய், தந்தை, குரு. இவர்களையே நாங்கள் முதலில் வழிபட்டு அவர்களின் உள்ளங்களை குளிரச் செய்ய வேண்டும். இவர்களின் உள்ளம் பூரிப்படைந்தால், மகிழ்ச்சியடைந்தால் எங்களின் வாழ்வு மலரும், இல்லம் சிறக்கும், வளம் கொழிக்கும். இவர்களை மதித்துத், துதித்துப் போற்றி வாழ்வதே முக்கிய விரதமாகும். இவர்களை மதியாது, வணங்காது நாம் எந்த வகையான விரதங்களைப் பிடித்தாலும் எவ்விதமான பலன்களையும் பெற முடியாது.

அவர்களிடும் கட்டளை எதுவாக இருந்தாலும், அவர்களின் விருப்பப் படி அதை நிறைவேற்றுவது நம் கடமையாகும். அவர்கள் கூறும் காரியங்கள் தர்மமானவையா? அதர்மமானவையா? எனச் சிந்திக்க வேண்டியதில்லை. அவர்களின் ஆலோசனையின்றி விருப்பமின்றி எதுவும் செய்யக் கூடாது. அவர்களின் சம்மதத்தோடு செய்யும் காரியங்கள் அனைத்தும் தாமாகவே நிறைவெய்துவதுடன் பெரும் புண்ணிய தர்மமாகும்.

மேற்கூறிய இவர்கள் மூவரும் மூன்று உலகங்களாகும். மூன்று ஆசிரமங்கள், மூன்று வேதங்கள், மூன்று அக்கினிகளாவார்கள்.

தந்தையை வழிபடுவதால் இவ்வுலகையும், தாயை வழிபடுவதால் மேலுலகையும், குருவை வழிபடுவதால் பிரம்ம லோகத்தையும் நிச்சயம் வெற்றி கொள்ள முடியும். மூவரிடமும் நல்லபடி நடந்து கொண்டால் மூவுலகிலும் நல்ல பெயர் எடுக்கலாம். நலங்கள் பெற்று வளமான வாழ்வு வாழலாம். இது ஒரு பெரிய தர்மமுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நம்மை இம்மூவரைக் காட்டிலும் மேலாக நினைக்கக் கூடாது. அவர்களைத் தூஷிக்கக் கூடாது. அவர்களை விட்டு உணவு கூட உட்கொள்ளக் கூடாது. அவர்களுக்குப் பணி செய்வதையே பெரும் கடமையாகக் கொள்ள வேண்டும். அதைப் போன்ற மேலான புண்ணியம் எதுவுமில்லை. அவர்களுக்குச் செய்யும் பணிவிடைகளால் புகழ் சேரும், புண்ணியம் சேரும் எல்லாம் நல்லனவாக நடக்கும்.

மூவரையும் ஆதரிப்பவன் உலகம் அனைத்தையும் ஆதரிப்பவனாகிறான். இவர்களை வழிபடாதவர்களுக்கு இவ்வுலகமும் இல்லை, அவ்வுலகமும் இல்லை. தாய், தந்தையின் பெருமை சொல்ல முடியாது. இவர்களுக்குச் சமமான குரு எங்குமில்லை.

தாய், தந்தை தான் எங்கள் பிறப்புக்குக் காரணமாகிறார்கள். இவ்வுடல் அவர்கள் தந்தது. அவர்கள் துணை கொண்டு ஆசிரியர் என்னும் குருவைப் பெறும் நாம் அவரது உபதேசத்தால்த் தான் புதுப் பிறவி எடுக்கிறோம். இப்படி உபகாரம் செய்யும் தாய், தந்தை, குரு மூவரும் உலக நோக்கில் அபசாரம் செய்பவர்களாகத் தோன்றினாலும் அவர்கள் தண்டனைக்குரியவர்களல்ல. அவர்கள் தவறுகள் செய்தாலும் அதைத் தண்டிக்கும் அருகதை நமக்கில்லை. தண்டிக்காமல் இருப்பதால் ஒருவன் குற்றம் செய்தவனாக இருக்க மாட்டான். ஏனெனில் அவன் தந்தை தாயைப் பேணும் தர்மத்தில் முயற்சி உடையவனாக இருக்கிறான். அவனை அந்தத் தர்மம் தலை நின்று காக்கும்.

அருளே வடிவானவர் குரு. எந்தப் பாவியையும் மன்னித்து அனுக்கிரகித்து ஆட்கொள்ளும் அரிய இயல்பு கொண்டவர். அவர் அடிபற்றி அந்தரங்க சுத்தியுடன் ஆதரித்தால் பாவம் அனைத்தும் தொலைந்து சீரும் சிறப்பும் பெறலாம்.

தாய்க்குத் திருப்தி தரும் செயல் புவி அன்னையைத் திருப்தி அடையச் செய்கின்றது. இறைவனை மகிழ்விக் கின்றது. தாய், தந்தை. குரு மூவரும் மகிழ்ந்தால் இறைவனும் மகிழ்கிறான். இம்மூவரின் துணை கொண்டு நாம் நிச்சயம் இறையருள் பெறலாம்.

தாய், தந்தை, குரு மூவரையும் போற்றி நடப்பவர்கள் ஏனைய விரதங்கள் நோற்கும் காலங்களில் விரதம் ஆரம்பிப்பதற்கு முன் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய், , தந்தையரை மனக்கண் நினைந்து வணங்கி விநாயகப் பெருமானை வணங்கி விரதங்கள் பிடிக்க வேண்டும். அப்படிப் பயபக்தியுடன் நோற்கும் விரதங்களுக்கு நிச்சயம் உடன் பலன் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல் ஒழுக்கம்

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் அது
உயிரிலும் ஓம்பப் பெறும்"

ஒழுக்கம் இல்லாத வாழ்க்கை ஓட்டைகள் நிறைந்த பானைக்குச் சமமாகும். மனித வாழ்க்கையில் பழக்க முறைகள் அத்தியாவசியமாக இருப்பதால் ஒழுக்க, பழக்க வழக்கங்கள் ஒவ்வொருவருக்கும் மிகமிக முக்கியமாகின்றது. வாழ்க்கையில் ஒருவரை உயர்த்துவதும் தாழ்த்துவதும் ஒழுக்கம் தான்.

ஒரு மனிதன் ஒழுக்க சீலனாய் இருப்பின் அவன் மக்கள் மத்தியில் யாவரினதும் மதிப்புக்குரியவனாக புகழோடு விளங்குவான்.

தற்காலத்தில் மக்களிடையே நேர்மையான தெய்வ பக்தி, குருபக்தி, பெற்றோர் பக்தி, குடும்ப பக்தி சிறிதளவுமில்லை. காரணம் நல்லொழுக்கமின்மையே காரணமாகும். நல் ஒழுக்கம் இருக்குமானால் குடும்பத் தலைவன் சிந்தித்து செயல்படும் பொழுது அந்தச் செயல்ப்பாட்டில் சத்திய தேவன் இருப்பான். எடுத்த காரியங்கள் எள்ளளவும் தடையில்லாமல் பூர்த்தியடையும்.

மனம் போன போக்கில் விடாமல் மனத்தைக் கட்டுப்படுத்தி ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து உள்ளத் தூய்மையுடனிருந்தால் இறையருள் நிச்சயம் கிடைக்கும். மனம் என்றும் தூய்மையாகவே உள்ளது. பேராசைகள் நிரம்பி மனம் கெடுகின்றது. உதாரணமாக நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவிக்கும் கைக்குட்டை(லேஞ்சி) முன் தூய்மையாக வெள்ளையாக இருந்தது. உபயோகப் படுத்தும் பொழுது அழுக்கு நிறைந்து நிறம் மாறி விட்டது. அதை சவர்க்காரம் போட்டுக் கழுவியவுடன் பழையபடி முன்பு போல் வெண்மையாகி விடுகின்றது. ஆனால் கைக்குட்டைக்கு வெண்மை புதிதாக வரவில்லை. அதில் இருந்த அழுக்கு நீக்கப்பட்ட பின் அதன் இயல்பான வெள்ளை தெரிகின்றது. எனவே மனம் கைக்குட்டை போன்றது. ஆசைகள் என்ற அழுக்குப் படியப் படிய அதன் தூய்மை மறைக்கப்படுகின்றது. ஆசை என்ற அழுக்கை நீக்க வேண்டுமாயின் இறை அருள் என்னும் சவர்க்காரத்தால் கழுவத் தூய்மையாகி விடும். ஒழுக்கம் என்ற வெண்மை ஏற்பட்டு விடும். எனவே ஒழுக்கமுடையவரை யாவரும் போற்றிப் பாராட்டுவர். ஒழுக்கம் தான் உயர் குலம். ஒழுக்கமுடையவர்கள் உயர்குலத்தவர்கள் ஆகிறார்கள். ஒழுக்கமற்றவர்கள் தாழ்த்தப்பட்ட கீழோர் ஆகிறார்கள். எங்கே ஒழுக்கம் இருக்கிறதோ அங்கே சகல அஷ்ட ஐஸ்வர்யங்களும் நிறைந்திருக்கும்.

## பிரகலாதர் கதை (உதாரணம்)

ஒரு முறை அவர் தன்னுடைய கோட்டை வாயிலில் இருந்து ஒரு அழகிய பெண் வெளியேறுவதைப் பார்த்தார். நீ யார்? என்று அவளை வினவினார். அதற்கு அவள் நானே ராஜ்யலட்சுமி என்று கூறிக்கொண்டு வெளியேறினாள். பிரகலாதன் அவளைத் தடுக்கவில்லை. மறுபடியும் அதே மாதிரி இன்னொரு அழகிய பெண் தன் கோட்டை வாயிலிலிருந்து வெளியே போவதைக் கண்டார். நீ யார் என வினவினார். அவள் நானே தனலட்சுமி என்று கூறிக் கொண்டு வெளியேறினாள். இப்போதும் அவர் அவளைத் தடுக்கவில்லை. இதற்குப் பின்னர் மற்றொரு அப்சரஸ் தன் கோட்டை வாயிலைக் கடந்து செல்வதைப் பார்த்தார். அளை நீ யார் என்று வினவ அவள் நானே கீர்த்தி லட்சுமி என்று கூறி வெளியேறினாள். இப்பொழுதும் அவர் அவளைத் தடுக்கவில்லை. மறுபடியும் ஒரு அழகிய பெண் மிகுந்த ஒளியுடன் பலவிதமான அலங்கார ஆபரண பூஷிதையாக தன்னுடைய கோட்டை வாயிலைக் கடக்க முயல்வதைக் கண்டார். பிரகலாதன் அவளை நீ யார்? என்று வினவினார். அதற்கு அந்தப் பெண் நானே நல் ஒழுக்கம்(சீலம்) என்று பதிலளித்தாள். பிரகலாதன் உடனே சிரம் தாழ்த்திக் கை கூப்பி மன்றாடிக் கேட்கின்றார், அம்மா! நீங்கள் இங்கே தான் இருக்க வேண்டும் தயவு செய்து என்னை விட்டு அகலக் கூடாது என்று வேண்டிக் கொண்டார். உடனே அவள் வெளியேறாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகலாதனுடைய அந்தப் புறத்திற்கே திரும்பிச் சென்றாள். இது நிகழ்ந்தவுடனே ராஜ்யலட்சுமி, தனலட்சுமி, கீர்த்திலட்சுமி மூவரும் திரும்பப் பிரகலாதன் கோட்டைக்குள் வந்து சேர்ந்தார்கள். எனவே நல்லொழுக்கம் இருந்தால் மற்ற எல்லாச் செல்வங்களும் தானே வந்தடையும். நல் ஒழுக்கம் இல்லை என்றால் எதுவும் நிலைக்காது பயனற்றதாகி விடும். ஒழுக்கம் இருள் கெடுத்து ஒளி கொடுத்து நல்ல வழி காட்டி நிற்கும்.

இன்று சீவ காருண்ய மனப்பான்மை அடியோடு அழிந்து விட்டது. சமுதாயத்தில் நல் ஒழுக்கம், நேர்மை இல்லாமல்ப் போய் விட்டது. நாத்திக மனப்பான்மை அதிகரித்து விட்டது. ஆசிரியர் மீது மாணவர்களுக்கு மரியாதையில்லை, பண்டைக்காலக் கலாச்சாரத்தின் மேல் மதிப்பு, மரியாதை அற்றுப் போய் விட்டது. மேன்மையான மனிதர் மேல் மரியாதை வைக்கப்படுவதில்லை. பொறுமை தான் உண்மையான செல்வம், எத்தனை விரதங்கள் இருந்தாலும் சத்தியத்தை இலட்சியமாக வைத்து வாழ்வது தான் சிறந்த விரதம்.

புலனடக்கமற்ற மனிதன் மிருகத்தை விடக் கேவலமானவன். மிருகங்கள் கூடச் சில நேரங்களில் தங்கள் புலன்களை அடக்கத்தான் செய்கின்றன. ஆனால் மனிதன் தனது படிப்பு, ஞானம் இவையெல்லாம் பெற்றும் கூடப் புலன்களை அடக்க முயற்சிப்பதில்லை. காமக்குரோத, மோக, லோப, மத, மாத்சர்யங்கள் ஆகியவை மிருக லட்சணங்கள். இன்று மனிதன் மிருக குணங்களை வளர்த்துக் கொண்டு மிருகமாகவே மாறி விட்டான்.

மனிதனை விடப் புகழும், கீர்த்தியும் எவராலும் அடைய முடியாது. ஆனால் மனிதன் தன்னை தன் உணர்வுகளோடு இணைத்துக் கற்பனை செய்து கொண்டு மாயையில் ஆழ்ந்து விடுகிறான்.

குணத்தை இழந்தால் அனைத்தையும் இழந்ததற்குச் சரி. ஒருவரை மதிப்பிடுவது அவர்களின் செயல்களிலே அன்றி, அவர்களின் மேன்மையான வார்த்தைகளிலல்ல. கால் சறுக்கினால்க் குணமடையலாம். நாத்தவறினால் அது ஆழமான வடுவை ஏற்படுத்தும். தடியும், கல்லும், எலும்புகளை முறிக்கும், சொற்கள் உறவையே முறித்து விடும். உள்ளத்தில் கலக்கமிருந்தால் வெளியில் எல்லாம் குழப்பமாகத் தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாச் செயல்களுக்கும் எண்ணங்கள் தான் விதையானவை. எனவே நல்ல விதைகளை விதைக்க வேண்டும். அப்போது தான் பழங்கள் நல்லவையாக இருக்கும் நல் ஒழுக்கங்களும், நற்குணங்களும் இரத்தினங்களை விடப் பெறுமதி மிக்கவையாகும். அவை மனிதனுக்குத் திருப்தியைத் தருகின்றன.

நாம் எண்ணங்களை விதைக்கும் பொழுது அவைகள் உணர்வுகளாகின்றன. உணர்வுகளே நமது நோக்கங்களாகின்றன. நோக்கங்களே நமது வார்த்தைகளாகின்றன. செயல்களாகவும் வெளிப்படுகின்றன. செயல்களே நமது நடத்தைகளாக உருப்பெறுகின்றன. நடத்தைகளே நமது விதிகளை நிர்ணயிக்கும். எண்ணங்களே விதையாயிருக்கின்றது. எண்ணும் எண்ணம், சொல்லும் சொல், செய்யும் செயல் இவை மூன்றிலும் ஒருமைப்பாடு வேண்டும். சொல்வதையே செய்ய வேண்டும். செய்வதையே சொல்ல வேண்டும். ஒழுக்கம் இருக்குமிடத்தில் பண்பு, அறிவு, ஆற்றல், நாணயம், ஈவு, இரக்கம், தயவு, பொறுமை, கருணை எல்லாம் ஒருங்கே நிறைந்திருக்கும். இவர்கள் என்றும் சந்தோஷமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பார்கள். எனவே ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.

ஒழுக்கமுடையவர்களுக்கு எங்கு சென்றாலும் பெருமதிப்புண்டு. அவரை எல்லோரும் அன்புடன் வரவேற்று சென்றணுகிப் பண்புடன் பழகுவார்கள்.

படித்த பெரும் கல்விமான்களாகவும், பட்டதாரிகளாகவும் இருந்தாலும் நல்லொழுக்கமில்லா விடின் அவருடைய கல்வியால் எது வித பயனும் ஏற்படாது.

"பற்பல நூல் கற்றுணர்ந்த பண்டிதனே ஆனாலும்
நற்குணங்கள் எள்ளளவும் நண்ணாத – துர்க்குணனை
முற்றவெறுக்க முடிமேல் மணிஇருந்தென்
புற்றரவைக் கிட்டார் புகுந்து"

சரியான நேரத்தில் மௌனமாக இருப்பது சொற்பொழிவைக் காட்டிலும் கருத்துக்களைச் சிறப்பாக தெரிவிக்கின்றது.

மலைபோல் உயர்ந்த நிலையில் உள்ளவரும், தாழ்வுக்குக் காரணமான செயல்களை ஒரு குண்டு மணியளவு செய்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தாழ்ந்தவராய்ப் போய்விடுவார்கள். தற்பெருமை எங்கு முடிகின்றதோ அங்கு தான் ஆனந்தம் ஆரம்பமாகிறது.

கண்களை இழந்தவன் குருடனல்ல. எவன் தன்னிடமுள்ள குறைகளை மறைத்து, ஒழுக்கமற்றவனாக இருக்கிறானோ அவன் தான் உண்மையான குருடன். மன்னிப்பதும், மறப்பதும் உயர்ந்த பண்பு. அதிகமான பேச்சு ஆபத்தை விளைவிப்பதுடன் ஒழுக்கமற்ற செயற்பாடாகும்.

செல்வத்தை வளர்க்கிறோம், உத்தியோகத்தை வளர்க்கிறோம், வீடு, நில, புலன்களைப் பெருக்கிக் கொள்கிறோம். ஆனால் நமது நல் ஒழுக்கமான குணங்களை வளர்க்கிறோமா? அது தான் இல்லை. நரம்பில்லாத நாக்கினால் வரம்பில்லாமல் பேசக்கூடாது.

கற்பு என்பது ஆணுக்கும், பெண்ணுக்கும் உயிரை விட மேலாகப் போற்றக் கூடிய ஒழுக்கமாகும். உடல் உரம், மனநலம், பொருள் வளம், மூன்றையும் காக்க வல்லது கற்பு.

நாம் பேசும் பேச்சு இனிய பேச்சாக இருக்க வேண்டும், பிறரை வாழ்விக்கும் பேச்சாக இருக்க வேண்டும், பிறருக்கு நம்பிக்கை அளிக்கும் பேச்சாக இருக்க வேண்டும். அடக்கமான பேச்சாக, பயனுடைய பேச்சாக இருக்க வேண்டும். பேச்சை ஒரு கொடிய ஆயுதம் போல் பயன்படுத்தும் பண்பாடற்றவர்களாக நம்மில் பலர் இருந்து வருகிறோம். கடும் சொல் என்பது வெறுக்கத்தக்கது மட்டுமல்ல வேரோடு களையத்தக்கது.

> "தீயினால் சுட்டபுண் உள்ளாறும் உள்ளாறா
> நாவினால்ச் சுட்ட வடு"

ஆயிரம் வீண் வார்த்தைகளை விட கேட்பவர்களுக்கு இதமளிக்கும் ஒரு நல்ல வார்த்தை நல்லது.

> "இனிய உளவாக இன்னாதுகூறல் கனியிருக்க
> காய் கவர்ந் தற்று"

இராமன் என்ற மனிதன் தன் நடத்தையால் தெய்வமானான், இராவணன் என்ற மனிதன் தன் நடத்தையால் மிருகமானான், பாண்டவர்கள் தெய்வமானார்கள், கௌரவர்கள் மிருகமானார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி, ஆழ்ந்த சிந்தனை, தெளிந்த ஞானம், இனிய பேச்சு சிறந்த ஒழுக்க சீலமாகும். அடக்கமும், பணிவும் கல்வியின் அடையாளம். ஒரு பெரிய கட்டிடத்தை அதன் அத்திவாரம் தாங்குவது போல், தனி மனித வாழ்க்கைக்கும், சமுதாய நலனுக்கும், அஸ்திவாரமாக விளங்குவது ஒழுக்க நெறிகளென இந்து சாஸ்திரம் கூறுகின்றது.

ஒழுக்கம் என்பது கட்டுப்பாடு. ஒருவனுடைய மகிழ்ச்சியும், துயரமும், அவன் எந்த அளவிற்கு கோபத்தைக் கட்டுப்படுத்துபவனாக இருக்கிறான் என்பதைப் பொறுத்தே அமைகின்றது.

கல்வியின் பயன் அறிவு, அறிவின் பயன் ஒழுக்கம், ஒழுக்கத்தால் வருவது உயர்வு.

ஆயுதங்கள் ஆபத்தானவையல்ல. மனிதனிடம் இருக்கும் கோபமே ஆபத்தானது. சிலர் உங்களுடன் சண்டை சச்சரவிற்கு வரலாம். அப்பொழுது புன்சிரிப்பும் அன்பான மனப்போக்குமே உங்களின் அன்பான ஆயுதம்.

ஒழுக்கமில்லாதவர்கள், ஒழுக்கமுடையவர் போல் பாசாங்கு காட்டினாலும் எவரும் அவர்களை ஒழுக்கமுடையவராக ஏற்க மாட்டார்கள்.

"கற்பூரம் போலக் கடலுப்பு இருந்தாலும்
கற்பூரமாமோ கடல் உப்பு – பொற்பூரும்
புண்ணியரைப் போல் புல்லியர் தாமிருந்தாலும்
புண்ணியர் ஆவரோ புகல்"

(தன்னம்பிக்கை) தன்னைப் பற்றிய உயர்வான மதிப்பீடு, எண்ணம், நாணயம், நல் ஒழுக்கம் மற்றும் தரமுடைய பழக்கங்கள் இவைகளைத் தன் மக்களுக்குச் சொல்லி கொடுப்பது பெற்றோரின் கடமையாகும். வாழ்க்கையில் பிரச்சனைகளைக் கண்டு பயம் கொள்ளக் கூடாது. துன்பங்களைக் கண்டு துவண்டு விடாமலும், தோல்விகளைக் கண்டு மனம் சோர்வு அடையாமலும் எதிர் நீச்சல் போடப் பழகிக்கொள்ள வேண்டும்.

பொறுமையின் விளக்கமாய்த் திகழ்ந்த தருமர் இகழையும், புகழையும் ஒன்றென மதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமன் நாட்டையும், காட்டையும் ஒன்றாகக் கருதினார். இதுதான் தர்ம ஒழுக்கம்.

ஒழுக்கத்துடன் வாழ்ந்தால் புகழ், கீர்த்தி, புண்ணியம் தானே வந்து சேரும். ஒழுக்கமுடையோர் மனிதரில் மாணிக்கமாவார். ஒழுக்கமே உயர் குலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய அன்பு

அன்பே சிவம்

மனிதனை இனம் காட்டுவதும், உயர்த்துவதும் பணமோ, பதவியோ, குலமோ, கோத்திரமோ அன்று. குணமாகியது அன்புமனிதனை அடையாளம் காட்டுவதோடு மேன்மை அளிக்கின்றது. அன்பு இல்லாத ஒருவன் தான் மனிதனென்று சொல்லத் தகுதியற்றவனாகிறான். இதையே வள்ளுவரும், அன்பிலா ஒருவன் பிணமென்று கூட சொல்லத் தகுதி அற்றவனாகிறான் என்கிறார். திருஞான சம்பந்தர் இறைவனை அணுகும் போது காதலால் கசிந்து கண்ணீர் மல்கியதாகக் கூறுகிறார். அன்பின் நிமித்தம் கண்கள் கண்ணீர் சிந்துவதால் கிடைக்கும் இன்பம் பேரின்பமாகும்.

இத்தகைய அன்பைப் பற்றி அப்பர் சுவாமிகள் கூறும் போது இறைவனிடத்திலே அன்பில்லாதவர்கள் பெரும் குலத்திலே பிறந்து பெரும் செல்வராகி எனக்கு மண்ணுலக வாழ்வும், விண்ணுலக அரசும் தந்து உதவி புரிவாராயினும் அவைகளை நான் பெருமையாக மதிக்க மாட்டேன் அதற்கு மாறாக இறைவனிடத்திலே அன்பு வைத்தவர்கள் இறை அடியார்கள். அங்கம் அழுகிய தொழுநோயராயினும், பசுவை அறுத்துத் தின்னும் புலையர் குலத்தில்ப் பிறந்தவராயினும், அவர்களே நான் வழிபட விரும்பும் கடவுள் என்று கூறுகிறார்.

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவற் கேகாந்தர் அல்லாராகில்
அங்கமெலாம் குறைந் தழுகு தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கை வார் சடைக் கரத்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே

இந்த அன்பு என்ற பக்தியானது சித்தியையும் முக்தியையும் சேர்த்துத் தரும் வல்லமை உடையது. அன்பின் விளைவுகளை ஆதிசங்கரர் வியந்து கூறுகின்றார். அன்பால் தேய்ந்த பழம் செருப்பும் இறைவனுடைய புருவத்தைத் தொட்டது. கொப்பளித்த உமிழ் நீரும் இறைவனுக்கு அபிஷேகத் தீர்த்தமாகியது. கடித்த எச்சில் செய்த புலால்த் துண்டு இறைவனுக்கு அமிர்தமாகியது. வேடர் குலத்தில் பிறந்த திண்ணன் பக்திச் சிரோன்மணியாக மாறினான். எனவே அன்பு எதைத்தான் செய்யாது. அன்பால் ஆகாதது எது? என்று கண்ணப்பருடைய வாழ்க்கையையும் அன்பின் வலிமையையும் எண்ணி வியக்கிறார் ஆதி சங்கர். இதே போல் பட்டினத்தாரும் வியக்கிறார்.

"வில்லால் அடிக்க, செருப்பால் உதைக்க, வெகுண்டொருவன்
கல்லால் எறியப் பிரம்பால் அடிக்க களி வண்டு கூர்ந்து
அல்லார் பொழில் தில்லை அம்பலவாணர்க்கு ஓர் அன்னைபிதா
இல்லாததால் அல்லவோ இறைவா கச்சி ஏகம்பனே"

உன்மீது அன்பு வைத்தார் என்ற ஒரு காரணத்துக்காக இதையெல்லாம் தாங்கிக் கொண்டாயா? என்று தட்டிக் கேட்கிறார் பட்டினத்தார். இறைவன் தன் பக்தரின் அன்பிற்காகப் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டாரல்லவா?

இத்தகைய விலை மதிப்பில்லா அன்பைப் பரிமாறிக் கொள்ளாத மனிதர்களைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு மகான் இப்படி அழைப்பாராம் இந்த மகான் திருவொற்றியூர் நெல்லிக்கா பண்டாரத் தெருவில் வாழ்ந்தவர். மக்கள் மலையிலே வொற்றியூர் தியாகமே வடிவான இறைவனை வணங்கிச் செல்லும் போது அம்மக்களைப் பாாத்து இதோ குதிரை போகிறது, எருமை போகிறது, ஆடு போகிறது, புலி போகிறது, நாய் போகிறது, நரி போகிறது என்பாராம். ஆனால் அவ்வழியால் இராமலிங்கடிகள் போனால் மட்டும் இதோ மனிதன் போகிறான் என்பாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களிடமிருந்து வள்ளலாரை இனம் பிரித்துக் காட்டியது அவர் பிற உயிர்களின் மேல்க் காட்டிய அன்பு, கருணை, தயை இவையேயாகும். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடியவர் இராமலிங்கர் இறைவனிடத்தில் இவர் வேண்டியதெல்லாம்,

"அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்

ஆருயிர்க் கெலாம் நான் அன்பு செய்ய வேண்டும்."

என்பதே இத்தகைய அன்புள்ளம் கொண்டவர் மனிதரில் தெய்வம் அல்லவா?

ஒரு குஷ்டை ரோகி, புழுத்துளைத்த நிலையில் ஒரு காளி கோயில் வீதியில் கிடந்தான். எவரேனும் அவனருகில்ச் செல்லவில்லை அவனைப் பார்க்கவே அருவருப்பாய் அப்பக்கம் செல்லாமல்ச் சென்றார்கள். அவ்வமயம் அவ்வழியால் அன்னை திரேசா வருகையில் இந்த குஷ்டரோகி படுக்கையில் இருந்ததைக் கண்டார். அருகில் சென்று அந்த குஷ்டரோகியைப் பார்த்து மனம் உருகி அவரைத் தனது கைகளால் தடவி ஆறுதல் வார்த்தைகள் கூறி தனது இல்லத்திற்கு(ஆசிரமம்) தனது வாகனத்தில் ஏற்றிச் சென்று அவரைக் குளிப்பாட்டி, புதிய உடைகள் அணிந்து புண்களுக்கு மருந்து போட்டு தனது இல்லத்தில் வைத்திருந்து சுகப்படுத்திப் பராமரித்தார். அப்பொழுது அந்தக் குஷ்டரோகி கூறியது "அம்மா! இவ்வளவு நாட்களாக காளி கோயில் வீதியில் கிடந்தேன் எவரும் கவனிக்கவில்லை இன்று தான் நீங்கள் அந்தக் காளி தேவி வடிவில் வந்து காப்பாற்றினீர்கள். எம்மைக் காக்கும் காளி அம்மன் தாய் நீங்கள் தான் அம்மா" என்று இரு கரங்கள் கூப்பி வணங்கிக் கண்ணீர் சொரிந்தான்.

இத்தனைக்கும் காரணம் அன்னை திரேசா அவர்களின் பிற உயிர்கள் மீது வைத்திருக்கும் அன்பு ஒன்று தான். இதனாலே தான் இன்றும் அன்னை திரேசா உலகில் அனைவராலும் போற்றப்படுபவராக விளங்குகின்றார்.

அன்பைத் தவிர உயர்ந்த கடவுள் எங்கும் இல்லை.

"அன்பே கடவுள், கடவுளே அன்பு"

ஆன்மீகம் என்பது அன்போடு கலக்கச் செய்யும் முயற்சி. ஆன்மீகம், இறை சிந்தனை, வழிபாடு இம்மூன்றும் அன்பினுள் அடங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் குளிர, மனம் குளிர, உணர்வு குளிர, உயிர் குளிர உரை குளிரப் பேச வேண்டும் அதுவே அன்பு.

இறைவன் மேல் அன்பும், பாவத்தைக் கண்டு பயமும் இருக்க வேண்டும். இவை இரண்டும் இருந்தால் சமூகத்தில் எப்பொழுதும் நீதி நிலைத்திருக்கும்.

யாரையும் எந்த விதத்திலும், பாதிக்காமல் இருப்பதே உண்மையான அகிம்சையும், அன்புமாகும். இதை உணர்ந்து நடப்பது மிக மிக அவசியம்.

மனத்தாலும், வாக்காலும் வேறு எவற்றாலும் அடைய முடியாதவன் எம் பெருமான், தேவர்களாலும் மூவர்களாலும் அறிதற்கரியவன் எம்பெருமான். அத்தகைய எம்பெருமான் அடியவர்க்கு எளியவன் சிற்றம்பலவன் என்று அழைக்கப்படுகின்றார்.

"வேதங்கள் ஐயாவெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன்" எம்பெருமான். அத்தகைய இறைவனை அன்பினால்க் கட்டி விடலாம்.

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில் புகும் அரசே
அன்பெனும் வலைக்குட்படும் பரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிரொளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புருவாய் பரமசிவனே"

(வடலூர் வள்ளலார்)

அன்பு வலையில் அகப்படும் எம்பெருமான் பழங்குடில்களையே தனது கோயிலாகக் கொண்டவன். அன்பர்களின் நலனையே எப்போதும் நாடுபவன் சிவனடியார்களின் சிந்தையில் தேனாக இனிப்பவன். இதனாலே தான் சிவனடியார் பூசையை சைவ மக்கள் என்றும் நிகழ்த்தி வருகின்றார்கள்.

உண்மையான பக்தனுடைய மனம் உலர்ந்த நெருப்புக் குச்சிக்குச் சமமாகும். இறைவனின் நாமத்தைக் கேட்டவுடனேயே அவன் மனத்திலுள்ள பக்திப் பிரேமை மூண்டெரிகின்றது.

காமத்தாலும் ஆசையாலும் நனைந்து கிடக்கும் லௌகீகனுடைய மனமோ ஈர நெருப்புக் குச்சி போல ஒரு போதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துவதில்லை. பல தடவை அவனுக்கு ஈஸ்வரனைப் பற்றி உபதேசம் செய்த போதிலும் ஈஸ்வரப் பிரமையாகிய பக்தி நெருப்பு அவனிடம் மூழுவதில்லை.

எந்தக் காரணத்தினாலும் எந்த நேரத்திலும் வற்றாத பொய்க்காத மழை ஒன்று உண்டு. அது தான் கருணை மழை, பல துன்பங்களால் அனலில் சிக்கித் தவிப்போரை மீட்டு இன்பப் புனலில் ஆழ்த்துவது, மகிழ்விப்பது கருணை என்னும் அருள் மழை. அதுதான் என்றும் வற்றாத அன்பு மழை.

ஒரே ஒரு மதம் அன்பு, அதுதான் அன்பு மதம்

"அன்பும் சிவமும் இரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாருமறிகிலார்
அன்பே சிவமாவ தாருமறிந்த பின்
அன்பே சிவமாய் யமர்ந்திருந்தாரே"

(திருமூலர்)

இந்தக் காலத்தில் சமூகத்தில் ஒற்றுமையில் வேற்றுமை கண்டு பிடிக்கும் மேதாவிகள் இருக்கிறார்களே தவிர, வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பவர் எவரும் இல்லை இக்காரணத்தினால்த் தான் ஜாதி வித்தியாசம், மத பேதங்கள், பகையுணர்வு, கவலைகள் யாவும் உண்டாகின்றன. மக்கள் மாக்களாக இருக்கிறார்கள். ராட்சத, பிசாசு காட்டு மிராண்டிக் குணங்கள், மனித இதயத்தில் குடி கொண்டுள்ளன. எப்போது வேற்றுமையில் ஒற்றுமை காணத் தொடங்குகின்றானோ, அப்போது தான் சாந்தியும், சௌக்கியமும் கிடைக்கும். எல்லோர் உடலில் உள்ள இரத்தம் ஒன்று தான். எல்லோரும் ஒரே காற்றையே தான் சுவாசிக்கின்றனர். நடமாடும் பூமியும் ஒன்று தான். பசிவரும் போது பணக்காரனும் உணவு உட்கொள்கிறான், ஏழையும் சாப்பிடுகிறான். பணக்காரன் வடை பாயாசத்தோடு சாப்பிடுகிறான். பரம ஏழை கஞ்சி குடிக்கிறான். தாகம் ஏற்படும் பொழுது பணக்காரனானாலும், ஏழைகளானாலும் அதைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். தாகம் இருவருக்கும் பொதுவானதுதான். கோடீஸ்வரன் குளிர்பானங்களையும், ஏழை சாதாரண குடி தண்ணீரையும் குடிக்கிறான். ஆனால் இருவரும் அடையும் ஆனந்தம் ஒன்று தான். துன்பம் வரும்போது துயரமடைவதும் ஒன்று தான். ஆதலால் எதிலும், எவரிலும் வேற்றுமை காணாது இந்த உலகம் ஒரு குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் எங்களின் தாய், தந்தை நாமனைவரும் உடன் பிறப்புகள் என்ற தூய அன்பு உணர்வோடு ஒற்றுமையுடன் வாழ வேண்டும்.

"அன்பே சிவம்"

## அன்பு (பாகம் 2)

இறைவன் மனித குலத்துக்கு மனமிரங்கி வழங்கிய அளப்பரிய அருளில் மிக உயர்ந்தது அன்பு. சிறந்த சக்தி வாய்ந்தது அன்பு. இந்த அன்பைக் கொண்டு சாதிக்க முடியாதது இவ்வுலகில் எதுவுமில்லை. மனிதனைத் தெய்வமாக உயர்த்தக் கூடிய மாபெரும் சக்தி இந்த அன்புக்குத் தான் உண்டு. உங்களுக்கு சந்தோஷம் வேண்டுமென்றால் அன்பைக் கடைப் பிடியுங்கள் அன்பின் மூலமே நீங்கள் உண்மையான மகிழ்ச்சியை அடைய முடியும். கொடுப்பதாலும் மன்னிப்பதாலும் அன்பு வளர்கின்றது. அன்பு நிறைந்த இடத்தில் ஆண்டவன் வெளிப்படுவான்.

மனித இதயங்கள் எப்போதெல்லாம் அதர்மத்தாலும், அன்பின்மையாலும் வறண்டு போகின்றதோ, அப்போதெல்லாம் அன்பின் விதைகளை ஆழமாக ஊன்றி அன்புத்தத்துவத்தை செழித்துப் பரவச் செய்யவே இறைவன் அவதரிக்கிறான். அன்பு வளரும் போது தான் மனிதன் கஷ்டங்களிலிருந்தும், கவலைகளிலிருந்தும் விடுதலை அடைய முடியும். பாவங்களைப் போக்க முடியும், மனிதனைப் பயம் தீண்டாதபடி தடுக்க முடியும்.

கெட்ட நடத்தைகள், கெட்ட சிந்தனைகள், தீய திட்டங்கள் விலக வேண்டும். இதயத்தை அன்பால் நிரப்ப வேண்டும்.

ஆசை, கோபம், பேராசை என்ற மூன்று எதிரிகள் மனிதனுக்கு மனத்துள்ளே இருக்கிறது. ஆசைகள் பக்தியைக் குலைக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபம் ஞானத்தை அழிக்கின்றது. பேராசை நம் செயல்களை முற்றாக அழிக்கின்றது.

உதாரணம் – தண்ணீரின் கீழ்ச் சீனி இருந்தால் அந்தச் சீனியைக கலக்குவதன் மூலம் முழுத் தண்ணீரும் இனிமையாகின்றது. அதே போல் உங்கள் இதயம் தான் பாத்திரம், அதன் அடியில் தெய்வீகம் என்ற அன்பு இருக்கிறது. இதயத்தை அன்பை தேடும் சாதனையால் கலக்கினால் அப்பொழுது தெய்வீகம் உடல் முழுக்கப் பரவி விடும். அப்பொழுது உங்கள் செயல்கள் எல்லாம் இனிமையாக இருக்கும். உங்கள் பேச்சு இனிமையானதாக இருக்கும், உங்கள் பார்வை இனிமையானதாக இருக்கும், நீங்கள் எதிலும் எங்கும் எல்லாவற்றிலும் இனிமையானவர்களாவீர்கள்.

முதல் பெற்றோரை மதித்து நடவுங்கள். அந்த மதிப்பில்த்தான் உங்களுடைய மகிழ்ச்சி அடங்கி இருக்கிறது. அவர்களிடம் அன்பு செலுத்துங்கள். அவர்களுக்குச் சேவை செய்யுங்கள். அவர்களது கட்டளைகளை(சொற்களை) மதித்துச் செயல்படுங்கள். அவர்களின் உள்ளத்தின் மலர்வு தூய அன்பு உங்களுக்குப் பேரானந்த வாழ்வளிக்கும்.

இப்பொழுது துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் காரணம் பாவம் செய்ய அச்சமில்லை. தெய்வத்தின் மீது அன்பில்லை(பக்தி).

உதாரணம் – பாண்டவர்கள் காட்டில் அஞ்ஞாத வாசம் செய்யும் போது பீமனும் திரௌபதியும் தர்மராசாவை அணுகி உங்களின் எதிரிகளான கௌரவர்களைச் சமாளிக்க என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அவர்களின் உணர்வுகளை சாந்தப் படுத்தும் வகையில் சிரித்துக் கொண்டு தர்மர் கூறுகிறார், எங்களுக்கு எதிரிகளே இல்லை. எங்களுடைய சொந்தக் குணங்கள் தான் எங்கள் எதிரிகளும், நண்பர்களும் என்றார். எங்களின் செயல்கள் எங்களின் எதிரிகளாகலாம்.

தீய செயல்களாகவும், தீய எண்ணங்களாகவும் எங்களிடையே இருக்கும் இந்த எதிரிகளை நாங்கள் வெல்ல வேண்டும். எங்களின் தீய எண்ணங்களே மற்றவர்களில்ப் பிரதிபலித்து அவர்களைத் தீய மனமுள்ளவர்களாகத் தோன்றச் செய்கின்றது. நல்ல உணர்வுகளால் எங்கள் இதயத்தை நிரப்புவோமானால் கௌரவர்கள் எங்கள் நண்பர்களாகவும், சகோதரர்களாகவும் இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மனிதனையும் மதிக்க வேண்டும். அப்போது தான் உன்னுள் திவ்விய தத்துவார்த்தங்கள் வளரும்.

எங்கெல்லாம் மின்சாரக் கம்பி இருக்கிறதோ அங்கெல்லாம் மின் சக்தி நிறைந்திருக்கிறது. ஆனால் எங்கு மின்குமிழ் பொருத்தப் பட்டிருக்கிறதோ அங்கே தான் வெளிச்சம் ஒளி தருகிறது. அதேபோல் கடவுள் எங்கும் நிறைந்திருப்பினும், அன்பு நிறைந்த இதயங்களில் மட்டுமே அவருடைய தெய்வ தத்துவம் வெளிப்படுகிறது.

தனம், கனம், வஸ்த்து, வாகனம் இவற்றால் இறைவனை வசப்படுத்த முடியாது. பதவி, அதிகார பலத்தைக் கொண்டோ கல்வித் திறனைக் கொண்டோ இறைவனை வசமாக்க முடியாது. அன்பினால் மட்டும் தான் இறைவனை வசப்படுத்த முடியும்.

விரதங்கள் அனுஷ்டிப்பதும், பூசை செய்வதும், உண்ணா விரதமிருப்பதும் யாவும் சுய நோக்கத்துடன் செய்யப்படுபவையே. இதில் எங்கள் மனம் மட்டும் திருப்தியடைகிறது. எப்பொழுது சுயநலத்தை தியாகம் செய்கிறீர்களோ அதுவே சரியான, உண்மையான தெய்வ வழிபாடாகும். யாத்திரைப் பயணம் போவதோ, புனித நீராடுவதோ, பூசை செய்வதோ, ஆன்மீக சாதனைகள் ஆக மாட்டா. எப்போது ஒருவர் தனக்குள்ளே உள்ள மிருகத் தன்மையை மாற்ற முயற்சிக்கிறாரோ அதுவே ஆன்மீக சாதனையாகும். பூசைகள் செய்தும், விரதங்கள் பிடிப்பதாலும் மிருகத் தன்மை போவதில்லை.

கடவுள் ஆனந்தத்தின் சொரூபம், அன்பு மயமானவர், அன்பு, சாந்தி, ஆனந்தம் இவற்றிற்காகப் பிரார்த்தனை செய்யுங்கள்.

அன்பினால் சாதிக்க முடியாதது இந்த உலகில் எதுவுமில்லை. அன்பினால் இறைவனையும் கட்டுப்படுத்தி உங்கள் விருப்பத்திற்கேற்ப ஆடவைக்க முடியும். சுந்தரர்க்குத் தோளனாக வந்து பரவையிடம் தூது சென்றவர்.

கடவுளை அடைய அன்பு போதுமானது. அகந்தை, பேராசை போன்றவற்றால் பூட்டப்பட்ட கதவைத் திறக்க அன்பு என்ற திறப்பு வேண்டும்.

உன் குரலுக்கு ஓடிவர இறைவன் காத்துக் கொண்டிருக்கிறான். ஒரு சிறு துவாரம் ஏற்பட்டாலும் அதன் வழியாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயக் காத்துக் கொண்டிருக்கும் சூரியக் கதிர்கள் போல் இறைவன் காத்துக் கொண்டிருக்கிறான். அகந்தையில் உன்னையே அடைத்து வைத்துக் கொண்டுள்ள நீ அன்பு என்ற ஜீவ காருண்யத்தால் அந்த அடைப்பில் ஒரு சிறு துளை செய்து கொடு அதன் வழியாக அருளின் ஒளிக் கீற்றுகள் உன்னிடம் பாய்ந்து வந்து விடும். இறைவனின் கிருபை வேண்டுமாயின் பிறரது இருள் வாழ்வில் உன்னால் ஆய பிரகாசத்தை ஏற்படுத்த நீ முன்வர வேண்டும்.

இத்தகைய சுலபமான வழியை விடுத்து, ஜெபம், தியானம், யோகம் என்று கடினமான வழியில்ச் செல்வதால் என்ன பயன்? என்கிறார் பகவான். அவற்றால் எதையும் சாதிக்க முடியாது. எல்லோரிடமும் அன்பாகப் பழகி, இனிமையுடன் நேசித்தாலே மிக எளிய சாதனையாகும்.

"அன்பே கடவுள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறம் செய்ய விரும்பு. (தர்மம்)

தர்மம் என்பது நமது உயிர். உயிருக்குக் கேடயமாக விளங்குவது தர்மம். இதனால்த்தான் ஔவையார் "அறம் செய்ய விரும்பு" என்று இரண்டு சொற்களில் சொல்லியுள்ளார். சத்தியம் நமது சுவாசம், தியாகம், நமது அர்ப்பணிப்பு. எனவே நாம் தர்மத்துக்காகவே வாழ்க்யையையும் தியாகம் செய்யலாம் என்பது அறிஞர்கள் கூற்று.

தானம் கொடுப்பது கைகளுக்கு அணிகலன், புனித நூல்கள் படிப்பது, கண்டத்துக்கு அணிகலன், தானமும், தவமும், இனிய பேச்சும், அறச் செயல்களாகும். பணம், தங்க ஆபரணம் போன்ற விலை உயர்ந்தவற்றைப் பவுத்திரமாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருப்பது போல் இனிய பேச்சு என்பதையும் நாம் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். இது ஒரு தர்மமாகும்.

பசித்தவனுக்கு உணவளிப்பது இறைவனுக்கு நைவேத்யம் செய்ததற்குச் சரியாகும். மக்கள் நிழல் தரும் மரங்களையும், காய், கனி தரும் மரங்களையும் நாடிச் செல்கிறார்கள். மொட்டை மரத்தை நாடிச் செல்வதில்லை. பயனுள்ள மனிதர்களாக இருக்க வேண்டும். அவர்கள் தான் மக்களின் மனதில் இடம் பெறுகிறார்கள். தன்னையும் இழக்காமல் பிறருக்கு உதவியாக இருப்பவர்கள் தான் உயர்ந்தவர்கள், தங்கம் இளகினால்த்தான் அதில் இரத்தினங்கள் பதிக்க முடியும். அதேபோல் நம் உள்ளம் உருகினால்த் தான் நாம் எல்லா உயிர்களிடத்தும் இரக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டி துன்பப் படுகிறவர்களுக்கு நம்மால் முடிந்த வரை உதவியைச் செய்யும் தூய்மையான எண்ணம் ஏற்படும். மனத்தாலும், சொல்களாலும்; செயலாலும் செய்யும் உதவிகள் மூலம் கிடைக்கும் திருப்தி, நிம்மதி, இன்பம், சுகம் அனுபவத்தினால் உணர முடியும். தர்மத்தை நாம் வாழ வைத்தால், தர்மமும் நம்மை வாழ வைக்கும். தர்மத்தை நாம் அழித்தால் தர்மம் நம்மை அழித்து விடும். எனவே அறம் என்ற உயர்ந்த வேள்வியை நாம் வளர்க்க வேண்டும். நல்ல தர்ம காரியங்களைச் செய்ய வேண்டும். நல்ல நீதி நூல்களைத் தானம் செய்ய வேண்டும்.

பொருள் என்பது இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றியமையாதது. இவ்வுலக வாழ்வில் பெற்று அழியும் பொருளைக் கொண்டு அவ்வுலக வாழ்விற்கு தேவையான அருளையும் பெறலாம். அருளே அழியாச் செல்வம் நாம் இவ்வுலகை விட்டுச் செல்லும் போது நம்மைத் தொடர்ந்து வருவன இரண்டு, அவையே புண்ணிய பாவங்களாகும் என்றார் பட்டினத்தடியார். எனவே வாழ்நாளில் தான தருமங்கள் செய்தல் வேண்டும். தானங்களில் உயர்ந்த தானம் அன்ன தானம்.

மற்றைய தானங்கள் வளம் சேரும், நலம் சேரும் ஆனால் பசி தீராது அன்னதானம் ஒன்று தான் பசி தீர்க்கும். வயிற்றுப் பசி போன்ற மற்றொன்று, அறிவுப்பசி அதற்குக் கல்வித்தானம் செய்ய வேண்டும். என்பதை உயர்வாக(பாரதியார்) செல்லியுள்ளார்.

பசி என்பது ஒரு நோய். அதற்கு மருந்து உணவு, பசி கோடீஸ்வரனுக்கும், கோவணாண்டிக்கும் பொதுவானது. கையிலும், பையிலும் நிறையப் பணம் இருக்கலாம். நள்ளிரவில் நடுக்காட்டில் சிக்கிக் கொண்டால் என்ன செய்ய முடியும். அப்படிப் பட்ட நேரத்தில் கோடீஸ்வரனுக்கும் ஒரு ஏழை பிச்சை எடுத்த உணவைக் கொடுத்து உதவலாம் இதுவே தானம், தர்மம். ஒரு செல்வந்தர் ஏழைக்குக் கொடுப்பது பிச்சை எனப்படும். இரண்டும் செய்பவர்க்குப் புண்ணியம் தருவது தான் ஆண்டி கோடீஸ்வரனுக்கு அளித்தது.

"காலத்தினால்ச் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

(திருக்குறள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு வாங்கி உண்ட பிச்சைக்காரன் வயிறு நிறைந்ததும் நீ நல்லாய் இருக்கணும் தர்மத்தாயே என்று வாழ்த்துகிறானே அந்த வாழ்த்துக்கு நிகர் உலகில் எதுவுமில்லை.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி"

(குறள்)

பசித்து வந்த ஒருவனுக்கு உங்களால்ப் பசி தீர்க்கப்பட்டால் இது மேல் உலகத்தில் உங்கள் கணக்கிலே வரவு வைக்கப்படும். அது நீங்கள் அங்கே போகும் போது திரும்பக் கொடுக்கப்படும்.

தர்மம் தலை காக்கும், தக்க சமயத்தில் உயிர் காக்கும். ஒருவன் பல்லக்கைச் சுமக்கிறான். ஒருவன் அதில் அமர்ந்திருக்கிறான். இதிலிருந்து தர்மத்தின் பயனை நாங்கள் கண்டு கொள்ள வேண்டும்.

தர்மமும் சாந்தியும் அமைதியும் நிலவுமிடத்தில் சிறந்த வளர்ச்சியும் மகிழ்ச்சியும் பொங்கும். தவிர்க்க வேண்டிய கெட்ட எண்ணங்கள் நான்கு. அவை பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல். பகல் வேளைகளில் சூரியன் தன் ஒளியைச் சிந்தி உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் உயிர் வாழ உதவுகின்றது. இரவில் சந்திரன் உதயமாகி வழி தெளிவாகத் தெரியும் படி செய்கின்றது. ஆனால் மூன்று உலகிற்கும் வழி காட்டும் ஒளியாய் விளங்குவது தர்மம்.

பிறரிடம் அன்பு காட்டுவது, கருணை காட்டுவது ஒரு பெரிய தானமாகும். மற்றவர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுப்பது ஒரு தானத்திற்குச் சமமாகும்.

நிலையான வாழ்வு வாழ வேண்டுமென்றால் நற்குணங்கள், நற்பண்பையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இவைகளை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றால் தானம், தர்மம், குருபக்தி, சிவபக்தி போன்ற உத்தம தர்ம நெறிகள் வேண்டும்.

தான, தர்மங்கள் செய்கிறோம் அது ஓர் அறச் செயலாகும். புண்ணியச் செயலாகும். பூசை, ஆலய வழிபாடு, புனித நீராடல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தல யாத்திரை, ஜெபம், தியானம், பிரார்த்தனை, தொண்டு, தியாகம் ஆகியவை தவச் செயல்கள். இவை அறச் செயல்களாகும்.

அன்னதானம்

உலக உயிர் அனைத்தும் அன்னதானத்திலேயே சீவிக்கின்றன. இப்பிரபஞ்சம் முழுவதுமே அன்னதானத்தில்த் தான் வாழ்கின்றது. அன்னமே சிவம், அன்னமே விஷ்ணு, அன்னமே அம்பிகை அன்ன பூரணி எனவே அன்னத்தை தானம் செய்வது மூவுலகிலும் சிறந்தது.

உடலுக்கு வலிமையையும் அறிவு விருத்தியையும் தர வல்லது அன்னமே. அன்னமின்றிப் பசியுடன் இருப்பவனுக்கு பொன், பொருள், இரத்தினங்கள், குதிரைகள், யானைகள் என்று எத்தனை பொருட்களைக் கொடுத்தாலும் திருப்தி ஏற்படாது. நோய்களிலேயே மிகக் கொடியது பசி நோய். பசி வியாதி அன்னமாகிய மருந்தினால் மட்டுமே சுகம் பெறுகிறது. பசியால் வாடுபவனுக்கு ஏற்படும் துக்கத்தையும், வியாதியையும் போன்று வேறெதுவுமில்லை. பெரும் பாவங்களைச் செய்தவனாக இருந்தாலும் பசித்தவனுக்கு அன்னமளித்தால் அவனது பாவங்கள் அனைத்தும் நெருப்புப் பொறிபட்ட பஞ்சு போல் அழிந்து விடும்.

சாதுக்களுக்கும், அந்தணர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் அமுதமளிப்பது பெரும் புண்ணியமாகும்.

ஒருவர் அன்னதானம் கொடுக்கும் போது அங்கு சாப்பிடும் ஏழை, எளிய மக்களுடன் இறைவனும் அவர்களுள் ஒருவராக வந்து உணவுண்டு அவருக்கு அருள் புரிவார் என்பது ஐதீகம்.

பொருள் என்பது இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றி அமையாதது. இவ்வுலக வாழ்வில் பெற்று அழியும் பொருளைக் கொண்டு அவ்வுலக வாழ்விற்குத் தேவையான அருளையும் பெறலாம். அருளே அழியாச் செல்வம்.

"செல்வத்துட் செல்வம் அருட் செல்வம்
பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள"

தானங்கள் என்பது அன்னதானம், வஸ்திரதானம், கோதானம், பூதானம், கன்னிகாதானம், ஞானதானம், சொர்ணதானம் இன்னும் எத்தனையோ தானங்கள் உண்டு. இவைகளில் சிறந்த தானம் அன்னதானம். மற்றத் தானங்களால் வளம் சேரும், நலம் சேரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பசி தீராது. அன்ன தானம் ஒன்று தான் பசி தீர்க்கும். அன்ன தானத்திற் சிறந்த தர்மம் வேறு எதுவுமில்லை.

எனவே அறநெறி பிழைத்து விட்டால் தனக்கு மட்டுமல்ல, அந்நாட்டுக்கே கெடுதி உண்டாகுமென மகான்கள் கூறியுள்ளார்கள்.

ஞான வாழ்வை நாடிய மக்கள் நற்பண்புகளைப் பெருக்கி தர்மவழியில் நடந்தார்கள். அவைகளை நித்திய கரும விதியாகவே செய்து வந்தனர். தியானம், செபம், இன்னும் அறத் தொண்டுகள் புரிதல், தியாக மனப்பாங்கு யாவும் இறை வாழ்வைத் தரும் செயல்களாகும். இவைகளை மக்கள் அனுஷ்டித்து வந்தனர். உதாரணமாக கர்ணன் கொடையில்ச் சிறந்தவன் அதனால் பாரதப் போரில் அர்ஜுனனால் விடப்பட்ட அம்புகள் கர்ணனின் உடம்பு முழுவதும் தைத்தும் அவனுடைய உயிர் பிரியாது இருந்தமைக்குக் காரணம் கர்ணன் செய்த தர்மக் கொடையாகும். இதன் காரணமாகத் தர்மதேவதை அவனுடைய உயிரை வெளியே போக விடாது காத்துக் கொண்டிருந்தாள். இதனை அறிந்த கண்ணன் கர்ணனிடம் சென்று தானம் கேட்டபோது எதனை நான் தானமாகத் தர முடியுமென கர்ணன் கவலைப்பட முன் செய்த தானங்களின் பலனையே தானமாகத் தரும்படி கண்ணபிரான் கேட்டு வாங்கிய பின்பே கர்ணனின் உயிர் பிரிந்ததாக பாரதம் சொல்கிறது. எனவே நற்செயல்கள் யாவும் மக்களைப் பாதுகாக்கும் அரண்களாகும்.

எனவே தான் பண்டைக்காலத் தமிழ் ராசாக்கள் ஏனைய சைவ சமயத்தவர்கள் முதல் எல்லாச் சமயத்தவர்களும் ஆலயங்கள் கட்டுவித்தல், புனருத்தாரணம் செய்தல், பாடசாலை, பல பொது ஸ்தாபனங்களை அமைத்து தர்மத் தொண்டுகள் செய்து மக்களை வாழ வைத்தார்கள். இதை வாழ்ந்து மறைந்த அடிச்சுவடுகள் காட்டி நிற்கிறது.

பிறருக்கு உதவுவதன் மூலம் வறியவராவது பெரிதல்ல. வறுமையிலும் உதவுவது தான் சிறந்தது. இது தான் தர்மம்.

இனிய சொற்களைப் பேசுதலும், சொன்ன சொல்லைக் காத்தலும், நாவை அடக்கி ஆளுதலும் வாக்குத் தர்மமாகும்.

செயல்த் தருமம் என்பது இன்னார், இனியார் என வேறு படுத்திக் காணாமல் அனைவருக்கும் நேர்மையான தொண்டு புரிவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறமென்பது மனத்துள் குற்றங்கள் வந்து சேராமல் பார்த்துக் கொள்வதே அறம் என்று கூறுகிறார். அந்தக் குற்றங்களானவை,

"அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல்
நான்கும் இழுக்கா இயன்றதுஅறம்"

பொறாமையும், பேராசையும், கடுஞ்சொல்லும், கடுஞ்சினமும், கொள்ளாத மனத்தை பெற்றிருப்பதே அறம் என்கிறார்.

பெட்டி நிறையப் பணம் இருக்கிறது. பெட்டித் திறப்பும் செட்டியாருடைய மடியில் இருக்கிறது. கொட்டிய கண்ணீரோடு திருமணமாகாமல் கன்னிப் பெண்கள் வாழ்வின்றித் தவிக்கிறார்கள். இவர் கொஞ்சம் பெட்டியைத் திறந்தால் இறைவன் அவர்களுக்கு செர்க்க வாயிலைத் திறப்பான். இவரால் முடியும் ஆனால் செய்யவில்லை. இந்து தர்மத்தில் இவருக்கு தண்டனை என்ன? இவர் எதையும் அனுபவிக்க முடியாமல் போய் விடும் பல லட்சம் செலவு செய்து இவர் தம் பெண்ணுக்கு கல்யாணம் செய்திருப்பார். அது மலடியாய் போய் விடும். அல்லது வாளா வெட்டியாய்ப் போய்விடும்.

ஆயிரம் ஏக்கர் நிலத்தை வளைத்துப் போட்டுக் கொண்டு அடுத்த ஏழைக்கு குடியிருக்க அரை (½) ஏக்கர் கூட கொடுக்க விரும்பாதவன் இறுதியில் அனுபவிக்கப் போவது எத்தனை ஏக்கர்? வெறும் ஆறடி தான்.

இறைக்கிற கிணறு தான் ஊறும் என்று ஏன் கூறுகிறார்கள்? கொடுக்கிற இடத்திலே தான் இறைவன் அருள் சுரக்கும் என்பதால்த் தான்.

தேங்கிய நீர் தேங்கிக் கிடந்து விட்டால் நோய்களுக்கு அது காரணமாகின்றது. தேங்கிய செல்வமும் தேங்கிக் கிடந்து விட்டால் பாவங்களுக்கு அது காரணமாகி விடுகின்றது.

இல்லாமை கொடுமையல்ல, இயலாமை குற்றமல்ல, விரும்பாமையே பாவமாகும்.

செய்ய முடியாதவனுக்கு நல்ல இருதயத்தையும், செய்ய விரும்பாதவனுக்கு செல்வத்தையும் வழங்கி இருக்கிறான் இறைவன்.

கடலிலே நீரை வைத்து குடிக்க முடியாதபடி ஆக்கியவனல்லவா இறைவன். இதற்குக் காரணம் உண்டு. ஒவ்வொருவருடைய புத்தியையும் அளவெடுப்பதற்கு இறைவன் நடத்துகின்ற சோதனை அது. அனுபவத்தின் மூலம் ஒன்று நன்றாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிகின்றது. செய்ய முடிந்தும் விரும்பாதவனுடைய செல்வம் மோசமான முறையில் அழிந்து போகிறது. அவனுடைய மரணமும் அப்படியே.

செய்ய விரும்பி, முடியாதவனுடைய நிலை முடிவில் நிம்மதி அடைகின்றது. காரணம் அவனிடம் இல்லையென்பது அவனுக்குத் தெரியும் ஆண்டவனுக்குத் தெரியும்.

இது வரை தர்மம் செய்யாத பணக்காரன் நிம்மதியாகச் செத்ததில்லை. ஏன்? பலருக்குச் சந்ததியே இல்லை.

## மாதங்களில் மார்கழி (கீதை)

நல்ல காரியங்களைத் தொடங்குவதற்கு விலக்கப்பட்ட மாதமாக மார்கழியை குறிப்பிடுகிறார்கள். திருமணம், புதுமனை புகல் போன்ற மங்கல நிகழ்ச்சி எதையும் மார்கழியில் செய்வதில்லை. ஆனால் கீதை அருளிய கண்ணனோ "மாதங்களில் நான் மார்கழி" என்று கூறியிருக்கிறார். எனவே மார்கழி ஒரு உத்தமமான மாதத்தை புறக்கணிப்பது ஏன்?

நமக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள். நம்முடைய 360 வருடங்கள் தேவர்களுக்கு ஒரு வருடம். ஆடி மாதத்திலிருந்து மார்கழி வரையுள்ள தட்சிணாயனம் தேவர்களுக்கு இரவு நேரமாகும். தை மாதத்திலிருந்து ஆனி மாதம் வரையுள்ள ஆறு மாத காலம் உத்தராயணம் அவர்களுக்குப் பகல். இரவு நேரத்தின் கடைசி மாதம் மார்கழி. அது முடிந்தால் பகல் பிறந்து விடும். எனவே தேவர்களுக்கு இது விடியற் காலையாகக் கருதப்படுகிறது. எனவே மார்கழி மாதத்தை பீடை பிடித்த மாதம் என்று எண்ணுவது தவறு.

தனு ராசியில் அப்போது சூரிய பகவான் இருக்கிறார். இந்த ராசி குரு பகவானுக்கு உரிய வீடாகும். அம்மாதம் இறைவழிபாட்டுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது தான் உண்மை. கோயில்களிலெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷேட பூசைகளும், உற்சவங்களும் நடக்கும். இதில் மக்கள் கலந்து கொள்வார்கள். திருவெம்பாவை, திருப்பாவை ஓதப்படும் மாதமாக மார்கழி சிறந்து விளங்குகின்றது. மக்கள் அதிகாலை எழுந்து ஸ்னானம் செய்து வீதி தோறும் பஜனை செய்வது போன்ற வழக்கங்கள் இதனால் தான் ஏற்பட்டது. எனவே மார்கழி மாதத்தில் எந்த நல்ல காரியங்களும் செய்யலாம்.

## கிருஷ்ண பகவான் கூற்று (பகவத் கீதை)

ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில் சொல்வது என்ன? உள்ளன்புடன் யார் எதைக் கொடுத்தாலும் ஏற்றுக்கொள்வேன் என்பது தான். தங்கத்தால் விமானம் அமைத்து, வைரத்தால் தூண்கள் எடுத்து, மாணிக்கத்தால் மேடை எழுப்பி அதில் நவரத்தின அலங்காரத்தில் என் விக்ரகத்தை வைத்து மல்லிகை மலர்களாலும், ரோஜா மலர்களாலும், எனக்குப் பிடித்த துளசியாலும் ஆடம்பரமாக பூசை செய்து வெள்ளிக் கிண்ணத்தில் நிவேதனம் படைத்தாலும் எனக்குப் பிடிக்காது. அது என்னை அப்படிப் பூசிப்பவனின் அந்தஸ்த்தையும், ஆணவத்தையும் காட்டுகின்றது. நான் ஆணவத்தை அழிப்பவன், அன்பினைக் காப்பேன் என்கிறார். ஏழைக் குலெசர் கொடுத்த அவலை ஆசையுடன் தின்ற பரமாத்மா அல்லவா?

பாண்டவருக்காகத் தூது சென்ற போது துரியோதனன் கூட்டத்தில் ராச மாளிகையில்த் தங்க விருப்பமில்லாது மகாத்மா விதுரரின் எளிய குடிலில் தங்கிய தயாளன் அல்லவா? பக்திப் பரவசத்தில் பழத்தை உரித்துப் பழங்களைக் கீழே போட்டு தோலினைக் கொடுத்த போது, கிருஷ்ணனின் அன்னை யசோதை தாயூட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயிரன்னம் போல் சாப்பிட்டதால் விதுரரின் உள்ளார்ந்த பக்தியில் மகிழ்ந்த கிருஷ்ணன் பழத்தோலையே அமுதமாகத் தின்ற கதை தெரியாதோ?

எல்லாம் படைத்த இறைவனுக்கு அவனால் படைக்கப்பட்ட நாம் எதைக் கொடுத்தாலும் ஈடாகுமா? எது அவனுக்கு ஏற்ற காணிக்கை. இமயமலையைத் தருவீர்களா? அது அவன் படைத்த சராசரங்களில் ஒரு அணு, கங்கையைத் தருவீர்களா? அது அவனின் திருப்பாதங்களில் இருந்து வந்தது. அணுமுதல் அண்ட சராசரங்கள் வரை அத்தனையும் படைத்த அவனுக்கு நாம் எதைக் கொடுப்பது? நாம் கொடுத்து அதைப் பெறுதற்கு அவன் என்ன ஏழையா? இறைவனின் முன்னே அனைவரும் ஏழைகள். ஒன்று மட்டும் செய்தால் போதும். இதயத்தை எளிமையாக்கி தூய்மையாக்க அதிலே அவன் வந்து அமர இடம் கொடுத்தால் போதும். அன்பு என்ற அகல் விளக்கை அங்கே ஏற்றி வைத்தால் போதும்.

அப்படிப்பட்ட தூய எளிய உண்மையான பக்தனின் கால் தூசை மிகப் பெரும் பொக்கிஷமாக இறைவன் மதிக்கிறான். அடியவர்க்கடியவன் அல்லவா?

பண்டரி நாதன் என்பவன் ஒரு பெரிய பக்தன். சொன்ன சொல்லுக்காக ஒரு கல்லில் ஒற்றைக் காலில் நின்றாரே அந்தப் பக்தன் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்து கொண்டு நின்ற போது தன்னைத் தேடித் தரிசனம் தரவந்த பகவானையே சற்று இருங்கள் பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய பணியைச் செய்து விட்டு வருகிறேன். என்று சொன்ன உத்தம மகன் அல்லவா அவன். இன்று நாங்கள் என்ன செய்கிறோம்? பாடுபட்டுப் பெற்று வளர்த்து ஆளாக்கிய தன் தாய், தந்தையரையே முதியோர் இல்லத்தில் கொண்டு போய் விடும் அவல நிலை அல்லவா நடந்து கொண்டிருக்கிறது.

கிருஷ்ணனைக் கொல்வதற்காக அக்ரூரனை கோகுலத்திற்கு அனுப்பிக் கூட்டிக்கொண்டு வரும்படி கட்டளையிட்டான் கம்சன். கட்டளைப் படி கிருஷ்ணனை மதுராவுக்குத் தேரில் அழைத்து வரும் போது அக்ரூரர் கண்களில் நீர் வழிந்தோடியது. இதைக் கிருஷ்ணன் கவனித்தான். ஏன் அழுகிறாய்? என்று கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு அக்ரூரன் பதில் சொல்கிறான், "கிருஷ்ணா! கம்சன் ஆணைப்படி அழைத்துப் போகிறேன். அந்தத் தவிப்பு என் கண்களில் நீராக வழிகிறது" என்றார். அழுகையை அடக்கிக் கொண்டார்.

கிருஷ்ணன் சிரித்தான் அக்ரூரரே! மிகப் பெரிய கிரூஷ்ண பக்தரிடமல்லவா அழைத்துப் போகிறீர்கள் என்றான். கம்சன் கிருஷ்ண பக்தனா? என்று அதிர்ச்சியுடன் கேட்டார் அக்ரூரர்.

அதற்குக் கிருஷ்ணன் சொன்ன பதில், "ஆம் அக்ரூரரே பக்தன் என்பவன் யார்? அதன் பொருளென்ன? எப்போதும் இறைவனை நினைத்துக் கொண்டே இருக்க வேண்டும். அந்த இலக்கணப்படி உண்ணும் போதும், உறங்கும் போதும், இயங்கும் போதும் என்னைத்தானே நினைத்துக் கொண்டே இருக்கிறான் கம்சன். அந்தப் பக்தனுக்கு முக்தி கொடுக்கத்தான் உங்களோடு வருகிறேன். ஆகையால் என்னை நல்ல காரியத்துதக்குத் தான் அழைத்துப் போகிறீர்கள் என்றார்.

இறைவனுக்கு எல்லாரும் குழந்தைகள் தானே? இதில் கம்சன் என்ன? இராவணன் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணங்களின் பிரதிபலிப்பு

எண்ணங்களுக்கு ஏற்றவாறு மானிட வாழ்வில் மேன்மையும், கீழ்மையும் வந்தமைகின்றன. நம் உள்ளத்தில் எண்ண ஓட்டம் முக்கிய தத்துவம் பெறுகிறது. நல்லதையே நாம் நினைத்துப் பார்த்து செயல்பட்டால் அவைகள் பின்பு நம்மை வந்தடையும். நம் எண்ணங்களில் மாபெரும் சக்தி ஒழிந்து கொண்டிருக்கிறது. இந்தச் சக்தியை மின் சக்தி, அணு சக்தி, பூமியின் ஈர்ப்பு சக்திக்கு ஒப்பிடலாம். நல்ல எண்ணங்கள் நம்மைத் தேடி பல திசைகளிலிருந்தும் வரும்.

எண்ணங்களின் பூரண வடிவம் தான் மனிதனின் குணம். இயற்கையில் விதையெல்லாம் செடியோ, மரமோ என உண்டாவதில்லை. அதே போல் எண்ணங்கள் இல்லாமல் செயல்கள் ஏற்பட வழியில்லை. உள்ளத்தின் உயரம் தான் உங்கள் உயரம் என்று சான்றோர்கள் சொல்லியிருக்கிறார்கள். செயற்கையாக யாரும் உயர்ந்து விட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீரின் உயரம் தான் தாமரையின் உயரம். நல்லெண்ணம் ஏற்படுவது இறைவழிபாட்டின் ஓர் அங்கமாகும்.

பேனாவில் எந்த நிறத்தில் மை ஊற்றுகின்றோமோ அந்த நிறத்தில் தான் எழுத்துக்கள் அமையும். அதே போல் எந்த அளவுக்கு உயர்ந்த எண்ணங்கள் நம் சிந்தனையில் உள்ளதோ அந்த அளவுக்கு நாம் சாதனைகள் படைக்க முடியும்.

எங்கள் எண்ணங்களில் மகத்தான சக்தி ஒளிந்து கொண்டிருக்கின்றது. அவை மின் சக்தி, அணு சக்தி, ஆகரண சக்தி போன்று நம் எண்ணமும் ஓர் சக்தியே. மனிதனின் மாபெரும் சாதனைகள் உதாரணமாக கணனிகள் (கம்ப்யூட்டர்கள்), தொலைக்காட்சிகள் (டெலிவிசன்), தொலைபேசி, மருத்துவ சிகிச்சை, விமானம் இன்னும் எவ்வளவோ ஆராய்ச்சியின் மூலம் அதிசயம்மிக்க மனித சமூகத்துக்கு உபயோகமுள்ள கணக்கிலடங்காத கண்டுபிடிப்புகள் மனிதனுடைய எண்ணங்களின் சக்தியினால் ஏற்பட்டவைதான். மனிதன் தன்னை வளர்த்துக் கொள்ள இறைவன் அவனுக்கு எவ்வளவோ சக்தியைத் தந்திருக்கிறான். இந்தச் சக்தியினால் நாம் நம்மை உயர்த்திக் கொள்ள முயல வேண்டும்.

## தாய் வயிற்றில் பிறக்கும் குழந்தை

தாய் வயிற்றில் பிறக்கும் குழந்தை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் பிறந்தால் மட்டும் போதாது. பக்தி, வீரம், அன்பு, தியாகம் ஆகிய உயர்ந்த உணர்வுகளைத் தரும் நூல்களைப் படித்தல், பெரியோர்களின் சொற்பொழிவு கேட்டல் ஆகியவற்றின் மூலம் எத்தகைய உயர்ந்த உணர்வுகளை பெறுகிறாளோ அதற்கேற்றவாறு அவள் பெற்ற குழந்தை உயர்ந்த உணர்வை, இலட்சியத்தைப் பெற்று காலத்தால் அழியாத காவியப்புகழ் பெற்று விளங்குமென்று ஆன்மீக நூல்கள் கூறுகிறது.

தாயின் வயிற்றிலே(கருவிலே) உயர்ந்த உணர்வுகளைப் பெற்று அதனால் பெருமை அடைந்தவர்களைக் கருவிலே திருவுடையவர் என்றும், தாயின் வயிற்றில் வளரும் போது உயர்ந்த உணர்வுகளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறாமல் உடல் அளவில் மட்டும் வளர்ச்சியுடன் பிறந்தவர்களை கருவிலே திருவில்லாதவர் என்றும் பக்தி நூல்கள் கூறுகின்றன.

தாயின் வயிற்றிலே ஓம் நமோநாராயணா என்ற எட்டெழுத்து மந்திரத்தைக் கற்றதினால் பக்தர்கள் எல்லாம் கைதொழும் பரமபக்தனாக விளங்கிய பிரகலாதனும், மகா பாரதத்தில் தாயின் வயிற்றில் வளரும்போதே போர் முறையைக் கற்றதினால் வீரத்தின் சின்னமாக விளங்கிய அபிமன்யுவும் "கருவிலே திருவுடையவர்" என்ற பாடலுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றனர்.

இரணியனால் மறைந்து போன பக்தி அவன் மகனால் மீண்டும் உலகமெல்லாம் பரவப்போகின்றது. ஆதலால் நீ இரணியனின் மனைவியை என் ஆச்சிரமத்தில் கொண்டு வந்து விட்டுவிடு. நான் இரணியனிடம் பொருத்தமான காரணங்களைச் சொல்லி அவளைச் சேர்த்து விடுகிறேன் என்றார். தேவேந்திரனும் நாரதர் சொன்னபடியே இரணியன் மனைவியை நாரதருடைய ஆச்சிரமத்தில் கொண்டு வந்து விட்டுவிட்டான்.

இரணியன் மனைவி ஏதும் அறியாமல் நாரதரின் ஆச்சிரமத்தில் தூங்கிக் கொண்டிருந்த போது நாரதர் அவள் காதருகில் "ஓம் நமோ நாராயணா" என்ற மந்திரத்தை உச்சரித்தார். இரணியன் மனைவி தூங்கி விட்டாலும் அவளது வயிற்றில் வளரும் மகன் புனிதமான "நாராயணா" என்ற மந்திரத்தை வயிற்றில் இருந்த வாறே கேட்டு நாரதர் சொல்வது போல் வயிற்றுக்குள்ளேயே உச்சரித்தக் கொண்டான்.

நாரதர் மூலம் தாயின் கருவிலே திருவைப்பொற்றதால்த் தான் ஆசிரியர் கூறிய இரணிய நாம என்று சொல்லாமல் என்றும் அழியாத சாயுஜ்ய பதவியைத் தரும் "ஃரி ஓம் நம" என்ற புனித மந்திரத்தை உச்சரித்தான்.

அர்ச்சுனன் மகன் அபிமன்யு, தான் வயிற்றில் இருக்கும் போதே தந்தை அர்ச்சுனனிடமிருந்து சக்ரவியூகத்தை உடைக்கும் போர் முறையைக் கற்றதனால் வீரத்தின் இலக்கணமாக விளங்கினான். பிரகலாதனும், அபிமன்யுவும் கருவிலேயே திருவுடையவர்கள் என்று வில்லிபுத்தூர் பாடலின் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் மார்கள் எப்பொழுதும் குறிப்பாகத் தாய்மைப் பேறடையும் காலத்தில் பக்தி, ஒழுக்கம், பண்பு ஆகிய உயர்ந்த உணர்வுகளை அணிகலன்களாகக் கொண்டு உலகம் போற்றும் உத்தமப் புதல்வர்களைப் பெற்றுத்தர வேண்டும். அப்படித் தருவதால்த் தான்,

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல

மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்று மங்கையரைப் போற்றினார் பாரதியார்.

ஞானப் பால்

குழந்தை அழுதால் மட்டும் அப்போது குழந்தைக்குப் பால் ஊட்டுவோம் என்று தாயானவள் காத்திருப்பதில்லை. குழந்தைக்குப் பசி எடுக்கும் முன்னரே அதனை உணர்ந்து குழந்தைக்குப் பாலை ஊட்டுகின்ற தாயை விட ஆண்டவன் மேலானவன். ஆண்டவன் தனது குழந்தைகளாகிய ஆன்மாக்கள் மீது மட்டற்ற கருணையுள்ளவர். ஆன்மாக்கள் கேளாமலேயே அவை விரும்புவனவற்றைக் குறிப்பறிந்து அருள் பாலிக்கின்றார். எனவே தான் மணிவாசகப் பெருமான் "தாயினும் சாலப் பரிந்து நீ" என்று இறைவனின் கருணையைக் குறிப்பிடுகிறார்.

ஒரு பாவமும் அறியாத குழந்தைக்கு அன்புடன் தாய் ஊட்டுகின்ற பால் குழந்தையின் உடலை வளர்ப்பதோடு உலக பாசங்களையும், போகங்களையும் வளர்க்கின்றது. ஞான ஒளியைச் சுரக்கின்றது.

ஆனால் இறைவனோ என்னைப் பாவியென்று அறிந்தும் தனது கருணையால் ஞானப் பாலை அன்புடனும், ஆதரவோடும் ஊட்டினார். அந்தச் சிவானந்தப் பாலானது என்னுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி என்னுள்ளே மறைந்திருந்த ஞான ஒளியை பிரகாசிக்கச் செய்து அழிவற்ற ஆனந்தத்தை சொரிவதினால் எம்பெருமான் தாயிலும் பார்க்கச் சிறந்தவர், பரிவுடையவர் என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனும் விஞ்ஞானமும் நாகரீகமும்

இன்று விஞ்ஞானம் மேலோங்கி நிற்கிறது. நாகரீகம் வளர்ந்து நிற்கிறது. ஆன்மீகம் நலிவடைந்து, இறைவன் இல்லை கடவுள் எங்கே இருக்கிறார் என்று நாத்திகம் பேசுபவர்களும் இருக்கிறார்கள்.

கோவிலுக்குப் போவது அநாகரீகம், இறைவனைக் கும்பிடுவது அநாகரீகம், விபூதி பூசுவது அநாகரீகம், தேவாரம், பஜனை பாடுவது அநாகரீகம். இப்படியாகத் தமிழரின் பண்பாடு, சமயம், கலை, கலாசாரம், சைவத்தின் மேம்பாடு இவைகள் எல்லாம் ஒரு சிலரால் குன்றி வருகிறது. இறைவனால் வழங்கப்பட்ட தமிழ், சங்கம் வளர்த்த தமிழ், தேனிலும் இனிய தமிழ், பார் போற்றும் முத்தமிழ், சேர சோழ பாண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர்களால் வளர்க்கப்பட்ட தமிழ் இந்த இனிய தமிழைப் பேசுவதே அநாகரீகம் என எண்ணுகிறார்கள்.

அம்மா, அப்பா என்று இனிய தமிழில் பேசுவது அநாகரீகம், மம்மி டாடி என்று அன்னிய மொழியில் அரை குறையாகக் கதைப்பது நாகரீகமென எண்ணுகின்றார்கள். இவர்கள் பெற்ற தாய் தந்தையரை அவமதித்ததற்குச் சமமாகிறார்கள். தாய் மொழியான இனிய தமிழ் மொழியைப் பேசுவது அநாகரீகமாக எண்ணி அன்னிய மொழியையும் சரியாய்ப் பேசத் தெரியாமல் பிழையாகப் பேசி மற்றவர்களின் நகைப்புக்கு இடமாகிறார்கள்.

இன்று ஒரு சிலர் இறைவனையே மறந்து, தமிழ்த் தாயை மறந்து, தங்கள் குழந்தைகளுக்கே இனிய தாய் மொழியான தமிழ் மொழியைக் கற்பிக்காது பேச விடாது இவைகளையெல்லாம் புறக்கணித்ததன் பயனை இன்று நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். அன்னிய நாடுகளில் தஞ்சம் புகுந்து கையேந்தி வயிறு வளர்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்றோமென்றால் எங்களுடைய மேற்காட்டிய செயல் முறைகளே காரணமாகின்றது.

இறைவன் புகழ் பாட, இறைவன் புகழ் பேச வெட்கப்படுவார்கள். பஜனை பாடுபவர்களை மூளைக் கோளாறுடையவர்கள் என்று பரிகசிப்பார்கள். இவைகளைப் பார்ப்பது கேட்பது அநாகரீகமென்று அவ்விடம் இல்லாது சென்று விடுவார்கள். இவைகளின் தத்துவம், மகத்துவம் தெரியாதவர்கள் தங்களின் அறியாமையின் காரணமாக இப்படி நடந்து கொள்கிறார்கள்.

இப்படியானவர்கள் பகிரங்க இடங்களில் யாரும் சத்தமாகப் பேசி, கீழ்த்தர வார்த்தைகளால் ஏசி, கெட்ட முறையில் அருவருக்கத்தக்க முறையில் நடந்து கொள்பவர்களை இன்று சமூகம் மிகவும் ஆவலோடு கூட்டம் கூட்டமாக கூடி நின்று புதினம் பார்க்கிறார்கள். மெச்சி புகழ்கிறார்கள். இதன் காரணமாக ஏச்சுப் பட்டவர்களுக்கும் தடி அடிபட்டவர்களுக்கும் இன்னும் துன்பத்தை ஊட்டுபவர்களாக இருக்கிறார்கள்.

இன்று சமூகம் எதை வரவேற்கிறது? வடிநீர்ச் சல்லடை போல் நல்லவைகளை விட்டு விட்டு கழிவுப் பொருட்களைத் தன்னகத்தே வைத்திருப்பது போல், விரும்பத் தகாதவைகளை விருப்பத்தோடு ஏற்பவர்களாக இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் காரணமாக இன்று தமிழ்ச் சமூகமும், சைவசமயமும் கீழ் நிலை அடைந்து கொண்டிருக்கின்றது என்பதை எண்ணும் பொழுது மிகவும் மன வேதனைக்குரியதாகின்றது.

கடவுள் எங்கே இருக்கிறார் என்று சில நாஸ்திகர்கள் வாய் கூசாமல் கேட்கிறார்கள். அவர்களுக்குக் கூற விரும்புவது, உதாரணமாக நீங்கள் ஒரு முக்கிய அலுவல் காரணமாக குறித்த நேரத்திற்கு ஒரு இடத்திற்கு(பயணம்) வருவதாக அறிவிக்கிறீர்கள். அதற்குப் பல திட்டங்கள் போடுகிறீர்கள். சில வேளைகளில் நீங்கள் போட்ட திட்டப்படி போக முடியாமல், அவை நடைபெற முடியாமல் போகிறது.

இது உங்களால்ப் போடப்பட்ட திட்டம் நீங்களே செல்ல இருந்த பயணம் தவிர்க்க முடியாத செயல்ப்பாடுகள் காரணமாக மேற்கொள்ள முடியாமல் உங்கள் செயல்த்திட்டம் தடைப்படுகிறது. இது யாரால் தடைசெய்யப்படுகின்றது. அது தான் யாவுக்கும் அப்பாற்பட்ட ஒரு சக்தி இயங்குகிறது. அந்தச் சக்தி தான் இறை சக்தி.

நாம் நினைப்பதெல்லாம் நடக்காமல் போவதும், நினைக்காததெல்லாம் நடப்பதும் தான் கடவுள் சக்தி.

இயற்கை என்றால் என்ன? அது தான் கடவுள். செயற்கை என்பது நம்மால் செய்யப்படுவது.

ஐம்பூதங்கள் என்பது இயற்கை. அவை, நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம். இவைகள் இறைவனின் அங்கங்கள் என்று வர்ணிக்கப்படுகிறது.

இயற்கை அழிவுகள் நிகழ்கிறது பெருமழை, சூறாவளி, கடல் கொந்தளிப்பு, பூமி நடுக்கம், பூகம்பம், அக்கினி சுவாலை(எரிமலை) இவைகள் எல்லாம் எதிர்பாராத இயற்கை அனர்த்தங்கள். இவைகளை ஏன் விஞ்ஞானம் தடை செய்யவில்லை? தடை செய்ய முடியாது. இவையனைத்தும் இயற்கையின் சீற்றங்கள். மக்களின் அகந்தைகள் மேலோங்கும் காலம் இந்த இயற்கை பேரழிவுகளை இறைவன் நடத்துகிறார். இது விஞ்ஞானத்துக்கு அப்பாற்பட்ட மெய்ஞ்ஞானமாகும். மேலான சக்தி ஒன்று இருக்கிறதென்பதை நினைவூட்டுகின்றது அது தான் கடவுள். இதை விஞ்ஞானிகளும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் நாஸ்திகர்கள் ஒப்புக் கொள்கிறார்களில்லை. இது அவர்களின் வினைப்பயன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்கள் மாறுகின்றன, சூரியன் வருகிறது, சந்திரன் தெரிகிறது, இரவு, பகல் வருவது காற்று வீசுகிறது, மழை பொழிகிறது, நாங்கள் நினைப்பது நடக்காமல் போகிறது, நினைக்காதது நடக்கிறது. இவையெல்லாம் இறைவனின் செயற்பாடாகும். ஜெனனம், மரணம் எல்லாம் இறைவனின் நிர்வாகத்துக்குட்பட்டது. இவைகளை விஞ்ஞானம் செய்யவும் முடியாது, நிறுத்தவும் முடியாது. ஆனால் விஞ்ஞான நிகழ்வுகளை மெய்ஞ்ஞானத்தால் தடை செய்ய முடியும். இது இறை சக்தி.

இந்தப் பிரபஞ்சத்ததில் எல்லாக் கிரகங்களும் பாதை மாறாமல் ஒரே மாதிரியாக ஒன்றை ஒன்று இடித்துக் கொள்ளாமல் செல்வதைக் காண்கையில் இவை ஏதோ ஒரு தர்மத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பதைப் போல காணும் பொழுது ஏதோ ஒன்று இவற்றை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து ஒழுங்கு முறையாக இயக்கிக் கொண்டிருப்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டாமா? அப்படியாயின் எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருக்கும் சக்தி எது?

பூமி ஒரு சீரான வேகத்தில் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது. சந்திரனும் ஒரு வேகத்தில்த் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது. இவற்றில் ஏதாவது ஒரு மாறுதல் ஏற்பட்டால் என்ன நடக்கும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு கோளுக்கும் ஈர்ப்புச் சக்தி உண்டு. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு இடத்திலும் நின்று அதாவது சரியான அல்லது போதுமான இடைவெளியை வைத்துக் கொண்டு மற்றொரு கிரகத்தை ஈர்ப்பதால் அந்தரத்தில் நின்று கொண்டிருக்கின்றது. சூரிய குடும்பத்தில் ஒவ்வொரு கிரகமும் அந்தந்தக் கிரகத்துக்குரிய வேகத்தில் மற்றக் கிரகங்களை ஈர்ப்பதால் அதாவது பூமி சந்திரனை ஈர்ப்பதும், சந்திரன் திருப்பிப் பூமியை ஈர்ப்பதும் இப்படி ஒரு குறிப்பிட்ட கணக்கில் ஈர்ப்பதும் ஒன்றையொன்று இடித்துக் கொள்ளாமல் விண்வெளியில் மிதந்து கொண்டிருக்கின்றன.

சற்று கற்பனை செய்து பாருங்கள் பூமி சற்று வேகமாக சந்திரனை இழுத்தாலோ அல்லது சந்திரன் சற்று வேகமாகப் பூமியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்தாலோ என்ன நடக்கும்? இரண்டு கிரகத்தில் ஒன்றில் ஈர்ப்பு விசை அதிகமாக இருந்திருந்தாலும் கிரகங்கள் இரண்டும் ஒன்றோடொன்று மோதி அழிவு ஏற்பட்டிருக்கும்.

அப்படியாயின் கிரகங்கள் ஒவ்வொன்றிற்கும் எந்த அளவு மற்றக் கிரகத்தை இழுக்கும் சக்தி இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு மட்டும் இருப்பதால் இப்பிரபஞ்சத்தில் இழுக்கும் கிரகங்கள் ஒன்றை ஒன்று இடித்துக் கொள்ளாமல் சரியாகச் சுற்றிக் கொண்டிருக்கின்றன. ஒரு பொறியியல் நிபுணரால் வடிவமைக்கப்பட்ட இயந்திரத்தைப் போல் கிரகங்கள் இப்பிரபஞ்சத்தில் சரியாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதை நடத்தி வைப்பவர் யார்? அவர் தான் கடவுள்.

மேலும் ஒன்றை நினைவு படுத்துவோம் இந்த உலகில் வாழும் சர்வ ஜீவராசிகளுக்கும் வெப்பம் தேவைப்படுகிறது. அந்த வெப்பமும் தொடர்ந்து தேவைப்படுவதில்லை. ஒரு குறிப்பிட்ட நேரம் மட்டுமே தேவைப்படுகிறது. நமக்கு வெப்பத்தையளிக்கச் சூரியன் விண்வெளியில் சுற்றி வருகின்றது. உண்மையில் அது சுற்றி வருவதில்லை நாம் தான் சுற்றி வருகிறோம். இந்தச் சூரியன் இல்லையென்றால் என்ன ஆகியிருக்கும்.

பயிர்கள் வளராது, தண்ணீர் கிடைக்காது, மனிதரது செயல்களுக்கு தேவையான அனைத்தும் கிடைக்காது. அப்படியென்றால் இந்தப் பிரபஞ்சத்தில் உயிர் வாழும் அனைத்தும் சூரியனையே நம்பி இருக்கின்றன.

சூரியன் மட்டுமல்ல இந்தப் பிரபஞ்சத்தில் உயிர் வாழும் சகல ஜீவராசிகளும், ஐம்பெரும் பூதங்களும் இல்லையென்றால் நீங்களும் இல்லை நானும் இல்லை. இப்படி ஒவ்வொன்றும் இப்பிரபஞ்சத்தில் வாழத்தேவையான பொருள்களைப் படைத்து அவற்றைச் சரியான வேகத்தில்ச் செலுத்தி சரியான முறையில் இயக்கிக் கொண்டிருப்பது யார்? இவற்றையெல்லாம் யாரும் இயக்கவில்லை. தானாக இயங்குகின்றது என்று சொன்னால் அறிவு பூர்வமாக இதை ஒப்புக் கொள்ள முடியுமா? இல்லை. எனவே எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட சக்தியே இதை இயக்குகின்றது. அது தான் கடவுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொன்றையம் சொல்லுகிறேன் மனிதனது உடல் இயங்கும் முறையைக் கவனித்திருக்கின்றீர்களா? எவ்வளவு பெரிய அறிவியல் விஷயம் இது. தலையிலிருந்து கால் வரையுள்ள அத்தனை உறுப்புகளையும் அலசி ஆராய்ந்து பார்த்தால் திட்டமிட்ட ஒரு தொழிற்சாலை ஒன்று இயங்குவதை நீங்கள் உணர முடியும்.

மனிதன் உயிர்வாழ்வதற்கு வேண்டிய அத்தனை சௌகரியங்களும் மனித சரீரத்துக்குள் படைக்கப் பட்டிருக்கிறது. இந்த மகாபெரிய சக்தியால் இந்தச் சரீரம் இயங்குவதற்கு மூன்று விஷயங்கள் தேவைப்படுகிறது. காற்று, தண்ணீர், வெப்பம் இந்த மூன்றில் ஒன்று குறைந்தாலும் மனிதன் இந்த உலகத்தில் உயிர் வாழ முடியாது.

மனிதன் சுவாசிக்க காற்றையும், குடிக்கத் தண்ணீரையும், உடலின் சக்தியைச் சமப்படுத்த (அதாவது உண்ணும் உணவில் கிடைக்கும் சக்தியை சமப்படுத்த) வெப்பத்தை யார் படைத்தது? நமக்கு 98.5 டிகிரி அளவு வெப்பம் ஒரே அளவாக இருக்க வேண்டும். இந்த உலகில் வாழும் அனைவருக்கும் இந்த வெப்பம் ஒரே அளவாக சமமாக நிலைப்படுத்தி இருக்கும் படி யார் செய்தது? சற்று வெப்பம் உயர்ந்து விட்டால் காய்ச்சல் என்று சொல்லி மருத்துவரை அணுகி சிகிச்சை செய்து கொள்கிறோம். வெப்பம் மிகவும் குறைந்து விட்டால் இறப்பு ஏற்படுகின்றது. அப்படியாயின் வெப்பம் அதிகப்படாமலும், குறையாமலும் பார்த்துக் கொள்வது யார்? அந்த வல்லமை மிக்க சக்தி எது? அது தான் கடவுள்.

இந்த இயற்கையென்னும் கடவுளுக்கு உருவம் இல்லை, அருவம் இல்லை, ஆதி இல்லை, அந்தம் இல்லை எங்கும் வியாபித்திருக்கும் ஏகப் பரம் பொருள்தான் இறைவன். இந்த அருவம், உருவம் இல்லாத இறைவனுக்கு உருவம் அமைத்து விக்ரகப் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்யும் இடம் தான் ஆலயம்.

ஆலய வழிபாட்டில் விக்ரக உருவத்தில் உறுதியான நம்பிக்கை வைத்து தூய்மையான உள்ளத்துடன் வழிபாடு செய்தால் இறைவனை உருவ வடிவில்க் காணலாம்.

தியானம் என்பது புனித ஆசாரத்துடன் மனதை ஒரு வழிப்படுத்தி நாம் வணங்கும் தெய்வ உருவத்தை மனக்கண் நிறுத்தி கண் மூடி மௌனியாகி இறைவனை மனத்துக்கண் தியானிப்பதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானம். இப்படித் தியானத்தை முறைப்படி செய்தால் இறைவன் அகக்கண்ணில் காட்சி கொடுப்பார்.

உதாரணம் பாரத நாட்டில் கல்கத்தா காமபுத்தூர் என்னும் கிராமத்தில் இராமகிருஷ்ணபரமகம்சர் காளி தேவியை குலதெய்வமாக உருவ வழிபாடு செய்து தேவியுடன் நேரில்ப் பேசிக் கதைத்து உலகுய்யும் பொருட்டு ஆன்மீக வாழ்வு வாழ்ந்து முக்தி அடைந்தார். அவர் புகழ் ஆன்மீகப் பணி உலகளாவிய நாடுகளிலெல்லாம் இராமகிருஷ்ண மிஷன் என்னும் பெயருடன் மட அலயங்கள் புகழொடு மிளிர்ந்து ஆன்மீக தர்மப் பணிகள் புரிந்து அருள் ஒளி பரப்பி நிற்பதை யாவரும் அறிவர்.

இறைவன் மனித வடிவில் அவதாரங்கள் எடுத்து காலா காலம் பல அற்புதச் செயல்களைச் செய்து வருகிறார். இராமர், இராமகிருஷ்ணர், இராமனுஷர், இராகவேந்தர் என்னும் எத்தனை எத்தனையோ மகான்கள் தோன்றி மறைந்துள்ளார்கள். உலகுய்ய ஆன்மீக நெறிகளுடன் மக்கள் வாழ்ந்துயர வழிகாட்டிச் சென்றுள்ளார்கள்.

கடவுள் வேறு, தெய்வம் வேறு, கடவுளே மனித வடிவில்த் தெய்வமாகின்றார் என்பதை காலாகாலம் உலகியல் காட்டி நிற்கின்றது.

"வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

(வள்ளுவர்)

நாயன் மார்கள், அப்பர், சுந்தரர், சம்பந்தர், மணிவாசகர் இவர்கள் இறைவன் மேல் வைத்த பக்தி மேலீட்டினால் திருமுறைகள், திருவாசகங்கள் பாடி எத்தனையோ அற்புதங்களை செய்து உலகம் உய்ய வைத்தார்கள். முக்தி அடைந்தார்கள். இராமலிங்க அடிகளார் சென்னை கந்த கோட்ட முருகனை நினைந்துருகிப் பாடி மக்கள் முன்னிலையில் ஜோதியுள்க் கலந்து முக்தி பெற்றார்.

பட்டினத்தார் மாடு மேய்க்கும் தரவையில் சிறவர்களுடன் விளையாடித் தமது முறை வரத் தன்னை கூடையால் மூடும்படி சொல்லி உட்கார்ந்திருந்தார். பையன்கள் கூடையால் மூடி கூடையைத் திறந்ததும் லிங்கமாக(கல்) இருப்பதைக் கண்டு பயந்து நின்றார்கள். இன்றும் இந்தியா திருவொற்றியூரில் பட்டினத்தார் சமாதி சிவன் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டுக்குரியதாக விளங்கி நிற்பது கடவுள் இருக்கிறார் என்பதற்கு உதாரணங்களாக அமைகின்றது.

அருணகிரி நாதர் குடும்பத்தினரால் வெறுக்கப்பட்டு வாழ்க்கையில் வெறுப்படைந்து அண்ணாமலையான் கோபுரத்தில் ஏறிக்குதித்து உயிர் விடத்துணிந்த பொழுது முருகப் பெருமானால்த் தடுத்தாட்கொள்ளப் பட்டு முருகன் பெயரில் திருப்புகழ் பல பாடி தீராப் பக்தியுடன் முருகன் அடி சேர்ந்தார்.

இன்றும் எத்தனை எத்தனையோ மகான்கள் தோன்றி அருள் ஞானத் தேனை உலகுய்ய ஊட்டி தெய்வ நம்பிக்கையையும் தெய்வ உறுதிப்பாட்டையும் காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

"நம்பிக்கை வைத்துக் கல்லையும் பார்த்தால்
தெய்வத்தின் காட்சியைக் காணலாம்"

இன்றும் தர்மம் குன்றி, நார்த்திகம் மிஞ்சி, அதர்மம் மேலோங்கி வரகிறது. நீதி ஞாயம் இல்லை. பொய், கழவு, வஞ்சகம், பொறாமை, சூது, கொலை, கொள்ளை, பஞ்சமா பாதகம் மேலோங்கி நிற்கிறது. எனவே தான் இயற்கை அழிவுகள், அரசியல்ப் படுகொலைகள், நாட்டுக் குழப்பங்கள், எங்கும் நடந்து கொண்டிருக்கிறது. தர்மம் குன்றி விட்டது, இறை வணக்கம், கடவுள் நம்பிக்கை குறைந்து விட்டது. பொறுமை, கருணை, தயவு, தாட்சண்யம், ஈவு, இரக்கம் எல்லாம் அருகி எந்தப் பாவங்களையும் அஞ்சாமல்ச் செய்யும் காலமாகி விட்டது. போலி நாகரீகங்களை மக்கள் நம்பி சீரழிந்து கொண்டிருக்கிறார்கள்.

விஞ்ஞானம் மனிதன் சுகத்துடன் வாழ்வதற்கு மருந்து வகைகள், வைத்தியக் கருவிகளை கண்டு பிடித்து நோயின்றி நலத்துடன் வாழ வழி வகைகளைக் கண்டு பிடித்திருக்கின்றதேயன்றி மரணத்தை நிறுத்த விஞ்ஞானத்தால் முடியவில்லை.

மனித வாழ்க்கையில் பல வசதிகளுடன் சந்தோஷமாக வாழ்வதற்கு பல கண்டு பிடிப்புகளை விஞ்ஞானம் கண்டு பிடித்திருக்கிறது. மரணத்தினின்றும் தப்புவதற்கு விஞ்ஞானம் எதனையும் கண்டு பிடிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தில் பயிரிட்டு பூமி மூலம் வரும் உணவுப் பொருட்கள் தான் மனிதனுக்கும், ஏனைய ஜீவராசிகளுக்கும் உணவாகக் கிடைக்கிறது. விஞ்ஞானம் சாப்பிடும் உணவுப் பொருட்களைக் கண்டு பிடிக்கவில்லை உணவுப் பயிர் வகை செய்வதற்கு நவீன கருவிகளையும், இரசாயனப் பொருட்களையும் கண்டுபிடித்திருக்கிறது, விளைச்சலைக் கூட்ட உதவியளிக்கிறது.

உணவு முதலியவைகளை இயற்கை என்னும் இறை சக்தி தருகிறதே அன்றி விஞ்ஞானம் தரவில்லை. இவைகளுக் கெல்லாம் இறைவனைத்தான் வேண்டி நிற்க வேண்டும். இதை இறைவன் இல்லையென நாத்திகம் பேசுபவர்கள் உணர வேண்டும்.

எனவே சுருக்கமாகச் சொல்வதானால் விஞ்ஞானம் மனிதன் சொகுசுடன் வாழவும், கஷ்டமின்றி வாழவும், பல கண்டு பிடிப்புகளை கண்டு பிடித்திருக்கிறதே தவிர மனிதனுக்கு உணவு கொடுக்கவோ, இயற்கை அனர்த்தங்களைத் தவிர்க்கவோ, மரணத்தை நிறுத்தவோ அதனால் முடியாது. ஏனெனில் இது கடவுளின் செயல்பாடாகும். எனவே அனைத்தும் இறைவன் செயல் என்று உலகம் வரவேற்கிறது. ஏன் விஞ்ஞானமும் கூறுகிறது.

இயற்கையான பஞ்ச பூதங்களின் சக்தி மூலமே மனிதன் வாழ்கிறானே தவிர விஞ்ஞானம் வாழ வைக்கவில்லை. இந்த ஐந்து சக்திகள் மூலம் தான் விஞ்ஞானம் பல கண்டு பிடிப்புகளைக் கண்டு பிடித்து நடைமுறைப் படுத்துகிறது. இந்த ஐந்து சக்திகளும் தான் விஞ்ஞானத்திற்கும் மூலப் பொருளாக விளங்குகின்றன.

கடலில்ப் பயணம் செய்யத் தெரிந்த மனிதன் ஆகாயத்தில் பறக்கத் தெரிந்த மனிதன் ஒரு நொடியில் உலகத்தை அழிக்கும் அணுகுண்டைக் கண்டு பிடித்த மனிதன் பலவிதமான எத்தனை எத்தனையோ கண்டுபிடிப்புகளைக் கண்டு பிடித்த மனிதன் இந்தப் பூமியில் மனிதனாக வாழ முடியாமல் அவஸ்தைப் படுகிறான்.

ஒவ்வொரு மதத்தவர்களும் தங்கள் தங்களின் கலை, கலாச்சாரம், சமயக் கோட்பாடுகளை மதித்துப் பேணிக்காத்து நடந்து கொள்வது தான் உண்மையான நாகரீகம். இவைகளை விலக்கி நடந்து கொள்வது தான் அநாகரீகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மெய்ஞ்ஞானம் இன்றி விஞ்ஞானம் இல்லை"

# பெண்ணின் பெருமை

## சமுதாயத்தை ஈன்றெடுப்பவள் பெண்

விளக்கு என்பது ஒளி தருவது. இருளில்த் தெரியாமல் இருந்தவை விளக்கினால்த் தெரியும். மனிதனின் மகத்தான கண்டுபிடிப்பு இருளென்பது வெளியேயும் உண்டு அகத்திலும் உண்டு. புற இருளை நீக்குவது சூரியன், இல்லத்து இருளை நீக்குவது விளக்கு.

"இல்லக விளக்கது இருள் கெடுப்பது
நல் அகவிளக்கது நமசிவாயவே"

மனிதரில்ப் பெண்களே விளக்காவர். பிறந்த விட்டிலும் விளக்கேற்றி ஒளி தருபவள் பெண். ஒரு வீட்டில் பிறந்து மற்றோர் வீட்டுக்குச் செல்பவள் பெண். ஆனால் அவள் குடும்ப விளக்காகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறத்தில் ஆண் ஒளியை அனுபவிப்பவன் மட்டுமே. ஒளியை வழங்குபவள் பெண். ஒளிவளர் விளக்கே என்று இறைவனைப் பாடினார்கள். எனவே சக்தி வடிவாய் ஒளி தருபவள் பெண். காலையில் வைப்பது சந்தி விளக்கு, மாலையில் வைப்பது அந்தி விளக்கு.

எவ்வளவு ஏழையானாலும் மணமகளாகப் போகிற பெண்ணோடு செல்லும் சீர் வரிசையில் முதலிடம் பெறுவது விளக்காகும் அவள் புகும் வீட்டில் விளக்கில்லாமலா இருக்கும். மக்களைப் பெற்றுத் தந்து அந்தக் குலத்தை விளங்கச் செய்பவள் பெண்ணே. எனவே அவள் கொண்டு செல்லும் விளக்கு அவளது உரிமைப் பொருள். விளக்கை யார் ஏற்றினாலும் ஒளி தரும். ஆனாலும் வாழ வந்தவள் கைகளால் எற்றுவதே பெருமை. ஆகவேதான் அவள் வீட்டிற்கு விளக்கேற்ற வந்த மகாலட்சுமி என விளங்குகின்றாள்.

ஒரு பெண் குடும்பத்தில் மனைவியாகி, மகளாகி, மருமகளாகி, சகோதரியாகி ஒளிர்பவள். பெண் தான் தனது கணவனின் புகழ் பரவ உதவுபவள்.

இதன் காரணமாகத் தான் பாரதியார் ஓர் ஆண் மகனாக இருந்தும், ஆண் வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு கவிஞனாக இருந்தும், ஒரு புதுமையான ஆண் உருவாக வேண்டுமென்று சொல்லவில்லை. புதுமைப் பெண்தான் நாட்டுக்கு வேண்டுமென்று சொன்னார். பெண் ஆனவள் இந்த உலகையே படைக்கின்றாள். அதனால் தான் பெற்றுத் தரும் பேற்றை இறைவன் பெண்களுக்கே படைத்தான்.

பெண் தான் ஜெனன வாசல். அவள் தான் சக்தி, அவள் தான் சாஸ்திரம், அவள் தான் சமயம், அவள் தான் சமுதாயம், குடும்பப் பெண் தான் ஒளி விளக்காய் குத்து விளக்காய்ப் போற்றப்படுபவள். குடும்பப் பெண் தான் கருவறைத் தெய்வமாகக் கணிக்கப் படுகிறாள். குடும்பப் பெண் தான் நல்ல பல்கலைக் கழகத்தை உருவாக்கும் மேதையாகிறாள்.

ஒரு பெண் தாயான பின் பெற்றுத் தருவது பிள்ளைகள் மட்டுமல்ல அன்பைப் பெற்றுத் தருகிறாள், சுய கட்டுப் பாட்டைப் பெற்றுத் தருகிறாள், பக்தியைப் பெற்றுத் தருகிறாள், பாசத்தைப் பெற்றத் தருகிறாள், பண்பாட்டைப் பெற்றுத் தருகிறாள், தெய்வ உணர்வைப் பெற்றுத் தருகிறாள், தேசப் பற்றைக் கற்றுத் தருகிறாள், வீரத்தைப் பெற்றுத் தருகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண் பெற்றெடுத்த ஒரு பிள்ளையுள் இத்தனை பேறுகளை உண்டாக்கி குழந்தையாய்ப் பெற்றுத் தருவதால் அவள் பராசக்தி என்றே போற்றப் படுகின்றாள். இதனால்த் தான் பாரதியார்,

"யாதுமாகி நின்றாய் காளி
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை எல்லாம் நின்றன்
செயலின்றி இல்லை"

என்று பாடியுள்ளார். ஆகவே பெண்கள் பிள்ளைகளை மட்டும் பெற்றுத் தருவதாக நினைக்கக் கூடாது வீரர்களைப் பெற்றுத் தருகிறோம், தலைவர்களைப் பெற்றுத் தருகிறோம், ஞானிகளைப் பெற்றுத் தருகிறோம், மேதைகளைப் பெற்றுத் தருகிறோம், விஞ்ஞானிகளைப் பெற்றுத்தருகிறோம், மாவீரர்களைப் பெற்றுத் தருகிறோம் என்ற மமதையோடு, கர்வத்தோடு பிள்ளைகளைப் பெற்றெடுக்க வேண்டும். பெற்றால் மட்டும் போதாது நல்ல ஒழுக்கமுடைய குழந்தைகளாக வளர்த்துத் தர வேண்டும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் அது
உயிரினும் ஓம்பப் படும்"

(வள்ளுவர்)

ஒரு பிள்ளை ஒழுக்கத்துடன் நெறியான வாழ்வு வாழ்வதற்கு முதலாவது இறை பக்தி ஊட்டப்பட வேண்டும். ஆன்மீகம் என்னும் விதையில்த் தான் ஒழுக்கம், புலனடக்கம், பொறுமை, விட்டுக் கொடுக்கும் தன்மை, பிறரிடத்தில் அன்பு, பெரியோரை மதிக்கும் பண்பு, ஆகிய பண்பாடுகள் விளைகின்றன. எனவே இன்றைய வேகமான வாழ்க்கை, குடும்பப் பாரம், அலுவலக பாரம் இதையும் மீறிப் பொருளாதாரப் பாரம் அனேகமாகப் பெண்களின் தலையில்ச் சுமத்தப்படுகின்றன. இந்தச் சுமைகள் எளிமையாக வேண்டுமென்றால் நம் முன்னோர்கள் காட்டிய ஆன்மீக சிந்தனையை வாளர்த்துக் கொள்ள வேண்டும்.

பன்னிரு ஆழ்வார்கள், அறுபத்துமூன்று நாயன் மார்கள், திருவள்ளுவர், வள்ளலார், அருணகிரி நாதர், ஆதி சங்கரர் இன்னும் அவர்கள் வழி வந்த பரமாச் சாரியார்கள் இராம கிருஷ்ண பரமகம்சர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீராபாய், அரவிந்தர், சேஷாத்திரி மகான், ரமண மகரிஷி, குரு இராகவேந்தர் இன்னும் எத்தனை எத்தனையோ அருளாளர்கள் ஆகியோர் எமக்களித்துச் சென்ற ஞானத்தேனை ஞானத்துளிகளை தினம் தினம் ஒரு மணி நேரமாவது படித்து உணர வேண்டும். அதன் மூலம் பெற்ற அறிவையும் அனுபவத்தையும் பிள்ளைகளுக்கு ஊட்டி ஊட்டி வளர்க்க வேண்டும். அப்படியானால்த் தான் சமுதாயம் முன்னேறும், நாடு வளம் பெற்று வளர்ச்சியடையும். இன்றைய குழந்தைகள் வருங்காலச் சந்ததிகள்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில்ப் பிறக்கையிலே — பின்
நல்லவராவதும் கெட்டவராவதும்
அன்னை வளர்ப்பினிலே"

(கண்ணதாசன்)

பெண்கள் தெய்வம். தெய்வம் கருணை வடிவானது, அன்பு வடிவானது, அரவணைப்பது, ஆராதிப்பது, வாழ வைப்பது, நிம்மதி கொடுப்பது, ஆனந்தம் அளிப்பது, படைப்பது, காப்பது முதலிய நற்குணங்கள் தெய்வங்களுக்கு உண்டு. பெண்மைக்கும் இதே சிறப்புண்டு. ஒரு தெய்வம் இல்லாமல்க் கோயிலில்லை. பெண் இல்லாமல் ஒரு குடும்பமில்லை. கோவிலில் இறைவனின் ஆட்சி, குடும்பதத்தில் பெண்ணின் ஆட்சி. கடவுளுக்குப் பல அவதாரங்கள் பெண்மைக்கும் பல அவதாரங்கள் உண்டு. தாயாய், மனைவியாய், மகளாய், மருமகளாய், சகோதரியாய் எனப்பலவுண்டு. அந்த ஸ்தானத்தில்ப் பெண்மை புரியும் கருணையும், அன்பும் ஒன்றல்ல ஓராயிரம்.

உலகம் துதிப்பது தெய்வத்தைத் தான். அடுத்தது பெண்மை ஒன்று தான். தாய் என்பவள் தெய்வத்திற்குச் சமமானவள். புனிதத் தன்மை கொண்டவள்.

உலக ஜீவன்களைப் படைக்கும் படைப்பு நாயகன்(இறைவன்) ஒரு பெண்ணிடம் அம்மா என வாயார அழைத்து அடிபணிகிறான். தொழுகிறான், கரம் கூப்பி அம்மா என வாயார அழைத்து மனச் சாந்தி அடைந்தானே இது போதாதா, இந்த உண்மை காரைக்கால் அம்மையாரின் சரிதம் படித்தவர்களுக்குப் புரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மையின் உருவம் அன்பால், கருணையினால், பாசத்தால், தியாகத்தால் முழுமை பெறுகின்றது.

ஒரு பெண்ணிடம் மட்டுமே பூவும், பொட்டும் (குங்குமமும், சந்தனமும்) குடிகொள்ளும். அந்தப் பாக்கியம் பெண்களுக்கு மட்டுமே கிட்டக்கூடியது.

கொண்டு வந்தாலும் சரி, கொண்டு வராவிட்டாலும் சரி தாய் மட்டுமே நம்மை அரவணைத்துக் கொள்ளுவாள்.

எதைக் கொண்டு வந்தாலும் சரி, கொண்டு வராவிட்டாலும் சரி தெய்வம் மட்டுமே நம்மை அரவணைத்து அருள் பாலிக்கும்.

கோவில் கருவறை முன் கொஞ்சம் நின்றால் நிம்மதி. தாயின் மடியில் தலைவைத்து இளைப்பாறினால் அதுவே நிம்மதி. அவனுக்குத் தாயே சந்நிதி.

கற்புள்ள பெண் ஆணையிட்டால் மாதம் மும்மாரி மழை பொழியும். கருணையுள்ள பெண் சூளுரைத்தால் எமதர்மனும் அடிபணிவான். காலனுடன் வாதாடிக் கணவன் உயிர் மீட்டவள் சாவித்திரி.

தாய்ப் பாலுக்கும், இறைவனின் அருளுக்கும் விலை மதிப்புச் சொல்ல முடியாது. இவைகளைக் கடையில் விலை பேசி வாங்கவும் முடியாது. தாய்ப்பாலுக்கும், இறைவன் அருளுக்கும் முன் வைரம், மாணிக்கம், தங்கம் எல்லாம் ஈடாக முடியாது.

ஒரு தெய்வம் இல்லாமல் இவ்வுலகம் இல்லை ஒரு தாயில்லாமல் யாரும் இங்கு வந்ததில்லை. இந்த இருவரும் இல்லையென்றால் எதுவுமே இல்லை.

"விளக்காக வருபவள் மருமகள்
வாழ்க்கையை விளங்க வைப்பவள் மனைமகள்
அவள் தான் குலமகள்"

ஆண்களும் பெண்களும் அநேகமாகச் சரிபாதியாக உள்ள மனித குலத்தில் அந்தப் பாதி எண்ணிக்கையுடைய ஆண்களைப் பெற்றெடுத்தவர்கள் பெண்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை நிலையின் பெருமையை அதன் பேரறிவின் மகத்துவத்தை எடுத்துக் காட்டுகின்ற இயற்கையின் வெளிச்சச் சுடர் பெண்மையாகும். அது தான் சக்தி. இறை வணக்கத்தில் சிலை வணக்கம் என்ற முறையில் பெண் உருவத்தை உயர்வாக மதித்து வணங்குகின்ற முறை நீண்ட காலமாக சமுதாய மக்களிடம் இயல்பாக உள்ளது.

பெண்கள் சக்தியின் வடிவம். இறைவன் அன்னை தேவிக்கு தன் உடலில் இடப்பாகத்தையும், ஸ்ரீமன் நாராயணன் திருமகள் தேவிக்கு தன் மார்பிலும் இடம் கொடுத்திருக்கிறார்கள். சிந்தித்துப் பார்த்தால் அந்த இடம் தான் ஜீவத்துடிப்பான இதயம் இருக்குமிடம். அங்கே அந்தத் தேவியர்கள் இருப்பதாலே தான் தெய்வங்களுக்கே சக்தி கிடைக்கின்றது.

இந்தச் சக்தி வழிபாடே பெண் வடிவில் அமைந்துதள்ளது. நல்ல குணமுள்ள தாய் மார்களின் அருமையான, அன்பான வளர்ப்புத்தான் ஆன்மீகத்தில் உயர்ந்த சீலங்களில்ச் சிறந்த எத்தனையோ மகான்களை உருவாக்கி இருக்கின்றது.

நாயன் மார்களின் மனைவியர்கள் தத்தம் கணவரின் சிவதொண்டுகளுக்கு உறுதுணையாக நின்றும் தனித் தனி தொண்டாற்றியும் வரலாறு படைத்தவர்கள். காலங்கள் மாறினாலும், கடமைகளைத் தொடர்வது மகளிருக்கு பெருமையாகும்.

இராமருக்கு அனுமன் கூறியது அண்ணலே! அங்கே நான் சீதா என்னும் பெண்ணைக் காணவில்லை, கற்பு என்பது பெண்ணுருவில் களி நடனம் புரியக் கண்டேன். இராமரின் ஆணைப்படி சீதை அக்கினியில் இறங்கினாள். சிறிது நேரத்தில் அக்கினி தேவனையே அவளது கற்பு சுடலாயிற்று.

நளாயினியும் ஓர் எடுத்துக்காட்டு சூரியன் உதிப்பதையே தடுத்து நிறுத்தியவள். இப்படிப் பெண்கள் இயற்கையோடேயே போராடிய பெருமையோடும், புகழோடும் விளங்குகின்றார்கள்.

## தாய்

தாய் என்ற சொல் உயிர் கொடுக்கும். தெய்வத்தின் மறு பெயர் அன்பு. அந்தத் தெய்வம் உலகத்தை வளர்க்கும் தொட்டிலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி வீட்டுக்கு வந்த கிரகலட்சுமி. மனைவி கண்ணீர் விட்டு அழுதால் இலட்சுமிதேவி அழுதது போல் ஆகும். உத்தமமான மனைவி அழுதால் அந்த வீடு முன்னேற்றம் அடையாது. மனைவி இம்மைக்கும், மறுமைக்கும் துணையாக நிற்பவள்.

குடும்ப வாழ்வில் கணவன் மனைவி உறவு தெய்வீகமானது. உலக இன்பங்களைத் துய்க்கவும், வினைப் பதிவுகளில் தீயனவற்றைக் கழிக்கவும், இறைநிலை உணர்வு அறிவில் முழுமை பெறவும் ஏற்றதாக அமைய வேண்டும்.

பெண்களின் பக்தியைப் பார்த்துத் தான் ஆண்களும் தங்கள் பக்தியை ஓரளவு வளர்த்துதக் கொள்கிறார்கள். பெண்கள் இல்லாவிட்டால் ஆண்களுக்குப் பக்தியே ஏற்படாது. பெண்மணி இல்லாத வீடு அது வெறும் காடு. பெண்களுக்குப் பக்தியும், ஆண்களுக்கு ஞானமும் என்பதாக பல்லாண்டுகளாகவே பழக்கத்தில் இருந்து வருகிறது.

பெண்களைப் போற்றிய அவதார புருஷர்களும் உண்டு. புராண காலத்தில் புனிதவதியாரின் தெய்வத் தன்மையைக் கண்ட பரமதத்தன் புனிதவதியாரை(காரைக்கால் அம்மை) தெய்வமாகப் போற்றினான்.

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீஇராமகிருஷ்ணர் அன்னை சாரதாமணியை சக்தியாக வைத்து பூசனை செய்தார். இன்று கூட நவராத்திரிக் காலங்களில் மூன்று முதல் ஒன்பது வயதிற்குட்பட்ட பெண்களைச் சக்தியாகப் பாவனை செய்து சக்கர பூசை செய்து வருகின்றவர்களுமுண்டு.

சைவ சமயத்தில் பெண்களுக்கு எவ்வளவோ பெருமை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பெண்களுக்குச் சன்னியாசம் கிடையாது. என்று சொல்லி இருக்கிறார்களே அதற்கு என்ன காரணம்?

பதில்

ஆண்கள் இறைவனை நோக்கிச் செல்வது தான் சன்னியாசம்.

"ஆடல் வேண்டும் ஐந்தன்புலத்தை விடல் வேண்டும்
வேண்டிய வெல்லாம் ஒருங்கு"

திருவள்ளுவர் எல்லாவற்றையும் விட்டு விட்டு சிவத்தை நினைந்து செல்வது சந்நியாசம். ஆனால் பெண்கள் கணவனையே தெய்வமாக எண்ணி மற்ற எல்லாவற்றையும் விட்டு விடுவதனாலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பெண்ணும் சந்நியாசி தான். ஆண்டவனை நோக்கி ஆண்கள் போகிறார்கள். கணவனை நோக்கி மனைவி வருகிறாள் அதனால்த்தான் பெண்கள் ஒவ்வொருவரும் சந்நியாச நிலை கொள்கிறார்கள்.

"பரனை நினைந்து விட்டதே பேரின்ப வீடு"

எனவே பெண்களுக்கு கணவனைத் தவிர வேறு தெய்வம் இல்லாமையாலே அவர்களுக்குச் சந்நியாசம் இல்லை.

(வாரியார்)

"தெய்வம்தொழாள் கொழுனனைத் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (குறள்)

## அகலிகையும் இந்திரனும் (காமம்)

காமம் பல கோபுரங்களைக் குப்பை மேடுகளாக்கி இருக்கிறது. முற்றும் துறந்த முனிவர்கள் கூட எல்லாவற்றையும் விட்ட பின்பும் காமத்தை விட முடியாமல் தாழ்ந்து போன வரலாறு உண்டு. ஏன் காம உணர்வை விட முடியவில்லை?

காமம் என்பது உயிரோடு ஒட்டிப் பிறந்தது. எங்கள் பிறப்பே பெற்றோரின் காமத்தின் விளைவு. காமத்தால் நிகழ்ந்த இந்த மனிதப் பிறப்பில் காமத்தை விட்டு விடுவதென்பது சுலபமான காரியமல்ல. இந்திரனே இந்தக் காமத்தின் விருப்பை விடமுடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகலிகை கௌதம முனிவரின் இல்லத்தரசி. இந்திரன் அகலிகையின் மீது கொண்ட காதலினால், காமக் கொதிப்பினால் கண்கள் சிவக்க அகலிகையின் குடிசையை நோக்கி அடி எடுத்து வைத்தான். இந்திரன் பின் இரவில்க் கோழி போல் கூவ பொழுது புலர்ந்ததென்று நம்பிக் கௌதம முனிவன் காலைக்கடன் கருதி குடிலை விட்டு வெளியே சென்றான். இந்திரன் கௌதமன் வடிவத்தில் குடிலுக்குள் நுழைந்து விட்டான். மையலால் அறிவு நீங்கி மாமுனிக்கு அற்றம் செய்து பொய்யில்லா உள்ளத்தான் தன் உருவம் கொண்டு போனான் என்கிறார் கம்பர்.

உள்ளே நுழைந்தவன் காமக் கள்ளை விரும்பிய மட்டும் அருந்தினான். அவன் கணவன் அல்லன் என்பது அகலிகைக்குத் தெரியாது. அதனால்த் தான் கௌதம முனிவரை அணுகிய இராமன் அகலிகையை ஒப்படைக்கும் போது நெஞ்சினால்ப் பிழையில்லாளை நீ நேர்க என்கிறார். உடம்பால் ஏற்பட்ட தவறுக்கு அவள் பொறுப்பல்ல. உடல் கூற்றுத்தான் பொறுப்பாகும். முனதால் ஏற்படும் தவறுக்கே மனிதன் பொறுப்பாகின்றான். தீய எண்ணத்தால் நேர்ந்த தவறு ஒன்றை நல்ல எண்ணத்தால்த் தான் அழித்து எழுத முடியும். ராம ராம என்று நெஞ்சினால் ராமனை வணங்கிய அகலிகையின் நெஞ்சு இனிக்குற்றமற்றது.

இராம நாமம் என்கிற ஞானக் கனல் அகலிகையின் பாவச் சுமையை எரித்துப் புனிதமாக்கியது.

## திருமுறைகளின் பயன்கள்

மன அமைதி பெற, எடுத்த செயல்கள் இனிதே நிறைவேற, இடர்கள் நீங்க என அனைத்துக்கும் திருமுறைப் பதிகங்கள் தனித் தனியே உள்ளன. மக்களின் பசிப் பிணி போக்கிடப் படிக்காசுகள் இறைவனிடம் பெற்றுத் தந்தும், வெப்பு நோயைத் தீர்த்தும், பாம்பு தீண்டி இறந்தவர்களை உயிர் பெற்று எழச் செய்தும், ஊமைப் பெண்ணைப் பேச வைத்தும், மற்றும் பல அற்புதச் செயல்கள் திருமுறைகளின் அருளாற்றலால் நிகழ்ந்துள்ளது. எனவே திருமுறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனிடம் பக்தி கொள்வதற்கும், நாம் வேண்டும் பயன்களைப் பெறுவதற்கும் உதவும் என்பது தெளிவு.

மனித வாழ்வு உண்பதற்கும், உடுப்பதற்கும், உறங்குவதற்கும் மாத்திரம் அமைந்ததன்று. இறைவனிடம் அன்பு செலுத்தி நம் வாழ்வு பயனுள்ளதெனப் போற்றத் தக்க நிலையில் அமைய வேண்டும். அப்போது தான் நம் வாழ்வு முழுமை பெறும். இதற்குச் சிறந்த சாதனம் திருமுறைகளைப் பொருளுணர்ந்து ஓதுவதாகும்.

## அருளாளர் இயற்றிய திருமுறைகள்

### ஞானநூல்

எது ஞானநூல் என்று நாம் முதலில் உணர வேண்டும். இறைவனால் அடி எடுத்துக் கொடுக்கப்பட்டது எதுவோ, பெண்ணை எலும்பாக்கியது எதுவோ, எலும்பைப் பெண்ணாக்கியது எதுவோ, நீரில் ஏடு எதிர்த்துச் செல்லச் செய்தது எதுவோ, நெருப்பில் வேகாமல் ஏட்டினைச் செய்தது எதுவோ, புத்தனார் தலையில் இடிபடச் செய்தது எதுவோ, பாம்பு கடித்த விஷத்தைப் போக்கியது எதுவோ, பொன் முடிப்பை அருளியது எதுவோ, தீராத சூலை நோயைத் தீர்த்தது எதுவோ, நஞ்சினை(விஷத்தை) அமுதாக்கியது எதுவோ, கொலை செய்ய வந்த யானையைப் பணியச் செய்தது எதுவோ, கடலில்க் கல்லை மிதக்கச் செய்தது எதுவோ, கயிலாயத்தையே மண்ணுலகுக்குக் கொண்டு வந்தது எதுவோ, முதலை உண்ட பாலகனை மீட்டது எதுவோ, இறைவனைத் தூது போகச் செய்தது எதுவோ, ஆண் பனையைப் பெண்பனை ஆக்கியது எதுவோ, செங்கல்லைத் தங்கமாக்கியது எதுவோ, ஆற்றில் இட்ட பொன்னைக் குளத்தில் அளித்தது எதுவோ, வைகை ஆற்றைப் பெருக்கெடுத்து ஓடச் செய்தது எதுவோ, இறைவனைப் பிரம்படி படும்படி செய்தது எதுவோ, நரிகளைக் குதிரைகள் ஆக்கியது எதுவோ, ஊமையைப் பேசும்படி செய்தது எதுவோ, பிட்டுக்கு மண் சுமக்கச் செய்தது எதுவோ, இறைவனே தன் கையால் எழுதிய நூல் எதுவோ, அதுவே ஞான நூல். ஞானத்தை ஆன்மாக்களுக்கு நல்கும் அந்த நூல் தான் தேவாரத் திருமுறைகளில் அடங்கிய பயன் தரும் பதிகங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை ஓதி வழிபடுவது தான் முதலாவது எழில் மிகு பூசையாகும்.

## திருநாவுக்கரசர் கண்ட கயிலைக் காட்சி

நாவுக்கரசர் அண்ணலே! என்னை ஆண்டு கொண்டருளிய அமுதே, விண்ணிலே மறைந்து அருள் புரியும் வேத நாயகனே! என் கண்ணினால் திருக்கயிலாயத்தில் வீற்றிருக்கும் உம் திருக்கோலத்தைக் கண்டு தொழும் பாக்கியத்தை அருள்வீர் என வேண்டினார்.

அடியார்கள் வேண்டியதை வேண்டியவாறே அருளும் இறைவன் நாவுக்கரசனே! நீ இந்தப் பொய்கையிலே மூழ்கி திருவையாற்றையடைந்து திருக் கயிலையில் வீற்றிருக்கும் திருக்காட்சியை அங்கே திருவையாற்றில் காண்பாயாக. என அசரீரியாகக் கூறினார். அந்த அருள் வாக்கைக் கேட்டு நாவுக்கரசர் "நமசிவாய" எனக்கூறி அந்தப் பொய்கையில் மூழ்கி திருவையாற்றிலே ஒரு தாமரைத் தடாகத்தில் தோன்றிக் கரை சேர்ந்து அங்கே சிவபெருமானின் திருக் கயிலாயக் காட்சியைக் கண்ணாரக் கண்டு களித்தார். திருவையாற்றுக் கோயிலும் திருக்கயிலாய மலையாகத் தோன்றிக் காட்சி அளித்தது.

## அருளாளர்களும் திருவாசகமும்

திருவாசகம் என்னும் அணிமிகு அலங்காரப் பொன்வண்ண மாளிகையின் நுழை வாயிலாக சிவபுராணம் அமைந்துள்ளது. சிவபுராணம் சொர்க்க லோகத்தின் சுக போகத்தைத் தெவிட்டச் செய்யும் தேன் அமுதம், ஆன்மீக அன்பர்களுக்கு மகத்தான பெருமை சேர்க்கும் பொக்கிஷம், பிறவிக்கு நற்பயன் சேர்த்து ஒளி காட்டும் திருவிளக்கு.

தமிழ் அன்பர்கள் பெருமையோடும், பேரன்போடும் நெஞ்சம் இனிக்க வாய் நிறைய சமயகுரவர்கள் என்று போற்றப்பட்ட அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் என்னும் நால்வரும் புனித மண்ணில் வழிபாட்டுக்கு உரியவர்களாக திருப்பாதம் பதித்தவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமய குரவர்கள் நால்வர். வைஷ்ணவ சமயத்து ஆழ்வார்கள் பன்னிருவர். இவர்கள் பகவானோடு மனுஷ்ய பாவத்தில் போகி மகிழும் பேராற்றல் பெற்றவர்களைப் போன்ற அருள் நெறிச் செல்வர்கள். இறைவனைக் கண்ணால்க் கண்டு களித்தவர்கள். பக்தியால், அன்பால், அழகு தமிழால் பகவானை ஏவல் கொண்டவர்கள். இறைவன் மீது ஆராக் காதல் கொண்டு, காதலாய்க் கசிந்து, கண்ணீர் மல்கி, பக்தி வெள்ளத்தில் மூழ்கிய இச்சிவனருட்செல்வர்கள் இறைவனின் சோதனைகளை மகிழ்வோடேற்று இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்ட பேரருளாளர்கள்.

ஞான பூமியில் அவதரித்த இந்த ஞானச் செம்மல்கள், தவத்தாலும், அறத்தாலும், தெய்வத் திருப்பாக்களாலும் இறைவனோடு இரண்டறக் கலந்தவர்கள்.

இறைவனின் அளப்பரிய பெரும் கருணையைப் பேரருளை ஊன் உருக, உள்ளொளி பெருகச் செய்த அடியார்கள் நிகழ்த்திய அற்புதங்கள் அனைத்தும் தெய்வத் தன்மை மிகுந்ததாகும்.

"இமைப் பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்று ஈசனை நேசமுற ஏற்றுத் தொழும் திருத்தொண்டர் மணிவாசகர்.

"அவர் அருளாலே அவன் தாள் வணங்கி" என வணக்கம் கூறும் பான்மை நினைக்கதத் தக்கது. தேன் அமுதத் திருவாசகம் தமிழுக்குக் கிடைத்த ஓர் சுகம் தரும் இனிய இலக்கியமாகும். செம்மாப்புடைத்த தமிழ் மறைக் காவியம் திருவாசகம். மெய்ப்பொருளின் சத்திய தரிசனம். அறிவின் திண்மையால் உருவானதன்று திருவாசகம். இனிய அன்பின் தன்மையால் உருவான பக்தி மிகு இலக்கியம்.

திருவாசகம் பாடல்கள் தமிழைத் தாலாட்டும் உல்லாச ஊஞ்சல். திக்கெட்டும் சைவ மணம் பரப்பும் தமிழ்த் தென்றல். கனிவும், பணிவும் கொண்ட பைந்தமிழ்ப் பூங்கா. கேட்கச் செவி இனிக்கும், சொல்லச் சொல்ல வாய் இனிக்கும், பழகப் பழக அருள் மணக்கும். திருவாதவூரர் ஞானத்தமிழ் நூலில் நெஞ்செலாம் பக்தி உணர்வு பொங்கட்டும் நாளெல்லாம் நமக்கு நலம் பெருகட்டும் என வாழ்த்துகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயாசாரமும், ஆலய, கலாச்சாரப் பண்பாடும்

மக்கள் கலை, கலாச்சாரம், பண்பாடு, ஒழுக்கம் ஒழுங்கு நடைமுறைகள் என்று வாய்ப் பேச்சளவில் பேசுகிறார்களே அன்றி செயல் நடைமுறைகளில் எவரும் ஒழுகுவதில்லை.

ஒவ்வொரு மதத்தவர்களுக்கும் அவரவர்களுக்குரிய கலை, கலாச்சாரம், பண்பாடுகள், ஒழுக்க சீலங்கள் என்று வகுக்கப் பட்டிருக்கின்றது. இந்து சைவ சமயக் கலாச்சாரம் மிகவும் சிறந்ததும், புனிதமானதும், ஒழுக்கக் கட்டுப்பாடுகளைக் கொண்டதும், ஆசாரசீலம் நிறைந்ததுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய மதங்களிலும் பார்க்க மேலான கட்டுப்பாடுகளைக் கொண்டதாகும். உதாரணமாக சில மதத்தினர் வீட்டிலும் சரி, ஆலயங்களிலும் சரி கால்களைக்கழுவி சுத்தம்(பாதஸ்னானம்) செய்யாமல் வீட்டுக்குள்ளும் கோயில்களுக்குள்ளும் பாதணிகளுடனேயே செல்வதைக் காண்கின்றோம். ஆனால் எமது இந்துக்கலாச்சாரம் இந்நடைமுறையை அறவே மறுத்து நிற்கிறது. வெளியில் சென்று ஒருவர் வீட்டிற்குள் வரும்பொழுதும் சரி கோயிலுக்குள் செல்வதாயினும் சரி வாயிலில் பாத அணிகளைக் கழட்டிக் கால்களை கழுவித்தான் செல்ல வேண்டு மென்கிறது எமது சைவசமயம். இந்த கட்டுப்பாட்டு விதிமுறைகளின் படி சைவ மக்கள் நடந்து வருகிறார்கள்.

ஆனால் ஒரு சிலர் மேல் நாட்டு நாகரீகத்தில் மூழ்கி இந்து கலாச்சாரத்தை மறந்து அன்னிய மதக் கலாச்சாரத்தைக் கையாண்டு வருவதைக் கண்டு மனவேதனை அடைய வேண்டியிருக்கிறது.

வீட்டுக்குள்ளேயே வெளியில்ப் உபயோகித்த பாதணிகளுடன் நடமாடுவார்கள். வாய், கை, கழுவாது கடதாசி கொண்டு துடைப்பார்கள். அசிங்கமான முறையில்ச் செயல்படுவார்கள். ஆனால் நாகரிகமுடையவர்களென எண்ணிக் கொள்ளுவார்கள்.

தமிழ்ப் பண்பாட்டில் சைவசமய கலாச்சாரப்படி தீப ஜோதியை (தீப ஒளியை) வணங்கி அதில் இறை வழிபாடு செய்வது மரபு. இறைவன் ஜோதி வடிவானவன். இதன் காரணமாக எந்த ஒரு நல்ல காரியம் செய்யும் போதும் தீப ஜோதி ஏற்றி வழிபாடு செய்து மகிழ்வது உறுதியான பக்தியும், தமிழ்ப் பண்பாடும், சமயப்பண்பாடுமாகும்.

ஆனால் இன்று நாகரிக மேம்பாட்டில் இறங்கி தங்களின் மதக் கொள்கைகளை நீக்கி பிற சமயப் பண்பாட்டில் மோகம் கொண்டு தமிழ், இந்து கலாச்சாரத்துக்கு மாறாக பிறந்த தினக் கொண்டாட்டங்கள் கொண்டாடி மகிழ்கிறார்கள். மெழுகு திரியை ஏற்றி வாயால் ஊதி அணைக்கிறார்கள். இந்த நிகழ்வு எங்களின் சைவ சமயக் கலாச்சாரத்துக்கு எதிர்மாறானது. தமிழ்ப் பண்பாடு, இந்து சைவமதப் பண்பாடானது தீபம் ஏற்றி, தீப ஜோதியில் இறைவனை வழிபாடு செய்து ஒளி மயமாக, மங்களமாக வாழ்வதேயன்றி தீபம் அணைத்து வாழும் பண்பாடு இந்து கலாச்சாரத்தில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக நம் இந்து மக்கள் மேல் நாட்டு நாகரீகத்தில் மூழ்கி தமது கலாச்சாரத்தை மறந்து பண்பாடுகள் எல்லாவற்றையும் நீக்கி பண்பாடில்லாத வாழ்க்கை வாழுகின்றார்கள்.

ஏன்? சைவக் கோயில்களிலேயே சைவக் கலாச்சாரத்துக்கு, பண்பாடுகளுக்கு எதிர்மாறாக நிகழ்வுகள் நடத்துகிறார்கள். சைவ விதிமுறைகளின் படி ஆலயம் என்பது ஆன்மாக்கள் லயிக்கும் இடம், நிம்மதி அடையுமிடம். அலைபாயும் உள்ளத்தை நிம்மதியடையச் செய்யும் இடம் ஆலயம். எமது முன்வினை, பின்வினைகள் வேரறுக்குமிடம் ஆலயம். பக்தியை வளர்க்குமிடம் ஆலயம். பாவங்கள் பொடிப்பொடியாகுமிடம் ஆலயம். தனது குறைகளைக் குறைத்து அருளை நிறைத்துக் கொள்ளுமிடம் ஆலயம். இறைவனை நினைந்து தியானம் செய்யுமிடம் ஆலயம். அமைதி நிலவுமிடம் ஆலயம். இப்படியான அருள் நிறைந்த அருள் மிகு புனித ஆலயங்களில் களியாட்டங்கள், எழுச்சிப் பாடல்கள், சினிமாப்பாடல்கள் இவை யாவும் சமயாசரப்படி, ஆகம விதிமுறைப்படி நீக்கப்பட்டவையாகும்.

இதற்கு எதிர்மாறாக மேற்படி நிகழ்வுகள் ஆலயங்களில் நடைபெறுவதற்கு இடம் கொடுத்தால் வெளியிடங்களில், திறந்த வெளியரங்குகளில், மண்டபங்களில் நடைபெறும் களியாட்டு விழாக்கள் போல் புனித ஆலயங்களை மாற்றுவதாக அமையும். இது மிகவும் கண்டிக்கத்தக்கதும், பக்தப் பெருமக்கள் விரும்பாததும், வெறுக்கத்தக்கதுமாகும்.

இவைகளை ஆலயத்தில் நடைபெற அனுமதித்தால் சிறந்தடியார்களின் தியான வழிபாடு, இறைவழிபாடு நிம்மதியற்றதாகி விடும். மனதை ஒரு வழிப்படுத்த முடியாது. தேவையற்ற சிந்தனைகளில் மனம் மூழ்கி விடும். இதன் காரணமாகத்தான் உள்ளத்துக்கு எழுச்சி, கிளர்ச்சியை ஏற்படுத்துகின்ற நிகழ்வுகளை ஆலயங்களில் நடைபெறாது தடுத்து நிற்கிறது எமது சமயம்.

ஆனால் குறிப்பிட்ட ஒரு சில ஆலயங்களில் இப்படியும் விரும்பத் தகாத நிகழ்வுகள் நடைபெறுகின்றது. இது சைவ மக்களுக்கும், தூய பக்தர்களுக்கும், அறிஞர்களுக்கும் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. அதுவும் இந்துக்களின் முக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாட்களில் ஒன்றான ம:ா சிவராத்திரி நன்நாளில் நடைபெறச் செய்வது மிகவும் பாவச் செயலும், சில விரதிகளின் மனதைப் புண்படச் செய்வதொன்றுமாகும். இது காலத்தால் அழியாத வடுவை ஏற்படுத்தி நிற்கும். இதில் ஆலய அறம் காவலர்கள் மிக்க சிரத்தையுடனும், பொறுப்புணர்வுடனும் செயல்பட்டு இப்படியான தவறுகள் ஏற்படாமல்க் காப்பது சைவ உலகுக்குச் செய்யும் பெரும் தொண்டாகும்(சேவை).

ம:ா சிவராத்திரி என்பது அகந்தையை நீக்கி இறைசிந்தனையை ஏற்படுத்தும் ஒரு புனித நாள் இந்துக்களின் பெருநாள் ஒரு பேரருள் நிறைந்த அருட் திருவிழாவாகும். அன்றைய தினம் பக்தர்கள் ஆசாரசீலர்களாக இறைவனை நினைந்து ஒரு மனத்துடன் விரதமிருந்து அன்றிரவு முழுவதும் துயில் கொள்ளாது கண்விழித்திருந்து இறைவனை தங்கள் உள்ளக் கோயிலில் இருத்தி தியானமிருப்பார்கள், செபம் செய்வார்கள், யோக நிலையில் இருப்பார்கள். இரவு முழவதும் எல்லோரும் சேர்ந்து கூட்டு வழிபாடு(பஜனை) செய்வார்கள். நான்கு சாமமும் பூசைகள் கண்டு தரிசனம் பெறுவார்கள், கண்ணீர் சொரிவார்கள், ஆனந்தமடைவார்கள். இவர்களுக்கு இடையூறுகள் ஏற்படாவண்ணம் எழுச்சி நிகழ்வுகள் ஆகம சமய முறைப்படி தடை செய்யப்படுகிறது.

அன்று ஆலயங்களில் நடைபெற வேண்டிய புனிதமானதும், பக்தர்களின் உள்ளத்தை ஈர்க்க வல்லதுமான பக்தியைப் பெருக வைக்கும் அருள்நிகழ்வுகளான முதலிடம் கூட்டு வழிபாடு(பஜனை). எல்லோரும் கூட்டு சேர்ந்து இறைவன் புகழ் பாடிப் பரவசித்தல், சமயச் சொற்பொழிவுகள், (இறைவனின் புதுமைகள்), திருவிளையாடல்கள் பற்றிய சொற் பொழிவுகள், கதாப் பிரசங்கங்கள், பக்தி கீர்த்தனைகள், கருநாடக சங்கீதக் கச்சேரி, பரத நாட்டிய கலைகள் இவைகள் பக்தி நிகழ்வுகளாக துயில் விழித்திருக்கும் அடியார்களுக்கு அருள் விருந்தாக அமையும். இப்படியான அருள் நிகழ்வுகள் கோயில்களில் நடைபெறலாம்.

நித்திரை விழிப்புக்காக அறிவு பக்குவப்படாத காலத்தில் சினிமாப் படங்கள் பார்ப்பார்கள், சூது விளையாட்டுக்கள்(காட்ஸ் விளையாட்டு) இன்னும் பல பொழுது போக்கான நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவார்கள். இது எல்லாம் மகா பாவமாகும் என்று வேத ஆகம நூல்கள் வரையறுத்துக் கூறுவதுடன் அருளாளர்கள், அறிஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள் மூலமும், சொற்பொழிவுகள் மூலமும் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

ஆனால் இவைகளுக்கு மாறாக ஆலயங்களில் புனித விரத காலங்களில் விசேட இந்துப் பெருநாட்களில் எழுச்சிப் பாடல்கள், விளையாட்டுக்கள், பகிடி நாடகங்கள் நடாத்துவதை, பார்ப்பதை, கேட்பதை இந்து மதம் கண்டிக்கிறது.

பொது மேடைகளில் பொது மண்டபங்களில் நடைபெற வேண்டிய கலை நிகழ்வுகளை புனித வணக்கத்துக்குரிய ஆலயங்களில் நடத்துவதால் பக்த அடியார்களின் மன நிலை மாற்றமடைகின்றது. தியானம், செபம், யோகம் செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது. இதனால் குளிக்கப் போய்ச் சேறு பூசுவது போல் ஆகின்றது.

இந்த விடயங்களில் ஆலய நிர்வாகிகள் நுண் அறிவுடன் செயல்ப் பட்டு ஆலய வளர்ச்சிக்கும், பக்த அடியார்களின் வழிபாட்டு வசதிக்கும், பக்திப் பெருக்குக்கும் ஏற்ற வசதிகளைச் செய்ய வேண்டும்.

புனித மகான்களைச் சந்திக்கும் இடம் ஆலயம். சிவாச் சாரியார்களின் மந்திர ஒலி, வேத ஒலி ஒலிக்குமிடம் ஆலயம். இப்படியான புனித, புண்ணியம் மிக்க அருள் நிறைந்த இறைவனின் இல்லமாகிய திருக்கோயிலை களியாட்டு விழா மண்டபமாக ஆக்கக் கூடாது.

ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் ஏற்றபடி உரிய உரிய இடங்களுக்கேற்றபடி நிகழ்ச்சிகளை நடத்துவதேயன்றி, ஆலயங்களில், அருளாளர் ஆச்சிரமங்களில்(இல்லம்) கேளிக்கை நிகழ்வுகள் நடைபெறுவதைத் தவிர்க்க வேண்டும்.

பக்தர்களின் மனதை ஒரு வழிப்படுத்தவும், இறை சிந்தனை, பக்தி ஏற்படவும், இறைவன் மீது அசையாத தெய்வ நம்பிக்கை ஏற்படவும் ஏற்றபடியாகிய நிகழ்ச்சிகளே ஆலயங்களில் நடைபெற வேண்டும். ஆலயம் அருள் நிறைந்ததாக இருக்க வேண்டும். பக்தர்களின் உள்ளத்தில் இறை சிந்தனை நிலைக்க வேண்டும். இதற்கு இரவு பூராவும் கூட்டு வழிபாடே மிகவும் சிறந்ததும், விரும்பத்தக்கதுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்"

## மனிதர்களைக் கும்பிடலாமா?
## மகான்களைப் கும்பிடலாம்.

ஒரு மனிதனை இன்னொருவர் கும்பிடுவது ஏன்? ஒவ்வொரு மனிதரிலும் இறைவன் இருக்கின்றான். பஞ்ச பூதங்கள், ஐம்புலன்கள், மும்மலங்கள் இவைகளின் விளக்கமென்பது என்ன?

பஞ்சபூதங்கள் என்பது இயற்கையைக் குறிப்பிடுகின்றது. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பனவே பஞ்ச பூதங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்புலன்களென்பது மெய், கண், வாய், மூக்கு, செவி. இவை உயிரினங்களுக்கு இருப்பவை(மனிதன்). மும்மலங்கள் என்பது ஆணவம், கன்மம், மாயை.

இயற்கையான பஞ்சபூதங்கள் மூலம் தான் உலகமும் உயிரினங்களும் வாழ்கின்றன. ஏன் விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளுக்கும் இந்தப் பஞ்சபூதங்கள் தான் மூல காரணமாகின்றன.

ஆத்மாக்கள் பரமாத்மா, ஜீவாத்மா என இரு வகைப்படும். பரமாத்மா அகில உலகையும், சகல ஜீவராசிகளையும் ஆட்சி புரிகின்றார். ஜீவாத்மா ஒரு உடலிலிருந்து பஞ்சபுலன்கள் மூலம் ஆட்சி செய்கின்றது. அதாவது மெய், கண், வாய், மூக்கு, செவி இவைகள் மூலம் ஐந்தொழிலைச் செய்கின்றது. நன்மை, தீமைகளைச் செய்கின்றது. பெரிய கட்டிடங்கள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் இப்படி எண்ணற்ற செயல்களைச் செய்கின்றது. ஆனால் உயிரினங்களைப் படைக்க முடியாது. உயிரினங்களைப் பரமாத்மாவால்த் தான் படைக்க முடியும். ஜீவாத்மாவையும் பரமாத்மா தான் வழிநடத்துகின்றது. பரமாத்மா இல்லையேல் ஜீவாத்மா இயங்க முடியாது. ஜீவாத்மா இல்லையேல் ஐம்புலன்கள் இயங்க முடியாது. ஐம்புலன்கள் இல்லையேல் மும்மலங்கள் இயங்க முடியாது. ஒவ்வொருவருள்ளும் இருப்பது தான் கடவுள் என்னும் ஜீவாத்மா. ஒருவரைக் கண்டவுடன் கும்பிடுவது அவருள் இருக்கும் ஜீவாத்மாவை. எனவே தான் ஒவ்வொரு மனிதனும் தெய்வமாகக் கணிக்கப்பட்டு வணங்கப்படுகிறான்.

இந்த ஜீவாத்மா தான் ஐம்புலன்களை இயங்கச் செய்கின்றன. மேலும் ஜீவாத்மா மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை என்ற கட்டுப்பாட்டுக்குள் இயங்குமாயின் இது கெட்ட செயல்களைத் தான் செய்யும். இவைகளால் அழிவும் ஏற்படலாம். மூளையைக் கொண்டு சிந்தித்து ஜீவாத்மா செயல்படுமாயின் மும்மலங்களுக்கு அடிமை ஆகாமல் நடக்குமாயின் எல்லாம் நல்லனவாகவே திகழும். அப்படி நடக்கும் பொழுது அந்த உடம்பு மனித தெய்வ மகானாகிறான். யாவரினதும் வணக்கத்துக்குரிய தெய்வமாகிறான், புகழப்படுகிறான், போற்றப்படுகிறான். உதாரணமாக அருளாளர்கள் இராமகிருஷ்ணர், இராகவேந்தர், ரமணரிஷி போன்றவர்களைக் கூறலாம்.

இந்த ஜீவாத்மா இயங்கும் வரை தான் ஒருவருக்குப் புகழ், கீர்த்தி ஏற்படுகின்றது. அவருடைய பெயரும் வழங்கப்படுகிறது. இந்த ஜீவாத்மா உடம்பை விட்டு நீங்கியதும் ஐம்புலன்கள் செயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழக்கின்றன. பின்னர் பிணம், பிரேதம்(Body) என்று அழைக்கப்படுகின்றது.

மும்மலங்களுக்கு அடிமையாகாமல்ச் செயல்ப்பட்ட ஜீவாத்மா வணக்கத்துக்குரிய சமாதி ஆகிறது. உடலை விட்டு நீங்கினாலும் அவ்வுடலானது வணக்கத்துக்குரியதாகின்றது. அருளலைகள் ஒளி விடுகின்றன. இந்த மகான்களினது ஒடுக்கம் ஒரு திருவிழாவாகவும், இறுதி அந்தியேட்டியை குருபூஜை என்றும் அழைக்கப்படுகின்றது. எல்லாம் ஜீவாத்மாவின் விருப்பு, வெறுப்பைப் பொறுத்ததாகும்.

எம்மை விட பன்மடங்கு மிக்குயர்ந்த மேன்மையாளர்களைத் தலை தரையில்ப் பட விழுந்து வணங்கலாம் தவறில்லை.

ஞானி காந்தம், வணங்குபவன் இரும்பு. காந்தத்துடன் தொடர்புடைய இரும்பு காந்தமாவது போல், ஞானியின் பாதத்தில் தலைவைத்திருக்கும் அஞ்ஞானியும் ஞானியாக முடியும். இந்த வணக்கத்தையே,

"கோளில் பொறியில் குணமிலவே எண் குணத்தான்
தாளை வணங்காத் தலை"

என்கிறது தமிழ் மறை.

## அருளுரைகள்

வேதனையும், சோதனையும் நிறைந்த மனித வாழ்க்கையில் தனது துயரங்களையும், துன்பங்களையும் எடுத்துச் சொல்லி அதிலிருந்து விடுபட இறைவனைத் தேடி அலைகிறான் மனிதன்.

இந்தத் தேடுதல் வேட்டையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தெய்வம் கிடைக்கிறான். அப்படிக் கிடைக்கின்ற இறைவனை அவனுக்குப் பிடித்து விட்டால் பித்து பிடித்தவன் போல் தெய்வத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபட்டு தனக்கு வந்த துயரங்களை தீர்த்து அருள் புரிய வேண்டுமென அவனையே சுற்றிச் சுற்றி வருகிறான். முருகனைப் பிடித்து விட்டால் ஆறு படை வீட்டுக்கு நடையைக் கட்டுகிறான். சிவனைப் பிடித்து விட்டால் காசிக்கு, திருவண்ணாமலைக்கு யாத்திரை போகிறான். அம்பிகையைப் பிடித்து விட்டால் காஞ்சி காமாட்சியிடமும், மதுரை மீனாட்சியிடமும் சென்று சரணடைகிறான். விநாயகரை பிடித்து விட்டால் திருச்சி உச்சிப் பிள்ளையாரிடம் சென்று நிம்மதி அடைகிறான். ஐயப்ப சுவாமியைப் பிடித்து விட்டால் சபரிமலைக்குச் செல்லத் தயாராகிறான்.

எதற்கும் கோயிலுக்குப் போனாலும் சரி போகாவிட்டாலும் சரி, தெய்வத்தைக் கும்பிட்டாலும் சரி, கும்பிடாவிட்டாலும் சரி, பிறரை வஞ்சித்து ஏமாற்றி வாழ்வதை நிறுத்தினால் தெய்வம் அருள்புரியும். துளி கூட மற்றவர்களை ஏமாற்றுவது பிறர் மனம் வருந்தச் செயல்படுவது பெரும் பாவச் செயலாகும். நீதியற்ற செயல்களைச் செய்வதில்லையென விரதம் பிடித்தால் அவனே இறைவன்.

குப்பையில் நெருப்புப் பிடிப்பது போல் மனத்திலுள்ள கவலைகளையம் அழுக்கு எண்ணங்களையும் எரிக்கும் ஒரே ஜோதியாக விளங்குவது தியானம். எம்முள் இருக்கும் கெட்ட குணங்களை தியானம் என்னும் ஜோதியால் எரித்து ஞானம் என்னும் ஒளியை ஏற்ற வேண்டும்.

எங்களுக்கு எதிரிகள் வெளியே இல்லை. எமக்குள்ளேயே பெரும் எதிரிகள் இருக்கிறார்கள். அந்தச் சத்துருக்கள் தான் வஞ்சகம், சூது, பொறாமை, கோபம், பயம், சந்தேகம், சோம்பல் இவைகளே எம்மை சந்தோஷமாக வாழ விடாமல் தடுக்கும் பெரும் எதிரிகளாவர். (இது வனவாசத்தின் போது தமது தம்பி லட்சுமணனுக்கு இராமர் கூறிய அமுத மொழி)

## பக்தி

பக்தி என்பது தெய்வ நம்பிக்கை. குழந்தை தாயை நம்புகிறது. மனைவி கணவனை நம்புகின்றாள். துணி துவைப்பவனை நம்பித் துணிகளைக் கொடுக்கிறோம். வைத்தியரை நம்புகிறோம். நகைத் தொழிலாளியிடம் நம்பி தங்கப் பவுண்களைக் கொடுக்கிறோம் திருப்பித் தருவான் என்ற உறுதியான நம்பிக்கையில். காதலன் காதலியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்புகிறான் காதலி காதலனை நம்புகிறாள். இவைகள் அனைத்ததிற்கும் மேலான கடவுள் மீது உறுதியான நம்பிக்கை வைப்பதற்குத் தயக்கமடைகிறோம்.

பிறந்து விட்டோம் இவ்வுலகில்ச் சொற்ப நாட்கள் தான் வாழப் போகிறோம். மரணமடைந்த பிறகு எங்களுடைய கதி என்ன ஆகுமோ? எமக்குத் தெரியாது. கடவுளுக்குத் தான் தெரியும். இந்தப் பூமியில் சிறிது காலம் வாழும் வரை சந்தோஷத்துடன் இருந்து விட்டுப் போகக் கூடாதா? இந்தப் பூமியில் மனித உயிருக்கு எத்தனை கஷ்டங்கள்? எத்தனை துன்பங்கள்? எவ்வளவு பயம்? எத்தனை கொடுமைகள், எத்தனை அநியாயங்கள் எல்லாவற்றிற்கும் மனிதனின் அறியாமையே காரணம்.

முதலாளியைப் பார்த்து பத்து ரூபா கடன் கேட்கவே தொழிலாளி எத்தனையோ தயக்கங்களைக் காட்டிப் பணம் கேட்க வேண்டியுள்ளது. மந்திரியைப் பார்த்து காரியம் செய்விக்க எத்தனை முறை அவரைத் தரிசிக்க வேண்டியிருக்கிறது. அப்படி இருக்கும் போது எல்லாம் வல்ல சக்தி படைத்த இறைவனை நம்பிச் சரணடைந்து உதவி பெற ஏன் தயங்க வேண்டும்.

சிலருக்கு உணவு மிதமிஞ்சி இருக்கிறது. பலர் உணவின்றி பட்டினியால் மடியும் கொடுமை பூமியில் உள்ளது. நன்செய், புன்செய், தோப்புத்துரவு, நதி, குளம், வாய்க்கால் இவைகளெல்லாம் கடவுளுடைய சொத்து. நாங்கள் எங்களுடையதென்று எல்லை போட்டு வேலி கட்டிக் கொண்டிருக்கிறோம். இவைகளெல்லாம் எவ்வளவு காலத்துக்கு? நாமனைவரும் இறைவனின் பிள்ளைகள் யாவரும் உடன்பிறப்புகள் என்ற மனப்பான்மையோடு ஒற்றுமையாகச் சந்தோஷமாக வாழ வேண்டும்.

பூமி தேவி மனிதர்கள் அத்தனை பேருக்கும் போதுமான உணவு கொடுத்திருக்கிறாள். பூமாதேவியின் பயனை நேரே கையாளத் தெரியாமல் பொறாமையாலும், அறியாமையாலும், தாறு மாறாக நடந்து அடி, பிடி, சண்டை, சச்சரவுடன் வாழுகின்றோம். சிலர் பரிதாபமாகப் பட்டினிச் சாவு அடைகிறார்கள். சிலர் வயிறு முட்டச் சாப்பிட்டு ஜீரணிக்காமல்த் திண்டாடுகிறார்கள். காக்கையிலும் கடைப்பட்டவர்களாக வாழ்ந்து வீணே நலிவடைகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளசிதாசரிடம் அவரது சீடர் ஒருவர் ஆண்டவன் ஆலயத்தில் எழுந்தருளி இருக்கிறானா? அல்லது தூய்மையான பக்தர்களின் இதயத்தில் இருக்கிறாரா? என்று கேட்டார். அதற்குத் துளசிதாரர் புன்னகை பூத்து மெதுவான குரலில் கூறுகின்றார்.

பதில்

எவன் ஒருவன் பிறர் முன்னேறும் போதெல்லாம் தானே முன்னேறுவதைப் போல் எண்ணி மகிழ்ச்சியடைகின்றானோ, பிற பெண்களைக் காணும் போதெல்லாம் தன்னை ஈன்றெடுத்த தாயைப் போல் எண்ணுகிறானோ, பிறருடைய துன்பங்களைக் காணும்போது தானே துன்பமடைவது போல் எண்ணித் துயரப்படுகிறவன் எவனோ, எவன் ஒருவன் தூய்மை நிரம்பிய எண்ணங்களை மனதிலே தாங்கி சதாசர்வ காலமும் அதே நினைவுகளுடன் வாழுகின்றானோ, அவனுடைய இதயத்தில் தானே விரும்பி வந்து குடியிருப்பான் இறைவன்.

ஞானம் என்பது அறிவு. புத்தகத்தை ஆழ்ந்து படிப்பது தியானம் செய்வதற்கு ஒப்பாகும். புத்தகம் இல்லாத இடம் யன்னல் இல்லாத வீட்டிற்குச் சமமாகும்.

புனர்ஜென்மம்

பாவ புண்ணியயங்களுக்கிணங்க மனிதரின் கர்மத்தினுடைய பலனாக அடுத்த ஜென்மத்தில் உயர்ந்த பிறப்பேனும், தாழ்ந்த பிறப்பேனும் கிடைக்குமென்பது நமது தேசத்தின் நம்பிக்கையாகும். பாவம் செய்யும் ஒருவனை பார்த்து அடுத்த ஜென்மம் நீ மிருகமாய்ப் பிறப்பாய் என்றால் அவனுடைய மனம் பதை பதைக்கிறது. ஆனால் இந்த ஜென்மத்திலேயே மனிதர்கள் மிருகங்கள் போல் இருப்பதை கவனிப்பது கிடையாது. ஒவ்வொரு நிமிடத்திலேயும் ஒருவன் நினைக்கும் நினைப்புகளும், செய்யும் செயல்களும் அவன் பலபிறவிகளை அடைவதற்குக் காரணமாகின்றன. மிருகங்கள் போல் நடக்கும் மனிதரை நாம் காண்கின்றோம். எம்மை நாம் கவனிக்குமிடத்து எத்தனை விதமான மிருகங்களாக இருக்கின்றோமென்பது தெரிய வரும். வஞ்சனைகளாலும் சூழ்ச்சிகளாலும் சமயத்திற்கேற்ப பலவித கபடங்கள் செய்து நரி போல் சீவிக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியறிவு இல்லாதவனை மிருகங்களின் கூட்டத்திலும் சேர்க்க முடியாது. அவன் ஒரு மரத்துக்குச்(தூண்) சமமாவான்.

"கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும் மரம்
அவையல்ல நல்ல மரம் சபை நடுவே
நீட்டோலை வாசியான் நின்றான்
குறிப்பறிய மாட்டாதவன் தான் மரம்"

அறிவின்மை, அசுத்தம், சிறுமை, வறுமை, நோய், கொடுமை, பிரிவு, அநீதி, பொய் என்ற இராட்சத குணங்களை அழித்து மனித இனத்துக்கு விடுதலை தரும் பொருட்டாக கல்வி, அறிவு, தூய்மை, பெருமை, இன்பம், செல்வம், நேர்மை, ஒற்றுமை, நீதி, உண்மை என்ற ஒளிகளெல்லாம் தரும் பொருட்டு இறைவனை வேண்டி எமது அறிவைத் தேனாகக் கொடுக்க வேண்டும்.

அடிக்கடி எந்த வார்த்தைகளைச் சொல்கிறோமோ அந்த வார்த்தைகள் மெய்யாகவே பலிக்கும் என்று ஆன்றோர் கூறியுள்ளனர்.

நாட்டிற்குத் தொண்டன் என்று காட்டிக் கொள்வதைக் காட்டிலும் தன்னுடைய குழந்தைகளையும், தன்னுடைய குடும்பத்தில் உள்ளவர்களையும் வளர்த்து தன்னுடைய குடும்பத்துக்காகத் தொண்டு செய்வதில் வெற்றி பெற்றால் அதுவே உன்னதமான தர்மப் பணியாகும்.

பிறர் குறை காண்பவன் அரை மனிதன். தனது குறை காண்பவன் தான் முழுமனிதன்.

சிரித்துக் கொண்டு தீயவைகளை விதைத்தால் அழுது கொண்டு அறுவடை செய்ய வேண்டும்.

சிலர் காலையில்ப் பூசை அறையில் இராம பிரானைப் பிரார்த்தனை செய்து விட்டு அவரைப் போல் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுவார்கள். ஆனால் பூசை அறையை விட்டு வெளியே வந்தவுடன் இராவணனைப் போல் நடந்து கொள்வார்கள்.

உலகில் எத்தனையோ கோடீஸ்வரர்கள் இருக்கிறார்கள். நிலப்பிரபுகள் இருக்கிறார்கள். தொழிலதிபர்கள் இருக்கிறார்கள் எவரையும் உலகம் வணங்கவில்லை. கோடீஸ்வரர்களிடம் உதவிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர்களே அவர்களின் காலைத் தொட்டு வணங்குவதில்லை. சன்னியாசிகளின் (அருளாளர்கள்) கால்களைத் தொட்டுத் தான் வணங்குகின்றார்கள்.

கொடுமை மிக்க நச்சரவுடன் குடியிருப்பது எவ்வளவு அபாயமோ, அதே போல் உட்பகை கொண்டவர்களுடன் உறவு வைத்திருத்தல் பெரும் அபாயமாக முடியும்.

"நாக்கு நுனிக் கண் நறுதேனும் நெஞ்சத்தில்
நீக்கரிய நஞ்சும் நிலை பெற்ற — தீக்குணத்தோன்
இன்சொல் உரைக்கின்றான் என்றவனை நம்பாதே
இன்சொலினில்ச் செய்வான் இடர்"

(நீதி நூல்)

நம்முடைய பலன்கள் எல்லாவற்றிலும் மேலான பலம் ஒன்று உண்டானால் அது பெரியோர்களின் ஆசிதான். இது தான் பெரிய பலமாகும். பெரியோர்களின் ஆசிப் பலன் என்பது இறைவனது அருள் வலிக்கு நிகரானது ஆகும். பெரியோர்கள் என்பது யார்? எனக் கேட்கலாம். வயதில்ப் பெரியவர்களாக இருந்தும் குணத்தில் சிறியவர்களாக இருப்பவர்கள் பெரியோர்களல்லர். பெரியோர்கள் என்பவர்கள் குணக்குன்றாக இருப்பார்கள். ஆற்றல் மிக்கவர்களாக இருப்பார்கள். அருளுடையவர்களாக இருப்பார்கள்.

மனிதர்களை உயர்த்துவது பணமோ, பதவியோ, குலமோ, பருமனோ அல்ல. ஒழுக்கமொன்று தான் மனிதனை உயர்த்தும் ஏணியாகும்.

இராமன் என்ற மனிதன் தன்னுடைய நடத்தையால்த் தெய்வமானான், இராவணன் என்ற மனிதன் தன் நடத்தையால் மிருகமானான், பாண்டவர்கள் தெய்வமானார்கள், கௌரவர்கள் மிருகமானார்கள்.

## சாதி குலம் பற்றி

பிறப்பிலோ, சாதியிலோ எதுவுமில்லை. கடலில்ச் செம்படவன் மீன் பிடிக்கிறான். அதில் விளையும் உப்பு திதி சமயலில்ப் பயன்படுத்தப்படுகின்றது. மானின் உதிரத்தில் விளையும் கஸ்தூரி அம்பிகையின் நெற்றியில் திலகமாக விளங்குகின்றது. பசுவின் உதிரமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலாக மாறி அபிஷேகப் பொருளாகிறது. கோமயம் பஞ்சகவ்யமாக உபயோகப்படுகிறது, சிற்பியில் விளையும் முத்து எல்லாத் தெய்வங்களுக்கும் அணிகலனாகப் பெருமை பெறுகின்றது. எனவே ஆற்றலையும் அறிவையும் பார்க்காமல் பிறப்பை ஆராய்வது பெரும் மூடத்தனமாகும்.

இராம கிருஷ்ணர் உண்மையான பக்தியைப் புலியுடன் ஒப்பிடுகின்றார். புலிக்கு விசித்திர சுபாவமுண்டு. அதற்கு பசி இருக்கிறதோ இல்லையோ கண்ணில்ப் பட்டவைகளை எல்லாம் கொலை பண்ணி விடும். அதே போல் உண்மையான பக்தி ஒருவரிடமிருந்தால் அது எல்லாக் கெட்ட குணங்களையும் அழித்து விடும்.

நாங்கள் நெற்பயிர் போன்றவர்கள் நெற்பயிருக்கு நாள் தோறும் தண்ணீர் விட வேண்டும். விடாவிட்டால்ப் பயிர் அழிந்து விடும். அதே போல் நாங்களும் நாள் தோறும் கடவுளை வணங்க வேண்டும். அப்படி வணங்காவிடில் இறை கடாட்சம் நின்று விடும்.

அருளாளர்கள் பெரிய மரம் போன்றவர்கள் ஆலமரம், அரசமரம், பனைமரம் இவைகளின் வேர்(பெரிய விருட்சங்கள்) ஆழத்துக்குச் சென்று நீரூற்றில் தமக்கு வேண்டிய நீரைப் பெறுகின்றன. எனவே பெரிய விருட்ஷங்கள் அழிவதில்லை. அதே போல் அருளாளர்கள் இறையருள் பெற்று இறைவனோடு கலந்திருப்பதால் இறையருள் அவர்களிடம் நிறைந்திருக்கிறது.

மனிதன் ஆரம்பிக்குமிடம் இன்பமான சூழ்நிலை. அவன் முடியுமிடம் மரணம் என்ற அமைதியான காலநிலை. குழந்தை, இளமை, கிழம், மூப்பு, பிணி, நோய் இதற்கெல்லாம் பிறகு மரணம். கண்ணுக்குத் தெரியாத ஒன்று.

புத்தகம் இல்லாத வீடு யன்னல் இல்லாத அறைக்கு ஒப்பாகும். விசாலமான யன்னல்கள் நமக்கு சூரிய ஒளியையும், நல்ல காற்றையும் தந்து உடல் ஆரோக்கியத்தை அதிகப்படுத்துவது போல் நல்ல நூல்கள்(Books) நம் அறிவை விலாசப்படுத்துகின்றன. விருப்பம் கொண்டு புத்தகத்தை ஆழ்ந்து படிப்பது தியானம் செய்வதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பாகும். புத்தக அறிவால் பணம், புகழ், அறிவு மூன்றும் இணைந்தே நமக்குக் கிடைக்கின்றது.

அடக்கமுடையவர்கள் மேன் மக்கள். இவர்கள் தங்கள் செல்வத்தினாலும், அதிகாரத்தினாலும் ஒரு போதும் கர்வமடைவதில்லை. இதற்கு உதாரணமாக பூக்களும், காய்களும், பழங்களும் அதிகம் சுமந்து கொண்டிருக்கும் மரம் நிமிர்ந்து நிற்காது. பணிவினால்க் குனிந்து நிற்கும். இது தான் மிக உயர்ந்தவர்களின் சிறந்த குணமாகும்.

அரவணைக்கும் அன்னையும் இனிய மனைவியும் இல்லாத வீட்டில் இருப்பதைக் காட்டிலும் காட்டிற்குச் செல்லலாம். ஏனெனில் இரண்டிற்கும் வேறு பாடில்லை.

மனிதன் முதல் கட்டுப்பாட்டோடு வைக்க வேண்டியது நாக்கை பேச்சில், சாப்பாட்டில்.

பிரார்த்தனை என்பது அறியாமையில்ப் பிறந்தது அல்ல. அறிவில்த் தோன்றியது. கடவுளே என்னைக் காப்பாற்று என்று வேண்டுவது கூட இயலாமை அல்ல. நம்மை விடச் சக்தி வாய்ந்த ஒரு பொருளின் துணையை நாடுவது தான். இது மூட நம்பிக்கையா? அல்லது அறிவின் தெளிவா? மதம் என்பது மனம் இதமாக இருக்க அமைந்தது.

## இயற்கையின் தத்துவம்

மனிதனுக்குத் தேவையான எல்லாவற்றையும் கடவுள் உருவாக்கியுள்ளார். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இவகளெல்லாம் இறைவனின் அங்கங்கள். இறைவனின் இன்னருளால் அறிவியல் அறிஞர்கள் இவற்றிலிருந்து பல்வேறு வகைப்பட்ட பொருள்களைப் புதிதாக உருவாக்குகின்றார்கள். அறிவியல் அறிஞர்கள் ஏனோ தானோ இந்தப் புதிய பொருட்களைப் புதிதாக உருவாக்குகின்றார்கள் என்று எண்ணுகின்றார்கள். உண்மையில் யாரும் எதையும் உருவாக்க முடியாது. உண்மையில் எதிலும் உருமாற்றமே தவிர புதிய ஆக்கம் எதுவுமே இல்லை. உதாரணம் நீர்வீழ்ச்சியின் சக்தியைக் கொண்டு மின்சாரத்தை உருவாக்குகின்றோம். மின்சாரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் அறிஞர்கள் புதிதாக உருவாக்கவில்லை. நீரிலுள்ள சக்தி மின்சாரமாகப் பயன்படுகிறது.

பூமிக்குள் இருக்கும் தண்ணீரை பூமிக்கு மேலே கொண்டு வருவதற்கு தொழில் நுட்பம் உதவுகிறது. பூமிக்குள் ஏற்கனவே இருக்கும் தண்ணீரைத் தான் மேலே கொண்டு வருகிறோம். அதுவன்றி புதிதாகத் தண்ணீரை யாரும் உருவாக்குவதுமில்லை அதற்காக நீரை இல்லாமல்ச் செய்து விடவும் முடியாது. அடிப்படையான எந்தப் பொருளையும் மனிதனால் உருவாக்கவோ அல்லது அழிக்கவோ முடியாது. இதை நன்கு புரிந்து கொண்டால் இயற்கையிலுள்ள தெய்வாம்சத்தை நாம் நன்கு உணர முடியும்.

நம்மை நாம் எப்படிப்பட்டவர்களாக கருதுகிறோம் என்பது முக்கியமல்ல. அடுத்தவர்கள் நம்மை எப்படிக் கருதுகிறார்கள் என்பது தான் முக்கியம். மற்றவர்களுடைய கருத்துக்கு மதிப்பளித்து அவர்களிடம் அன்பாகவும் மென்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

புத்தகங்களின் மகிமை

மனிதப் பிறவிக்கு அடுத்து இவ்வுலகில் விந்தையான பொருள் புத்தகம் தான். ஏனென்றால் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் உள்ளவர்களுடன் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர்களுடனும் நாம் இன்றும் உரையாடிக்கொண்டு இன்புற உதவும் அரிய சாதனம் புத்தகம் தான்.

புத்தகங்கள் ஞானப் பெட்டகத்தைத் திறக்கும் சாவிகள். நம்மை உய்விக்கும் வழிகள் நம் நண்பர்கள்.

மனித வாழ்வு என்பது பிறப்பு, வாழ்வு, இறப்பு இம்மூன்றும் அவனால் அறிந்து கொள்ள முடியாதவை. பிறக்கும் போதும், இறக்கும் போதும் அழும் மனிதன் வாழும் காலத்தில் மனம், வாக்கு, காயம் இம்மூன்றையும் சுத்தமாக வைத்திருந்தால் மரணத்துக்கு ஒரு போதும் அஞ்ச வேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட்டைப் பூச்சியைப் போல் பிறரைத் துன்புறுத்தக் கூடாது. எலியைப் போல்த் திருடி வயிறு வளர்க்கக் கூடாது. கறையான்கள் போல் பிறர் பொருளை நாசப்படுத்தக் கூடாது.

தேனீயைப் போலவும், எறும்பைப் போலவும் உழைத்து உண்ணுவதே நெறியான வாழ்க்கையாகும்.

எவ்வளவு தான் படித்திருந்தாலும் கலாச்சாரம் இன்றி நடந்து கொண்டால் மதிப்பும் மரியாதையும் பெற முடியாது.

புத்தியின்றி, ஒழுக்கமின்றி நடந்துவிட்டு சமுதாயம் மதிக்க வேண்டுமென எதிர்பார்க்கலாமா?

"பற்பல நூல் கற்றுணர்ந்த பண்டிதனே ஆனாலும்
நற்குணங்கள் எள்ளளவும் நண்ணாத – துர்க்குணனை
முற்றவெறுக்க முடிமேல் மணி இருந்தென்
புற்றரவைக் கிட்டார் புகுந்து"

## பிள்ளை வளர்ப்பு (குழந்தை)

பிள்ளைகள் கெட்டுப் போவதற்குக் காரணம் 99% பெற்றோர்கள் தான். மக்களுடைய மனம் புண்படாமல் இருப்பதற்காகப் பணம், சுதந்திரம் கொடுக்கிறார்கள். இது ஒரு தவறான வழியாகும். இதனால் பிழையான வழிகளில்ச் சிக்கி நடந்து கொள்ளும் போது மனம் வருந்துகிறார்கள். ஆரம்பத்திலிருந்தே குழந்தை நல்ல முறையில் வளர்க்கப்பட வேண்டும். வீதியில் வேகத்தடை அமைக்கப்பட்டு வாகனங்களின் வேகத்தைக் குறைப்பது போல் பிள்ளைகளின் சுதந்திரத்திலும் அவர்களின் பாதுகாப்புக்காக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும். பெற்றோர்கள் குழந்தைகளுக்கு சுதந்திரம் கொடுக்கும் போது அவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதையும் கவனித்து எடை போட வேண்டும். நல் ஒழுக்கம் மீறித் தவறு செய்யும் போது குழந்தைகளுக்கு எவ்வித தயக்கமுமில்லாமல் அதற்குரிய தண்டனை அளிக்க வேண்டும். அப்போது குழந்தை நல்வழியில்ச் செல்லும்.

குழந்தை நல்ல ஒழுக்கமுடன், பண்புகளுடன் வாழப் பழக்குவது முதல்ப் பொறுப்பு தாயினுடையதாகும். சாதாரணமாக ஒரு குடும்பத்தில் மகள் தவறான வழியில்ப் போனால் தாயும், மகன் தவறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தால் தந்தையும் பொறுப்பாவர். எனவே பிள்ளை வளர்ப்பில் தாயும், தந்தையும் பொறுப்புடன் கவனம் செலுத்த வேண்டும்.

"எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல
குழந்தை தான்
அவர் நல்லவராவதும் தீயவராவதும்
அன்னை வளர்ப்பினிலே"

(கண்ணதாசன்)

## அருளுரைகள் 2

கோபம்

சினம் என்னும் கோபத்தினால் நீங்கள் இழக்கும் உடல் நல இழப்பை நினைவு கொள்ள வேண்டும். இரத்தம் சூடேறுகிறது. இரத்த அழுத்தம் அதிகரிக்கின்றது. இருதயத் துடிப்பு கூடுகின்றது. நரம்புத் தளர்ச்சி ஏற்படுகின்றது. பொதுவாக உடல் இயக்க ஒழுங்குகள் சீர் குலைகின்றது. உறவினர், நண்பர்கள், பெண்டிர், பிள்ளைகள் உங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்க அஞ்சுகின்றனர். எனவே கோபத்தால் ஏற்படும் பிரச்சனைகள் ஏராளம் ஏராளம். ஆதலால்த் தான் "ஆறுவது சினம்" என்றார் ஔவையார்.

அமைதி வேண்டுமாயின் யார் மீதும் கோபப் படக்கூடாது. மற்றவர்களின் தவறுகளை மன்னித்து விட வேண்டும். மனதில் எப்பொழுதும் அன்புணர்வை நிறுத்த வேண்டும். இது மனதை அமைதிப்படுத்தும் முறையாகும்.

இல்லறத்தான்

ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் முக்கியமாகத் தேவைக்குரியது முதலில் அறிவு. இரண்டாவது செல்வம். இது அவனது கடமை. கடமையைச் செய்யாதவன் மனிதனே அல்ல. செல்வம் சேர்ப்பதற்காக இல்லறத்தானாகிறான். அவனை நம்பி நூற்றுக் கணக்கானோர் உள்ளனர். அவன் செல்வந்தனானால் நூற்று கணக்கானோர் உதவி பெறுவார்கள்.

செல்வம் சேர்க்க வேண்டுமென்ற துடிப்போடு ஒரு நூறு பேராவது இல்லை என்றால் இந்த நாகரீகமும் அன்ன சத்திரங்களும், மாளிகைகளும் இங்கே இருக்க முடியுமா? எனவே பணம் சேர்ப்பது தவறல்ல. ஏனென்றால் அந்தப் பணம் பகிர்ந்தளிக்கப் பட வேண்டியது. பயன் படுகிறது. வாழ்க்கை மற்றும் சமுதாயத்தின் மையமாக இல்லறத்தான் இருக்கின்றான். எனவே நல்ல வழியில்ச் செல்வம் சேர்ப்பதும், செலவிடுவதும் அவனுக்கு ஒரு வழிபாடாகின்றது. நல்ல காரியங்களுக்காக நல்ல வழிகளில்ப் பணம் சம்பாதிப்பதற்காக உழைக்கின்ற இல்லறத்ததான் செய்வதும், குகையில் அமர்ந்து முக்திக்காகப் பிரார்த்தனை செய்கின்ற தவசிகள் செய்வதும் விஷயத்தில் ஒன்றுதான்.

சொந்த நாட்டிற்காகவோ மறத்திற்காகவோ போரிட்டு மரணமடைபவன், தியானத்தின் மூலம் ஒரு யோகி செல்கின்ற அதே இடத்திற்கு செல்கின்றான்.

இறைவனை வழிபடுவதற்காக உலகத்தை துறந்து செல்கின்ற ஒருவன் உலகத்தில் வாழ்ந்து உலகின் நன்மைக்காகச் செயல் புரிந்து கொண்டிருப்போர் எல்லாம் இறைவனை வழிபடாதவர்கள் என்று நினைக்கக் கூடாது. அது போலவே குடும்பத்தில் மனைவி மக்களோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் இல்லறத்தான் உலகைத் துறந்து வாழும் துறவியரைப் பயனற்ற நாடோடிகளென்று கருதக் கூடாது. அவரவர் இடத்தில் ஒவ்வொருவரும் பெரியவரே.

சிலர் பணத்தை விரும்புகிறார்கள், சிலர் புகழை விரும்புகிறார்கள், சிலர் அதிகாரத்தை விரும்புகிறார்கள், சிலர் சொர்க்கத்தை விரும்புகிறார்கள்.

சிலர் எல்லா விதமான பாவங்களையும் செய்த பிறகு ஒரு கோயிலைக் கட்டுவது, அந்தணர்களுக்கு லஞ்சம் கொடுத்து சொர்க்கத்துக்குப் போவதற்கான பயணச் சீட்டை அவர்களிடம் வாங்கி விடுவார்கள். இப்படிச் செய்து விட்டால் தங்கள் பாவங்கள் நீங்கி விடும். தண்டனையே இல்லாமல்த் தப்பித்துக் கொள்ளலாம் என்பது இவர்கள் எண்ணம்.

நல்ல மனமும், அமைதியும், ஆராய்ந்து தெளிவும், குணமும், குளிர்ந்த சிந்தனையும், மிகுந்த கருணையும், அன்பும் உடையவர் தான் உலகிற்கு நன்மை செய்பவராகிறார்.

இறைவன்

உலகில் நாமே பெரிய மனிதர்களென்று நீங்களும், நானும் இன்னும் நம்மைப் போன்ற லட்சக் கணக்கானோரும் நினைத்துக் கொள்கிறோம். ஆனால் நாம் அத்தனை பேரும் ஐந்து நிமிடத்தில் சாகப்போகிறோம். உலகம் நம்மை மறந்து விடப் போகிறது. ஆனால் இறைவனோ என்றென்றும் இருப்பவர். எல்லாம் வல்ல இறைவன் திருவுள்ளம் கொள்ளவில்லை என்றால் ஒரு கணம் கூட யாரால் உயிர் வாழ முடியும்? யாரால் சுவாசிக்க முடியும்? எப்போதும் செயல்பட்டுக் கொண்டிருக்க முடியும் தலைவர் அவர். எல்லா ஆற்றலும் அவருடையது. எல்லாம் அவருடைய அதிகாரத்தின் கீழ் உள்ளது. அவருடைய கட்டளையால்த் தான் காற்று வீசுகின்றது. சூரியன் ஒளி தருகின்றது, உயிர்கள் வாழ்கின்றன, மரணம் பூமியின் மீது நடை போடுகின்றது எல்லாம் அவரே.(இறைவன்)

கடவுள் ஒருவர். அவர் மரணமற்றவர். எந்நேரமும் செயல்புரிபவர். விழித்துக் கொண்டே இருப்பவர். அண்ட சராசரங்கள் அனைத்தும் உறங்கும் போது அவர் உறங்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள் உரை

நமது ஆத்மா என்றும் அழியாதது. நமது உடல் அழியக் கூடியது. அழியும் உடலுக்கு சுகம் தேடும் பொருட்டு அதர்மத்தைப் பின்பற்றி ஆன்மாவுக்குக் கேடு விளைவிக்கக் கூடாது. தீய செயல்கள், தீய சிந்தனைகள், தீய பேச்சுக்கள் ஆகியவற்றால் ஆன்மாவுக்கு கேடு விளைவிப்பது பெரும் பாவம் ஆகும்.

## மஃாசிவராத்திரி

ஒப்பற்ற அடைக்கலமளித்து ஆலகால விஷத்திலிருந்து உயிர்களைக் காத்த ஈசனின் கருணையை நினைவு கூரும் நாளே சிவராத்திரி என்று கூறப்படுகின்றது. ஈசன் நஞ்சை உண்ட பிறகு சற்று களைத்தவர் போல் காட்டிப் பள்ளி கொண்டார். அவர் விழித்தெழும் வரை உமையம்மை உட்பட எல்லோரும் கண்ணுறங்காமல் விழித்திருந்து சிவனை வழிபட்ட அந்த இரவே சிவராத்திரி என்றும் ஒரு வரலாறு உண்டு.

தொட்டிலில் அழுகை, கட்டிலில்ச் சிரிப்பு இரண்டுக்கும் இடையில் நடிப்பு. இவையெல்லாவற்றையும் தாண்டிச் சிந்திப்பு. இது தான் வாழ்க்கை.

ஆறுதல் கூற ஆயிரம் வார்த்தைகள், ஆயிரக்கணக்கானோர், ஆனால் அனுபவிப்பது நீ மட்டும் என்பதை மறந்து விடாதே.

போதித்த புத்தன், வழிகாட்டிய யேசு, சாதித்த காந்தி இவர்களெல்லாம் சோதிக்கப்படவில்லையா? அற்பமான எங்களுக்குச் சோதனைகள் பெரிதல்ல.

விரும்பி யாரும் விளைவுகளை ஏற்பதில்லை. ஆனால் விளைவுகள் விரும்பாவிட்டாலும் வந்தடையும் அதை யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

## உண்மையான கடவுள் வணக்கம்

மனதையும், புலன்களையும் கட்டுப்படுத்துதலும், தன்னுடைய கடமைகளை உண்மையாகவும், எதையும் விரும்பாமல் நிறைவேற்றுதலும், மற்ற உயிர்களுக்குத் தீங்கு விளைவிக்காமல் இருப்பதும், கடவுளிடமும், குருவிடமும், பெரியோர்களிடமும் உண்மையான பக்தியோடு இருப்பதுமே கடவுளுக்கு மிகுந்த திருப்தியை அளிக்கும் பெரும் தவமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியானம்

ஆன்மீக வாழ்க்கையில் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டியது தியானம். தியானத்தால் வரும் நன்மைகள் (1)ஐம்புலன்களையும் கட்டுப்படுத்த முடியும் (2) சுவாசம் சீரடையும் (3) இரத்த ஓட்டம் சீரடையும் (4) உடல் உபாதைகள், மனக் கோளாறுகள் நீங்கும் (5) இளமை பாதுகாக்கப்படும் (6) பார்வை பிரகாசம் பெறும் (7) நோய்கள் நீங்கி நீண்ட ஆயுளைக் கொடுக்கும் (8) கழுத்து மற்றும் முதுகுத் தண்டு பலம் பெறும். (9) வாதம், பித்தம் சமநிலை பெறும். (10) கோபம், பொறாமை, பேராசை, காமம், அடங்கும்.

தியானம், பக்தி, ஜெபம் முதலிய நல் ஒழுக்கங்களைக் கொண்டு ஒருவன் தன் உள்ளத்தைத் தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். இறைவனை வழிபடுவதற்கு தீவிரமான ஆவலும், ஆசையும், அர்ப்பணிப்பும் இருந்தால் போதும். இறைவனைத் தரிசிக்க முடியும். கடவுளைக் காண முடியும். என்ற நம்பிக்கை நமக்கு ஏற்பட வேண்டும். ஓர் ஏக்கத்துடனும், பரிதவிப்புடனும் உள்ளம் உருகி நைந்து நைந்து இறஞ்சி வழிபட வேண்டும். உலக ஆசைகள், உண்மையான பக்தியையும், தூய்மையையும் நமக்குத் தெரிய விடாமல் மூடிவிடுகின்றன.

மானிடக் கோயிலாய் மனித சாயலாய் வாழ்பவர்கள் தான் அருளாளர்கள்.

## மொழி

மொழி என்பது ஒரு இனத்தின் உயிர். மொழி நசிந்தால் அந்த இனத்தின் வரலாறு இடுகாட்டில் புதையுண்டு போகும். தமிழ் ஞாலத்தின் தாய் மொழி. மேலும் திருக்குறள் வாழ்வுக்கு வரைவிலக்கணம் வகுத்த மாமறையாகும். நாயன் மார்களின் அன்பு கனிந்த திருமுறைகள் உள்ளன.

## திருமுறைகள்

திருமுறைகள் பொன்னும் பொருளும் தரவல்லது. சோறும், கூறையும் அருள வல்லது. நாளையும், கோளையும் நல்லனவாகச் செய்வது, கொடு நோய்கள் நலியா வண்ணம் கவசமாய் அமைவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறைகள் ஓதுவதால் உலக சுகங்கள் உண்டாகும். உலகமெங்கும் பேரின்பம் உண்டாகும். சிவானந்தப் பேரின்ப வெள்ளம் பெருகும்.

## பாடவேண்டியவை

மூவரின் தேவாரங்கள், விநாயகர் அகவல், சிவபுராணம், அபிராமி அந்தாதி, கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், திருமுருகாற்றுப் படை, திருப்புகழ், திருவாசகம், சேக்கிழார் பெரிய புராணம்.

## மனச் சாட்சி

தான் செய்யும் செயல்களுக்கும் பொறுப்பேற்றுக் கொள்ளும் நிலையில் மனிதன் இருக்கிறான். ஏனெனில் நன்மையையும் தீமையையும் பகுத்துணரும் ஆற்றல் அவனுக்கிருப்பதால் அவன் செய்யும் நன்மை, தீமை ஆகிய இரண்டுக்கும் பொறுப்பேற்க வேண்டிய கடமை அவனுக்கு உண்டு.

மனிதனுக்குக் கீழ்ப்பட்ட உயிரினங்கள் பொறுப்பற்றவை. செயல்களுக்கு அவை வருந்துவதுமில்லை வெட்கப் படுவதுமில்லை. அதாவது அவற்றுக்கு மனச்சாட்சி இல்லை. மனிதனுக்கு மட்டும் மனச் சாட்சி உண்டு. அதுவே அவனுடைய தனிச் சிறப்பாகும்.

## அருளாளர்களின் சேவை

அருளாளர்களின் வாழ்க்கை தனிப்பட்ட வாழ்க்கையாகும். அவர்களுக்கு வாழ்க்கை முக்கியமானதாக இருக்கவில்லை. மனித சமுதாயத்தின் ஒட்டு மொத்த வாழ்க்கையைப் பற்றி அவர்கள் கவலைப்பட்டார்கள். அவர்களின் வாழ்க்கையை மேம்படச் செய்ய தங்களை வருத்திக் கொண்டார்கள். உயிர்த்தியாகம் தேவைப்பட்ட போது அதற்குக் கூடத் தயாராக இருந்தார்கள்.

யேசு சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீர்த்தார். புத்தர் அரச போகத்தைத் துறந்து துறவியானார். ஆன்மீக மகான்கள் இப்படியாக தங்களைத் துன்பப் படுத்திக் கொண்டு மக்கள் வாழ வழி காட்டியவர்கள்.

வெறும் வசதிகளை மட்டும் மனித வாழ்க்கைக்கு ஏற்படுத்திக் கொடுத்த விஞ்ஞானிகளின் செயற்பாடுகள் வேறு. மனித வாழ்க்கையை உன்னத நிலைக்கு இட்டுச் செல்ல முயன்ற மெய்ஞ்ஞானிகளின் செயற்பாடு வேறு.

புற வளர்ச்சியை விஞ்ஞானம் ஏற்படுத்தியது. அக வளர்ச்சியை ஆன்மீகம் ஏற்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன அமைதி என்பது வசதிகளால் மட்டும் கிடைத்து விடுவதில்லை. வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும் மனிதன், பிரச்சனைகளையும் பெருக்கிக் கொள்கிறான். பிரச்சனைகளுக்குத் தீர்வைக் காணமுடியாமல் அல்லல்ப் படுகிறான். நிம்மதியைத் தேடி அலைகின்றான்.

உனக்கு வெளியே நிம்மதி இல்லை. அது உனக்குள்ளேயே இருக்கிறது என்கிறது ஆன்மீகம்.

மகான்களின் மகத்துவம்

யேசு நாதரின் தோற்றமும், ஒரு புத்தரின் பிறப்பும், ஒரு சங்கரரின் ஆன்ம சக்தியும், ஒரு இராமனுஜர் ஏற்படுத்திய மாற்றமும். ஒரு இராமலிங்க அடிகளின் உபதேசமும், ஒரு இராமகிருஷ்ண பரமஃம்சரின் ஆன்ம பலமும், ஒரு விவேகானந்தரின் சக்தியும், மனித சிந்தனையிலும், மன வளர்ச்சியலும் ஏற்படுத்தியுள்ள பிரமிக்கத்தக்க மாற்றங்கள் மனித சமுதாயத்தை மேம்படுத்தியுள்ளதை எந்தச் சமூகஞானியும் மறுத்து விடமுடியாது.

ஆன்மீக உணர்வை வளர்ப்பதே சமயத்தின் நோக்கம். நம்மைச் சுற்றிலும் மகத்தான சக்தி வியாபித்திருக்கின்றது. நமக்குள்ளேயும் அந்தச்சக்தி இருக்கிறது. நம்முள் இருக்கும் அந்தச் சக்தியை வளர்த்துக் கொள்ளும் போது பிரபஞ்ச சக்தியோடு அது ஐக்கியமடைய வாய்ப்பு ஏற்படுகின்றது. அந்த நிலையில் மனிதன் அதீத சக்திகளைப் பெறுகிறான்.

சாதாரண மனிதர்கள் செய்ய முடியாத அற்புதங்களை சில மனிதர்கள் நிகழ்த்தும் போது மற்றவர்கள் அவர்களை அதி மனிதர்களாகக் கருதுகிறார்கள். அவர்களிடம் மக்களுக்கு ஒரு பக்தியும் ஈடுபாடும் ஏற்படுகிறது. அவர்களைத் தெய்வீக சக்தி படைத்தவர்கள் என்று நம்பத் தொடங்குகின்றார்கள். ஏனெனில் தெய்வம் மனிதனிலும் பேராற்றல் படைத்ததாக இருக்க வேண்டுமென்கின்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மேலான சக்தி படைத்தவர்கள் தெய்வீக மனிதர்கள் என்று எண்ணிடும் நிலமை ஏற்படுகின்றது.

பகவானின் சந்நிதிக்கு வருபவர்கள் எவரும் வெறும் கையோடு திரும்பிப் போவதில்லை என்பது நிச்சயம். அவரவர் சக்திக்கேற்றபடி அதிகமாகவோ, அற்பமாகவோ அருள் பெற்றுச் செல்கின்றனர்.

மனிதரின் நல்வாழ்விற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியாகிய அருளும், கல்வியாகிய அறிவும் மிகமிக அவசியமாகும். கல்வி இம்மை வாழ்வுக்கான வசதிகளைத் தரவல்லது. ஆனால் அருள் என்னும் பக்தி நெறியோ இம்மை எனப்படும். இப்பூவுலக வாழ்விற்கு தேவையான நலன்களைத் தருவதுடன் அழியாப் பேரின்பத்தையும், நிலைப் பேற்றையும் தர வல்லது. அறிவு, அருள் இவை இரண்டையும் தருபவன் இறைவன்.

"யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற
வேலவர் தந்ததனால்"

(திருப்புகழ்)

ஒருவன் செய்யும் நற்கருமங்கள் அவனுக்குக் கவசமாக இருக்கின்றது. அவன் அறிந்தோ அறியாமலோ செய்யும் குற்றங்கள் அவனைத் தரம் தாழ்த்துகிறது.

## ஐம்புலன்களின் உணவு

நாம் உண்ணும் உணவு தூய்மையாகவும், சாத்வீகமாகவும் இருந்தால்த் தான் சித்த சுத்தி அமையும் என்று கருத்துத் தெரிவிக்கின்றார்கள். ஆகாரம் என்றால் வயிற்றுப் பசிக்குத் தரப்படும் உணவு மட்டுமல்ல, ஐம்புலன்களால் அனுபவிக்கப்படும் பொருள்கள் அந்தந்தப் புலன்களுக்கு உரிய உணவாகும்.

உதாரணமாக ஒருவன் ஒரு பெண்ணை தீய இச்சையுடன் பார்த்தால் அது கண் என்ற புலனுக்கு தரப்பட்ட தீய உணவாகும். இதுபோல் தீய சிந்தனைகள் உள்ளத்திற்குத் தரப்படும் தீய உணவாகும். ஜெபம், தியானம், பிரார்த்தனை, பஜனை போன்றவை உள்ளத்திற்குத் தரப்படுமம் தூய உணவாகும். எனவே ஆகாரம் தூய்மையாக இருக்க வேண்டும். என்பதில் நாம் உட்கொள்ளும் உணவு நம்புலன்களுக்குத் தரும் உணவு, நம்மனதிற்குத் தரும் உணவு ஆகியவை அடங்கியுள்ளன.

## நம் முன்னோர்கள்

நம் முன்னோர்கள் நாணயம், ஒழுக்கம், நீதி, நெறி, மனித நேயம் இவைகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தார்கள். இன்றய நிலையில் கல்வி, பொருளாதாரம், விஞ்ஞானம் இவற்றில் மக்கள் மிகுந்த முன்னேற்றமடைந்தவர்களாக இருந்தும் மனித நேயத்தை முற்றிலும் மறந்து இயந்திர வாழ்க்கையில் மூழ்கி விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருட்டும், பொய்யும், அதிகாரமும், ஆணவமும், பதவி மோகமும், அளவில்லாப் பொருளீட்டும் ஆசையும் மக்களைச் சீர் குலைய வைக்கிறது.

## மனிதரைக் கும்பிடலாமா?

ஒரு அடியார் சுவாமிகளைப் பார்த்து நீங்கள் இறைவனா? மனிதனா? என்று கேட்டார். தயக்கமில்லாமல் சுவாமி ஸ்ரீ இறைவனின் தொண்டன் என்று பதிலளித்தார். அவர் சுவாமிஜிகளின் திருவடிகளைத் தொட்டு வணங்குவதற்காகக் குனிந்தார். இதில் அதிர்ச்சியடைந்த சுவாமிஜி ஸ்ரீ தமது பாதத்தை அவர் தொடாதவறு தடுத்தபடியே இறைவனின் முன்னிலையில் எனது பாதத்தை ஒரு போதும் வணங்கக் கூடாது என்று கூறி அதற்கு விளக்கம் கூறினார்.

அரசனின் முன்னிலையில் அவருடைய சேவகனின் காலைத் தொட்டு வணங்கி மரியாதை செலுத்துவது முறையா? என்றார்.

## உடம்பு ஒரு கோயில்

உடலை நரகமாக்கி விடக்கூடாது. புனிதமான ஆலயமாக்க வேண்டும். பொறுமை, கருணை, ஒழுக்கம், திருப்தி போன்றவை இந்த ஆலயத்தை அலங்கரிப்பவையாகும். புறத்தில்க் கவர்ச்சியாக அலங்கரித்துக் கொண்டு மனதை அழுக்கு மிகுந்ததாக வைத்திருப்பதால் என்ன பயன்? மனதைத் தூய்மைப் படுத்தி இறைவனைப் பிரதிஷ்டை செய்து உடம்பென்னும் ஆலயத்தை புனிதமாக்குவதே பிறவியின் பயன்.

## இறைவன்

இறைவன் சிதம்பரத்தில் ஆடுகிறார், ஸ்ரீரங்கத்தில் துயில்கிறார், பழனியில் நிற்கிறார், திருவாரூரில் அமர்ந்திருக்கிறார்.

கண்ணபிரான் வெண்ணெய் திருடினார். முருகவேள் செம்மான் மகளைத் திருடினார்.

## பொன்மொழி

வீணே மனதை கெட்ட எண்ணங்களால் நிறைத்து குப்பைத் தொட்டியாக்கக் கூடாது. பூந்தொட்டியாகச் செய்து கொள்ளவும். உள்ளம் பூந்தொட்டியானால் அங்கு பூமகள் குடியிருப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியின் பயன் அறிவு, அறிவின் பயன் ஒழுக்கம், ஒழுக்கத்தால் வருவது உயர்வு.

பள்ளிகள், கல்லூரிகளால் மட்டும் அறிவை வளர்த்து முற்றுப் பெறுவதில்லை. அறிவு வளர்ச்சி விதையூன்றும் பணியைத் தான் பள்ளிகளும், கல்லூரிகளும் செய்கின்றன. விதையூன்றப்பட்ட அறிவுச் செடி, அறிஞர்களின் அறிவுரை என்னும் உரம் ஏற்பட்டு உலகியல்த் தொடர்பு, நல்லோர் சேர்க்கை முதலான வளர்ச்சிக்குத் தேவையான ஆற்றல்கள் சேர்க்கப்பட்டு மேல் நோக்கி வளரத் தொடர்கின்றது.

## இராமாயணம் பாரதம்

இராமாயணமும் பாரதமும் மக்களின் இருகண்களாகும். வாழ்க்கைக்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றன. இந்த இரண்டு இதிகாச நூல்களும் தர்மத்தையும், ஞாயத்தையும் எடுத்து உரைக்கின்றன. இராமாயணத்தில் சீதா தேவியையும், மகா பாரதத்தில் திரௌபதியையும் வைத்து போற்றப்படுகிறது. அநியாயங்கள் போக்கடிக்கப்படுகின்றன. இந்த இரண்டு பேரும் மனிதரிடம் பிறக்காமல் சீதை தேவி பூமியிலும், திரௌபதி தேவி அக்கினியிலும் இருந்து பிறந்தவர்கள்.

## விரிதலை

விரிதலை என்னும் பதத்தை வினைத்தொகையாக எடுத்துக் கொண்டால் விரிந்த, விரிகின்ற, விரியும் தலையெனக் கூறலாம். துன்பம் வந்தபின் தலையை விரிய விடுவார்கள். துன்பம் வருகின்ற போதும் தலையை விரிப்பார்கள். இவற்றை உலகியலில்க் காண்கிறோம். நாகரீகத்துக்காக தலைமயிரை விரித்தாலும் துன்பம் விளைந்துதான் தீரும். என்பதைச் சான்றோர், ஆன்றோர், வாயிலாக அறிந்து வருகிறோம். எனவே தலைவிரித்தல் அதிகமான துன்பத்தின் அறிகுறியாகும்.

பண்டைத் தமிழர், தலை விரித்தல் துன்பத்தின் அறிகுறி மட்டுமல்ல நாட்டின் கேட்டிற்கும் அது அறிகுறி. வீட்டின் வறுமைக்கும், வேறு துன்பங்களுக்கும் தலை விரிகோலம் அறிகுறியாகுமென்று வற்புறுத்திக் கூறியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருளுரை 3
## நல் உரைகள்

வருவாய்க்கு அதிகமாக சொத்துக்களையும், பணத்தையும் சேர்ப்பவர்கள் என்றும் மகிழ்ச்சியுடனோ, நிம்மதியுடனோ வாழ்ந்ததாக வரவாறு இல்லை. மகிழ்ச்சியையும், நிம்மதியையும் தராத சொத்துக்கள், பணம், பொருள்கள் என்பவற்றால் எதுவித பயனுமில்லை. அப்படி இருக்க இந்த உண்மையை உணராத சில மக்கள் உணர்ந்தும் தெரியாதது போல பாசாங்கு செய்வது மனித குலத்துக்குச் செய்கின்ற பெரும் துரோகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்துக்களையும், பணத்தையும் நீதியற்ற வழியில் சேர்த்துக்கொள்ளும் போது வாழ்க்கையில் நிம்மதி, அமைதி என்பன பறி போய் விடுகின்றன.

இன்று நாகரீகமாக ஆடம்பர வாழ்க்கையை வாழ்வதற்கே எல்லோரும் ஆசைப்படுகிறார்கள். அதனால் அலைகிறார்கள், அல்லல்ப் படுகிறார்கள். அப்படியிருந்தும் போதாது, போதாது என்ற தாரக மந்திரத்தையே எந்நேரமும் உச்சரிக்கிறார்கள். இதுவே நிம்மதியற்ற வாழ்க்கைக்கு காரணமாக அமைகின்றது.

உலகத்தில் மக்களிடையே சாந்தி வரண்டு விட்டது. எல்லோரிடத்திலும் அச்சமும், பீதியும், பயமும், பதகளிப்பும் நிலைகொண்டு விட்டன. மக்களுக்கு ஆடம்பரத்தில் ஏற்பட்டு விட்ட மோகம் தான் அடிப்படைக்காரணம். நாம் இதயத்தை மறந்து விடுகின்றோம். உலகத்தையே பெரிதும் மதிக்கிறோம். இன்னொரு வகையில் கூறப்போனால் இரத்தத்தை, கருணையை, அன்பினை, சாந்தியை மறந்து வருகிறோம். அதே வேளை ஆசையை, அவாவை, ஆடம்பரத்தை மிக விரும்புகிறோம். இந்நிலைமையே எமது அமைதிக்கும் குழப்பத்தை ஏற்படுகின்றது.

வாழ்க்கையில் அச்சம் இருக்கும் வரை நிம்மதி இருக்காது. அச்சம் வருவதற்கு நெறியற்ற வாழ்க்கை முறையே காரணம்.

சமுதாயத்தின் நன்மையை விரும்ப வேண்டும், விரும்பிய படி செயற்பட வேண்டும், சுயநலமற்று இருக்க வேண்டும், ஆசைக்கு எல்லை வகுக்க வேண்டும், அகந்தை மமதை, செருக்கு என்பவற்றை விலக்க வேண்டும். இதுவே செழுமையான வாழ்வாகும்.

எம்முடைய இதயத்தில் பிறரை வருத்தும் தீய உணர்வுகளையும், கெட்ட எண்ணங்களையும் நிரப்பி வைத்திருப்பது மிகவும் கொடுமையானது. வரவுக்கு மிஞ்சிய செலவு செய்து ஆடம்பர வாழ்க்கை வாழ்வதென்பது ஏதோ விதத்தில் பிறரை வருத்தக் கூடிய முறையில் பணம், சொத்துக்களைச் சேர்த்துக் கொள்வதால்த் தான் சாத்தியமாகின்றது. இதனைக் காலம் கடந்த பின்னர் எண்ணிப்பார்ப்பதால் பயனில்லை. இளமையில் இவ்வாறு பிழையான வழியில் நடந்து கொள்வதற்கு முன்பே சிந்தித்துச் செயல்ப்பட வேண்டியது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவயதில் சிரித்துச் சிரித்துத் தவறுகள் பலவற்றைச் செய்பவர்கள் முதியவர்களானதும் அழுது, அழுது அதற்குரிய தண்டனையை அனுபவித்துத் தான் ஆக வேண்டும். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது ஆன்றோர் வாக்கு. ஆன்றோரின் அனுபவ வாக்குகள் என்றும் பொய்ப்பதில்லை. எனவே தான் கெட்ட அரக்க குணங்களுக்கு எம் உள்ளத்தில் கடுகளவேனும் இடம் அளித்தல் கூடாது.

போதுமென்ற மனமே பொன் செய்யும் உள்ளம் என்பார்கள். ஆசைகளும், தேவைகளும் முதலில் மனங்களிலேயே தான் உற்பத்தியாகின்றன. ஆகவே மனதைச் செம்மையாக வைத்திருக்க வேண்டியது நமது முதற் கடமையாகும்.

ஒருவரின் ஆடை அழகையும், ஆபரணங்களின் அழகையும், உடல் அழகையும், பதவி அந்தஸ்தினால் பெறப்படும் அழகையும் விட அவரின் உள்ளத்து அழகும் மனிதப் பண்புகளைப் பேணுவதினால் பெறப்படும் பண்பாட்டு அழகும் அதிமுக்கியமானவையாகும்.

"குஞ்சி அழகும் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல"

என்றார் ஒளவை மூதாட்டி. நெஞ்சத்துக் கோடாமை என்ற மனப்பண்பு, வாய்மை என்ற வாக்குப் பண்பு, எல்லோருக்கும் நன்மை பயக்கும் செயல்ப்பண்பு என்பன மனிதற்குத் தரும் அழகுக்கு ஒப்பாக வேறு எந்த அழகையும் கூற முடியாது.

காந்தி அடிகளுக்கு மதிப்பு மரியாதையையும், கௌரவத்தையும் விளங்க வைத்தது அவருடைய ஆடை அழகோ, உடல் வனப்போ அல்ல, அவரின் பணமோ, சொத்துக்களோ அல்ல மாறாக அவர் கடைப்பிடித்த மனிதாபிமான நற்பண்புகளாகும். குறிப்பாக சத்தியம், அஹிம்சை என்னும் அவர் பொன் போல்ப் போற்றிய மானுட நேயம் தழுவிய நற்பண்புகள் அவரை மிக உயர்ந்த நிலைக்கு மாந்தருள் மாணிக்கமாக உயர்த்தியது.

இவ்வாறு காந்தி மகானை இங்கு குறிப்பிடுவதால், எல்லோராலும் அவரின் நிலைக்கு உயர முடியுமென்றோ, அவரைப் போல உடையைக் குறைத்து அணிய வேண்டுமென்றோ நான் கூற முற்படவில்லை. அது எல்லோருக்கும் சாத்தியமுமில்லை. எனினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தியடிகள் காட்டிய அிம்சை, சத்தியம், எளிமை போன்றவற்றை ஓரளவிற்காயினும் எங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்கலாமல்லவா?

ஒருவரிடம் உள்ள ஆடை அணிகலன்கள், வீடு, பதவி, பணம், சொத்துக்கள், புகழாரங்கள், ஆடம்பர வாழ்வு என்பனவே ஒருவரின் மதிப்பு, தகுதி, கௌரவம் என்பவற்றை நிர்ணயிக்கின்றன என்று கருதுவது தவறாகும் என்பதை நாம் உணர்தல் அவசியம். அப்படியானால் உலகத்தவரின் போற்றுதலுக்கு உள்ளான பலருக்கு அவ்வாறான போற்றுதல்கள், மதிப்புகள் என்பன கிடைக்காமலே போயிருக்கும். ஆடம்பரங்கள் தான் ஒருவரின் சமூக அந்தஸ்தின் புகழாகும் என நினைத்தவர்கள் கடைசியில்த் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டவர்களென்பது மனித வரலாறாகும். அனுபவங்களும் காட்டும் உண்மையாகும்.

நாகரீகம் என்ற ரீதியில் பண்பாட்டினை ஒதுக்கித் தள்ளி விடாமல், நல்ல மனிதப் பண்பாட்டினைப் போற்றியும், நடைமுறையில் அனுசரித்தும் வருபவர்களே மனிதருள் உயர்ந்தவர்கள், மாண்பு மிக்கவர்கள், பெருமதிப்புக்கும், கௌரவத்திற்கும் உரியவர்களாகிறார்கள்.

## சமயச் சொற்பொழிவு
## கூட்டு வழிபாடு

சமயச் சொற்பொழிவு, கூட்டு வழிபாடு என்பன ஆன்மீக உயர்வுக்கு, சமய வளர்ச்சிக்கு, ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்கு, கலை கலாச்சார உயர்வுக்கு மிகவும் உறுதுணையாக நிற்கின்றன. இந்தப் புனித இரு நிகழ்வுகளும் ஆலயங்களில் மட்டுமல்ல. பொது மன்றங்கள், ஆசிரமங்கள் ஆகிய இடங்களிலும் நடைபெற வேண்டிய அறநெறி நிகழ்வாகும். சமயச் சொற்பொழிவுகள் ஆலயங்களில் அதிகமாக நடைபெறுவதைக் காண்கின்றோம். காரணம் ஒரு ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியடைய வேண்டுமாயின் ஆலயத்துக்கு இருகண்களாக விளங்குபவை சமயச் சொற்பொழிவும், கூட்டு வழிபாடும் (பஜனை) ஆகும். சமயச் சொற்பொழிவு என்பது இறைவன் புகழ், நன்னெறிச் செயற்பாடுகள் பற்றிப் பேசுவது, கூட்டு வழிபாடு பக்தர்கள் எல்லோரும் சேர்ந்து இறைவன் புகழைப் பாடிப் பணிவதாகும்.

இன்று நாகரீக மேம்பாட்டின் காரணமாக சமய அறிவு பின் தள்ளப்படுகிறது. சமய அறிவின் விளக்கமின்மையே காரணமாகும். முன்னைக் காலங்களில் பாடசாலைகளில் சமயபாடம் முக்கிய இடம் பெற்றிருந்தது. இதன் காரணமாக எல்லோரும் ஆன்மீக அறிவு பெற்று பண்புடன் வாழ வழி வகுத்து நின்றது. இன்றைய நிலையில் இடம் பெயர்ந்து பெரும் பாலான மக்கள் வெளிநாடுகளில் வாழ்ந்து வருவதன் காரணமாக வருங்கால இளம் சந்ததியினர் சமய அறிவை பெற முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. கடவுள் என்பவர் யார்? சமயம் என்றால் என்ன? சமய அறிவு எதை உணர்த்தி நிற்கிறது என்ற கேள்விக்கிடமாக வந்து விட்டது. ஏன்? சில பெரியவர்களே சமயம் பற்றி போதிய விளக்கமில்லாதவர்களாக இருப்பதைக் காண்கின்றோம்.

இதன் காரணமாக ஆலயங்கள், பொது மன்றங்கள், ஆச்சிரமங்களில் சமயப் பெரியார்கள் மூலம் சமயச் சொற்பொழிவு முக்கியம் நடைபெற வேண்டியதொன்றெனக் கருதிய நிர்வாகிகள் ஆலயங்களில் சமயச் சொற்பொழிவுக்கு நிகழ்ச்சி அட்டவணையில் நேரம் வகுத்து ஏற்பாடு செய்து சொற்பொழிவுகள் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் சமய அறிவை எல்லோரும் உள்வாங்க முடியுமென்பது முக்கியமாகின்றது.

சமயச் சொற்பொழிவில் கடவுளைப் பற்றிய விளக்கங்கள், அருளாளர்கள், நாயன் மார்களுடைய வரலாறுகள், ஒழுக்க நெறிகள், பண்பாடுகள், ஆலய தரிசன விதிகள், உலக அனுபவங்கள், மகத்துவங்கள் எல்லாம் அடங்கியுள்ளன. எமக்குத் தெரியாத எவ்வளவோ விளக்கங்களை சமயச் சொற்பொழிவுகள் மூலம் அறிந்து அதன் படி ஒழுகுவதற்கு ஏதுவாகின்றது.

ஆலயங்களில் அறிஞர்கள் மூலம் நடபெறும் சொற்பொழிவு நிகழ்வுகள் ஒரு பாடசாலையில் நடைபெறும் சமய வகுப்பாகக் கணிக்கப்படுகின்றது. ஆலயம் ஒரு வணக்கத் தலம் மட்டுமல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும் பெரும் சமய அறிவுகளைப் பெறும் வித்தியாலயமாகவும் திகழ்கின்றது.

எனவே கல்விக் கூடங்கள் ஆலயங்களாகத் திகழ வேண்டும். ஆலயங்கள் வித்தியாலயங்களாக மிளிர வேண்டும். இன்று பெரிய கல்விமான்களாக இருப்பவர்களிலும் சிலர் சமய அறிவு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். எனவே எல்லோரும் பாகுபாடின்றி சமய அறிவைப் பெறும் இடமாக இன்று கோயில்கள் விளங்குகின்றன. எனவே தான் ஆலயங்களில் சமய நிகழ்வுகள் குறிப்பாக ஆன்மீகத்தோடு சம்பந்தப்பட்ட பிரசங்கங்கள், சொற்பொழிவகள், வில்லுப்பாட்டுக்கள், கூட்டு வழிபாடுகள்(பஜனை) முக்கிய இடம் பெறுகின்றன.

குறிப்பாகத் தாயகங்களிலிருந்து இடம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் வருங்கால இளம் சந்ததியினர் (சிறார்கள்) தமிழறிவு, சமயஅறிவு பெற முடியாதவர்களாக இருக்கிறார்கள். இவர்களின் நலன் கருதி ஆலயங்களில் சமய அறிவு, சமயக்கலை, கலாச்சாரம் வளர்ச்சியடையும் பொருட்டு ஆலய நிர்வாகிகள் சமய அறிவுமிக்க ஆசிரியர்களை நியமித்து வகுப்புகள் நடைபெற ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஆலயங்களில் நடைபெறும் பூசைகள், திருவிழாக்களிலும் பார்க்க மேற்காட்டிய நிகழ்வுகளே இறைவன் உளம் மகிழ்ந்து பூரிப்படையும் பெரும் பூசைகளாகும். ஆலய அறங்காவலர்கள் இப்படியான தர்ம கைங்கரியங்களுக்கு இடம் கொடுத்து தர்மத்தைக் காக்க வேண்டும். இத்திருப்பணிகளால் இறைவனுக்கும் சமூகத்துக்கும் செய்யும் பெரும் தொண்டும் பெரும் புண்ணியமும் ஆகும்.

நிதி வசதியுள்ள ஆலயங்கள் இலவச பாட நூல்கள், மாணவர்களுக்கு தங்கும் இடம், உணவு, உடை கொடுத்து உதவுவதும், ஊக்குவிப்பதும் பெரும் புண்ணியமாகும்.

வரும் காலங்களில் சைவ சமயம் கலை, கலாச்சாரம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் வெளிநாடுகளிலுள்ள ஆலாயங்களில் கண்டிப்பாக இவ் அரிய தர்மத் தொண்டுகள், சமய வகுப்புகள், சொற்பொழிவுகள், ஆன்மீக விரிவுரைகள் நடத்தப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதி படைத்த தனவான்கள் கனவான்கள் இப்படியான அற நிலையங்களுக்கு அறப்பணிகளுக்கு நிதி உதவிகள் அள்ளி வழங்க வேண்டும். இந்த அறத் தொண்டுகளுக்கு நீங்கள் வழங்கும் தர்மக் கொடை, தர்மம் உங்களுடைய ஏழேழு சந்ததிக்கும் ஒளி விளக்காக நின்று அருள் பாலிக்கும் தமிழையும், சைவசமயத்தையும், கலை, கலாச்சாரத்தையும் காப்பது சைவ மக்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

எனவே ஆலயங்களில் சமயச்சொற்பொழிவு, கூட்டு வழிபாடு, தவறாது நடைபெற வேண்டிய முக்கியமாகும்.

## இறைவனின் நீதி

எங்கள் வாழ்க்கையில் நடைபெறுகின்ற ஒவ்வொரு நிகழ்ச்சியும் இறைவனுடைய ஏட்டில் உடனுக்குடன் பதியப்படுகின்றது.

நாம் ஒருவருக்கு நன்மை செய்தால் நற்பலன் ஏற்படுகின்றது. ஒருவருக்குத் தீமை செய்தால் கண்டிப்பாக அதற்குரிய தண்டனை கிடைக்கிறது. இவை இறைவனின் தீர்ப்பாகும்.

ஆண்டவனின் அவதாரங்களே ஆண்டவன் சோதனைக்குத் தப்பவில்லை. என்று இதிகாச நூல்கள் கூறி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) தெய்வ புருஷன் ஸ்ரீஇராமனுக்கு பொய் மான் எது ? உண்மையான மான் எது? என்ற தெரியவில்லையே. இதனால் வந்த வினைதானே சீதையை இராவணன் சிறையெடுத்ததும் இராமனுக்குத் தொடர்ச்சியாக வந்த துன்பங்களுமாகும்.

2) சத்திய தெய்வம் தர்மருக்கு சூதாடக் கூடாதென்று புத்தி உதயமாகவில்லை. அதன் விளைவு தானே பாண்டவர்கள் வன வாசமும், பாரத யுத்தமும்.

3) முக்காலமும் உணர்ந்த கௌதம முனிவருக்கு பொய்க் கோழி எது? உண்மைக் கோழி எது? என்று தெரியவில்லையே. அதனால்த் தானே அகலிகை இந்திரனால்க் கெடுக்கப்பட்டதும், சாபம் பெற்றதும்.

தெய்வ நீதி எவரையும் விடாது. என்பதற்கு இந்த வரலாறுகளே(கதைகள்) உதாரணமாகின்றன. துன்பங்கள் வந்தே தீரும். அவை இறைவனின் சோதனைகள் அவற்றுக்காகக் கலங்குவதும், கண்ணீர் சிந்துவதும் அறியாமை என்பதை உணர வைக்கின்றது.

வாழ்க்கை எதிலே ஓடிக்கொண்டிருக்கிறது, ஆசையிலும், நம்பிக்கையிலும். ஆசையின் குழந்தைகள் பொறாமை, கோபம் இரண்டும்.

பாவம் என்பது நாங்கள் செய்யும் தீமைகள்.
புண்ணியம் என்பது நாங்கள் செய்யும் நன்மைகள்.

நீ விதைத்த(வினையின்) விளைவை அறுவடை செய்த பின் தான் அந்த நிலத்தில் வேறு பயிர் செய்ய முடியும்.

கருணையாளனைக் கொலைகாரன் ஆக்குவதும் மனம் தான். கொலை காரனை ஞானி ஆக்குவதும் மனம் தான்.

யாரையும் வஞ்சிக்காத ஒருவன் கடவுள் நம்பிக்கையுள்ள ஒருவன் மனதாரச் சொல்லும் எந்த வார்த்தைக்கும் உயிர் இருக்கிறது. நாங்கள் வாழ்வது மிக மிகச்சிறிது காலம். எல்லாம் இறைவன் கட்டளை. இதற்குள் நாம் மனிதனாக வேண்டுமென்றால் கட்டுப்பாடுகள் வேண்டும். இந்தக் கட்டுப்பாடுகளே விரதங்கள். தர்மம் செய்ய முடியாவிடின் கருணை உள்ளத்தோடு, இரக்கச் சிந்தனையோடு வாழ வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பால் தொடரும் உறவுகளை விட பிணைப்பால்த் தொடரும் உறவுகள் உன்னதமானவை. பிறப்பின் உறவுகளே பேதலிக்கின்றன.

1. பெற்ற தாயைப் பிச்சைக்கு அலைய விடும் மகன்,
2. கட்டிய மனைவியைப் பட்டினி போடும் கணவன்,
3. தாயைத் தவிக்க விட்டு தாரத்தின் பிடியில் லயித்துக் கிடக்கும் பிள்ளை,
4. கூடப் பிறந்தவனே கோட்டுப்படிக்கட்டுகளில் ஏறி எதிரியாய் நிற்கும் பரிதாபக் காட்சியைக் கண்டு கொண்டிருக்கிறோம்.

## சிந்தனைத் துளிகள்

வாழ்ந்தால் சிரிக்கிறார்கள், வரண்டால் ஒதுங்குகிறார்கள், செத்தபின் ஒப்புக்காக அழுகிறார்கள்.

பிறர் குற்றம் உரைக்கும் போது வாய் ஒலி பெருக்கியாகி விடுகிறது. பிறர் புகழை உரைப்பதற்கு மௌனமாகி விடுகிறது.

ஒரு மனிதனுக்கு வரும் கஷ்டம் தாய், தந்தை, சகோதரர்கள், சுற்றத்தார், நண்பர்களை அறியும் அளவு கோலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத்தை எப்படிப் பெறுவது? நம்மைப் பெற்றெடுத்தவள் அம்மா உடம்புக்குப் பால் கொடுப்பாள். அறிவுப் பசிக்கு ஞானப் பால் கொடுப்பவள் அம்பாள் தான். ஞானஸ்வரூபமே அவள் தான்.

கடவுளுடைய திருநாமம் பேசப்படும் இடம் எல்லாம் புண்ணிய லங்களே. அவருடைய திரு நாமத்தைப் புகழைக் கூறுபவர்கள் ாடுபவர்கள் எவ்வளவோ புண்ணியவான்கள்.

ஒரு புண்ணியவாளன் நல்லவர் இறந்து சடலத்தைத் தூக்கிச் செல்லும் போது ஐயோ புண்ணியவான் போய் விட்டாரே என்று பத்துப் பர் சொன்னால் அந்த வார்த்தைகளே சொர்க்கத்தின் படிக்கட்டுகள். ண்டாளன் போய் விட்டான் என்றால் நரகத்தின் படிக்கட்டுகள்.

ஒருவருக்கு உலகத்தில் பெரியவர் யார்? பெற்ற ாயும், தகப்பனும் தான். இவர்களை விடப் பெரியவர்கள் கிடையாது.

''நிம்மதி எது தெய்வத்தின் சன்னிதி
துன்பம் அது சைத்தானின் சன்னிதி''

பேரின்பம் தருகிறவன் பரமேஸ்வரன்
பெரும் துன்பத்தைத் தருகிறவன் சனீஸ்வரன்
இவர்கள் இருவருக்கும் தான் ஈஸ்வரப் பட்டம் உண்டு.

1. கண்ணனை நம்பிய குலேசன் குபேரனானான்.
2. துரியோதனனுடன் சேர்ந்ததால் தான் கர்ணன் அனியாயத்துக்கே துணை போக வேண்டியதாயிற்று.
3. சகுனியைச் சார்ந்த கவுரவர்கள் அழிந்தார்கள்.
4. கண்ணனைச் சார்ந்த பாண்டவர்கள் வாழ்ந்தார்கள்.
5. அண்ணன் இராவணனைத் துறந்து இராமனிடம் சேர்ந்த விபீஷணன் அரசுரிமை பெற்றான்.
6. இராவணனை அண்டி நின்றோர் அவனது முடிவையே பெற்றார்கள்.
7. இராமனைச் சேர்ந்து நின்றதால் ஒரு குரங்குக்கு கூட கோவில் தோன்றியது.
8. செம்மண்ணில் மழை விழுந்தால் தண்ணீரின் நிறம் சிவப்பு கரிசல் மண்ணில் விழுந்தால் கறுப்பு.
9. மனிதனின் சேர்க்கையைப் பொறுத்தே மதிப்பு (வள்ளுவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி மனிதனுக்குச் சாந்தியையும் அமைதியையும் அளித்து அவனை ஆனந்தப் பெருவாழ்வுக்கு அழைத்துச் செல்வது இந்து மதம். வாழ்வைத் துறந்து ஓட வேண்டுமென்ற கட்டுப்பாடில்லாது, வாழ்விலிருந்தே செவ்விய நெறியில் ஒழுகி சிந்தையைக் கட்டுப்படுத்தி தெய்வ தரிசனத்தைப் பெற முடியும். என்ற தத்துவத்தை இந்து மதம் எடுத்துக் காட்டுகின்றது.

இன்றய இளைஞர்கள் படிப்பதை தேன் வண்டு போல்த் தேடிப்பிடித்துப் படிக்க வேண்டும். வாழ்க்கைக்குத் தேவையில்லாத பயன்படாத நூல்களைப் படித்துக் காலத்தை வீணடிக்கக் கூடாது.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

பயனற்ற நூல்களைப் படிப்பதால் காலம் வீணாகிறது. பண்பாடற்ற நண்பர்காளால் மனம் பாழாகிறது. அலட்சிய மனப்பான்மையால் அறிவு மங்குகிறது. வெறும் ஆரவாரங்களில் போலி வாழ்க்கை கிட்டுகிறது.

படிப்பு என்பது வரப்போகும் காலங்களுக்குப் போடப்படும் அத்திவாரம். தவறாகப் படிக்கும் படிப்பு பயனற்றுப் போகிறது.

எதிர் காலத்தைப் பற்றிச் சிந்திக்க முடியாத வயது இளம் வயது. ஆனால் சிந்தித்தே தீர வேண்டிய வயது அது தான்.

நன்றி செய்தவனுக்கு நன்றியைக் காட்ட வேண்டும். தீமை செய்தவனை மறந்து விட வேண்டும். முடிந்தால் நன்மை செய்ய வேண்டும் தீமை செய்யக் கூடாது.

மனிதனைப் பாவம் செய்யத் தூண்டுவது எது என்று கண்ணனிடம் அர்ச்சுனன் கேட்டான் அதன் பெயரே ஆசை என்று கண்ணன் பதிலளித்தான்.

தேனைப் பிடிக்கப் போகும் குழந்தை, அதையே அடிக்கப் போகும் மனிதனாக வளர்ச்சியடைகிறான். அதன் பின் அந்தத் தேனிடம் கூடக் கருணை காட்டும் ஞானியாக மாறி விடுகிறான்.

கடவுளே இல்லையென்று வாதாடியவன் எவனும் எனக்கு மரணமே இல்லையென்று வாதாட முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியும் சிவனும் அர்த்தநாரீஸ்வரர் கோலத்தில் பாதியாக இருக்கிறார்களே, அவர்களது மீதிப்பாதி எங்கே என்று விநாயகரிடம் கேட்டார்களாம். அதற்கு விநாயகர் சிவத்தின் பாதி தான் உலகத்தின் ஆண்களாகவும், சக்தியின் பாதி தான் உலகத்தில் பெண்களாகவும் அவதரித்திருக்கிறார்கள் என்றாராம்.

## சிந்தனைக்குரிய அருள்த் தேன் துளிகள்

ஒருவருக்கு துன்பம் தவிர்க்க முடியாதது. கஷ்டங்கள் துன்பங்கள் வரும்போது நாங்கள் செய்த குற்றங்களுக்குத் தண்டனையை அனுபவிக்கிறோமென உணர வேண்டும். எமக்கு ஏற்படும் வறுமை, துன்பம், கஷ்டங்கள் யாவையும் பொறுமையுடன் சகித்துக் கொள்வது நாம் செய்யும் பெரும் தவமென உணர வேண்டும். உறவினரின் இகழ்ச்சியும், சுடு சொற்களும் பெரிய தவப்பயனுக்கு ஒப்பாகும். எனவே கோபத்துக்கும், துக்கத்துக்கும் இடம் கொடுக்காமல் பொறுமையாய் இருக்க வேண்டும்.

கவலை, துன்பம் இல்லாதவர்கள் யார் இருக்கிறார்கள். இறந்து போன தனது குழந்தையை மீட்டுத் தரும்படி புத்த பெருமானிடம் ஒரு தாய் கெஞ்சினாள். சாவே நிகழாத வீட்டில் சாம்பல் எடுத்து வா மீட்டுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருகிறேன் என்று சொன்னாராம் புத்த பெருமான். தாய் ஆவலுடன் நாடெல்லாம் வீடெல்லாம் அலைந்து சாவு நிகழாத வீடில்லை என்றாளாம். இந்தக் கதையும் அதில் ஒன்று தான் என்று கூறி அந்தத் தாய்க்கு ஆறுதல் கூறி அனுப்பி வைத்தாராம்.

எனவே கவலை இல்லாத மனிதர் யார் இருக்கிறார்கள். எமக்கு நூறு என்றால் இன்னொருவருக்கு இருநூறு. எனவே நாம் பாக்கிய சாலி. எல்லா ஆசையும் நிறைவேறி உயிர் விடுபவர்களள் எவருமில்லை.

ஒருவருக்குத் துயரம் மனைவியால் வருகிறது, ஒருவருக்குத் துயரம் மக்களால் வருகிறது, ஒருவருக்கு துயரம் நண்பர்களால் வருகிறது, ஒருவருக்குத் துயரம் சம்பந்தப்பட்ட எவனொருவனாலோ வருகிறது.

எதிலும் கெட்டிக்காரனாக இருப்பவனுக்கு அடிக்கடி சஞ்சலம் வருகிறது. எனவே சாவைத் தடுக்க முடியாது. சஞ்சலத்தைத் தவிர்க்க முடியும். எனவே எதற்கும் அச்சமில்லாமல் இருக்க வேண்டும்.

"என்னதான் நடக்கும் நடக்கட்டுமே
இருட்டினில் நீதி மறையட்டுமே
தன்னாலே வெளிவரும் தயங்காதே
ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே"

இறைவனை நம்புங்கள் மனத்தை அடக்குங்கள். மரணமடையப் போகும் நமக்குச் சஞ்சலமேன்? எனவே மனதுக்கு நிம்மதியைக் கொடுத்து இறைவனின் காலடியைப் பிடியுங்கள். துன்பம் வரும் போதெல்லாம் தியானத்தில் உட்காருங்களள். துக்கம் நம் உடன் பிறப்பு. எங்களின் பூர்வ கர்ம வினையின் பயனாக நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு நாங்கள் முன்பே விதை போட்டிருக்கின்றோம்.

"எள்ளைக் கொட்டினால்ப் பொறுக்கலாம்
சொல்லைக் கொட்டினால்ப் பொறுக்க முடியாது"

எல்லோருக்கும் மரணம் நிச்சயம் உண்டு எனத் தெரியும். ஆனால் மனிதன் பேராசையினாலும், ஆணவத்தினாலும் அலை மோதுகின்றான். நினைத்து கிடைக்கவில்லை என்றால் தலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்துக் கொண்டு அழுகிறான். நினைத்ததெல்லாம் கிடைத்து விட்டால், நான் யார் தெரியுமா? என்கிறான்.

ஆனால் ஞானிக்கும் ஒருவகை ஆணவம் வருகிறது. அந்த ஆணவம் வென்ற விடுகின்றது. காரணம் இறைவனிடம் சரணாகதியடைந்த திமிர். "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்றார் அப்பர் சுவாமிகள். அவர் கடைசி வரையில் தன்னை ஒரு இறைவனின் குடிமகனாகக் கருதினாரே தவிர, ஒரு அரசனின் குடிமகனாகக் கருதவில்லை.

ஒரு பஞ்சப் பரதேசி(துறவி) சொத்துச் சுகம் ஏதுமற்ற ஞானி குளிர் காயும் பொருட்டு வெய்யிலில் ஆற்று மணலில் துண்டை விரித்துப் படுத்திருந்தார். உலகத்தையே வெல்லப் புறப்பட்ட மாமன்னன் அலெக்சாண்டர், அவர் அருகிலே வந்தார். ஞானி அவரைக் கவனிக்கவில்லை. கால் மேல் கால் போட்டபடி சூரியக் கதிர்களில் குளித்துக் கொண்டிருந்தார். நான் அலெக்சாண்டர் வந்திருக்கிறேன் என்றார். அவர் அப்படியா? என்று சாதாரணமாதகச் சொன்னார் ஞானி.

ஏ! ஞானியே உனக்கு என்ன வேண்டும் கேள் நான் தருகிறேன் என்றார் அலெக்சாண்டர். எனக்கு ஒரு உதவி வேண்டும் என்றார் ஞானி. என்ன வேண்டும் பொன் வேண்டுமா? பொருள் வேண்டுமா? மாளிகை வேண்டுமா? என்ற கேட்டார் அலெக்சாண்டர்.

எனக்கொன்றும் வேண்டாம் நீ கொஞ்சம் விலகி இருக்க வேண்டும். உன் நிழல் வெய்யிலை மறைக்கின்றது என்றார் ஞானி. அலெக்கசாண்டர் என்றால் உலகமே நடுங்கும். ஆனால் ஞானி நடுங்கவில்லை.

அலக்சாண்டரின் ஆணவத்தை ஞானியின் ஆணவம் தோற்கடித்தது. காரணம் ஞானிக்கு எதுவும் தேவையில்லை. யாரிடமும் எதையும் எதிர்பாராத ஆணவம் தன்நம்பிக்கை, ஆசை வசப்பட்ட ஆணவம் திமிர் (இறைவனின் சரணாகதிதி)

"பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு சொன்னது
கருடா சவுக்கியமா இருக்கும் இடத்தில்
இருந்து கொண்டால் எல்லாம் சவுக்கியமே
கருடன் சொன்னது"

(கண்ணதாசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமிப்பட்டர் சொல்லுகின்றார் அம்மா உன் பத்ம பாதம் பணிந்த பின் பணியேன் எவரையும்.

“ மணியே மணியின் ஒளியே, ஒளிரும் மணி புனைந்த
அணியே அணியும் அணிக்கு அழகே அணுகாதவற்கு
பிணியே பிணிக்கு மருந்தே, அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரையும் நின் பத்ம பாதம் பணிந்த பின்னே.”

ஒரு ஞானியிடம் ஒரு பணக்காரம் போனான். இதோ பார் நான் வந்திருக்கின்றேன் என்றான். ஞானி அமைதியாக அவனைப் போகும்படி கையசைத்தான். பின் எப்பொழுது வருவது என்று அவன் கேட்டான். நான் செத்த பிறகு வா என்று சொன்னார் ஞானி. நீ செத்த பிறகு நான் வந்து என்ன செய்வது என்றான் அவன்.

நான் என்றால் நானல்லடா. நான் வந்திருக்கிறேன் என்றாயே அதிலுள்ள, நான் என்ற ஆணவம் செத்த பிறகு வா என்றார் ஞானி.

மனிதர்களுக்கு வெற்றி வரும் போது இந்த ஆணவம் கூடவே வரும். அடி விழும் போது அதுவும் நாய்க்குட்டி போல் அடங்கி விடும்.

ஞானிகளின் ஆணவம் இறைவனைச் சந்திக்கின்றவரை நீடிக்கும். காரணம் அந்த ஆணவம் தன்னை அறிந்து கொள்வதற்கான தத்துவ விளக்கம்.

ஞானம் பணிந்து, பணிந்து வெற்றி மேல் வெற்றி தருகிறது.


ஆணவம் நிமிர்ந்து நின்று அடி வாங்குகின்றது. அடக்கத்தில் இருக்கும் சுகம் ஆணவத்தில் இல்லை. அடங்கி வாழ்ந்தால் ஆயுட் காலம் முழுதும் ஓங்கி வாழலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லாக்கூர்நேவ் ஸ்ரீ சபரீசன் மஞ்சமாதா வில்லிசைக் குழு
ஸ்தாபகர் கவிமணி.



பிரான்ஸ் இராமகிருஷ்ணமிஷனில் சுவாமியுடன்
கவிமணி தம்பதியினரும் மகன் ஸ்ரீகரனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தாயகத்தில் பொது மக்களால் கவிமணி தம்பதியினருக்கு அறுபது(60) அகவை மணிவிழா கொண்டாடப்பட்டது.




மணி விழாவில் கிளிநொச்சி தமிழ் சங்கத் தலைவரும், உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியுமான திரு. பரமநாதபிள்ளை பாராட்டுரை வளங்குகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பூநகரி பல.நோ.கூ.சங்கம் கவிமணி அவர்களுக்கு சேவை நலம் பாராட்டு விழா நடாத்தி பொது முகாமையாளர் திரு. ந.பாலசுப்பிரமணியம் அவர்களால் தங்க மோதிரம் அணியப்படுகிறது.



கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமம் மாதாசியுடன் கவிமணி தம்பதியினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு இராம கிருஷ்ணமிஷன் சுவாமிஜி அவர்களுடன் கவிமணி தம்பதியினர்.



இந்தியா தமிழ்நாடு செங்கல்பட்டு இராமகிருஷ்ணமிஷனில் நடைபெற்ற உலக இராமகிருஷ்ணமிஷன் மகாநாட்டில் இலங்கை இராமகிருஷ்ணமிஷன் சுவாமியுடன் கவிமணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாயகத்தில் கவிமணியின் பஜனைக்குழுவினர்.



உலகச்சைவப் பேரவைத் தலைவர் திரு. பற்குணராசா அவர்களிடம் (திருவாசகம் முற்றும் ஓதல் நிகழ்வில்) பட்டயம் பெறுகிறார் கவிமணி. உடன் நிற்பவர்கள் லாக்கூர்நேவ் சித்தி விநாயகர் ஆலய தர்மகர்த்தா திரு. ஜெயராசசிங்கம் சிவாச்சாரியார். கவிஞர் ப. சிவஞானசுப்பிரமணியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரான்ஸ் கம்பன் கழகத் தலைவர் திரு. பாரதிதாசன் அவர்களுடன் கவிமணி.



உலகச் சைவப் பேரவைத் தலைவர் திரு. பற்குணராசா அவர்களுடன் கவிமணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்
## (நன்றி நவிலல்)

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

(வள்ளுவர்)

'அருள் அமுதம்' என்ற இந்நூல் என் மூலம் உதயமாவதற்கு எனக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து ஊக்குவித்த என் அன்பகலாத உத்தமக் கனவான்களுக்கும்,

எத்தனையோ தவிர்க்க முடியாத அலுவல்களுக்கு மத்தியிலும் தனது சிரமத்தையும் பாராது எனது பணிவான வேண்டுதலுக்கு மதிப்பளித்து சம்மதித்து இந்நூலின் எழுத்துக்கள், வசனங்கள், சொல் நடைகள் எல்லாம் சரிபார்த்து உதவியவர் எனது பேரன்புக்கும், பெருமதிப்புக்கும், வணக்கத்துக்குமரிய சிவாச்சாரியாரும், பென்சன் அதிபரும், கவிஞருமாகிய பிரம்ம ஸ்ரீ ப.சிவஞானசுப்பிரமணியம் ஐயா அவர்களுக்கும்,

என்னுடன் இணைந்திருந்து நான் அழைக்கும் நேரம் எல்லாம் தனது கஷ்டங்களையும் பாராது பல தடவைகள் எனது வீட்டிற்கு வந்து என்னுடன் இருந்து எனது பணிப்புரைகளை ஏற்று அச்சுப் பதிப்பிற்கேற்றபடி எழுத்தாக்கங்களையும், அட்டை வர்ண வடிவமைப்பையும் செய்துதந்த அன்புச் செல்வன் கிருஷ்ணதாசன் சற்குணன் அவர்களுக்கும்,

இந்த அருளமுதம் என்னும் புத்தகத்தை மிகவும் அழகாக உருவமைத்து பிழைகளின்றி சரியான முறையில் செய்து காலதாமதமன்றி குறித்த நேரத்துக்குத் தந்துதவிய தமிழ்நாடு சென்னை அச்சகத்தாருக்கும், இன்டர்லிங்க் எக்ஸ்பிரஸ் நிறுவனத்தாருக்கும் எனது உள்ளம் நிறைந்த இனிய நன்றியறிதலை பெரு நிறைவோடு தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இந்நூல் உருவாவதற்கு பேருதவிகள் புரிந்த யாவற்கும் நன்றி கூறி எல்லாம் வல்ல இறைவனின் திருஅருட்கடாட்சம் நிறைந்து வளமான பெருவாழ்வு வாழ இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கும்,

என்றும் அன்புக்கினியவன்,
நூல் ஆசிரியன்
கவிமணி. ச. விஜயரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD



# பகவான் ஸ்ரீ கிருஸ்ணரின் கீதாசாரம்.

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்? அது வீணாவதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ அது நாளை மற்றொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும் எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org